www.padippakam.com

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

# போராளி

இதழ் - 6 செப்டம்பர் - டிசம்பர் 1999 நன்கொடை ரூ. 15/-

## இ.க.க (மா-லெ) (மக்கள் யுத்தம்)

மைய குழு தியாகி
தோழர்கள் ஷ்யாம்,
மகேஷ், முரளி
ஆகியோருக்கு
வீரவணக்கம்!

தோழர்களின் படுகொலைக்குப்
பழி தீர்ப்போம்!



மைய குழு தோழர்.மகேஷ்



சீன புரட்சியின் 50 வது ஆண்டு நினைவு

## "சீனமக்கள் எழுந்துவிட்டனர்"

சீன மக்கள் குடியரசு
பிரகடனத்தின்போது மாவோ...

படிப்பகம்

www.padippakam.com

# சீன புரட்சியின் 50 வது ஆண்டின் நினைவாக

## வரலாற்று ரீதியான முக்கியத்துவமும் அதன் இன்றைய பொருத்தமும்.

50 வருடங்களுக்கு முன்னர் 1949, அக்டோபர் 1 ல் சீன மக்கள் குடியரசின் தோற்றத்தை தோழர். மாசேதுங் பிரகடனப்படுத்தினார். இதனால், மானுடத்தின் மூன்றில் ஒரு பகுதியினர் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை தளைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, சுதந்திர உலகில் நுழைந்தனர். கம்யூனிஸ்ட் அறிக்கை எழுதப்பட்ட ஒரு நூறு வருடத்திற்குள், புதிய சமூகம் பற்றிய மார்க்சின் கனவு உலகின் பெரும்பகுதியில் ஒரு நடைமுறை யதார்த்தமாகியது. மனித குல வரலாற்றில், மார்க்சியத்தைப் போல இத்தனை வேகத்தில், இத்தனை முழுமையாக சமூகத்தை மாற்றியமைத்த சித்தாந்தம் வேறு எதுவும் இல்லை. ஐரோப்பாவில் தோன்றி, பூமியின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவி, சீனா போன்ற மிகவும் பின்தங்கிய ஒரு நாட்டைக் கூட அது விடுதலை செய்தது.

## உள்ளே...


| | |
|---|---|
| நக்சல்பாரி - வரலாற்று நிகழ்வுகள் | 7 |
| 2000 த்தின் இறுதித் தோதல் | 14 |
| பா.ஜ.க. 100 நாள் திட்டம் | 21 |
| மதுரை நெசவாளர் போராட்டம் | 26 |
| எம்.சி.சி - மயு மோதல் (பேட்டி) | 28 |
| தியாகிகள் ... | 41 |
| போராட்ட, போர்க்கள செய்திகள் | 47 |
| பாகிஸ்தான் ராணுவ ஆட்சி | 42 |
| நெல்லை படுகொலை | 70 |
| குடிமக்களுக்கோர் அறைகூவல் | 72 |


சீன மக்கள் குடியரசை மாவோ பிரகடனப்படுத்திய போது, "சீனமக்கள் எழுந்துவிட்டனர்" என அறிவித்தார் 2000 வருட நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கு எதிராக நூற்றாண்டு கால காலனிய சுரண்டல் மற்றும் கொள்ளைக்கு எதிராக, மனிதத்தன்மையற்ற ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலுக்கு எதிராக "எழுந்துவிட்டனர்" .... மேலும், பழைய அல்லது புதிய; எந்த வடிவத்திலான ஒடுக்குமுறைக்கும் இனிமேல் தலை வணங்காமல், சுயமரியாதைமிக்க மக்களாக "எழுந்துவிட்டனர்" எனவும் அறிவித்தார். துன்பங்களைத் தாங்கும் மானுட மனோதிடம், தியாகம் மற்றும் வெல்லப்படமுடியாத தைரியம் ஆகியவற்றில் சீனப்புரட்சி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வீரகாவியமாகும். புத்துணர்வூட்டும் நீண்ட பயணம் பண்டைய கிரேக்க மாவீரன் ஹெர்குலசின் மனோதிடத்தை ஒத்த ஒரு வீரச் செயலாகும். இதில் வறுமையின் பிடியில் சிக்கிய விவசாயிகள் மற்றும் தொழிலாளிகளின் ராணுவம், தன்னை விட 10 மடங்கு பெரிய நவீன எதிரிப்படைகளை எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் எதிர்கொண்டு போராடி மலைகள், புல்வெளிகளைக் கடந்து 12,500 கிலோமீட்டர்கள் பயணம் செய்தது. புரட்சியின் விதைகளை முளைத்து வளரச் செய்யும் பாதையில், தனது தலைமையகத்தை ஏனான் மலைத்தொடர்களில் அமைத்து புதிய சமூகத்தின் கரு பழைய கருவறையில் வேர்விடத் துவங்கியது. ஏனான் மலைகளில் அறைகளைப் போல வடிவமைக்கப்பட்ட குகைகளில் இருந்து கொண்டுதான் தனது வரலாற்று சிறப்புமிக்க படைப்புகள் சிலவற்றை மாவோ எழுதினார். அவை இன்றுவரையிலும் உலகெங்கும் உள்ள புரட்சியாளர்களுக்கு வழிகாட்டியாக செயல்படுகின்றன.

ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான பலமிக்க புரட்சிகர சனநாயக இயக்கத்திலிருந்து தான் சீன

தொடர்ச்சி ... 4 ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# மைய குழு தியாகி தோழர்களின் படுகொலைக்குப் பழி தீர்ப்போம்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) (மக்கள் யுத்தம்)த்தின் மைய குழு தோழர்கள் மூவர் ஆந்திர மாநில பாசிச சந்திரபாபு நாயுடு அரசால் பேடித்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஷ்யாம் என்றழைக்கப்படும் நல்ல ஆதிரெட்டி, மகேஷ் என்றழைக்கப்படும் எர்ரம்ரெட்டி சந்தோஷ் ரெட்டி, முரளி என்றழைக்கப்படும் சீலம் நரேஷ் ஆகிய மூன்று மைய குழு தோழர்களும் டிசம்பர் 2 அன்று கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

ஏற்கனவே, மையகுழு உறுப்பினரும் ஆந்திர மாநில குழு செயலருமான தோழர். புலி அஞ்சண்ணா என்ற சாகரையும், ஆந்திர மாநில குழு உறுப்பினர்களான தோழர். சூர்யம், ரெட்டப்பா மற்றும் தோழர்கள் பூபதி, ஜனார்தன், பிஹார் மாநில குழு உறுப்பினரான தோழர். நிர்மல் போன்ற பல தலைமை தோழர்களை பச்சைப் படுகொலை செய்தது போல இம்மூன்று தோழர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைமைத் தோழர்களை குறிவைத்து தாக்கி ஒழித்து விட்டால் புரட்சிகர இயக்கத்தை ஒழித்து விடலாம் என இந்திய ஆளும் வர்க்கங்கள் பகல் கனவு காணுகின்றனர். உழைக்கும் வர்க்கத்தின் புரட்சிகர போராட்ட இயக்கத்தில் இது போல எண்ணற்ற மாபெரும் தலைமைத் தோழர்கள் உருவாகிக் கொண்டே இருப்பர். மக்கள் வரலாற்றைப் படைப்பது போல வரலாற்று நாயகர்களையும் படைப்பர்.

இந்திய உழைக்கும் வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையான இந்திய சனநாயகப் புரட்சிக்கு தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோர் ஆற்றிய பங்கு அளவிட முடியாததாகும். இ.க.க (மா-லெ) (மக்கள் யுத்தம்) த்தின் வீரமிக்க போராட்ட பாரம்பரியத்தில் இவர்களின் பணி எல்லையற்றதாகும். இந்த வீரத் தியாகிகளின் படுகொலை மூலம் இந்திய ஆளும் வர்க்கம் இந்திய உழைக்கும் மக்களுக்கு மேலும் அதிக ரத்தக்கடன்பட வேண்டியதாகி உள்ளது. உழைக்கும் மக்களும் அவர்களின் கட்சியும் நிச்சயம் இக்கடனைத் தீர்க்கும்.

தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோருக்கு போராளி தனது செங்கொடி தாழ்த்தி வீர அஞ்சலி செலுத்துகிறது. இப் புரட்சிகர போராட்டத் தலைவர்களின் படுகொலைக்கு பழிதீர்க்க வீர சபதம் ஏற்கிறது. தியாகிகளின் லட்சிய கனவை உயர்த்திப் பிடித்து இம்மாபெரும் வீரர்களுக்கு வீர அஞ்சலி செலுத்துகிறது!




சீன புரட்சி மனித குலத்தின் மாபெரும் வியக்கத்தக்க சாதனைகள் நிறைந்த ஒரு காவியமாகும். மக்களின் ரத்தத்தால் எழுதப்பட்ட இந்த காவியத்தில் கோடிக்கணக்கான மக்கள் இருண்ட வாழ்விலிருந்து ஒளிமயமான எதிர்காலத்திற்கு முன்னேறினர். நோய்கள் மற்றும் வறுமையிலிருந்து நல்வாழ்வுக்கும்; துன்பத்திலிருந்து விடுதலைக்கும்; மகிழ்ச்சிக்கும்; மூடநம்பிக்கைகள், கல்வியின்மை மற்றும் பின்தங்கிய நிலைமையிலிருந்து நவீன அறிவியல் சிந்தனைக்கும் முன்னேறினர். இக்காவியத்திலிருந்து மனிதனின் சமூகம்பற்றிய அறிவின் ஒரு பண்புரீதியான பாய்ச்சலான மாவோ சிந்தனை அல்லது மாவோயிசமும் பல மாபெரும் புரட்சியாளர்களும் தோன்றினர்.

www.padippakam.com

**. . . 2 ஆம் பக்கத் தொடர்ச்சி**

கம்யூனிஸ்ட் கட்சி பிறந்தது. மாணவர்களால் துவங்கப்பட்டு தேசம் தழுவிய எழுச்சியை உருவாக்கிய மே 4 ஆம் நாள் (1919) இயக்கத்துடன், யுத்த பிரபுக்களை தூக்கி எறிந்துவிட்டு சீன குடியரசை அமைக்க தொடர்ந்து முயற்சி செய்து வந்த சன்யாட்சென் இயக்கமும், நிலப்பிரபுத்துவத்தை தூக்கி எறிவதற்கான கோமிங்டாங் - கம்யூனிஸ்ட் கூட்டு போராட்டங்களுக்கான ஒரு சாதகமான அடித்தளத்தை உருவாக்கியது. வடக்கு படையெழுச்சியில் தோல்வியடைந்த பின்னர் கோமிங்டாங் புரட்சிக்கு துரோகம் செய்ததுடன், நகர்புற எழுச்சி செயல் உத்திகளால் பல தோல்விகளை சந்தித்த போது பின்தங்கிய நாடுகளில் புரட்சியின் நிகழ்வுப் போக்கில் உள்ள புதிய நுண்ணறிவு மிக்க விசயங்களை மாவோ உருவாக்கினார். 'புதிய சனநாயகம்', 'நீண்டகால மக்கள் யுத்த பாதை' போன்ற அவரது உலகைக் குலுக்கிய கருத்துக்கள் தோன்றின. இவை சீன புரட்சிக்கு ரசிய பாதையை இயந்திரகதியாக பொருத்திய அனுபவங்களின் முந்தைய தோல்விகளிலிருந்து தோன்றியவை.

'புதிய சனநாயகம்' என்ற தனது கருத்துருவத்தில் லெனினின் இரு கட்ட புரட்சி என்ற கருத்திற்கு மாவோ மேலும் விஞ்ஞானபூர்வ வடிவத்தைக் கொடுத்தார். இதில், 1917க்கு முந்தைய எல்லா ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சிகள் அனைத்தும் பழைய முதலாளிய சனநாயக புரட்சியின் பகுதியாக இருந்தன, 1917க்கு பிந்தைய காலத்தில் அவை உலக சோசலிச புரட்சியின் பகுதியாக உள்ளன என்று முதல் முறையாக மாவோ சுட்டிக் காட்டினார். முந்தையது தேசிய முதலாளிகளால் தலைமைதாங்கப்பட்டது, பிந்தையது பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட வேண்டியது; முதலாளிகள் தற்போது புரட்சியின் இலக்காக உள்ள தரகு முதலாளிகள் மற்றும் புரட்சியின் நட்பு சக்தியாக உள்ள தேசிய முதலாளிகள் என்ற இரு முகாம்களாக பிளவுபட்டுள்ளனர்; விவசாயிகளை முக்கிய சக்தியாகவும் பாட்டாளிகளை தலைமைதாங்கும் சக்திகளாகவும் கொண்ட ஒரு நான்கு வர்க்கக் கூட்டணியின் மீது புரட்சி கட்டியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் அதில் கூறினார். 1917க்கு பிந்தைய சகாப்தத்தில் இரு கட்ட புரட்சி குறித்த மார்க்சிய புரிதலில் இந்த கோட்பாடு மாபெரும் முன்னேற்றத்தைக் கொடுத்தது.

"நீண்டகால மக்கள் யுத்தம்" பற்றிய தனது கருத்தில், பின்தங்கிய நாடுகளில் நடைபெறும் எல்லா புரட்சிகளுக்கும் இன்று பொருந்துகின்ற ஒரு புதிய பாதையைப் பற்றி மாவோ விவரித்தார். விவசாயிகளின் பாத்திரத்தை மறுத்து, ரசிய பாணியில் நகர்புற எழுச்சிகளின் மூலம் புரட்சியை உருவாக்க விரும்பிய பல்வேறு இடதுசாரி வழிகளை எதிர்த்து, கிராமப் புறங்களில் தளப்பகுதிகளை கட்டியமைத்து படிப்படியாக நகரங்களை சுற்றி வளைப்பது என்ற விவசாய கெரில்லா யுத்தம் பற்றிய மூல உத்தியை மாவோ வளர்த்தெடுத்தார்.

முதலில், கோமிங்டாங் பிற்போக்காளர்களுக்கும் பின்னர் ஜப்பான் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிராகப் போராடிய இந்த யுத்தத்தின் போது மாவோ, "மக்கள் யுத்தம்" என்னும் விஞ்ஞானத்தை வளர்த்தெடுத்தார். சர்வதேச பாட்டாளி களுக்கு அதன் ராணுவ கோட்பாட்டை முதல் முறையாக வகுத்தளித்தார். மக்கள் யுத்தம் பற்றிய தனது கோட்பாட்டில் அவர், மக்கள் வெறுமனே ஆயுதபாணியாக்கப்பட்டால் மட்டுமே போதுமானதல்ல, மாறாக நெருக்கமாக ஒருங்கி ணைந்து செயலாற்றும் நிரந்தர படையையும் மக்களின் குடிப்படையையும் கொண்ட ராணுவ ரீதியாக அமைப்பாக்கப் படவேண்டும். . . . என கூறினார். செஞ்சேனை, "மக்களி டையே பிரச்சாரங்களை நடத்தவும், அவர்களை அமைப்பாக் கவும், ஆயுதபாணியாக்கவும், புரட்சிகர அரசியல் அதி காரத்தை நிறுவிட அவர்களுக்கு உதவி செய்யவும்" போராடுகிறது என மாவோ குறிப்பிட்டார். இதில், மாவோ கெரில்லா யுத்த முறை, நடமாடும் யுத்த முறையோடு உள்ள அதன் தொடர்புகளையும், அதன் விதிகளையும் வளர்த்தெடுத் தார். அதுமட்டுமன்றி, இந்த யுத்தத்தை எப்படி நடத்துவது என்பது குறித்த சின்னஞ்சிறு விவரங்களைக் கூட விவரித் திருப்பது எந்த ஒரு அக்கறையுள்ள புரட்சிகர போராளிக்கும் அவசியமான ராணுவ குறிப்பேடாக இன்றும் விளங்குகிறது.

ஒரு இடைவிடா யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது, தங்களை மார்க்சிஸ்ட்டுகள் என கூறிக் கொள்ளும் சிலரால் கூறப்படுவது போல மாவோ வெறுமனே ஒரு விவசாய கெரில்லா தலைவர் அல்ல, முதல் முதலாக ஒரு வீரமிகு கம்யூ னிஸ்ட் ஆவார். மார்க்சிய தத்துவத்தில் அவர் கொண்டிருந்த ஆழமான பார்வையில் மட்டுமின்றி, புதிய வகையிலான ஒரு பாட்டாளிவர்க்க கட்சியை கட்டியமைப்பதற்கான அவரது முக்கிய பங்களிப்பிலும் கூட இது நிரூபணமாகிறது.

"முரண்பாடுகள் பற்றி" என்ற அவரது கட்டுரையில் எதிர்மறைகளின் ஒற்றுமையும் போராட்டமும் என்ற லெனினது கோட்பாட்டை மேலும் வளர்த்தெடுத்தது தோழர். மாவோதான். 'நடைமுறைபற்றி' என்ற அவரது முக்கிய படைப்பில் அறிவு பற்றிய கோட்பாடு குறித்த மார்க்சிய புரிதலை உயர்த்தியவரும் அவர்தான். பாட்டாளி வர்க்க உலக கண்ணோட்டம் பற்றிய விசயம், ஒருவரின் முதலாளிய பார்வையை தொடர்ச்சியாக மறுவார்ப்பு செய்ய வேண்டியதன் அவசியம் போன்ற எல்லா கொள்கைகளையும் மைய அரங்கிற்கு கொண்டு வந்தது மாவோ தான் என்பது முக்கியமானதாகும். 'மக்களுக்கு சேவை செய்வோம்', 'மக்கள் திரள் வழி' போன்ற அவரது கருத்துக்களும்; தன்னலமின்மை, எளிமை, நேர்மை மற்றும் பிறர் மீதான அக்கறை போன்ற கம்யூனிச உணர்வுகளை பெற்றுக் கொள்வது என்பதும் அவரது எழுத்துக்கள் முழுவ திலும் இழையோடிக் காணப்படும் கருத்துக்களாகும்.

பாட்டாளி வர்க்க கட்சி பற்றிய விசயத்தில், மாவோ அதை ஒரு நிலையான ஒற்றைத் தன்மை கொண்ட உட்பொருளாகக் காணவில்லை,மாறாக, எந்த ஒரு நிகழ்வையும் போலவே எதிர்மறைகளின் ஐக்கியம் மற்றும் போராட்டத்தின் மூலமாக வளர்ந்து கொண்டிருக்கும் இயக்கம் சார்ந்த ஒரு பொருளாகக் கண்டார். அதாவது, பாட்டாளிவர்க்க கண்ணோட்டத் திற்கும்,முதலாளிய கண்ணோட்டத்திற்கும் இடையிலான போராட்டமாகக் கண்டார். சந்தர்ப்பவாத, சீர்திருத்தவாத போக்குகள் மற்றும் வழிகளுக்கு எதிராக இருவழிப்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தை தொடுப்பதன் மூலம் பாட்டாளிவர்க்க கட்சியின் தன்மையை புரட்சிகரமாக எப்படி பாதுகாப்பது என்ற புரிதலை வளர்த்தெடுத்தார். சுயவிமர்சனம் - விமர்சனம் மற்றும் சீர் செய் இயக்கங்களின் மூலம் கட்சி உறுப்பினர்களை சிந்தாந்த மறுவார்ப்பு செய்வதன் மூலமும் கட்சியின் தன்மையை பாதுகாப்பது பற்றியும் மாவோ விளக்கினார். ஏற்கனவே இருந்து வரும் லெனினிய கட்சிக் கோட்பாடுகளுடன், இக் கோட்பாடுகளையும் இணைக்காமல், எந்த ஒரு பாட்டாளி வர்க்க கட்சியும் தோன்றி வளர்வது என்பது இன்று கடினமான ஒன்றாகும்.

சீன புரட்சியின் வெற்றிப் பாதையில் மாசேதுங் சிந்தனை அல்லது மாவோயிசம் என்ற வடிவத்தில் மார்க்சிய விஞ்ஞானம் மேலும் வளர்ச்சியடைந்த வடிவம் பெற்றதையும் நாம் காண்கிறோம். ரஷ்யப் புரட்சியைப் போலவே, சீன புரட்சிக்கும் இது குறிப்பான வரலாற்று முக்கியத்துவத்தை வழங்குகிறது. 1949-ல் அடைந்த வெற்றியுடன் புரட்சி முடிவெய்திவிடவில்லை. மாறாக புதிய வடிவத்தில் தொடர்ந்தது. முந்தைய காலகட்டத்தைக் காட்டிலும் இக்காலகட்டத்தில் மாவோவின் பங்களிப்பும், சீன அனுபவமும் மேலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக பெரும்பாலும் அமைகின்றன. நாட்டின் விடுதலையின் போது மாவோ கூறினார். "நாடு தழுவிய வெற்றியை பெறுவது என்பது 10 ஆயிரம் மைல் தூரம் கொண்ட நீண்ட பயணத்தின் முதல் அடி மட்டுமேயாகும்". சோசலிசத்தை கட்டியமைக்கும் நிகழ்வு போக்கில், இது புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்தது போலவே தீவிரமாகவும், ஈவிரக்கமற்றதாகவும் இருந்தது இவரது கூற்றை மெய்ப்பித்தது... அவர் சரியாகத் தான் கூறினார், என்பது நிரூபணமாயிற்று.

புதிய கம்யூனிச அரசாங்கத்தின் முன்னிருந்த முதல் பணியானது யுத்தத்தால் சீரழிந்துபோன பொருளியலை சீரமைப்பதாக இருந்தது. அதே வேளையில், ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் தரகு அதிகாரவர்க்க முதலாளியத்தின் பழைய ஆட்சியை தகர்த்தெறிவதும், அதனிடத்தில் புதிய சனநாயக அமைப்பையும் பொருளியலையும் நிறுவுவதாகவும் இருந்தது. படிப்படியாக சோசலிசத்திற்கு மாறிச்செல்வது என்பது அடுத்தபடியாக இருந்த பணியாகும். இறுதியாக, கம்யூனிசம் வரையிலும் சோசலிச அமைப்பை தொடர்ச்சியாக திடப்படுத்துதல் என்பது அவசியமானதாக இருந்தது. இக்காலகட்டம் முழுமைக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வது என்பதே இதன் பொருளாகும். கிராமப்புறங்களில் நிலச்சீர்திருத்தத்தாலும், தொழில்துறை புனரமைக்கப்பட்டதாலும் (அரசு உடைமை மற்றும் தனியார் உடைமையில்) 1953 வாக்கில் பொருளியல் சரியான அடித்தளத்தைப் பெற்றதாகியது. 1956 வாக்கில், உற்பத்தி சாதனங்கள் சோசலிச உடைமைக்கு மாறிச் செல்வது என்பது முக்கியமானதாக இருந்தது. விவசாயத்தை கூட்டுறவு மயமாக்குதல், தனியார் தொழில்துறை மற்றும் வணிகத்தை படிப்படியாக அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது அல்லது பகுதி - உடைமை உரிமையைக் கொடுப்பது என்பவனவற்றின் மூலமாக இது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. 1958 முதலாக சோசலிச அமைப்பை திடப்படுத்தும் நிகழ்வுப்போக்கு துவங்கியது. கிராமப்புறங்களில் கம்யூன்கள் உருவாக்கப்பட்டதுடன் முதலாளிய உரிமைகளைக் குறைத்து, தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

மாற்றங்களின் இந்த ஒட்டுமொத்த நிகழ்வுப் போக்கையும் கொண்டு வருவதற்காக கடும் வர்க்கப் போராட்டம் இருந்தது. முதலாவதாக, பழைய அமைப்பு முறையின் மிச்சசொச்சங்களுக்கு எதிராக; இரண்டாவதாக, பரவலாக இருந்த சிறுவீத சரக்கு உற்பத்தியின் மூலமாக ஒரு புதிய முதலாளிகள் உருவாகிக் கொண்டிருப்பதற்கு எதிராக; மூன்றாவதாக, பழைய சிந்தனைகள், பழக்கங்கள், வழக்கங்கள் மற்றும் பண்பாடு, அதுபோலவே, புதிய சனநாயக கட்டத்தில் பொருளியலில் 'நிலைத்த தன்மை' தான், சோசலிசத்திற்கு மாறிச் செல்வதல்ல என்று கட்சிக்குள் தோன்றிய திரிபுவாத கருத்துக்களுக்கு எதிராகவும் வர்க்கப் போராட்டம் கடுமையாக நடத்த வேண்டியிருந்தது. இந்நிகழ்வுப்போக்கில்தான், மார்க்சிய கோட்பாட்டின் வளர்ச்சியில் மாவோவின் மாபெரும் பங்களிப்பு தோன்றியது. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வது என்ற அவரது விரிவான விளக்கம் மாபெரும் பங்களிப்பாகும்.

இவ்வாறு செய்வதற்காக, 'சோவியத் பொருளியலுக்கு மதிப்புரை' என்ற ஒரு திறனாய்வுக் கட்டுரையை முன்வைத்தார். சோசலிசத்தின் கீழ் உள்ள வளர்ச்சிகளின் விதிகளை இதில் மிகவும் விஞ்ஞான பூர்வமாக விவரித்தார். பொருளியல் அடித்தளத்திற்கும், மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான இயங்கியல் உறவு முறைகளை அவர் மிகவும் தெட்டத்தெளிவாக முன்வைத்தார். பொருளியல் அடித்தளத்தை மாற்றியமைப்பதற்கு உதவி புரிவதில் மேல்கட்டுமானத்தின் முக்கிய பாத்திரத்தைப் பற்றியும் விவரித்தார். சோசலிசக் கட்டுமான காலகட்டம் முழுவதற்குமான முதன்மை முரண்பாட்டின் தன்மையைப் பற்றி கூறினார். 'இரு கால்களில் நடப்பது', 'விவசாயத்தை அடிப்படையாகவும், தொழிலை முதன்மைக் கூறாகவும்' கொள்ள வேண்டும் என்ற பொருளியல் கோட்பாட்டையும் உருவாக்கினார்.




இந்தியாவைப் போலவே நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய சுரண்டலின் பிடியில் சீனா இருந்து வந்தது. இதை எதிர்த்து பல புரட்சிகர எழுச்சிகள் தொடர்ந்தன. 1831-64ல் தைப்பிங் புரட்சி நான்கிங்கில் ஒரு புரட்சிகர அரசாங்கத்தை நிறுவியது. சிங் வம்ச நிலப்பிரபுத்துவ படைகள், அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு ஆக்கிரமிப்பாளர்களின் கூட்டுத் தாக்குதலில் புரட்சிகர அரசாங்கம் நசுக்கப்பட்டது. 1905ல் டாக்டர் சன்யாட் - சென் புரட்சிகர கழகத்தை நிறுவி, 1911ல் முதலாளிய புரட்சியை நடத்தினார். அது 2000 வருடத்திய நிலப்பிரபுத்துவ முடியாட்சிக்கு முடிவு கட்டியது. நான்கிங்கில் புரட்சிகர அரசாங்கம் நிறுவப்பட்டது. வடக்கத்திய யுத்த பிரபு யுவான் ஷி-கை இதை தோற்கடித்து ஆட்சியை பிடித்தான்.


படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளிடம் தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்ல மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சலை உருவாக்கி, இரும்பு மற்றும் எஃகு உருக்காலைகளை 'கிராமப்புறங்களுக்கு' கொண்டு சென்றார். எல்லாவற்றிலும் மிக முக்கியமான, வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் பாட்டாளிவர்க்க பண்பாட்டு புரட்சியை, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வதற்கான ஒரு வடிவமாகக் கண்டு பிடித்தார்.

சோசலிச கட்டுமானத்திற்கான விதிகளை படிப்படியாக தோற்றுவிக்கையில் இக்காலகட்டம் முழுவதற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளியத்திற்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாக இருக்கும் என மாவோ கூறினார். இது பற்றி அவர் கூறுகையில், "வர்க்கப் போராட்டம்தான் முக்கிய கண்ணி, மற்றவை அனைத்தும் அதை தொக்கியே உள்ளன" எனகூறினார். பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்ற லீ சோஷியின் கோட்பாட்டை அவர் சாடினார். புதிய முதலாளியவாதிகளின் தலைமையகமாக கம்யூனிஸ்ட் கட்சிக்குள் அதிகாரத்தில் இருக்கின்ற முதலாளியப் பாதையாளர்களே இருக்கின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினார். தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும், நகரங்களுக்கும் கிராமங்களுக்கும், மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையே இருக்கின்ற மூன்று முக்கிய முரண்பாடுகளை தீர்ப்பதற்கான வழிமுறையைச் சுட்டிக்காட்டினார்.

முதலாளிய உரிமைகளை மட்டுப்படுத்துவது, 'மதிப்பு விதியை' கட்டுப்படுத்துவது போன்றவற்றிற்கான வழிமுறைகளையும் உருவாக்கினார்.

இந்த புரட்சியை மேல்கட்டுமானத்தில் கொண்டு வருவதற்காக மாவோ மாபெரும் பாட்டாளிவர்க்க பண்பாட்டு புரட்சியை உருவாக்கினார். பண்பாட்டு புரட்சியின் நோக்கத்தைப் பற்றி அவர் விவரிக்கையில், "முதலாளிய பாதையாளர்களை எதிர்த்து போராடுவது முதன்மை பணியாகும், ஆனால் இது எவ்வகையிலும் அதன் இலக்காக இருக்க முடியாது. அதன் இலக்கு என்னவெனில் உலக கண்ணோட்டத்தின் சிக்கல்களைத் தீர்ப்பதாகும், அது திரிபுவாதத்தின் வேர்களைப் பிடுங்குவது குறித்த விசயமாகும். மக்கள் கல்விபயின்று தங்களை தாங்களே விடுவிக்க வேண்டும் என மைய குழு பலமுறை வலியுறுத்தியுள்ளது, இந்த உலக கண்ணோட்டத்தை அவர்களின் மீது திணித்து விட முடியாது. சிந்தனையை மாற்றியமைக்க அகக்காரணங்களே முதன்மையாக இருப்பினும், புறக்காரணங்கள் அகக்காரணங்களின் ஊடாக செயல்படுவது அவசியமானதாகும். உலக கண்ணோட்டத்தை மாற்றியமைக்காவிட்டால், பண்பாட்டு புரட்சியால் என்ன வெற்றி இருக்கப் போகிறது ? இந்த உலக கண்ணோட்டமானது மாற்றப்படாவிட்டால் இன்று 2000 பேராக இருக்கும் முதலாளிய பாதையாளர்கள் அடுத்த வேளையில் 4000

**தொடர்ச்சி . . . 43 ஆம் பக்கம்**

59 ஆம் பக்கத்தொடர்ச்சி

வெல்த்திலிருந்து பாகிஸ்தானை நீக்கியுள்ளது. ஐ.எம்.எப் கடன் தருவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. முதலில் நீர்மூழ்கி கப்பல்களை தரமாட்டேன் என்று கூறிய பிரான்சு, பிறகு நேரம் தவறாமல் அவற்றை அனுப்பி வைத்தது.

மறுபுறம், ராணுவ தளபதிகளோ ஏகாதிபத்தியங்களை திருப்திப்படுத்த கடுமையாக முயற்சிக்கின்றனர். பணக்காரர்கள், அரசியல்வாதிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கொள்ளையடித்த 5 பில்லியன் டாலர்களை மீட்கப் போவதாக ஐ.எம்.எப். க்கு உறுதி அளித்துள்ளனர். ஜெனரல் முஷ்ரப் மேற்கத்திய ஆதரவாளர்களை தேசிய பாதுகாப்பு கவுன்சில் மற்றும் இதர அமைப்புகளில் நியமித்துள்ளார். இந்தியாவுடனான சர்வதேச எல்லையிலிருந்து தாமாகவே இராணுவத்தை விலக்குவதாக அறிவித்தார்.

இந்தியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் இருந்த பனிப்போர் காலத்தில், மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் செல்லக் குழந்தையாக விளங்கிய பாகிஸ்தான் ஆளும் வர்க்கங்கள் இப்போது புதிய பூகோள அரசியல் சூழலில் அனாதைகளாகிவிட்டனர். சோவியத் சமூக ஏகாதிபத்தியம் போட்டிக்கு இல்லாததால், மேற்கத்திய நாடுகள் இந்திய அடிவருடி ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக செயல்படுகின்றன. இருப்பினும், அவர்கள் அணுகுண்டு வைத்துள்ள பாகிஸ்தானை ஈரான், ஈராக் அடங்கிய, இஸ்லாம் முகாமுக்குத் தள்ள விரும்பவில்லை. ஆனால், அமெரிக்காவுடன் தமது காதலை உறுதிப்படுத்த நினைக்கும் இந்திய ஆட்சியாளர்கள், பாகிஸ்தானுக்கு 'ரவுடி அரசு' முத்திரை குத்தி இஸ்லாமிய முகாமிற்குள் தள்ளத் துடிக்கின்றனர்.

இந்த இழுபறிகளுக்கிடையே பாகிஸ்தானியர் கூட ஒருதிவாலான பொருளியலையும், பயங்கர வறுமையையும், எதிர்நோக்கி உள்ளனர். அங்கு எவ்விதமான குடி உரிமைகளும் கூட இல்லை. பல்வேறு தேசிய இனங்கள் பஞ்சாப் இனத்தின் இரும்புக் கால்களால் நசுக்கப்பட்டு வருகின்றன. இந்திய எதிர்ப்பு வெறியால் தொடர்ச்சியாக திசை திருப்பப்பட்டு வரும் பாகிஸ்தான் மக்களும் கூட, (இந்திய மக்களைப் போலவே) ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் தரகு முதலாளிகளை இன்னும் தூக்கியெறியவில்லை. ஆனால், நெருக்கடியின் தீவிரமாக்கம் மற்றும் ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான நாய்ச்சண்டைகள் ஆகியவை, பாகிஸ்தான் மக்கள் முன்னர் பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. மக்களின் ஆத்திரம் புரட்சி நோக்கி திருப்பப்படாவிட்டால், அது இஸ்லாமிய அடிப்படை வாதத்தில் வடிகால் காணும் அபாயம் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தொடர் கட்டுரை – 4

# நக்சல்பாரி இயக்கத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகள்

## மக்கள் யுத்த காலகட்டம்

### [1980 முதல் இன்று வரை]

கடந்த இதழ்களில் 1.திருத்தல்வாதத்தை எதிர்த்த கட்டம் 2. அழித்தொழிப்புப்பாதை கட்டம் 3. கூட்டக் குழு கட்டம் வரை பார்த்தோம். இந்த இதழில் "மக்கள் யுத்த காலகட்டத்தை" பார்ப்போம். இக்கட்டம் 1980 முதல் இன்றுவரையிலாகும். இதை 1980 முதல் 1987 வரை ஒரு கட்டமாகவும், 1987 முதல் இன்று வரை மற்றொரு கட்டமாகவும் பார்க்கலாம். இந்த இதழில் 1980 முதல் 1987 வரை பார்ப்போம்.

1980 ஏப்ரல் 22ல் தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய இரு மாநிலகட்சிகளும், "கடந்த பத்தாண்டு கால அனுபவத் தொகுப்பு", "நமது போர்த்தந்திரவழி" என்ற ஆவணங்களின் அடிப்படையில் இணைந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்] [மக்கள் யுத்தம்] உருவானது.

"கடந்த பத்தாண்டு கால அனுபவத் தொகுப்பில், 1. கட்சியின் முந்தைய கணிப்பு, நடைமுறை ஆகிய இரண்டிலுமுள்ள சரியான அம்சங்கள், 2. நடைமுறையில் வெளிப்பட்ட முதன்மையான தவறுகள்; அவற்றின் பின்னால் உள்ள தவறான கணிப்புகள், 3. கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகள், 4. இன்றைய அரசியல் - அமைப்பு நிலைமை, நம்முடைய பணிகள் மேற்கண்டவற்றை ஒவ்வொன்றாக விரிவாக மீளாய்வு செய்தது.

#### இக்கட்டத்தின் முக்கிய நிகழ்வுகள்

**இக்கட்டத்தில் மிக அதிகமான அளவு வேலைகள் நடந்தன. இவை முழுவதும் இங்கு தருவது முடியாத ஒன்றாகும். எனவே, குறிப்பான சிலவற்றை மட்டும் இங்கு தருகிறோம்.–**

● 1980 கால கட்டத்தில் சிறிய நடுத்தர உழவர்களின் நிலத்தை அபகரித்துக்கொண்ட ஆதிக்க சக்திகளிடமிருந்து, மக்களை திரட்டி நிலம் மீட்டெடுக்கப்பட்டது.

● வாலிபர் சங்கம் குறைந்த கூலி முறையை எதிர்த்து போராட்டங்களை நடத்தியது.

● நாயக்கன் கொட்டாய் பகுதியில் தனி டீ டம்ளர் கொடுமையை எதிர்த்து போராட்டம் நடந்தது. இதையொட்டி ஆதிக்க சக்திகளால் போடப்பட்ட ஊர்க் கட்டுப்பாடும் தொடர்ச்சியான உறுதியான போராட்டத்தால் உடைத்தெறியப்பட்டது.

சரியானவைகளின் முக்கிய அம்சங்களாவன:

1) இந்திய ஜனநாயகப் புரட்சி சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சனைகளை தீர்த்தது. ஒரு சரியான புரட்சிகர பாதையை உருவாக்கியது.

(அ) அதாவது, இந்திய சமுதாயத்தை பற்றி, இந்தியா ஒரு அரைக் காலனி, அரை நிலப் பிரபுத்துவத் தன்மை உடையது;

(ஆ) இந்தியாவின் நான்கு முக்கிய முரண்பாடுகளாக:

(i) ஏகாதிபத்தியம், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் நமது மக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடு, (ii) நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையே உள்ள முரண்பாடு (iii) மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையிலான முரண்




20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரிட்டன், ஜெர்மன், பிரான்ஸ், ரஷ்யா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய ஏகாதிபத்தியங்கள் சீனாவை ஆதிக்கம் செய்தன. முதல் உலக போருக்குப் பின் ஜப்பானின் ஆதிக்கம் அதிகரித்து, சீனாவில் தனது பொம்மை அரசை நிறுவியது. 1919 ஜனவரி வெர்ஸ்சேல்ஸ் சமாதான மாநாட்டில் சீன அரசாங்கம் ஏகாதிபத்தியங்களிடம் சரணடைந்து நாட்டிற்கு துரோகமிழைத்தது. இதை எதிர்த்து 1919, மே - 4 ல் மாணவர்களின் எழுச்சியாக மே-4 இயக்கம் தொடங்கியது. பின்னர் தொழிலாளர் வணிகர் போன்ற பல்வேறு வர்க்கங்களும் அதில் இணைந்தனர். இது சீனாவில் நிலப்பிரபுத்துவ - ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த இயக்கமாக பரிணமித்தது.


படிப்பகம்

www.padippakam.com

பாடு, (iv) ஆளும் வர்க்கங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு. இவ்வனைத்து முரண்பாடுகளிலும் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடே முதன்மையான முரண்பாடாகும் என்று வரையறுத்தது.

(இ) புதிய ஜனநாயகப் புரட்சியின் நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை சரியாக தீர்மானித்தது. அதாவது , தொழிலாளி வர்க்க தலைமையில், தொழிலாளி - விவசாயி கூட்டின் அடிப்படையில் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சக்திகளைக் கொண்ட ஒரு ஐக்கிய முன்னணியை அது கட்டும். மேலும், இப்புரட்சிக்கு தடையாக இருக்கின்ற நான்கு மலைகளை - சோவியத் சமூக ஏகாதிபத்தியம், அமெரிக்க ஏகாதிபத்தியம், இந்திய தரகு முதலாளி வர்க்கம், நிலப் பிரபுத்துவம் ஆகிய வற்றை - தகர்த்தெறியும் என்று தீர்மானித்தது.

(ஈ) புரட்சியின் இலக்கை சரியாக தீர்மானித்த பிறகு, அதனுடைய பாதையை தீர்மானித்தது. அது நாடாளுமன்ற பாதையை மறுத்து, ஆயுதந்தாங்கிய புரட்சிகர பாதையை விடுதலைக்கான ஒரே பாதையென உறுதிப் படுத்தியது. இது கடந்த பத்தாண்டுகளில் நிரூபிக் கப்பட்டுள்ளது. மேலும், கிராமங்களே முதலில் விடுவிக்கப்படும் என்றும், நகரங்கள் இறுதியாக சுற்றி வளைக்கப்படும் என்றும், நாடு முழுவதும் படிப்படியாக நீண்ட மக்கள் யுத்த பாதையின் மூலமே விடுவிக்கப்பட முடியும் என்றும் தெளிவுபடுத்தி இருக்கிறது.

மேற்கண்டவைகள் கடந்த பத்தாண்டு காலத்தில் நடைமுறையில் சரியானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன என்று அனுபவத்தொகுப்பு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது.

2) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பல்லாண்டு காலமாக ஆழமாக வேரூன்றியிருந்த திருத்தல் வாதத்திற்கு ஒரு மரண அடியைக் கொடுத்தது.

3) சோசலிசம், கம்யூனிசம் என்ற போர்வையில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் துரோகத்தனத்தை வெளிப்படுத்தியது.

4) தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமைகளுக்கான - பிரிந்து போகும் உரிமை உட்பட நாகர்கள், மிஜோக்கள் போன்றவர்களின் ஆயுதந்தாங்கிய போராட்டங்களையும் உறுதியாகவும், சந்தேகத்துக்கு இடமின்றியும் ஆதரித்தது.

5) மார்க்சிய - லெனினிய - மாசே துங் சிந்தனையை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டது போன்ற அரசியல் நிலைபாடுகளை சரியென அனுபவத் தொகுப்பு ஆதரித்தது.

6) நக்சல்பாரி எழுச்சிக்கு பின் கடந்த பத்தாண்டுகளில் இளைஞர் மாணவர்கள் மட்டுமல்லாமல் பெருவாரியான நிலமற்ற - ஏழை விவசாயிகளும் கட்சியை நோக்கி பெருமளவில் திரட்டப்பட்டுள்ளனர். இதுதான் அநேகமாக இந்திய கம்யூனிஸ்ட்டு இயக்கத்தில் முதல் தடவை என சுட்டிக்காட்டியது.

மேற்கண்ட சாதனைகள் மட்டுமல்லாமல் சில தவறுகளையும் சுட்டிக் காட்டியது.

1. சகாப்தம் பற்றி மற்றும் சர்வதேசிய, தேசியச் சூழல்கள் பற்றி தவறான மதிப்பீடு

2. அகநிலை அம்சத்தை புறக்கணித்தது, அதாவது, பலமான கட்சி கட்டுவதன் அவசியத்தை புறக் கணித்தது.

● காவல் துறையும், வெள்ளைய கவுண்டன் என்ற நிலப்பிரபுவும் சேர்ந்து "மக்கள் நல உரிமை கழகம்" என்ற பெயரில் கட்சியை இழிவுபடுத்தி பிரசுரங்கள் வெளியிட்டனர். மேலும், இரவில் மக்களிடம் வழிப்பறி கொள்ளைகளை செய்துவிட்டு, நக்சல்பாரி முழக்கங்களையும் துண்டு பிரசுரங்களையும் வீசிவிட்டு சென்றனர். இவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்தியதுடன் அடித்து துரத்தப்பட்டனர். மேலும் நிலப்பிரபுக்களை மக்கள் முன் நிறுத்தி மன்னிப்பு கேட்க வைத்ததுடன் அவதூறு செய்தது தவறு என மன்னிப்பு கோரி அவர்கள் உருவாக்கிய சங்கத்தின் பெயரிலேயே து.பிரசுரம் போட வைத்தது.

● முன்னாள் எம்.எல்.ஏ. ரவுடி ரங்கனின் கந்துவட்டியை எதிர்த்து போராட்டம் நடத்தியதுடன், விவசாயிக்கு ஆதரவாக தண்டம் வசூலிக்கப்பட்டது. இந்த ரவுடிக்கு எதிரான இயக்கம் தொடர்ச்சியாக வளர்ந்து இவனுக்கெதிராக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு, ஊர்வலம் நடத்தப்பட்டது.

● அதியமான்கோட்டை, பென்னாகரம் பகுதிகளில் மக்களை மிரட்டி பணம் வசூல் செய்துகொண்டிருந்த காட்டிலாகாவினருக்கு எதிராக போராட்டம் எடுக்கப்பட்டது. அவர்களை மக்கள் முன் மன்னிப்பு கேட்க வைத்தது மட்டுமல்லாமல் மாமூல் வசூல் நிறுத்தப்பட்டது.

● 1984ல் தருமபுரி, பென்னாகரம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தேசிய இன சிக்கல் குறித்தும், ஈழ தமிழர் சிக்கல் குறித்தும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

3. போராட்டத்தில் முதிர்ச்சியடையாத முழக்கங்களும் அறைகூவல்களும்.

4. அழித்தொழிப்பை ஒரே பாதையாக நடைமுறைப்படுத்தியது.

5. பிற போராட்ட வடிவங்களும், அமைப்பு வடிவங்களையும் மறுத்தல்.

போன்றவைகள் அனுபவத்தொகுப்பு பார்த்துணர்ந்த தவறுகளில் முக்கியமானவை ஆகும்.

மேற்கண்ட அம்சங்களைக் கொண்ட "கடந்த பத்தாண்டு கால அனுபவத்தொகுப்பும் [1970 - 1979]" "நமது போர்த்தந்திர வழி" யும் இரண்டு மாநிலக் கட்சிகளின் இணைவுக்கு அடிப்படையாயின. இரு மாநிலங்களிலும் மாநாடுகள் நடத்தி 1980 டிசம்பர் இறுதிக்குள் பேராயம் நடத்துவது என மைய குழுவில் முடிவு செய்யப்பட்டது.

புதிய புரிதலினடிப்படையில் வேலைகள் தொடங்கின. இவ்வேலைகள் கடந்த கட்டத்தின் இறுதியிலேயே துவங்கிவிட்டன. கூலி விவசாயிகள் சங்கமும், வாலிபர் சங்கமும் தருமபுரியில் கட்டப்பட்டு கிராமப்புற இயக்கம் மிக வேகமாக கொண்டு போகப்பட்டது. பல போராட்டங்கள் எடுக்கப்பட்டன. கிராமங்களில் நிலப்பிரபுத்துவ பஞ்சாயத்து வடிவங்களின் மூலம் மக்களை ஏய்த்தும், ஒடுக்கியும் வைத்திருந்தன நிலப்பிரபுத்துவ சக்திகள். இக்கொடுமையை ஒழிக்கவும், மக்களை நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கெதிராக திரட்டவும் புதிய பஞ்சாயத்து வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பஞ்சாயத்து வடிவங்களை கையாள்வதில் கட்சியும், வாலிபர் சங்கமும் ஒரு தெளிவான வரையறைகளை மேற் கொண்டன.

1. எதிரிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை கையாள்வதில் வர்க்க சமரசம் செய்யும் பஞ்சாயத்து முறையை மேற்கொள்ளுவதில்லை.

2. எதிரிகளுக்கு இடையிலான முரண்பாட்டை தீர்க்கும் பஞ்சாயத்துகளில் பங்கு கொள்வதில்லை.

3. மக்களிடையிலான முரண்பாட்டை தீர்ப்பதில் எதிரிகளை அனுமதிப்பதில்லை.

எல்லா சிக்கல்களிலும் அரசு அமைப்பையும், நிலப்பிரபுத்துவத்தையும் அம்பலப்படுத்துவது, முரண்பாடுகளை கையாளுவது பற்றி மக்களுக்கு போதிப்பது என்பதே கட்சியும் வாலிபர் சங்கமும் மேற்கொண்ட நடைமுறையாகும். இவ்வடிவத்தின் மூலம் பல்வேறு போராட்டங்கள் எடுக்கப்பட் டது. கோவில் மானிய நிலங்கள் நிலமற்ற உழவர்களுக்கு பகிர்வு, கந்துவட்டி கொடுமைக்

● 1985 ஜூலையில், இலங்கையில் நடந்த ஈழ தமிழர் படுகொலையை கண்டித்து தமிழ்நாடு முழுக்க போராட்டங்கள் நடத்தப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் பகுதியில் ஊர்வலம், போராட்டங்கள் நடத்தப்பட்டது.

● திருச்சி உடையார் பாளையம் பகுதியில் காட்டிலாகா முந்திரி தோப்புகளை மக்களுக்கு குத்தகைக்கு விடக்கோரி போர்ாட்டம் எடுக்கப்பட்டது.

"அரசின் முந்திரிக்காடுகள் மக்களுக்கே சொந்தம்", "கூலி ஏழை விவசாயிகளுக்கே முந்திரிக்காடுகளை ஏலம் விடவேண்டும்" "தனியார்களுக்கு ஏலம் விடாதே, ஏலம் விட்டால் மீறி முந்திரிக் கொட்டை பொறுக்குவோம்" போன்ற முழக்கங்களின் அடிப்படையில் பரந்த அளவில் மக்களை திரட்டி போராட்டம் எடுக்கப்பட்டது. ஆனால், தனியாருக்கு ஏலம் விடப்பட்டது. சாதாரண விவசாயிகள் மீது திருடியதாக பொய்வழக்கு போடப்பட்டது. இதை எதிர்த்தும் போராட்டங்கள் நடந்தது. தனியாருக்கு ஏலம் விட்டதை எதிர்த்து மக்கள் கிராமம், கிராமமாக திரண்டு சென்று முந்திரிக் கொட்டைகளை பொறுக்கிவந்தனர். இச்சமயத்தில் ஒரு விவசாயியை கேவலமாக பேசி, சுடுவதாக மிரட்டிய போலீசிடம் இருந்து மக்கள் ஒரு துப்பாக்கியை பறித்து வந்துவிட்டனர். பின்னர், அவன் மன்னிப்பு கேட்டபிறகு திருப்பித் தந்தனர்.




1917ன் ரஷ்ய புரட்சியின் தாக்கம், சீன தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி, மே - 4 இயக்கத்தின் வீச்சு ஆகியவற்றின் விளைவாக சீனாவில் மார்க்சியம் வேர்விடத் துவங்கியது. சீனாவில் மார்க்சியத்தின் நிறுவனரான லிடோ - சாகோ, "புதிய இளைஞன்", "வாராந்திர மீளாய்வு" ஆகிய இதழ்கள் மூலம் மார்க்சியத்தை பிரச்சாரம் செய்தார். 1918-19 லிருந்து ஷாங்காய், பீகிங் மற்றும் சீனாவின் பல மாகாணங்களில் மார்க்சிய படிப்பு வட்டங்கள் பல்கிப் பெருகின. 1921 ஜூலையில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உதவியுடன் இக்குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஷாங்காயில் சீனகம்யூனிஸ்ட் கட்சியின் முதல் பேராயம் நடத்தப்பட்டது. முதல் பேராயத்திலேயே, வெறும் பிரச்சாரம் மற்றும் வெளியீடுகளோடு நின்றுவிட வேண்டும் என்ற "சட்டவாத மார்க்சியவாதிகள்" மற்றும் முதலாளிய ஜனநாயகப்புரட்சியில் கட்சி கலந்து கொள்ளக்கூடாது, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமே உடனடி லட்சியம் என்று கூறிய 'இடது'கண்ணோட்டத்தையும் எதிர்த்து போராட்டம் நடத்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கெதிரான போராட்டம், சாதி ஒடுக்குமுறை எதிர்ப்பு [குறிப்பாக தனி டீ டம்ளர் ஒழிப்பு போராட்டம்]போராட்டங்கள், ஆதிக்க சக்திகளின் கொடுமைகளுக்கெதிரான போராட்டங்கள் என்பவைகள் இதில் குறிப்பிடத்தகுந்தவை.

இச்சமயத்தில் ஒரு பக்கம் மக்களின் எழுச்சி மிகு போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, மறுபக்கம் கடுமையான அடக்கு முறைகளை பாசிஸ்ட் எம்.ஜி.ஆர் அரசு ஏவியது. 1980 ஆகஸ்டில் சில தோழர்கள் கைது செய்யப்பட்டு ஜீப்பில் கொண்டு செல்லும் பொழுது, தப்பிப்பதற்காக வைக்கப்பட்ட வெடிகுண்டு வெடித்ததில் ஒரு தோழரைத் தவிர மற்ற தோழர்களும் சில போலீசாரும் உயிரிழந்தனர். இதை காரணம் காட்டி வெறிநாய் தேவாரம் தலைமையில் நர வேட்டையாடியது. செப்டம்பரில் இருந்து டிசம்பர் வரை தோழர். பாலன், கண்ணாமணி உட்பட சுமார் 26 பேர் "மோதல்" என்ற பெயரில் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலோர் ஆதரவாளர்களும் அப்பாவி மக்களுமே. இவர்கள் மரத்தில் கட்டி வைத்தே சுடப் பட்டனர். ஆனால் மிகப்பெரிய சண்டைகளில் இவர்களைக் கொன்றதாக மார்தட்டிக் கொண்டான் கோழை தேவாரம்.

அப்பொழுது நடந்த போராட்டங்களை பற்றியும், போலீசின் அடக்கு முறையை கண்டித்தும் "நர வேட்டைக்கு அஞ் சோம்" என்ற தலைப்பில் கட்சி ஒரு வெளியீடு வெளியிட்டது. இது மட்டுமல்லாமல், மேலும், சில பிரச்சார முறைகளின் மூலம் அடக்கு முறையிலிருந்து இயக்கத்தை வெளிக் கொண்டுவர தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, வெளிப்படையான சில வேலைகள் நடைபெற்றன. மக்கள் யுத்த கட்சியின் அரசியல் வழியை ஏற்றுக்கொண்ட மக்கள் திரள் அமைப்புகள் (மாநிலந் தழுவிய) முற்போக்கு மாணவர் சங்கமும், முற்போக்கு இளைஞர் அணியும் உருவாகின்றன.

- திருச்சி மீன் சுருட்டியில் நல்லய்யா என்ற நிலப்பிரபு ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து கொன்று விடுகிறான். இதை எதிர்த்தும் போராட்டம் நடத்தப்பட்டது.
- தஞ்சையில், "மடத்து நிலங்கள் மக்களுக்கே சொந்தம்" என்ற முழக்கத்தின் அடிப்படையில் திருப்பனந்தாள் பகுதியில் கூலி, ஏழை – விவசாயிகளையும்,சிறிய நடுத்தர விவசாயிகளையும் திரட்டி எடுத்த போராட்டம் அப்பகுதி ஆளும் வர்க்கங்களை நடுங்க வைத்தது.
- சேலம் மாவட்டத்தில் ஜலகண்டாபுரம், எடப்பாடி பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர் தங்களின் கூலி, போனஸ் சிக்கலுக்காக ஆயிரக்கணக்கில் திரட்டப்பட்டு போராட்டங்கள் எடுக்கப்பட்டது.
- சென்னையில், ஆந்திராவில் அடக்குமுறையை எதிர்த்து மாணவர் அமைப்பின் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது.
- தருமபுரி தோழர்கள் மீது போடப்பட்ட தே.பா.சட்டத்தின் விசாரணைக்கு சென்னைக்கு கொண்டு வரும்போது அவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு தோழர்கள் கைதாயினர்.
- ஈழத் தமிழர் பிரச்சனைக்காக மாணவர் போராட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் சார்பாக மிகச் சிறப்பான இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தருமபுரி கிராமப்புற இயக்கம் மீண்டும் செயல்படத் துவங்கியது. அதே போல் கிராமப்புற இயக்கமும் மற்ற மாவட்டங்களுக்கு பரவத்தொடங்கியது. திருச்சி மாவட்டத்தில் "முந்திரிக் காடுகள் மக்களுக்கே சொந்தம்" என்ற முழக்கத்தின் அடிப்படையிலான போராட்டமும், தஞ்சையில் "மடத்து நிலங்கள் மக்களுக்கே சொந்தம்" என்ற போராட்டமும் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை, சேலம் மாவட்டங்களில் தொழிலாளர் அமைப்புகள் கட்டப்பட்டன. சென்னையில் குறிப்பாக அசோக் லேலன்ட், டி. வி.எஸ், அட்கோ, டன் லப், ஐ.சி.எப், இங்கிலீஷ் எலக்ட்ரிக்கல்ஸ் போன்ற தொழிற்சாலைகளில் அமைப்பு பரவியது. சேலத்தில் விசைத்தறி தொழிலாளர்களிடையே வளரத் தொடங்கிய அமைப்பு பின்னர், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை திரட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்தப்பட்டது.

தோழர். தமிழரசன் 1981 ல் ஜாமினில் விடுதலையாகி வருகிறார். சில மாதங்கள் கழித்து மாநில குழுவில் இணைத்துக் கொள்ளப்படுகிறார். அதே போல், தோழர். புலவர் கலியபெருமாளும் 1983ல் மாநில குழுவில் இணைத்துக் கொள்ளப்படுகிறார். [இவர் 1971ல் இருந்து சிறையிலிருந்தார். பின்னர் உச்சநீதிமன்ற பரோலில் 1983 ல் வெளி வந்தார்]. தோழர். தமிழரசன் சிறையிலிருந்த பொழுதே தேசிய இன சிக்கலில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தார். வெளியில் வந்த பிறகும் அமைப்பில் முன் வைத்தார். தேசிய இன சிக்கலை அடிப்படையான முரண்பாடாக இணைக்க வேண்டும் என்றும், பின்னர் அதுவே முதன்மை முரண்பாடு என்றும் கருத்தை முன் வைத்தனர். [புலவரும், திருச்சி மாவட்டகுழு உறுப்பினரான தோழர். சுந்தரமும் இக்கருத்தை ஆதரித்தனர்].



படிப்பகம்

www.padippakam.com

இச்சிக்கல் மாநிலகுழுவில் ஜனநாயக பூர்வமாக தீர்க்கப்படவில்லை. இரு தரப்பினரும் குழுவாத (குரூப்பிசம்) அடிப்படையிலேயே தீர்க்க முயற்சி செய்தனர். தமிழ் நாட்டில் மாநில குழு எப்பொழுதும் ஜனநாயகமற்ற குறுங்குழுவாத போக்கையே கையாண்டிருந்தது. இதிலும் கட்சி முழுவதும் விவாதித்து, இறுதியில் ஒரு ஜனநாயக அரங்கின் மூலம், அதாவது, மாநாடோ, பிளீனமோ நடத்தி தீர்க்க முற்படவில்லை. தோழர். தமிழரசனும் இம்முறையில் தீர்த்துக்கொள்ள தயாரில்லாமல் கட்சியை பிளப்பதிலேயே கவனம் செலுத்தினார். 1989 ஏப்ரலில் தோழர் தமிழரசன், புலவர், சுந்தரம் மூவரையும், கட்சி விரோதமாக செயல்பட்டனர் என்ற காரணத்தினடிப்படையில் மாநிலகுழு "தற்காலிக நீக்கம்" செய்தனர். பின்னர், மே மாதத்தில் பெண்ணாடத்தில் தேசிய இன சிக்கல் குறித்து புலவர் தலைமையில் மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாடு வெளிப்படையாக பிளவை இறுதிப்படுத்தியது. தோழர். தமிழரசன் தலைமையில் இவர்கள் தமிழ்நாடு பொதுவுடைமை கட்சி (மா-லெ) என அமைத்து தனியாக செயல்படத் துவங்கினர். இக்கட்சி பிளவினால் திருச்சி மாவட்ட குழுவும், தெ. ஆற்காட்டில் சில தோழர்களும், தோழர். தமிழரசன் பின் சென்றனர். மற்றபடி பிற மாவட்ட அமைப்புகள் முழுவதும் தோழர். தமிழரசன் குழுவினரின் கட்சியை பிளந்த செயல் பாட்டை விரும்பவில்லை; ஆதரவு தரவில்லை.

அதே சமயத்தில், மாநில குழுவின் அமைப்பு அராஜகத்தையும், சந்தர்ப்பவாத, குழு வாதத்தையும் உணரவில்லை. அதாவது, தமிழ் மாநில குழு 1969ல் நடந்த முதல் மாநில மாநாட்டிற்கு பிறகு எந்த மாநாட்டையும் நடத்தவில்லை. 1980ல் பேராயத்தை ஒட்டி தமிழ் நாட்டில் மாநாடு நடத்துவது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. அரசின் அடக்குமுறையும் அமைப்பு சிக்கல்களும் நடத்தாதற்கு காரணமாக கூறப்பட்டன. ஆனால், மாநில குழுத் தலைமை கட்சியின் அரசியல் வழியை புரிந்துகொண்டு வழி காட்டவோ, நடைமுறைப்படுத்தவோ தயாரில்லை. அன்று தருமபுரி இயக்கம் மிகச் சிறப்பாக வளர்ந்து கொண்டிருந்தது. தோழர். அப்பு, பாலன் சிலை திறப்பு விழாவிற்காக 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் திரண்டனர். அ.தி.மு.க எம்.எல்.ஏ வாக இருந்த ரவுடி ரங்கனுக்கு எதிரான போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டனர். இதேபோல் சேலம் விசைத்தறி தொழிலாளர்கள் போராட்டம், சென்னையில் சில தொழிற்சாலைகளில் போராட்டங்களும் நடந்தன. ஆனால், இக்கட்டத்தில் மாநில குழு என்ன செய்து கொண்டிருந்தது? மாநில குழு தோழர்களுடன் முரண்பட்ட மாவட்ட குழுக்கள் கலைக்கப்பட்டன. தலைமையின் வழிகாட்டுதல் நடைமுறையில் இல்லாததால் அணிகள் விரக்தியாகி அமைப்பு நடைமுறை வேலைகள் படிப்படியாக குறைய ஆரம்பித்தது.

இக்கட்டத்தில் மைய குழுவில் நெருக்கடி ஏற்பட்டது. 1982ல் மைய குழு செயலர் தோழர். கொண்டபள்ளி சீதா ராமையயா கைது செய்யப்பட்டார். பின்னர், தோழர். சத்திய மூர்த்தி செயலராக ஆக்கப்பட்டார். 1984ல் சிறையிலிருந்து தோழர். கே. எஸ் மீட்கப்பட்டார். செயலராக

● 1986ல் நூறாவது மே தின நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரங்களும் ஊர்வலமும் நடைபெற்றது.

● இந்திராகாந்தி ராணுவம் பஞ்சாபில் சீக்கியர்களை கொன்று குவித்ததை கண்டித்தும், பஞ்சாப் மக்களின் போராட்டத்தை ஆதரித்தும் தமிழ்நாடு முழுவதும் சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

● சேலம், விசைத்தறி போராட்டத்தை ஒட்டி இரண்டு தோழர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதை எதிர்த்து பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

● 1984ல் தியாகி தோழர்கள் அப்பு, பாலன் சிலை திறப்பு விழா தருமபுரி நாய்க்கன்கொட்டாயில் நடைபெற்றது. இதற்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர்.




1922 ஜுலையில் நடந்த சீ.க வின் இரண்டாவது பேராயம் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச திட்டத்தையும் வகுத்தது. இப்பேராயம் கட்சியின் அரசியல் வழிக்கும் திட்டத்திற்கும் அடித்தளம் அமைத்தது. பாட்டாளி வர்க்கத்தை ஜனநாயக புரட்சியின் தலைவன் என்று கூறாததும் உழவர்களின் 'அரசியல் அதிகாரம்' மற்றும் நிலத்திற்கான கோரிக்கையை முன்வைக்காததும் இதன் பலவீனமாகும். 1924 - 27 புரட்சியின் போது காணப்பட்ட சென்டு - ஷியு வின் வலது சந்தர்ப்பவாதம் வளர இது காரணமாயிற்று.


படிப்பகம்

www.padippakam.com

# தோழர். தமிழரசன்

தோழர். தமிழரசன் கிராமப்புற விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் கோவை பொறியியல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, தியாகி தோழர். அப்புவால் நக்சல்பாரி அரசியலின் பால் ஈர்க்கப்பட்டார். 1970– களின் தொடக்கத்தில் கட்சிக்குள் வந்தார். பின்னர், திருத்தியமைக்கப்பட்ட இரண்டாவது மாநில குழுவில் உறுப்பினராக இணைக்கப்பட்டார்.

1974ல் கட்சி மூன்று பிளவாக ஆனபொழுது தோழர். தமிழரசன் கூட்டக்குழு வழியை ஏற்றுக்கொண்ட குழுவிற்கு செயலராக ஆனார். இந்த கூட்டக்குழு வழியை தோழர். தமிழரசனே முன்வைத்தார். சொரப்பூரில் நடந்த கூலி உழவர்கள் போராட்டத்தின் மூலம் கிடைத்த அனுபவத்திலிருந்தே இவ்வழியை முன்வைத்தார். 1977ல் தோழர். தமிழரசன் கைது செய்யப்பட்டார். பின்னர், 1981ல் சிறையிலிருந்து வெளி வந்தார். சில மாதங்கள் அவரை பொறுப்பில் இணைக்காமல் வைத்திருந்த மாநிலகுழு பின்னர் மாநில குழு உறுப்பினராக இணைத்துக் கொண்டது.

தேசிய இன சிக்கலில் மாறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்டிருந்த தோழர். தமிழரசன் அதை ஜனநாயகப்பூர்வமாக விவாதித்து கட்சியை தன் கருத்திற்கு கொண்டு வருவது என்ற முறையான செயல்பாட்டைசெய்யத் தயாரில்லாமல் இருந்தார். அமைப்பில் முன்பிருந்தே தோழர். தமிழரசனிடமும் மற்றவர்களிடமும் இருந்த குறுங்குழுவாத போக்கே இதற்கு காரணம் ஆகும். அன்றைய கட்டத்தில் தோழர். தமிழரசன் மீது நம்பிக்கையும், பெருமளவு மதிப்பும் கட்சி அணிகள் கொண்டிருந்தனர். ஆனால், தோழர். தமிழரசன் அரசியல் முரண்பாட்டை தவறான நடைமுறையில் தீர்க்க முற்பட்டதே பெரும்பாலான கட்சி அணிகள் ஆதரிக்காததற்கு காரணம் ஆகும். இவர் தனியாக செயல்படத் தொடங்கிய பிறகும் அமைப்பு முறையாக ஜனநாயகப்படுத்தப் படவில்லை என்பதும், பிளவுகள் தொடர்ந்தன என்பதுமே உண்மை. மேலும், கூட்டக்குழு வழியின் தொடர்ச்சிகள் இவரது பெரும்பாலான செயல்பாடுகளில் எதிரொலித்தது. இவரது செயல்போக்கில் இருந்த அதிதீவிரவாதப்போக்கும், இடது திசைவிலகலுமே இவரது அமைப்பின் வளர்ச்சிக்கும், வாழ்க்கைக்கும் தடையாய் போனது.

1987 செப்டம்பர் முதல் தேதியன்று பொன்பரப்பி கிராமத்தில் ஸ்டேட் வங்கியில் பணப்பறிமுதல் செய்ய வந்த தோழர். தமிழரசன் உட்பட 5 பேரை திட்டமிட்டு காக்கிசட்டை மற்றும் கருங்காலிகள் கூட்டம் கல்லால் அடித்து படுகொலை செய்தனர். இப்புரட்சியாளருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அப்பகுதி மக்கள் சுமார் 2000 பேர் கலந்து கொண்டு செவ்வணக்க முழக்கமிட்டுச் சென்றனர்.

தோழர். தமிழரசன் 1984ல் தமிழ்நாடு பொதுவுடமை கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) அமைத்து செயல்படத் துவங்கினர். பெண்ணாடத்தில் தேசிய இன சிக்கல் கருத்தரங்கு நடத்திய சில மாதங்களுக்கு பிறகு, மீன் சுருட்டியில் சாதி ஒழிப்பு கருத்தரங்கை நடத்தினார். இதில் இவர் சாதி ஒழிப்பு பற்றி ஒரு அறிக்கை வைத்தார். அதில், பாட்டாளிவர்க்கத் தலைமையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்கள் இணைந்து சாதி ஒழிப்பிற்காக பாடுபட வேண்டும் என்றும், இதற்காக பாட்டாளி வர்க்கத் தலைமையில் "சாதி ஒழிப்பு முன்னணி" கள் கட்டப்பட வேண்டும் என்றும் முன் வைத்தார். தோழர். தமிழரசனே சாதி ஒழிப்பிற்காக முன்னணி கட்டவேண்டும் என்று தமிழ்நாட்டில் முதன் முதலில் தெளிவாக நிலைபாடு வைத்தவர் என்றால் மிகையாகாது.

தோழர். தமிழரசனின் போர்க்குணமிக்க செயல்பாடுகள் இன்றும் புரட்சியாளர்களுக்கு உற்சாகத்தைக் கொடுப்பவையாகவே உள்ளது. இவரது ஒழுக்க கட்டுப்பாட்டுகளும் தோழமையான அணுகுமுறையும் தோழர்களாலும், மக்களாலும் மறக்க முடியாதவைகளாகவே உள்ளன. ஒட்டுமொத்தத்தில் தோழர். தமிழரசனின் வரலாறு இன்றைய புரட்சியாளர்களுக்கு ஒரு சிறந்த பாடமாகவே உள்ளது.

சத்தியமூர்த்தியே தொடர்ந்தார். இக்கட்டத்தில் ஆந்திர மாநில அமைப்பு, நடைமுறைகளில் ஏற்பட்ட தவறுகளில் முக்கியமானவை தொகுக்கப்பட்டு சீர் செய் இயக்கம் நடைபெற்றது. இதில் சத்தியமூர்த்தியின் மீதும் கடுமையான விமர்சனங்கள் ஆ.மா. குழுவில் முன்வைக்கப்பட்டது. ஆனால், அவர் சுயவிமர்சனம் செய்ய மறுத்ததோடல்லாமல் ஏற்கனவே, இங்கு அமைப்பு, நடைமுறைச் சிக்கல்களில் இருந்த தமிழ்நாடு மையகுழுத் தோழர்களுடன் சந்தர்ப்பவாதமாக இணைந்து, மையகுழுவில் அரசியல் வேறுபாடுகள் உள்ளதாக கூறி நெருக்கடியை ஏற்படுத்துகின்றனர். தங்களுடைய தவறுகளை மூடிமறைக்க சதித்தனமாக நெருக்கடியை ஏற்படுத்துகின்றனர்.

இந்நெருக்கடிக்குப் பின்னர், மாநில குழு தமிழ் நாட்டில் அமைப்பு வேலைகளை வஞ்சகமாக நிறுத்தி



படிப்பகம்

www.padippakam.com

விடுகின்றனர். இந்நெருக்கடியை அமைப்பில் இறக்கிய விதமும் அலாதியானது. தனக்கு நம்பிக்கையானவர் களிடம் சிறிது சிறிதாக விசயத்தை சொல்வதும், கூடவே அரசியல் வழியைப் பற்றியும் ஆந்திரா இயக்கத்தைப் பற்றியும் அவதூறாக பேசுவதுமாகவே இவர்கள் "இருவழிப் போராட்டத்தை" நடத்தினர். இச்சமயத்தில் தருமபுரி இயக்கம் கடுமையான அடக்குமுறையை சந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால், தலைமையோ நடைமுறை வேலைகளை நிறுத்தி புரட்சிக்கு துரோகம் செய்துகொண்டிருந்தது. 1986ல் கிட்டதட்ட அமைப்பின் செயல்பாடுகள் முற்றிலுமாக நின்று போயிருந்தன.

தமிழ் மாநிலத் தலைமையின் செயல் போக்கிற் கெதிராக தருமபுரியிலிருந்த ஒரு சில தோழர்களும், சென்னையிலிருந்த மாணவர் மற்றும் இளைஞர் அமைப்பின் முன்னோடி சக்திகளும் சேலத்தைச் சேர்ந்த தோழர்களும் இணைந்து தலைமைக்கெதிராக 1986 ஜூன் 14ல் உட்கட்சி போராட்ட குழு அமைத்தனர். இதன் சார்பாக மீண்டும் அமைப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மாநில குழு சுருக்கமான சுயவிமர்சன அறிக்கை என்ற பெயரில் ஒரு அறிக் கையை அணிகளிடம் இறக்கியது. இதில் கட்சியின் அரசியல் வழி அடிப்படையில் தவறானது என்றும், தன்னெழுச்சியானது, தீவிர பொருளாதாரவாதத்தை யும், தொழிற்சங்கவாதத்தையும் கொண்டது என்று கூறப்பட்டிருந்தது. இதனடிப்படையில் நடைமுறை வேலைகளை நிறுத்தக் கோரினர். இக்கருத்துக்கள் மாநில குழுவின் தன்னெழுச்சியான கருத்துக்களே. இது கட்சியின் அரசியல் வழிக்கெதிராக இருந்ததால் தருமபுரி மாவட்ட குழுவின் சிறுபான்மை தோழர்கள் கடுமையாக எதிர்த்தனர். பின்னர், இவர்கள் மாவட்ட அளவில் மற்ற தோழர்களை அணிதிரட்டி தலைமைக் கெதிராக "ஆலோசனைக் குழு" என்ற போராட்ட குழுவை ஆகஸ்டு 2ல் அமைத்தனர்.

இதற்கு பிறகு உட்கட்சி போராட்டகுழுவும், ஆலோசனை குழுவும் 1986 அக்டோபரில் சிறப்புக் கூட்டம் நடத்தி இணைந்தது. இச்சிறப்புக் கூட்டத்தில்

1. தமிழ் மாநில துரோகத்தலைமை மாநாட்டிற்குள் சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் துரோகத்தலைமையை தூக்கியெறிவது என்று தீர்மானிக்கப்பட்டது.

2. மையகுழுவில் இந்நெருக்கடிக்கு காரணமான "பெரும்பான்மை" என்று அழைத்துக்கொண்ட சத்தியமூர்த்தி தலைமையிலான சதிகாரக்கும்பலை நிராகரிப்பது எனவும்; கட்சியின் அரசியல் வழியை உயர்த்திப் பிடித்த "சிறுபான்மை" என்று அழைக்கப் பட்ட தோழர். கே.எஸ் தலைமையிலான குழுவை ஆதரிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

3. இச்சிறப்புக் கூட்டத்தில் மாநாட்டு அமைப்பு குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் பணிகளாவன:

அ) 1976லிருந்து 1986 வரை 20 ஆண்டுகால அரசியல் அமைப்பு மீளாய்வு அறிக்கையை தொகுப்பது.

ஆ) அ.அ.மீளாய்வு அறிக்கை, நமது போர்தந்திர வழி, கடந்த பத்தாண்டுகால அனுபவத் தொகுப்பு, 1970 கட்சி திட்டம் - விதிகள், இவைகளை ஆவணங்களாக வைத்து; 6 மாதத்திற்குள் மாவட்ட, மாநில மாநாடுகளை நடத்துவது என இச்சிறப்புக்கூட்டம் தீர்மானித்தது.

மேற்கண்ட தீர்மானங்களினடிப்படையில், 1987 ஜனவரியில் தருமபுரி, சென்னை, சேலம் மாவட்டங் களில் மாவட்ட மாநாடுகளும், மார்ச்சில் 2வது மாநில மாநாடும் நடத்தப்பட்டது. இதில் மாநாட்டு அமைப்பு குழுவே, புதிய மாநில குழுவாக தேர்ந்தெடுக்கப் பட்டது. இம்மாநாட்டில் அரசியல் அமைப்பு மீளாய் வினடிப்படையில் பல தீர்மானங்கள் போடப்பட்டன. இதில் 20 ஆண்டு கால புரட்சிகர நடைமுறையும் தொகுக்கப்பட்டிருந்தது. இவற்றை விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம்!

தொடரும்...




1923 ஜூனில் நடந்த சீ.க.க வின் மூன்றாவது பேராயம் கட்சியின் அடிப்படை வழியை தீர்மானித்தது. கோமிங்டாங்குடன் பரந்துபட்ட ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் என முடிவு செய்தது. இப்பேராயத்திலும், முதலாளிய புரட்சிக்கு முதலாளிகளே தலைமைதாங்க வேண்டும் என்று கூறிய சென்டூ - ஷியு வின் 'வலது' சந்தர்ப்பவாதமும், கோமிங்டாங்குடன் ஐக்கியம் கூடாதென்ற 'இடது' திசை விலகலும் விமர்சிக்கப்பட்டன.


படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாயிரமாண்டின் இறுதித் தேர்தல்

13வது நாடாளுமன்றத் தேர்தல் நாடகம் ஒரு வழியாக முடிந்துவிட்டது. இது முடிந்ததுதான் தாமதம், பதவிக்கான நாய்ச்சண்டை என்ற இன்னும் கேவலமான நாடகம் அரங்கேறிவிட்டது. 24 கட்சிகளின் கூட்டணியான 'தேசிய சனநாயக முன்னணி' யானது தனது சூழ்ச்சித்திறன் மூலம் 'மக்களின் தீர்ப்பை' தனக்குச் சாதமாக்கிக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது.

ஒரு நூற்றாண்டு கால சூழ்ச்சிப்பாரம்பரியம் கொண்ட காங்கிரஸ் புத்துயிர்ப்பு பெற திட்டம் தீட்டியது. ஆனால், அதன் திட்டங்களினால் வெற்றிபெற முடியவில்லை. இடதுகள் என்று தம்மை அழைத்துக் கொள்பவர்கள், அதிலும் சூழ்ச்சி இயக்கவியலில் கைதேர்ந்த சி.பி.எம் மதவாத பிஜேபியை எதிர்ப்பது என்ற பெயரில் தனது மூன்றாவது அணியை காங்கிரசின் வாலாக மாற்றியதன் விளைவாக அதன் அடித்தளம் மேலும் வலுவிழந்து போயுள்ளது. நயவஞ்சகர்களான இந்த சூழ்ச்சிக்காரர்கள் அனைவரும் ஊழல்களிலும் லஞ்சங்களிலும் பெயர் பெற்றவர்கள். கிரிமினல் மற்றும் மதவாத குற்றங்களில் ஈடுபட்டவர்கள். ஏகாதிபத்திய வல்லூறுகளின் ஒரு சில எலும்புத்துண்டுகளுக்காக நாட்டை விற்கும் துரோகிகள். இத்தகையவர்கள் ஒன்றிணைந்து மக்களின் மீது 13வது பொதுத் தேர்தல் என்ற மோசடியைத் திணித்தனர்.

இந்த தேர்தல்களுடன் மக்களுக்கு என்ன சம்பந்தம்? இந்த தேர்தலில் எவ்விசயங்கள் ஆதிக்கம் செலுத்தின? இவர்களால் மிகவும் விரும்பப்படும் நிலையான ஆட்சியின் எதிர்காலம் எப்படியிருக்கும்? இவற்றை நாம் ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## மக்களுடன் எந்த தொடர்புமற்ற தேர்தல்!

மக்கள் தம் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் வறுமை, பசி, வேலையின்மை, நோய்கள் போன்ற பிரச்சனைகள் எதையும் இந்த தேர்தல்கள் தீர்ப்பதில்லை. இந்த தேர்தல் எந்த துறையிலும் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது இல்லை. **தமது ஆட்சிக்கான அங்கீகார முத்திரையைப் பெற்றுக் கொள்ளவும், தமது சுரண்டலைத் தடையின்றித் தொடரவுமே இந்ததேர்தல் மக்கள் மீது சுரண்டும் ஆளும்வர்க்கங்களால் சுமத்தப்படுகிறது. "சுரண்டும் வர்க்கங்களின் பிரதிநிதிகளான ஏதாவது ஒரு கட்சிக்கு ஓட்டுப்போடுவதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை; அனைத்து கட்சிகளுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். ஒரு கட்சியை தூக்கியெறிந்தால் அதைவிட மோசமான அல்லது அதற்கு சமமான ஒடுக்குமுறையாளன் அதனிடத்தைப் பிடிக்கிறது; இந்த ஆளும்வர்க்க கட்சிகளின் 'தேர்தலும்' கூட பணபலம், குண்டர்பலம், கள்ள ஓட்டு, சாதி, மதவாதம் போன்ற பல காரணிகளைப் பயன்படுத்துகிறது."** இதுதான் தேர்தலின் உண்மை சொரூபம். இது சனநாயக தோற்றத்தின் பின் ஒளிந்துகொண்டுள்ளது. இந்த உண்மை கடந்த 12 பொதுத் தேர்தல்களிலும் பல்வேறு மாநில சட்டமன்ற தேர்தல்களிலும் அனுபவபூர்வமாக உணர்த்தப்பட்டுள்ளது. இந்த 13 வது பொதுத்தேர்தலோ முற்றிலும் மக்களுடன் தொடர்பற்றதாக இருந்தது என்பதை, இத்தேர்தலில் முன்வைக்கப்பட்ட விசயங்களைப் பார்த்தாலே புரிந்துகொள்ள முடியும்.

பா.ஜ.க. கூட்டணியானது கார்கில் 'வெற்றி' யையும் வாஜ்பாயின் கவர்ச்சியையும் சோனியா வெளிநாட்டில் பிறந்தவர் என்பதையும் காங்கிரசின் சதியால் பா.ஜ.க. அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது என்பதையும் தனது தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தியது. காங்கிரசோ சோனியாவையும் அவரது குடும்பத்தையுமே தமது பிரச்சாரத்துக்கான மையமாக கொண்டிருந்தது. தேசிய முன்னணி, பா.ஜ.க. கூட்டணி போன்றவை கவிழ்ந்து விட்டதால் தான் மட்டுமே நிலையான அரசாங்கத்தை தரமுடியும் என்று காங்கிரஸ் கூறியது. மேலும், கார்கில் ஊடுருவலுக்கு வாஜ்பாயே காரணம் என்றும், கார்கிலில் அவரது பாத்திரம் தேசிய துரோகம் என்றும், கார்கில் நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே பாகிஸ்தானில் இருந்து கோதுமையும் சர்க்கரையும் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் பிரச்சாரம் செய்தது. கருணாநிதி 'ஜெ' வின் ஊழல் ஆட்சி மீண்டும் வரக்கூடாது என்று முழங்கினார். ஜெயலலிதாவோ காங்கிரசின் பிரச்சாரத்தையே எதிரொலித்தார். மதவாதத்தை எதிர்க்க வேண்டும் என்ற பெயரில் காங்கிரசை ஆதரிக்க குரல் கொடுத்தன போலி கம்யூனிஸ்ட்டுகளின் இடதுசாரி கட்சிகள். பல பிராந்தியக் கட்சிகளும், சாதியக் கட்சிகளும் நேரடியாகவே சாதி அடிப்படையில் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. உண்மையில் அனைத்துக் கட்சிகளுமே சாதி, மத அடிப்படையிலேயே கூட்டணி அமைத்து போட்டியிட்டன. **மக்களுடைய அடிப்**



படிப்பகம்

www.padippakam.com

**படை பிரச்சனைகள் இத் தேர்தலில் கண்டுகொள்ளப்படவில்லை.** ஏகாதிபத்தியத்தின் ஏஜென்டுகளான அனைத்து ஓட்டுக்கட்சிகளும் மக்கள் பிரச்சனைகளைக் கண்டுகொள்ளாததோடு, தமது ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கைகளைக் கூட பிரச்சாரம் செய்யவில்லை. மாறாக, தனிநபர் கவர்ச்சியையும், கார்கில் போன்ற, உருவாக்கப்பட்ட பிரச்சனைகளையே பிரச்சாரம் செய்தனர். இறுதியில், கேவலமான தனிநபர் தாக்குதல்களில் இறங்கி தமது கழிசடைத்தனத்தை நிரூபித்தனர். சோனியாவைப்பற்றி படுகேவலமான பிரச்சாரத்தை பிரமோத் மகாஜன், ஜார்ஜ் பெர்னாண்டசும் மேற்கொண்டனர். கருணாநிதியோ ஜெயலலிதாவை கொச்சையாக விமர்சனம் செய்தார். காங்கிரஸ் தலைவர்களும் வாஜ்பாயைப் பற்றிய தனிநபர் தாக்குதல்களில் இறங்கினர். ஊழல் பெருச்சாளிகளும் கிரிமினல்களும் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி சேறுவாரி வீசுவது தான் தேர்தல் பிரச்சாரமாக விளங்கியது. இப்படி தேர்தலில் முன்வைக்கப்பட்ட விசயங்கள், இத்தேர்தலுக்கும் மக்களுக்கும் தொடர்பில்லை என்பதை தெளிவாக வெளிக்காட்டியது.

## 'சுதந்திரமான, நியாயமான' தேர்தல்!

ஒரு பிரபலமான ஆங்கில இதழின் தலைப்புச் செய்தி, "பெல்லாரி மதுவில் மிதக்கிறது" என்று கூறுகிறது. "சுதந்திரமான தேர்வு அல்ல, தோட்டாக்களும் மோசடியுமே தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கின்றன".இது பிஹார் தேர்தல் பற்றிய ஒரு ஆங்கில வார இதழின் வர்ணனை. இவை அனைத்தும் இந்தியா முழுமைக்குமே பொருந்தக்கூடிய கூற்றுக்களாகும். "பிஹாரில் 1,232 வாக்குப் பெட்டிகள் போலி வாக்குச் சீட்டுகளுடன் கைப்பற்றப்பட்டன", "தேர்தல் கமிசன் 4 மாஜிஸ்ட்ரேட்டுகளை தேர்தல் பணிகளிலிருந்து நீக்கியது", "ஆந்திர அமைச்சரின் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தன", "சிதம்பரத்தில் தலித்துகளை ஓட்டுப் போட விடாமல் விரட்டினர்". இப்படி பத்திரிக்கைச் செய்திகள் புலம்பின. தேர்தலின் போது வந்த செய்திகளைப் பார்த்தால் தொகுதிகளைக் கைப்பற்ற ஓட்டுக்கட்சிகள் எந்த அளவிற்கு போகின்றன என்பது நமக்கு புரியும்.

எதிர் வேட்பாளர்கள் மற்றும் அவர்கள் ஆதரவாளர்கள் மீது பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விடுவது, வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றி அதிகாரிகள் மற்றும் வாக்காளர்கள் கண் முன்னரே வாக்குச் சீட்டுகளில் ஓட்டுக்களை குத்தித்தள்ளுவது, தெரிந்தெடுக்கப்பட்ட சாவடிகளில் மோசடி செய்ய ஆளுங்கட்சிக்கு சாதகமான அதிகாரிகளை நியமிப்பது, ஆள்மாறாட்டம் மூலம் கள்ள ஓட்டு, வாக்குச்சாவடிக்குச் செல்லும் வாக்காளர் வெற்று வாக்குச் சீட்டை திரும்பக் கொண்டு வெளியேவர, அச்சீட்டில் தமது வேட்பாளருக்கு முத்திரை குத்தி அடுத்து வருபரிடம் கொடுத்து விட்டு ஓட்டுப்போடச்செய்யும் 'சுழல்' கள்ள ஓட்டு; இப்படி தேர்தல் மோசடிகள் கணக்கிலடங்கா. தலித் மக்களை சாவடிக்கே வரவிடாமல் தாமே அவர்களது ஓட்டைப்போடும் முறையை பிஹாரிலிருந்து சிதம்பரத்திற்கு இறக்குமதி செய்துள்ளது பா.ம.க , தி.மு.க கூட்டணி . தினகரனின் கரன்சி பலமோ தேர்தலுக்கு முன்னரே பெரிய குளத்தில் வெற்றி தந்துவிட்டது.

கள்ள ஓட்டிற்கு ஒரு வாக்காளருக்கு, ஒருமுறை ஓட்டுபோட ரூ 50 லிருந்து ரூ 500 வரை தொகுதியை ஓட்டி தரப்படுகிறது. சோனியா ஆதரவாளர்கள் ஒவ்வொரு வாக்காளருக்கும் 500ரூ நோட்டு தந்ததாகவும் , சுஷ்மா விலையுயர்ந்த பட்டுச்சேலையும் குங்குமமும் தந்ததாகவும் கூறப்படுகிறது. இந்திய 'சனநாயக' தேர்தலில் இந்த கள்ள ஓட்டுத் திருப்பணிக்காக செலவிடப்படும் தொகையை எண்ணிப்பார்த்தால் தலையே சுற்றிவிடும்.

இந்தியாவில் பொதுவாக, பணபலமும், ஆள்பலமுமே (பிந்தையது முந்தையதை சார்ந்தே உள்ளது) தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கின்றன. 'அவுட்லுக் ' ஆங்கில பத்திரிக்கையின் அக்டோபர் 11 இதழ் பிஹார் தேர்தல் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது; "ரத்தம் வாக்குச் சீட்டுகளை நனைக்க, வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளிலிருந்து விரட்டப்பட்டனர். அரசியல் கொலைகள் வழக்கமான விசயமாகிவிட்டன. போலி வாக்குப்பெட்டிகளில் போலி வாக்குச் சீட்டுகள் கொண்டு வந்திறக்கப்பட்டன. பெரிய தலைவர்களுக்காக அரசு இயந்திரமும் வெளிப்படையாகவே பயன்படுத்தப்பட்டது". இது பிஹாரின் விசயம் மட்டுமல்ல. இதுதான் இந்த உலகின் மிகப்பெரிய 'சனநாயக' தேர்தலின் சாரம்சம். பிஹாரில் வெளிப்படையான காட்டு மிராண்டித்தனமான வழிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இந்தியாவின் மற்ற பகுதிகளில் அனைத்து முக்கிய போட்டியாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'சுழல்' கள்ள ஓட்டு போன்ற மறைமுக வழி முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இதுதான் பிஹாருக்கும் மற்ற பகுதிகளுக்குமான ஒரே வித்தியாசம்!




ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு; புரட்சிகர வர்க்கங்களின் கூட்டரசாங்கம் மற்றும் நல்வாழ்வு; சோவியத் யூனியனுக்கு ஆதரவு என்ற சன்யாட் - சென்னின் 'மக்களின் மூன்று கொள்கைகள்' கோமிங்டாங்கின் முதல் பேராயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1924 மேயில் காண்டன் நகரில் 'வாம்போவா ராணுவக் கல்லூரியை' உருவாக்க சோவியத் யூனியன் சன்யாட் - சென்னுக்கு உதவியது. இக்கல்லூரியிலிருந்து தேர்ச்சிபெற்ற படைவீரர்கள் புதிதாக நிறுவப்பட்டிருந்த தேசிய புரட்சிப்படையின் முதுகெலும்பாக அமைந்ததுடன், இப்படை பின்னர் குவாங்டுங் மாகாணம் முழுவதையும் புரட்சி அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்தது.


படிப்பகம்

www.padippakam.com

## தேர்தல் முடிவுகள்: யாருக்கும் மக்கள் ஆதரவில்லை!

மக்களின் மகத்தான ஆதரவைப்பெற்று வெற்றி பெற்றதாகக் கூறிக்கொள்ளும் பா.ஜ.க. கூட்டணி (24 கட்சிகள் இணைந்தது) பெரும்பான்மை எண்ணிக் கையை விட ஒரு சில பத்து சீட்டுகளே அதிகம் பெற்றுள்ளது. தேர்தலுக்கு முன் பா.ஜ.க. கார்கில் பிரச்சினையை வைத்து பெரும் ஓட்டு அறுவடை செய்ய முடியும் என கனவு கண்டது. அது தேசிய வெறியூட்டும் வகையில், இறந்த வீரர்களின் சவ ஊர்வலங்களை பெரும் ஊர்வலங்களாக நடத்தியது. ஒரு பாகிஸ்தான் விமானத்தை சுட்டு வீழ்த்தியது. ஐ.எஸ்.ஐ ஏஜென்டுகள் வடகிழக்கில் பிடிக்கப்பட்டதா கவும், பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சனையை தீவிரப்படுத்துவதாகவும் பிதற்றியது. இதன்மூலம் தான்

### துப்பாக்கி முனையில் நடத்தப்பட்ட தேர்தலை எதிர்த்து நின்ற மக்கள்!

13வது நாடாளுமன்ற தேர்தல் 5 கட்டங்களாக ஏறத்தாழ ஒரு மாத காலம் நடத்தப்பட்டது. 'நியாயமான, சுதந்திரமான' தேர்தலை நடத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்காகவே இத்தனை கட்டங்களாக நடத்தப்பட்டதாகக் காரணம் கூறப்பட்டது. ஒவ்வொரு கட்டத் திற்கும் இடையே ஒரு வார இடைவெளி இருந்ததால் தேர்தல் ஆணையம் பாதுகாப்புப் படைகளை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு எளிதாக மாற்ற முடிந்தது.

நாடு முழுக்க வர்க்கப் போராட்டம் தீவிரமாக உள்ள பகுதிகள், தேசிய இன விடுதலைப் போராட்ட பகுதிகள், மத, சாதி கலவரம் நடக்க வாய்ப்புள்ள பகுதிகள் மற்றும் ஆளும் வர்க்கங்கள் தமக்குள் தீவிர நாய்ச் சண்டை நடத்தும் பகுதிகள் ஆகியவை மிகவும் பிரச்சனைக்குரிய தொகுதிகள் என்று கணிக்கப்பட்டன. வர்க்கப்போராட்டம் மற்றும் தேசிய இன விடுதலைப் போராட்டப் பகுதிகளில் பெரும்பான்மை ஆயுதப்படைகளைக் குவிக்க உதவும் வகையில் பல மாநிலங்களில் தேர்தல்கள் பிரிக்கப்பட்டன. பிஹாரின் 54 தொகுதிகள் 3 கட்டங்களாக பிரிக்கப்பட்டன. ஆந்திராவின் ஆயுதப் போராட்டப் பகுதிகளின் தேர்தல் இரு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. மத்திய பிரதேசின் தண்டகாரண்ய பகுதிகளில் தேர்தல் தனியாக (செப் 25) நடத்தப்பட்டது. கஷ்மீர் போன்ற வெறும் 6 தொகுதிகள் உள்ள மாநிலத்தில் 2 கட்டங்களாக நடத்த முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு, ஆயுதப் போராட்டப் பகுதிகளில் தேர்தல் புறக்கணிப்பு அறைகூவலை தடுக்கும் நோக்கில் ஆயுதப்படைகளைக் குவிப்பதற்கு கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கம் போலவே கஷ்மீர், வடகிழக்கு, ஆந்திரா, பிஹார், தண்டகாரண்யாவில் பெருமளவு ஆயுதப்படைகள் குவிக்கப்பட்டன.

கஷ்மீரில் பாதுகாப்புப் படைகள் கிராமங்களில் சென்று வாக்களிக்குமாறு மக்களை மிரட்டியதோடு மட்டுமல்லாமல், மக்களை பலவந்தமாக வாக்குச் சாவடிக்கு இழுத்துச் சென்றனர். செப்.18 மற்றும் அக்டோபர் 4 ஆகிய இரு நாட்களிலும் மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு மந்தைகள் போல ஓட்டிச் செல்லப்பட்டதாக, ஒரு பி.பி.சி (B.B.C)நிருபர் கூறியுள்ளார். ஹைகன் என்ற கிராமத்தில் ஒரு 17 வயது இளைஞனும் கேன்வாரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஷில்வட் கிராமத்தில் 3 பேரும், மக்கள் வாக்களிக்க மறுத்த போது ராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். அனந்த்நாக் தொகுதியில் 13.8%தமும், பரமுல்லா நாடாளுமன்ற தொகுதியின் சுஸ்ராமா சட்டமன்றத் தொகுதியில் 2.5%மும், சோபூரில் 5%மும், பாம்பூர் சட்டமன்றத் தொகுதியில் 0.9%முமே பதிவாயின. கஷ்மீர் முழுக்க 180 வாக்குச்சாவடிகளில் ஒரு வாக்கு கூட பதிலாகவில்லை. அனைத்து கட்சி ஹூரியத் மாநாட்டு அமைப்பு (APHC) செப். 18 மற்றும் அக்.4 ஆகிய நாட்களில் விடுத்த பொதுவேலை நிறுத்த அழைப்பு மாபெரும் வெற்றி பெற்றது. அ.க.ஹூ.மா அமைப்பினர் சிறையிலடைக்கப்பட்ட போதிலும் வேலை நிறுத்தம் வெற்றி பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. அவ்வமைப்பினர் பத்திரிக்கையாளர்களிடம், "இத்தகைய போலித்தனமான தேர்தலில் தமக்கு நம்பிக்கையில்லை என்பதை கஷ்மீர் மக்கள் மீண்டும் ஒருமுறை உலகிற்கு உணர்த்தியுள்ளனர்" என்று கூறினர்.

ஆயுதப் போராட்டம் தீவிரமாக நடைபெறும் ஆந்திரா, தண்டகாரண்யாவில் மதியம் வரை நூற்றுக்கணக்கான கிராமங்களில் மக்கள் வாக்களிக்கவில்லை. காவல்துறையினர் வந்து மிரட்டி இழுத்துச் சென்ற பிறகே வாக்குப்பதிவு நடந்தது. இந்த பகுதிகளில் இரண்டு மாதங்களுக்கு முன்பே தேர்தலுக்கான கொடூர ஒடுக்குமுறைகள் ஆரம்பித்துவிட்டன. ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு போலீஸ் காவலில் பல நாட்களாக வைக்கப்பட்டிருந்தனர். ஆயுதப்படைகள் மற்றும் வாக்குப்பெட்டிகளின் நகர்வுக்கு செயல்வீரர்கள் மனிதக் கேடயங்களாக பயன்படுத்தப்பட்டனர். புரட்சியாளர்களின் கோட்டையாக உள்ள பல கிராமங்களில் முன்னணி செயல்வீரர்களை பலவந்தமாக வாக்களிக்கவைத்து பின்னர் மக்களை வாக்களிக்கச் செய்தனர். ஏராளமான ஓட்டுகளை போலீசே போட்டனர்.

ஓட்டுப் போட வலியுறுத்தும் பிரச்சாரங்களையும், அரசாங்கத்தின் கொடூர ஒடுக்குமுறைகளையும் மீறி இந்த முறை புரட்சியாளர்கள் மற்றும் தேசிய விடுதலைப் போராளிகளால் தலைமைதாங்கப்பட்ட மக்களின் எதிர் தாக்குதலானது. எப்போதுமில்லாத அளவு வெளிப்பட்டது. மொத்தம் 85 துணை ராணுவப்படையினர் பதுங்கு தாக்குதல்களிலும் கண்ணிவெடிகளாலும் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அசோம். கஷ்மீர் மற்றும் ஆந்திரத்தில் 3 வேட்பாளர்கள் கொல்லப்பட்டனர்.

இதையெல்லாம் விட, தேர்தல் புறக்கணிப்பு முழக்கமானது முன்னெப்போதையும் விட மக்களிடம் பிரபலமாகவும், பரவலாகவும் எதிரொலித்தது என்பது முக்கியமான விசயமாகும். கள்ள ஓட்டு மோசடிகளையும் மீறி வாக்குப் பதிவு சென்ற முறையை விட 3%குறைந்துள்ளது. நாடு முழுக்க, மக்களிடையே தேர்தல்முறை மீதான வெறுப்பு என்பது பொதுவான விசயமாகிவிட்டது. டில்லி, வடசென்னை போன்ற நகரங்களில் கூட 43%மே வாக்கு பதிவாகியது. ஆளும் வர்க்கத்தின் தீவிர படைகுவிப்பு மற்றும் பலவந்தப்படுத்தும் செயல்களையும் மீறி தேர்தல் புறக்கணிப்பு ஒரு முக்கிய போராட்ட வடிவமாக மாறியுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்ற முடியும் என்று கனவு கண்டது. ஆனால், அதன் கனவு வெறும் பகற்கனவாகிப் போனது. தனது சொந்த கோட்டையும், ராமஜன்ம பூமி பிரச்சனையின் இருப்பிடமுமான உ.பி யில் பா.ஜ.க. படுதோல்வி அடைந்தது. பஞ்சாபில் பா.ஜ.க, அகாலி கூட்டணி மண்ணைக் கவ்வியது. கர்நாடகாவிலும் சென்றமுறை வென்ற 13 இடங்களில் 6 ஐ இழந்தது. வாஜ்பாய் கூட போன முறையைவிட 1 லட்சம் ஓட்டு குறைவாகவே பெற்றார். உண்மை யில், பா.ஜ.க வின் ஓட்டு விகிதம் மொத்தம் பதிவான வாக்குகளில் 25.59% லிருந்து 23.07%மாகக் குறைந்தது.

உண்மையில் அதன் கூட்டணிக் கட்சிகள் பெற்ற கூடுதல் இடங்கள் மூலமாகவே பா.ஜ.க பெரும்பான்மை பெற முடிந்தது. சென்ற முறை பெற்ற 182 இடங்களைப் பெறவே, அது மேலும் 12 கட்சிகளுடன் கூட்டணி சேர வேண்டியிருந்தது. மேலும் எதிர் கட்சிகள் பிரிந்து நின்றது பா.ஜ.க. கூட்டணிக்கு வாய்ப்பாக இருந்தது. உ.பி.யில் அனைவரும் பிரிந்து நின்ற போதும் கூட அது 28 சீட்டுகளை இழந்தது. ஆந்திரா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலும் இதே நிலைதான். தமிழ்நாட்டில் சென்றமுறை ஜெயலலிதா கூட்டணியோடு பெற்ற இடங்களை விட குறைவாகவே பெற்றுள்ளது. கடந்தமுறை பெற்ற 31 இடங்கள் தற்போது 24 ஆகிவிட்டது. வெற்றிகள் கூட குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே பெறப்பட்டது.கருணாநிதி 2 சட்டமன்ற தொகுதிகளிலும் தோல்வியடைந்தார். மஹாராஷ்டிராவில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் திடீர் கூட்டணி பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்து விட்டது.

கார்கில் வெறியைத் தூண்டிவிட்டது பா.ஜ.க. வுக்கு சில மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற உதவியது. டில்லி, ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேஷ், ஹரியானா, ஹிமாச்சல் பிரதேஷ் போன்ற இடங்களில் பா.ஜ.க. வெற்றிக்கு கார்கில் உதவி செய்தது. கார்கிலும் இல்லாமல் இருந்திருந்தால் பா.ஜ.க. வால் சென்ற முறை பெற்ற இடங்களைக் கூட பெற்றிருக்க முடியாது.

காங்கிரசை பொறுத்தவரை சோனியா தலைமையில் மீண்டும் ஆட்சியை பிடிக்கும் அதன் முயற்சி படுதோல்வி அடைந்துள்ளது. கர்நாடகா, உத்திரபிரதேஷ் ஆகிய இடங்களில் அது லாபமடைந்திருப்பினும் டில்லியில் ஒரு இடமும் கிடைக்கவில்லை. சென்ற முறை வென்ற 140 இடங்களைக் கூட அதனால் தக்க வைக்க முடியவில்லை. அது 112 இடங்களில் மட்டுமே வென்றது. கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து 135 இடங்களை மட்டுமே பெற்றது. கர்நாடகாவில் தனித்தும், மஹாராஷ்டிராவில் தனது எதிரி தேசியவாத காங்கிரசுடன் இணைந்தும் சட்டமன்ற ஆட்சியை பிடித்திருப்பினும், ஆந்திரத்தில் அதனால் வெற்றி பெற இயலவில்லை.

போலி கம்யூனிஸ்ட்டுகளோ காங்கிரசுக்காக மூன்றாவது அணியை மூட்டை கட்டி விட்டனர். கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரசுக்கும் பா.ஜ.க வுக்கும் மாற்று மூன்றாவது அணிதான் என கூச்சலிட்டு வந்த போலி கம்யூனிஸ்ட்டுகள், மதவாத பா.ஜ.க. வை எதிர்ப்பது என்ற பெயரில் அதை கைவிட்டு விட்டனர். 1989 முதல் 1999 க்கு இடைப்பட்ட காலத்தில் காங்கிரசுடனான இடதுகளின் உறவு தலைகீழாகி விட்டது. 1989ல் அவர்களின் ஒரே வேலை காங்கிரசை தோற்கடிப்பதுதான் என்றனர். வி.பி. சிங்கின் ஜனதா தள அரசாங்கத்தை ஆதரித்தனர். அப்போது பா.ஜ.க வுடன் மறைமுக உறவு கொண்டிருந்தனர். இது நடந்து ஒரு வருடத்திற்குள் வி.பி.சிங் அரசு கவிழ்க்கப்பட்டு, பாபர் மசூதி இடிக்கப்பட்டவுடன், பா.ஜ.க. காங்கிரஸ் இருவருமே எதிரிகள் என்று கூறினர். 1996 தேர்தலில் பா.ஜ.க தனிப் பெரும்கட்சியாக வரும் வரை இந்நிலை தொடர்ந்தது. '96ல் இடதுகளின் ஆதரவோடும், சில இடதுசாரி கட்சிகளின் பங்கேற்புடனும்தோன்றியஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது இருத்தலுக்கே காங்கிரசை பெருமளவில் சார்ந்திருந்தது. '98ல் பா.ஜ.க அரசு அமைத்தவுடன், பா.ஜ.க வே முதல் எதிரி என்ற பெயரில் காங்கிரசுடன் செயல் உத்திரீதியான உறவு கொள்ள முடிவு செய்தனர். முதலில் சோனியா இல்லாத காங்கிரஸ் என்றனர், பின்னர் முழுமையாக 'சமரசம்' செய்து கொண்டு சோனியா பிரதமராவதற்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யும் நிலைக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவ்வாறு,



1925ல் நடந்த சீ.க.க வின் 4 வது பேராயம் கோமிங்டாங்கிற்குள் இடது சாரிகளை வளர்க்கவும், வலது சாரிகளை எதிர்க்கவும் நடுத்தர சக்திகளை விமர்சிக்கும் கொள்கையை வகுத்தது. இருப்பினும், விவசாய திட்டத்தை முன்வைக்காதது அதன் குறைபாடாக இருந்தது. 1925 மார்ச் - 12ல் சன்யாட் - சென் மரணமடைந்தார். 1925-26ல் தொழிலாளி வர்க்க எழுச்சிகளும் உழவர் இயக்கத்தில் பெரும் வளர்ச்சியும் ஏற்பட்டது. சென்டு - ஷியு வின் வலது சந்தர்ப்பவாதத்தையும் இடது வழியினர் உழவர்களை அணிதிரட்ட மறுத்ததையும் எதிர்த்து "சீன சமூகத்தில் வர்க்க ஆய்வு" என்ற கட்டுரையை மாவோ எழுதினார்.


படிப்பகம்

www.padippakam.com

இந்த பத்தாண்டுகளில் மையத்தில் அரசாங்கங்களை உருவாக்குவது, கவிழ்ப்பதுமான வேலைகளில் இடதுகள் முழுவதுமாக மூழ்கிப்போய், அரசியல் தரகர் பாத்திரத்தை ஆற்றி வருகின்றனர். இடது கட்சிகளில் சி.பி.எம் முதன்மைத்தரகனாக மாறியுள்ளது. இதன் விளைவாக சி.பி.ஐ மற்றும் சி.பி.எம் உள்ளிட்ட இடது சாரி கட்சிகள் இந்த தேர்தலில் மேலும் சரிந்து போயுள்ளனர். சி.பி.ஐ யின் ஓட்டு சதவிகிதம் 1.75 %லிருந்து 1.48 % மாக வீழ்ந்து போனது. அது ஒரு தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படாமல் போவதிலிருந்து மயிரிழையில் தப்பியது. சி.பி. எம்மோ தனது கோட்டையான மேற்கு வங்கத்தில் மூன்று சீட்டுகளை இழந்துள்ளது. நகர்ப்புறங்களில் திரிணாமுல் - பா.ஜ.க கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது. கிராமப்பகுதிகளில் சி.பி.எம் வேட்பாளர்கள் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வென்றுள்ளனர். ஆந்திராவிலோ, தனது பாரம்பரிய கோட்டையான கம்மம், நலகொண்டாவில் கூட இவர்கள் துடைத்தெறியப்பட்டனர். சென்ற சட்ட சபையில் பெற்றிருந்த 33 சீட்டுகளிலிருந்து வெறும் 2 சீட்டுகளாகக் குறைந்து போயுள்ளது இவர்களது பலம். தமிழ்நாட்டில் முக்கிய கோட்டையான நாகப்பட்டி

## சந்திரபாபு நாயுடுவின் தெலுகுதேசம் விதிவிலக்கா?

நாடு முழுக்க தேர்தல்களில் ஆட்சிக்கு எதிரான வாக்குகளே விழுகின்றன. ஆனால், ஆந்திரத்தில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுகு தேசம் சட்டசபைத் தேர்தலில் மீண்டும் வென்றுள்ளதுடன், நாடாளுமன்றத் தேர்தல்களிலும் காங்கிரசை தோற்கடித்துள்ளது (சட்ட சபை – தெ.தே.180, காங்கிரஸ் 90, நாடாளுமன்றம் – தெ.தே. 29, பா.ஜ.க–7, காங் – 6), இது சந்திரபாபு நாயுடுவின் நிர்வாகத் திறமைக்கும், அவர் பொருளியல் சீர்திருத்தங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கும் கிடைத்த ஆதரவு என்று பத்திரிக்கைகள் புகழ்ந்து தள்ளுகின்றன. சந்திரபாபு ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கைகளை நிறைவேற்றி, தனது மாநிலத்தை அன்னியர்களுக்கு அடகு வைப்பதில் இந்தியாவிலேயே முன்னணியில் உள்ளார். ஆந்திராவை ஏகாதிபத்தியங்களின் பரிசோதனைக்களமாகப் பயன்படுத்த அனுமதித்துள்ளார் (உள் கட்டுமானம் முதல் தகவல் தொடர்பு தொழில் நுட்பம், டெர்மினேட்டர் விதைகள் வரை!). இதற்காக உலக வங்கியும், ஐ.எம்.எப்.பும் பல கோடி டாலர்களை வாரி வழங்கிவருகின்றன. புரட்சிகர இயக்கம் ஆந்திரத்தில் வளர்வதைத் தடுக்கும் நோக்கில், சந்திரபாபு நாயுடுவின் அடக்குமுறைகளுக்கும் உதவும் வகையில் இந்நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. தேர்தல் முடிவுகளை வைத்து சந்திரபாபுவின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு ஆந்திர மக்கள் அங்கீகாரம் வழங்கி விட்டதாக கருதமுடியுமா?

இக்கேள்விக்கு விடை தெரிய வேண்டுமானால், இத் தேர்தலையொட்டி சந்திரபாபு மேற்கொண்ட உத்திகளை நாம் விரிவாகப் பார்க்க வேண்டும். இவர் இரண்டு விதமான உத்திகளைக் கையாண்டுள்ளார். முதலாவது, பல மக்கள் நல (?) திட்டங்களை அறிவித்து வாக்காளர்களைக் கவருவது. சென்ற நாடாளுமன்ற தேர்தல் சமயத்தில் ரேசன் அரிசி விலையை உயர்த்திய பிறகு, சந்திரபாபு படுதோல்வியடைந்தார். இதை நினைவில் கொண்டு இம்முறை தேர்தலையொட்டி தீபம், கேஸ் சிலிண்டர் இலவச இணைப்பு, துவாக்ரா, நீர் பயன்படுத்துவோர் சங்கம், ரைத்து பசார் போன்ற திட்டங்களை அறிவித்தார். இதில் மக்கள் தொகையில் ஒரு சிறு பிரிவினரின் ஆதரவைப் பெற முடிந்தது. ஆனால், தெ.தே.கட்சியின் வெற்றிக்கு இது முக்கிய காரணம் அல்ல! பிறகு வேறென்ன? சந்திரபாபுவின் இரண்டாவது உத்திதான் உண்மையிலேயே காரண சாத்தியமானது. காங்கிரசுடன் ஒப்பிடும் போது மாபெரும் கள்ள ஓட்டு மோசடி சந்திரபாபுவால் மேற்கொள்ளப்பட்டது . கடந்த 5 வருடங்களாக சந்திரபாபு கட்சியின் குண்டர்களால் ஏவப்பட்ட கொலைவெறியாட்டத்தால் பல எதிரிகள் ஒழிக்கப்பட்டனர். கார் குண்டு முதல் கண்ணிவெடி வரை இவர்களால் பயன்படுத்தப்பட்டது. தேர்தல்களின் போதே ஒரு அமைச்சர் வீட்டில் வெடி மருந்துகள் வெடித்ததில் நால்வர் கொல்லப்பட்ட செய்தி நாமறிந்ததே. இதற்குப் பிறகும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சரான 'டாக்டர்' கேடெல பிரசாத ராவ் கைது செய்யப்படவில்லை. இவ்வாறு ராயலசீமா, கடற்கரைப் பகுதிகளில் அரசு இயந்திரத்தின் ஒத்துழைப்புடன் காட்டாட்சி நடைபெற்றது. இது தெ.தே. கட்சி தேர்தல் மோசடிகளில் பெருமளவு ஈடுபட உதவியது. தெலுங்கானாவிலோ யாருமே கிராமப் பகுதிகளில் பிரச்சாரத்திற்கு செல்லத் துணியாத நிலையில், சந்திரபாபுவால், கொலை செய்யும் உரிமை வழங்கப்பட்ட காவல் துறை அதிகாரிகளின் மேற்பார்வையில், காவல்துறையினரே தெ.தே. கட்சிக்கு ஆதரவாக பெரும் கள்ள ஓட்டில் இறங்கினர். தெலுங்கானாவிற்கு அனுப்பப்பட்ட காவல்துறை அதிகாரிகள் தேர்தல் மோசடிகளுக்காகவே அனுப்பப்பட்டனர் என்று உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யுமளவிற்கு இவர்களின் மோசடி பற்றி காங்கிரஸ் பயந்திருந்தது. காங்கிரசின் புகாரும் கூட நியாயமான (சமமான) தேர்தல் மோசடிக்கு அனுமதிக்க வேண்டும் என்பது தான்!

இது தவிரவும், சந்திரபாபு நாயுடுவுக்கான ஆதரவு அலை என்பதெல்லாம் வெறும் பிதற்றலே. இத்தகைய வரலாறு காணாத மோசடிகளுக்குப் பின்னும் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 64 சீட்டுகள் அதிகம் பெற்றது. 60 முதல் 70 சட்டமன்ற தொகுதிகளில் வாக்கு வித்தியாசம் 1,000 யிலிருந்து 6,000 வரைதான்! நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரசின் வாக்கு சதவீதமும் கூட 38.46% லிருந்து 42.8%மாக உயர்ந்துள்ளது. தேர்தல் மோசடிகள் இல்லையெனில் சந்திரபாபு வெற்றி பெற்றிருக்க முடியாது. இது தான் உண்மை. ஏகாதிபத்திய – தரகு முதலாளிய பத்திரிக்கைகளும் செய்தி ஊடகங்களும் சந்திரபாபு போன்ற ஏகாதிபத்தியத்தின் வெளிப்படையான தரகர்களின் மோசடி வெற்றியை மக்கள் ஆதரவு என திட்டமிட்டு திசை திருப்பி மக்களை முட்டாளாக்க முயற்சிக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ணத்தையும் இழந்து விட்டது.

தன்னை சி.பி.ஐ (எம்.எல்) என்றழைத்துக் கொள்ளும் லிபரேசன் குழு ( அதற்கும் சி.பி.ஐ (எம்-எல்)க்கும் தற்போது எந்த சம்பந்தமும் இல்லை!) பிஹாரிலும் இதர இடங்களிலும் துடைத்தெறியப் பட்டுள்ளது. அசோமின் கர்பி ஆங்கிலாங்கில் மட்டுமே வழக்கமாகப் பெறும் ஒரு இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மொத்தத்தில், திரிபுவாதிகளின் இடது அணி மக்களிடையே தனது செல்வாக்கை மேலும் இழந்துள்ளது.

## இதர கட்சிகளின் வளர்ச்சி

இந்த தேர்தலில் இரண்டு பெரிய கட்சிகளான பா.ஜ.க வும், காங்கிரசும் சேர்ந்து 51.5% வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளன. இதர 48.5%வாக்குகள் சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகளுக்கு சென்றுள்ளன. இது இந்த பெரிய கட்சிகளுக்கு ஏறத்தாழ வாக்களித்த பாதிபேரிடையே எந்த செல்வாக்கும் இல்லை என்பதைக் காட்டுகிறது.

சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் கட்சி, தேசிய வாத காங்கிரஸ், சிக்கிம் சனநாயக முன்னணி, ஆகியவற்றின் வெற்றி (காங்,பா.ஜ.க கூட்டணிக் கட்சிகளைத் தவிர்த்து) வருங்காலத்தில் சாதி, மத, மற்றும் பிராந்திய அடிப்படையில் தோன்றப்போகும் அணி சேர்க்கைகளைச் சுட்டிக் காட்டுகிறது. தமிழகத்தில் தலித் மக்களின் ஓட்டுவங்கியை தலித் கட்சிகள் கைப்பற்றியுள்ளது. பெரும்பாலான இடங்களில் இவர்கள் பெற்ற அதிகப்படியான வாக்குகள் அ.தி.மு.க. கூட்டணியின் வெற்றியை கடுமையாக பாதிப்படையச் செய்துள்ளது. சாதி வாரியாக ஓட்டுகள் பிரிக்கப்பட்டு, அது முக்கியத்துவத்தை பெற்றிருப்பதும் வருங்காலத்தில் தோன்றும் சாதி, மத அடிப்படையிலான புதிய அணிசேர்க்கைகளுக்கு கட்டியம் கூறுகிறது. பி.ஜே.பி. யின் கோட்டையான உ.பியில் காங்கிரசும் பா.ஜ.க வும் சேர்ந்து 43 சீட்டுகளையே பெற்றுள்ளன. ஏறத்தாழ இதற்கு சமமான இடங்களை பிராந்திய கட்சிகள் கைப்பற்றியுள்ளன. இதுமற்ற மாநிலங்களிலும் சாதி, மத மற்றும் பிராந்திய அடிப்படையில் தோன்றப் போகும் அணிசேர்க்கையைத்தான் காட்டுகிறது. இது வருங்காலத்தில் பா.ஜ.க வின் விரிவாக்கத்திற்குள்ள வாய்ப்புகளையும் சிறிய கட்சிகள், அதன் அடித்தளத்தையே அரித்து தின்றுவிடும் என்பதையும் காட்டுகிறது. இனி மைய அரசின் நிலைத்த தன்மையில் அதாவது ஐந்து வருடம் நீடித்திருக்கும் நிலைத்ததன்மையில், சிறிய கட்சிகளே சூத்திரதாரிகளாக விளங்கும்.

நடந்து முடிந்த தேர்தல்கள் வரலாறு காணாத கள்ள ஓட்டு, வாக்குச் சாவடிக் கைப்பற்றல்கள் மற்றும் இதர மோசடிகளுடன் தேர்தல் முறையையே கேலிக் கூத்தாக்கும் விதத்தில் நடந்துள்ளன. தேர்தல் கமிசனும் காவல்துறையும் இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்ததுடன் பல இடங்களில் அரசு இயந்திரம் இத்தகைய மோசடிகளை ஊக்கமுடன் நிறைவேற்றியுள்ளது. மக்களின் அடிப்படை பிரச்சனைகளுடன் தொடர்பற்று, கேவலமான தனி நபர் தாக்குதல்களில் இறங்கி, தில்லு முல்லுகளில் ஈடுபட்ட ஆளும் வர்க்கக் கட்சிகள் மேலும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயுள்ளன. இத்தனை தீவிரமான கள்ள ஓட்டு மோசடிகளையும் மீறி வாக்கு சதவிகிதம் சென்ற தேர்தலை விடவும் 3% குறைந்து போயுள்ளது.கள்ள ஓட்டுகளை கழித்தோமானால் வாக்கு சதவிகிதம் 30%த்தையும் தாண்டாது. இந்த 30%த்திலும் பா.ஜ.க பெற்றுள்ள வாக்கு சதவிகிதம் ஏறத்தாழ 23%.இது மொத்த வாக்காளர்களில் வெறும் 6.5% தான்.

மக்களின் விருப்பங்களுடன் எவ்விதத் தொடர்புமில்லாத இத்தேர்தலில், ஏகாதிபத்தியங்கள் மற்றும் தரகுமுதலாளிகளின் பெரும்பான்மையினர் ஆதரவு பெற்ற பா.ஜ.க, பணபலம், ஆள்பலம் மூலம் தேர்தல் மோசடிகளை நடத்தியும், சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்தும் கூட கஷ்டப்பட்டே பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைத்துள்ளது. இந்திய போலி சனநாயத்தின் மோசடித்தனத்தை இந்த தேர்தல் முடிவுகள் மேலும் தெளிவாக அம்பலப்படுத்தி உள்ளன.

## நிலையற்ற தன்மை மேலும் அதிகமாகும்!

தற்போது மையத்தில் ஆட்சிக்கு வந்துள்ள பா.ஜ.க தலைமையிலான கூட்டணி அரசாங்கம் இதற்கு முந்தையவற்றை விட மேலும் நிலையற்றதாயிருக்கும். பா.ஜ.க ஏற்கனவே தான் பெற்ற அதே எண்ணிக்கையிலான சீட்டுகளையே பெற்றுள்ளது. முன்பு 12 'பங்காளி' கட்சிகளை நம்பியிருந்தது மாறி தற்போது 24




1924 ல் கோமிங்டாங்கும் கம்யூனிஸ்ட்டுகளும் இணைந்து யுத்த பிரபுக்கள், ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடினர். 1925ல் ஜப்பான் நேரடியாக வடக்கத்திய யுத்தபிரபுக்களுக்கு உதவியதை எதிர்த்து 'வடக்கத்திய படையெடுப்பு' திட்டமிடப்பட்டது. 1926 ஜூலையில் தொடங்கிய இப்படையெடுப்பு ஆறு மாதங்களுக்குள் பல மாகாணங்களை கைப்பற்றி, ஷாங்காய், நான்கிங் நகரங்களையும் சுற்றிவளைத்தது. ஆனால், கோமிங்டாங் பிற்போக்குவாதிகள் ஏகாதிபத்திய ஆதரவுடன் தலைமையைக் கைப்பற்ற கம்யூனிஸ்ட்டுகள் மீது தாக்குதல்களைத் தொடங்கினர். பெருமளவிலான படுகொலைகள் நடத்தப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

கட்சிகளை நம்பியுள்ள நிலை தோன்றியுள்ளது. பங்காளி கட்சிகளின் கையில் 40% சீட்டுகள் உள்ள நிலையில் முன்னரை விட இவர்களின் பேரம் பேசும் திறன் அதிகரித்து உள்ளது. இது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் மந்திரி சபை அமைப்பதிலேயே வெளிப்பட்டு, தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த போதே, பதவிக்கான நாய்ச்சண்டை தொடங்கி விட்டது. 8 சீட்டுகளை மட்டுமே கொண்டுள்ள மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ் இரயில்வே அமைச்சர் பதவி மீது கண் வைத்திருந்தது. மூத்த தலைவர்களான பஸ்வான், நிதிஷ்குமார் போன்றோரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு, திரிணாமுல் இரயில்வேயை கைப்பற்றிக் கொண்டது. பொது சின்னம் மற்றும் பொது பெயருடன் தேர்தலில் போட்டியிட்டு 20 சீட்டுகள் பெற்ற ஜனதா தள் (ஐக்கியம்) தனது பதவி வெறிபிடித்த தலைவர்கள் அனைவரையும் திருப்திப் படுத்த பேரம் பேச ஆரம்பித்தது.

முதலில் சிறிய மந்திரிசபையை அமைக்கப் போவதாகக் கூறிய வாஜ்பாய், தனது கூட்டணி கட்சிகளின் நிர்பந்தம் காரணமாக 70 நபர் கொண்ட 'மெகா' மந்திரிசபையை அமைத்துள்ளார்.இதையும் மீறி அவரால், ராமகிருஷ்ணா ஹெக்டே போன்ற தலைவர்களின் ஆசையை நிறைவேற்ற இயலவில்லை. சிவ சேனா அமைச்சர்களோ தமக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் திருப்தி இல்லாததால், பதவி ஏற்காமலேயே மும்பை சென்றனர். எதிர்காலத்தில் இந்த கூட்டணி கட்சிகள் தமது மாநிலங்களுக்கு அதிக அமைச்சர் பதவிகளும் நிதி ஆதாரங்களும் கேட்டு மைய அரசை உலுக்கப் போகின்றன. கூட்டணி கட்சிகள் தமது மாநிலங்களில் தங்களது அடித்தளத்தை விரிவாக்க முயற்சிப்பார்கள்.அதே சமயம் இவர்களையே தொடர்ந்து சார்ந்திருப்பது தனது இருத்தலுக்கே அபாயம் என்பதால், அவர்களின் செல்வாக்கை மட்டுப்படுத்த பா.ஜ.க முயற்சிக்கும். அது மட்டுமல்லாமல், நரசிம்மராவைப் போல எம்.பிக்களை விலைக்கு வாங்கி பெரும்பான்மை பலம் பெறவும் அது முயற்சிக்கும். சமூக, அரசியல் நிகழ்ச்சி நிரலில் தோன்றப் போகும் மோதல்கள் மட்டுமன்றி, மேற்கூறிய பிரச்சனையும் 'தேசிய சனநாயக கூட்டணியில் நிரந்தர பிரச்சனையாக இருக்கும். உலக வங்கியின் கொள்கைகளை நிறைவேற்றுவதில் தேசிய சனநாயக கூட்டணி அங்கத்தினர்கள் ஒரே கருத்தில் (ஒருவரை ஒருவர் விஞ்ச முயற்சிக்கின்றனர்) உள்ளனர். அதேவேளை, பா.ஜ.க வின் ராம ஜென்மபூமி (விஸ்வ ஹிந்து பரிஷத் உடனடியாக ராமர்கோயில் கட்டுவதை ஆரம்பிக்கப் போவதாகக் கூறியுள்ளது), 370 வது சட்டப்பிரிவு, ஒரே சிவில் சட்டம் போன்றவை ஆளும் கூட்டணியில் சச்சரவுகளை தோற்றுவிக்கப் போகின்றன.

மொத்ததில் 8% எம். பிக்கள் வெளியேறினால் ஆட்சி கவிழ்ந்து விடும் என்ற நிலையில் அரசாங்கத்தின் நிலையற்ற தன்மை மோசமாக உள்ளது. தெலுகு தேச கட்சியோ, அல்லது ஏதேனும் இரு பெரிய கூட்டணி கட்சிகளோ ஆதரவை விலக்கிக் கொண்டாலும் கூட அரசாங்கத்தின் கதி அதோ கதி தான் ! மைய அரசாங்கம் மேற்கொள்ளப்போகும் கடுமையான பொருளியல் நடவடிக்கைகளுடன் தனக்கு தொடர்பு இல்லை என்று காட்டுவதற்காகவே தெலுகு தேசம் வெளியிலிருந்து ஆதரிக்கிறது. இது தான் மாபெரும் 24 கட்சி கூட்டணி சாதித்துள்ள 'நிலையான ஆட்சி'யின் லட்சணம். தேர்தல் முடிந்த நாளிலிருந்தே அடுத்த தேர்தலுக்கான அபாயம் நிலவி வருகின்றது.

இன்று அனைத்து கட்சிகளுமே ஒரு சட்டத்திருத்தம் மூலம் 5 ஆண்டு நாடாளுமன்றம் கட்டாயமாக நீடிக்க வகை செய்ய வேண்டுமென்பதில் உடன்பாடு கொண்டுள்ளனர். ஒரு சிலர், எதிர்கட்சிகள் ஆட்சியமைக்கும் நிலையில் இருந்தால் மட்டுமே நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர முடியும் என்ற ஜெர்மானிய மாதிரியிலான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்கின்றனர். எப்படியிருப்பினும் அரசாங்கத்தின் உள்ளார்ந்த நெருக்கடிகளால் அது வீழ்வதை இந்த சட்டங்களால் தடுத்து விட முடியாது என்பதுதான் உண்மை!

## சென்னை சிறையில் படுகொலை !!

காவல் நிலைய லாக் அப் படுகொலைக்கு எவ்விதத்திலும் நாங்கள் சளைத்தவர்களில்லை என தமிழக சிறைத்துறையும் சிறைப்படுகொலைகளில் இறங்கிவிட்டது. சிறைக்கொட்டடிகள் சித்திரவதை முகாம்களாக்கப்பட்டு, கைதிகள் கொல்லப்படுவது என்பது தமிழக சிறைகளில் அதிகரித்து வருகிறது. எந்த வித அடிப்படைவசதியும் இன்றி, ஆடுமாடுகளைப் போல, கொத்தடிமைத்தனமாக, அதிக எண்ணிக்கையில் கைதிகளை சிறைகளில் அடைத்து வைத்து கேவலமாக நடத்துகின்றனர். சிறைத்துறை அதிகாரிகளின் பெரும் மோசடிகளால் கைதிகள் பெரும் துன்பங்களை அன்றாடம் சந்திக்கின்றனர். நீதித்துறையில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதால், எந்தவித விசாரணையும் இன்றி கைதிகள் கொடும் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் சென்னை மத்திய சிறையில் வடிவேலு என்ற கைதி சிறை அதிகாரிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பொங்கியெழுந்து போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளின் மீது, காவல் துறையினரை ஈடுபடுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியது சிறை நிர்வாகம். இதில் 12க்கும் மேற்பட்ட கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இதை போராளி வன்மையாக கண்டிப்பதுடன், சனநாயக சக்திகளும், மனித உரிமை அமைப்புகளும் கைதிகளின் நியாயமான போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என போராளி கேட்டுக்கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க கூட்டணி அரசின் '100 நாட்களுக்கான பொருளியல் நிகழ்ச்சி நிரல்' -நாட்டை மொத்தமாக விற்பனை செய்யும் துரோகத் திட்டம்!

பா.ஜ.க. கூட்டணி அரசின் பிரதமர் வாஜ்பாய் சுதந்திரப் போராட்டத்தின் போது, அரசுதரப்பு சாட்சி யாக மாறி வெள்ளையர்களிடம் தன்னுடன் போராடி யவர்களைக் காட்டிக் கொடுத்ததாக சுதந்திரப் போராட் டத் தியாகிகள் சிலர் தேர்தல் சமயத்தில் அறிக்கை விட்டிருந்தனர். அது உண்மையோ என்னவோ தெரிய வில்லை ஆனால், இந்திய பிரதமராகியுள்ள வாஜ்பாய் நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு விற்றுத் தள்ளுவதில் முன்னாளைய எட்டப்பர்களையும் சமீபத்திய நரசிம்ம ராவ்களையும் நிச்சயமாக விஞ்சி விட்டார், என்று உறுதியாகக் கூறமுடியும். பா.ஜ.க அரசின் 'நூறு நாட்களுக்கான நிகழ்ச்சி நிரல்' ஒன்றே போதும் இவ்வுண்மைக்கு சான்று பகர!

தான் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியும் என்று உறுதி யாக நம்பிய பா.ஜ.க காபந்து அரசாங்கம், தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்னரே, புதிய அரசாங்கத்தின் முதல் 'நூறு நாட்களுக்கான பொருளியல் நிகழ்ச்சி நிரல்' தயாரித்து விட்டது. இதன் முக்கிய அம்சங்களை தேர்த லுக்கு முன்னரே கசிய விட்டு, ஏகாதிபத்தியங்கள் மற்றும் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளின் பெரும் ஆதரவை சம்பாதித்துக் கொண்டது. தற்போது பத்திரிக் கைகளில் இத்திட்டங்கள் விலாவாரியாக விவரிக்கப் பட்டு வருகின்றன. இதன் முக்கிய அம்சங்களைக் காண்போம்.

பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கு இருந்த மிச்ச மீத தடைகளையும் நீக்கும் வகையில், காப்பீட்டுத் துறையில் தனியார் நுழைவு அனுமதிக்கும் சட்டம் (IRDA Bill),லாபம் தரும் பல பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளின் ஒட்டுமொத்த விற்பனை, நிலக்கரி சுரங்கங் களில் தனியார் நுழைய அனுமதி, பல துறைகளில் 70 முதல் 100% வரை அன்னிய நேரடி முதலீடுகள் அனுமதி, வங்கிகள் தனியார் மயம், அன்னிய மூலதன வருகையை ஆண்டுக்கு 10 பில்லியன் டாலராக உயர்த்த திட்டம் போன்ற பல கொள்கைத் திட்டங்களை கொண்டு வருகிறது பா.ஜ.க கூட்டணி அரசு.

ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு லாபம் தரும் வகை யில், அந்நியச் செலாவணி முறைகேடு தடுப்புச் சட்டத்தை நீக்கி விட்டு அன்னிய செலாவணி பரா மரிப்பு சட்டத்தைக்(FEMA) கொண்டு வருகின்றனர். தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கவும் ஏகபோக நிறுவனங்களுக்கு இருக்கும் தடையை நீக்கவும் "நிறுவ னங்கள் சட்டத்தில்" (Companies Act) திருத்தம் கொண்டு வருகின்றனர். மேலும், ஏகாதிபத்தியங்கள் தங்களது கருவியான உலக வர்த்தக அமைப்பு (WTO) மூலம் விதிக் கும் அறிவு உடைமை உரிமைச் சட்டம், சேவைகள் மற் றும் விவசாயத்தில் அவர்களின் கொள்ளையை அனும திப்பது போன்றவற்றை ஏற்றுக்கொள்ளப் போகின்றது தேசிய (?) சனநாயக(!) கூட்டணி அரசாங்கம். இந்திய மக்களின் உழைப்பையும் நாட்டின் வளங்களையும் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள செல்வத்தையும் அள்ளிச் செல்லவும்,இந்தியப் பொருளியலை தமது கிடுக்கிப் பிடியில் வைத்திருக்கவும் ஏகாதிபத்தியங்களுக்கு உள்ள மிச்ச மீதி தடைகளையும் நீக்குவது தான் இந்த நூறு நாள் நிகழ்ச்சி நிரல். இந்தியப் பொருளியலை மேலும் படுகுழிக்குள் தள்ளுவதோடு, மேலை நாடுகளின் நெருக்கடியை மக்கள் வயிற்றில் போடுவது தான் சுதேசி பா.ஜ.கவின் (ஆர்.எஸ்.எஸ்.) தேச பக்தி போலும்!

இதோ சுதந்திர (?) இந்தியாவின் சில அமைச்சர் களின் பேச்சுக்களைக் கேட்போம்! இவர்களின் நோக்கத்தை புரிந்து கொள்வோம்!

யஷ்வந்த் சின்ஹா முழங்குகிறார், "அரசாங்கம் அவசரத்தில் உள்ளது. நாங்கள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளியல் வாழ்வு என்றே பார்ப்பதால், பல புதிய கொள்கை முயற்சிகள் தோன்றிவிடுகின்றன". நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு எவ்வளவு அவசரம் பார்த்தீர்




**1927ல் நடந்த சீ.க.க வின் 4வது பேராயம் விவசாயப் புரட்சி, மக்கள் அரசு என்ற இருகடமைகளை முன்வைத்தது. இருப்பினும் வலதுசாரி சென்டு - ஷியு செயலராகத் தொடர்ந்தார். இவரது சரணாகதிப்பாதை மற்றும் கோமிங்டாங்கின் துரோகம் ஆகியவற்றால் முதல் புரட்சிகர உள்நாட்டு யுத்தம் தோல்வியடைந்தது.**

www.padippakam.com

களா? அவர் மேலும் கூறுகிறார், "இது வரை தனியார் அனுமதிக்கப்படாத துறைகளைக் கண்டு அவற்றை திறந்து விடுவது எப்படி என்று பார்க்கப்போகிறோம். எடுத்துக் காட்டாக நிலக்கரி மற்றும் பாதுகாப்புத் துறை உற்பத்தியின் சில பிரிவுகள்". வாஜ்பாய் தனது முதல் உரையிலேயே மக்கள் "கடுமையான முடிவுகளை" சந்திக்க வேண்டுமென்றும் தமது "பெல்ட்டுகளை இறுக்கிக் கொண்டு" நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டுமென்று கூறினார். ராம்விலாஸ் பஸ்வான், அனைத்து கிராமங்களுக்கும் தொலைபேசி, கிராமப் புறங்களுக்கு இன்டர்நெட் வசதி என்று முழங்கியுள்ளார். சுத்தமான குடிநீர் கிடைக்காததால் கோடிக்கணக்கான கிராம மக்கள் இறந்து கொண்டிருக்கும் நாட்டில் கிராமம் தோறும் டெலிபோனாம்! இன்டர்நெட்டாம்! மத்திய மின்துறை அமைச்சர் குமாரமங்கலம் மின்துறை சீர்திருத்தங்கள் பற்றியும், மானியங்கள் ஒழிக்கப்படும் என்றும் திருவாய் அருளியுள்ளார். இவர்கள் எல்லோரையும் விட கருணாநிதியின் மருமகனும் ஏகாதிபத்தியங்களின் நம்பகமான தரகனுமான முரசொலிமாறன், ஓராண்டில் 50 பில்லியன் டாலர் அன்னிய முதலீட்டை கொண்டு வரப்போவதாக சபதம் எடுத்துள்ளார்.(எட்டப்பன் மட்டும் இதை கேட்டிருந்தால் வெட்கத்தில் தூக்கு போட்டுக் கொண்டு செத்திருப்பான்). அவருடைய மூவாயிரத்தாண்டுக் கடமை அன்னிய முதலீடுகளுக்குள்ள அனைத்து தடைகளையும் நீக்குவது தானாம்! எப்படி இருக்கிறது நமது மாண்புமிகுக்களின் வீர முழக்கங்கள்? ஏகாதிபத்தியங்களுக்கு எல்லா தடைகளையும் நீக்குவார்களாம், மக்கள் கடுமையான முடிவுகளை ஏற்று வயிற்றைக் கட்ட வேண்டுமாம். எப்படியிருக்கிறது 'தேசபக்தி'. . ., 'இனப்பற்று'. . . , ' சமூக நீதி ' . . . , 'சோசலிசம்'. இவை எல்லாவற்றின் பொருளும் ஒன்றே ஒன்றுதான், **ஏகாதிபத்திய விசுவாசம்!**

## மக்கள் மீதான தாக்குதல்கள் கொடூரமாக அதிகரிக்கும்!

நூறு நாள் திட்டத்தின் ஒரு பக்கத்தைத் தானே பார்த்தோம். இப்போது மறுபக்கத்தைப் பார்ப்போம்! உலக வங்கி, ஐ.எம்.எப் பின் ஆணைக்கேற்ப மக்கள் மீதான தாக்குதலை மைய அரசாங்கம் தீவிரப்படுத்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. தேர்தல் முடிந்த கையோடு டீசல் விலையேற்றிய வாஜ்பாயின் சாணக்கியத்தனம் அனைத்து ஏகாதிபத்திய - தரகு முதலாளிய ஆதரவு பத்திரிக்கைகளாலும் பாராட்டப்படுகிறது. இதன் விளைவாக, பஸ் கட்டண உயர்வு (இது தமிழக மக்களின் மீதான கருணாநிதியின் பாசத்தின் விளைவு), அனைத்துப் பொருட்களின் விலையேற்றம் என மக்களின் மீதான மறைமுக விலையேற்றம் திணிக்கப்பட்டுள்ளது. இது நூறு நாள் திட்டத்தில் இல்லை. தீபாவளி போனஸ்! இதுபோக நூறு நாட்களுக்கான நிகழ்ச்சி நிரலில் பல தாக்குதல்கள் காத்திருக்கின்றன.

சமையல் எரிவாயு விலையையும் (33%) மண்ணெண்ணை விலையையும் (15-20%) உயர்ந்தப் போகிறார்கள். ரயில்வே கட்டணத்தில் ஒரு ரூபாய் வரி போடப்படுகிறது. அனைத்து மானியங்களையும் வெட்டிக் குறைத்து (மின்சாரம், சுகாதாரம், கல்வி, சமூக நலம்) ரூ 25, 835 கோடிகளை மிச்சம் பிடிக்க போகிறார்களாம்!. பல்கலைக்கழகங்களுக்கு அரசு நிதி உதவியை முற்றிலும் நிறுத்துவது (அ) பெருமளவு குறைப்பது என்று முடிவு செய்துள்ளனர். இதனால், கல்விக் கட்டணங்கள் பல மடங்கு உயரும். இதற்கு பதிலாக, தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்கி தமது விருப்பப்படி கட்டணம் வசூலிக்கவும், விருப்பம் போல துறைகள் மற்றும் பாடத்திட்டங்களை வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்போகின்றனர். "ஏழைக்கெதற்கு கல்வி" என்று கேட்காமல் கேட்கிறார்கள். விவசாயிகளுக்கான இலவச(?) மின்சாரம் ஒழிக்கப்படுவதுடன் உரவிலையும் கடுமையாக உயரும். சர்க்கரை லெவி மீதான கட்டுப்பாட்டை நீக்குவதன் மூலம் ரேசனில் சர்க்கரை வழங்குவது நிறுத்தப்படும் அபாயம் உள்ளது. ரேசன் முறையை கூட படிப்படியாக ஒழிப்பார்கள். மேலும், நிதிப் பற்றாக்குறையைச் சரிகட்ட ஏராளமான வரிகள் (தேசபக்த(!) கார்கில் வரி உட்பட) போடவும் திட்டமிட்டுள்ளனர். இது தவிரவும், அனைத்து அரசு மற்றும் பொதுத்துறைகளில் 10%வேலைகளை நீக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளனர்.

இந்த ஏகாதிபத்திய ஆதரவு மக்கள் விரோதக் கொள்கைகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுமாயின் பொருளியல் நெருக்கடி மேலும் தீவிரமடையும். இதன் விளைவாக பெரும்பான்மை மக்கள் மேலும் கடும் துன்பத்தில் மூழ்கடிக்கப்படுவர். கடந்த சில வருடங்களாக அரசாங்கக் கடன் தீவிரமாக அதிகரித்ததால், நாடு உள்நாட்டுக் கடன் பொறியை நோக்கி முன்னேறிவருகிறது. இன்று அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடனானது, அதன் ஆண்டு வருவாயை விட 5 மடங்கும், அதன் ஆண்டு செலவை விட 4 மடங்கும் அதிகமாக உள்ளது. இந்தியாவில் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதமானது 55%என்ற பயங்கர நிலையில் உள்ளது. நிதி அமைச்சரின் கூற்றுப்படி அரசாங்கமானது வட்டி செலுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் ரூ 90,000 கோடியிலிருந்து ரூ 1,20,000 கோடி வரை கடன் பெற வேண்டியுள்ளது. இந்த நிதியாண்டில் இந்த நெருக்கடியானது, கார்கில் போர் (ரூ 15,000 கோடி) மற்றும் தேர்தல் செலவுகளின் காரணமாக மேலும் தீவிரமாகி உள்ளது. மைய


படிப்பகம்

www.padippakam.com

அரசாங்கத்தின் வருவாய் பற்றாக்குறையானது '91-'92ன் ரூ 16,261 கோடியிலிருந்து 1998-99ல் ரூ 60,474 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த கால கட்டத்தில் நிதிப்பற்றாக் குறையோ ரூ 36, 325 கோடியிலிருந்து ரூ 1,03,737 கோடியாக அதிகரித்துள்ளது. இது இந்த ஆண்டு பட்ஜெட் மதிப்பீட்டை விடவும் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4%) அதிகமாகும் (மொ.உ. உற்பத்தியில் 6%).

1991 லிருந்து நிதிப்பற்றாக்குறையை குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமெனக் கூறிவருகிறார்கள். இதற்காக, மான்யங்களை வெட்டிக்குறைத்தனர். சமூக நலத்திட்டங்களை ஒழித்தனர். பொதுச் செலவுகள் பெருமளவு குறைக்கப்பட்டன. இது வேலையின்மையை அதிகரித்தது. மக்கள் வாழ்வை மேலும் நாசமாக்கியது, பொதுத்துறைப்பங்குகளை விற்றுத் தள்ளினர். நேரடி வெளிநாட்டு மூலதனம் பெரிய அளவில் அனுமதிக்கப்பட்டது. ஆனால், நிதிப்பற்றாக் குறையை தீர்ப்பதற்காக ஐ.எம்.எப், உலக வங்கியால் தரப்பட்ட இந்த 'மருந்துகள்' நோயை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. நிதி நெருக்கடியும் அதன் பின்னுள்ள பொருளியல் நெருக்கடியும் மேலும் தீவிரமாகி உள்ளன. நோயைத் தீவிரப்படுத்திய அதே மருந்துகளே இப்போது புதிய அரசாங்கத்தால் மேலும் தீவிரமாக நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இது இந்தியப் பொருளியலை மேலும் நெருக்கடியில் தள்ளும். மக்களை வரலாறு காணா விலையேற்றம், வேலையின்மை, பசி, பஞ்சம் பட்டினிச்சாவுகள், தற்கொலைகள் போன்றவற்றில் மூழ்கடிக்கும். வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கை துயரங்களையும் கூட மக்களே தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். தொழிலாளர், விவசாயிகள், நடுத்தர மக்கள் என அனைவரின் வாழ்க்கையும் கேள்விக்குள்ளாகும்.

நாட்டை ஏகாதிபத்திய நிறுவனங்கள் கொள்ளையடித்துக் கொளுக்க, அவர்கள் வீசும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கும் துரோகிகளான தரகுப் பெரு முதலாளிகளும், நிலப்பிரபுக்களும், மானங்கெட்ட அரசியல் தலைவர்களுமே லாபம் பெறுவர். இந்த மக்கள் விரோதத் திட்டங்கள் சமூக, அரசியல் நெருக்கடிகளை மேலும் தீவிரமாக்கும்.

### பா.ஜ.க கூட்டணி அரசாங்கத்தின் மக்கள் விரோத ஏகாதிபத்திய ஆதரவு கொள்கைகளை எதிர்த்து அணிதிரள்வோம்! நடைபெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் யுத்தத்தை தீவிரப்படுத்துவோம்!

இந்த 'இரண்டாம் கட்ட சீர்திருத்தங்கள்'தங்களுடன் போர்க்குணமான போராட்டங்களின் ஒரு புதிய சுற்றைக்கொண்டுவரும். தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், பெண்கள், தலித்துகள், பழங்குடியினர்கள், மதச்சிறுபான்மையினர் மற்றும் பல்வேறு தேசிய இனங்கள் போர்குணமிக்க போராட்டங்களை நடத்துவார்கள். இதனால், ஆளும் வர்க்கங்கள் தங்களது பாசிச ஒடுக்கு முறைகளை மேலும் அதிகப்படுத்துவார்கள். அரசு இயந்திரத்தை மேலும் மேலும் பாசிசமயமாக்குவார்கள். மக்கள் திரளினரின் பல்வேறு பிரிவினர்கள் பெற்றுவருகின்ற உரிமைகளைக் கூட பறிப்பார்கள். கொடூரமான, கருப்புச் சட்டங்களைப் போடுவார்கள். பாசிச நடவடிக்கைகளின் மூலம் எல்லா சனநாயக இயக்கங்களையும் நசுக்க முயலுவார்கள்.

ஒருவகையில், இன்றைய சூழல் 1970 களின் துவக்க காலச் சூழ்நிலையை நினைவுப்படுத்துவதாக இருக்கிறது. 1971 பங்களாதேஷ் யுத்தத்தை ஒட்டி 1972ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் இந்திராகாந்தி அதிகாரத்திற்கு வந்தார். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையை வென்று (எந்த கூட்டணியும் இன்றி தனித்து) ஆட்சியமைத்த ஒரு வருடத்திற்குள், விலைவாசி உயர்வு, வேலையின்மை, ஊழல் ஆகியவற்றிற்கு எதிராக மக்கள் போராடத் துவங்கி வீதிகளில் இறங்கினர். 1974 வாக்கில் பிஹாரிலும் குஜராத்திலும் போராட்டங்கள் குறிப்பாக கடுமையாக நடைபெற்றது. ரயில்வே தொழிலாளர்கள் 20 நாள் அகில இந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். உ.பி யில் மாகாண ஆயுதப்படை போலீசார் கூட போராடினார்கள். தனது கருப்புச் சட்டங்களால் மக்களின் வளர்ந்து வரும் போராட்ட அலையை நசுக்க முடியாமல் தோல்வியடைந்த பின்னர் 1975 ஜூன் மாதம் அவசர நிலையை இந்திரா அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. நாடாளுமன்றத்தில் பெருமளவி




கோமிங்டாங் புரட்சிக்கு துரோகமிழைத்த பிறகு, கம்யூனிஸ்ட் கட்சி புரட்சியைக் காப்பாற்ற களமிறங்கியது. சீ.க.க தலைமையிலான மக்கள் படை உருவாக்கப்பட்டது. 1927ல் நடந்த மையகுழுவின் அவசர மாநாட்டில் சென்டு - ஷியுவின் சரணாகதிபாதை விமர்சிக்கப்பட்டு, அவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். பலமான பகுதிகளில் விவசாய எழுச்சிகளை நடத்த முடிவு செய்யப்பட்டது. ஹூனானில் மாவோ தலைமையில் சிங்காங் மலைப்பகுதிகளில் தளப்பிரதேசம் அமைக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

## பா.ஜ.க கூட்டணி அரசின் '100 நாட்களுக்கான நிகழ்ச்சி நிரல்'

| ஏகாதிபத்தியங்கள், தரகு முதலாளிகளுக்கு | 'பாரத' மக்களுக்கு |
|---|---|
| ❑ காப்பீட்டுத் துறையில் தனியார் நுழைய வகைசெய்யும் IRDA சட்டம்<br>❑ முதலாளிகளின் சுரண்டலை தங்கு தடையற்று நடத்த 'நிறுவனச் சட்டத்தில்' திருத்தம்.<br>❑ பன்னாட்டு நிறுவனங்கள், தரகர்களின் அந்நிய செலாவணி கொள்ளையை சட்டபூர்வமாக்க அந்நிய செலாவணி மேலாண்மை சட்டம்.<br>❑ தானியங்கிகள், தானியங்கி உதிரிப்பாகங்கள், பெட்ரோலியம், தானியங்கள், சுற்றுலா போன்ற துறைகளில் 70% மும், மரபு சாரா எரிசக்தி, பிலிம்கள் ஆகியவற்றில் 100% மும் அந்நிய நேரடி முதலீடு அனுமதி<br>❑ ஒரு சில ஆண்டுகளுக்குள் வங்கிகள் முழுவதுமாக தனியார்மயமாக்கல் (பாரத் ஸ்டேட் வங்கி தவிர்த்து)<br>❑ பல பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் ஒட்டுமொத்த விற்பனை (மாடர்ன் புட்ஸ், இந்திய பெட்ரோல் மற்றும் ரசாயனப்பொருட்கள் நிறுவனம், இந்திய சமையல் எரிவாயு நிறுவனம், இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம், டால்கோ).<br>❑ அறிவு உடைமை உரிமை, சேவைத் துறை மற்றும் விவசாயத்துறை ஆகியவற்றில் உலக வர்த்தக அமைப்பின் கட்டளைகளை ஏற்றல்<br>❑ நிலக்கரிச் சுரங்கங்களை தனியார்மயமாக்கல்<br>❑ அந்நிய நேரடி முதலீட்டை 2.5 பில்லியன் டாலரிலிருந்து 10 பில்லியன் டாலராக அதிகரிக்க முயற்சி | ❑ டீசல் விலை உயர்வு (நூறு நாட்களுக்கு முன்னரே நிறைவேற்றப்பட்டது)<br>❑ சமையல் எரிவாயு (33%), மண்ணெண்ணை (15-20%) விலை உயர்வு.<br>❑ பல்கலைக் கழகங்களுக்கான அரசு உதவி ஒழிப்பு அல்லது பெருமளவு குறைப்பு. (கல்விக் கட்டண உயர்வுகள்) தனியார் பல்கலைக்கழகங்கள் (தமது விருப்பம் போல கட்டணம், துறைகள், பாடத்திட்டம் கொண்ட) அனுமதி, பல்கலைக்கழக மானிய கமிசனின் நிதி உதவிகளும் நிறுத்தம்.<br>❑ அனைத்து மானியங்களும் மேலும் குறைப்பு (மொத்தம் ரூ.23,838 கோடி)<br>❑ சர்க்கரை விலையேற்றம், ரேசனில் சர்க்கரை வழங்கல் நிறுத்திடத் திட்டம்.<br>❑ ரயில் பயணிகள் மீது 1 ரூபாய் கூடுதல் கட்டணம் விதிப்பு.<br>❑ லாபமற்ற ரயில்வே திட்டங்கள் கைவிடல்.<br>❑ இலவச மின்சாரம் ரத்து<br>❑ உரவிலை ஏற்றம்<br>❑ 10 %தொழிலாளிகள் வேலை இழப்பு. |

லான பெரும்பான்மை பெற்றிருந்த இந்திரா அரசாங்கம் நெருக்கடியில் சிக்கித் தவித்தது. மக்கள் இயக்கங்களை ஒடுக்க அவசர நிலை கொண்டு வரப்பட்டது.

இன்றோ, சூழ்நிலை மிகவும் கடினமானதாகவும், பொருளியல் நெருக்கடி ஆழமானதாகவும் உள்ளது. குறைந்த அளவு பெரும்பான்மையையே ஆளும் கூட்டணி பெற்றிருப்பினும், இது மிகவும் நிலையற்றே உள்ளது. மக்களின் இயக்கங்களை கடுமையாக அடக்க கூட்டணிப் பங்காளிகள் அனைவரும் ஒன்றுபட்டே நிற்பர். நாட்டின் நலன்களை ஏகாதிபத்தியங்களுக்கு மேலும் விற்று விடுவதைச் செயல்படுத்த, தங்களது துரோகத்தனமான கொள்கைகளுக்கு வரும் எல்லா எதிர்ப்புகளையும் இரும்புக்கரம் கொண்டு நசுக்குவதை தவிர ஆளும் வர்க்கங்களுக்கு வேறெந்த வழியும் இல்லை. இத்துடன் பல்வேறு மாநில அரசாங்கங்கள் மைய அரசோடு மிகவும் நெருக்கமாக இருக்கின்றன. ஆந்திர பிரதேசத்தை ஒரு முன்மாதிரி மாநிலமாக்க தனது நவீன - தாராளவாத கொள்கைகளை நிலை நாட்டி, புரட்சிகர இயக்கத்தை ஒடுக்க ஏகாதிபத்தியங்கள் விரும்புவதால் தெலுகு தேச கட்சியின் ஆதரவை முழுமையாக சார்ந்திருக்கும் சிறை பிடிக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

மைய அரசாங்கத்தின் உதவியுடன் பாசிச சந்திரபாபு நாயுடுவின் நச்சுப்பற்கள் மேலும் அதிகமாகப் பதியும்.

ஆம்! நமது நாடு மிகக்கடுமையான நெருக்கடியினூடாகச் சென்று கொண்டிருக்கிறது. வரவிருக்கும் சண்டைகளுக்காக மக்கள் தங்களது'பெல்ட்டுகளை இறுக்கக் கட்டிக் கொள்ள வேண்டும்'. '70களின் நடுப்பகுதியின் போது இருந்ததை விடவும் இன்று புரட்சிகர, சனநாயக சக்திகள் பலமான நிலையிலும், நன்கு அமைப்பாக்கப் பட்டும் இருக்கின்றன. புரட்சிகர சக்திகளால் தலைமை தாங்கப்படும் இயக்கங்களுடன், தேசிய இன இயக்கங்களும் ஆளும் வர்க்கங்களுக்கு பெரும் சவாலாக உள்ளன. மக்கள் திரளினரின் பல்வேறு பிரிவினர்கள் தன்னெழுச்சியாகவோ அல்லது குட்டிமுதலாளிய தலைமைகளின் கீழோ போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் மற்றும் தனியார் மயமாக்கக் கொள்கைகளால் நேரடியாக பாதிக்கப்படும் இந்தியத் தொழிலாளி வர்க்கம், நிர்வாகத்திற்கு ஆதரவான தலைமைகளால் செயலூக்கமற்று இருப்பதிலிருந்து தனது, புகழ்மிக்க பாரம்பரியமான போர்குணமிக்க வீரதீரமான போராட்டங்களை மேற்கொண்டு, இந்திய புரட்சிக்கு தலைமைதாங்குகின்ற அதன் வரலாற்றுக் கடமையை மேற்கொள்வர். இந்தியாவின் கிராமப்புறங்கள், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் புறக்கணிக்கப்பட்ட பாசனவசதியின்மையால் பாலைவனம் போல மாறிவருவதும், தொடர்ச்சியான மகசூல் இன்மையும், விவசாயிகள் ஏழ்மைப்படுத்தப்படுவதும், உலக வர்த்தக அமைப்பின் கட்டளைக்கு இணங்க விவசாயிகளின் நலன்களை விற்றுவிடுவதும் பஞ்சத்தைப் போன்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவையெல்லாம் விவசாயப் பெருங்குடிமக்களை இந்த அரக்கர்களை அதிகாரத்திலிருந்து துடைத்தெறியச் செய்யும் வல்லமை மிக்க, பலம் மிக்க சக்தியாக மாற்றும். பெண்கள், தலித்துகள், மற்றும் முஸ்லீம்,கிறிஸ்தவர், சீக்கியர் போன்ற மதச்சிறுபான்மையினர்கள் என நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டும் அடக்கப்பட்டும் வந்த மக்கள் பிரிவினர்கள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் இந்த "கடுமையான முடிவுகளை" எதிர்கொள்ள தங்களை தயார்ப்படுத்துகின்றனர்.

இந்த எல்லா ஒடுக்கப்பட்ட பிரிவினர்களையும் ஒன்றுபடுத்தி, கீழ்மட்டத்திலிருந்து அகில இந்திய மட்டம் வரையிலும் பலம்மிக்க வர்க்க அமைப்புகள் மற்றும் மக்கள் திரள் அமைப்புகளை கட்டியமைத்து, "சனநாயக ரீதியாக- தேர்ந்தெடுக்கப்பட்ட" அரசாங்கம் என்ற மோசடியின் கீழ் நாட்டை விற்று வருகின்ற இந்த துரோகிகளுக்கு எதிராக ஓய்வொழிச்சலின்றி போராட்டத்தை தொடுக்கவேண்டும். இப்போராட்டங்கள், பரந்துபட்ட கிராமப்புறங்களில் நடைபெற்று வரும் ஆயுதம் தாங்கிய விவசாயப்புரட்சியுடன் அக்கம் பக்கமாக நின்று அதை தீவிரப்படுத்த வேண்டும். மக்கள் யுத்தத்தை ஆழப்படுத்த வேண்டும். உளுத்துப்போன, காலாவதியாகிவிட்ட, பொருத்தமற்ற நாடாளுமன்ற நிறுவனங்களின் இடத்தில் மக்கள் சனநாயக அதிகார அமைப்புகளை மாற்றாக நிறுவிடவேண்டும்.

**சென்ற இதழில் . . .**

1999 மே ஆகஸ்டு இதழில் 1999ன் மே தினம், கட்சி உருவாக்கத்தின் 30 வது ஆண்டு தினத்தை உயர்த்திப் பிடிப்போம் ஆகிய இரு பெட்டிச் செய்திகளும் 20, 35, 59 ஆகிய பக்கங்களில் இருமுறை அச்சாகி உள்ளது. இந்த கவனக்குறைவிற்காக மிகவும் வருந்துகிறோம்.

**இந்த இதழில் . . .**

கம்யூனிஸ்ட் அறிக்கையின் 150 வது ஆண்டு நினைவு குறித்த கட்டுரையின் இரண்டாம் பாகம் இவ்விதழில் வெளியிட இயலவில்லை. வரும் இதழில் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.




1930 களின் தொடக்கத்தில் தளப்பிரதேசமும், மக்கள் படையும் பல பகுதிகளில் உருவாக்கப்பட்டன. இக்கட்டத்தின் வெற்றிகளின் விளைவாக லிலிசானின் இடது சாரி வழி உருவானது. இக்காலகட்டத்தில் மாவோ, தளப்பிரதேசம், செம்படை மற்றும் தளப்பகுதிகளை அதிகரித்து நகரங்களைக் சுற்றி வளைப்பது போன்ற கோட்பாடுகளை வளர்த்தெடுத்தார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாய திட்டம் உருவாக்கப்பட்டது. பாட்டாளிவர்க்கத்தின் ராணுவ வழி குறித்த சில அம்சங்களை மாவோ கோடிட்டுக் காட்டினார்.


படிப்பகம்

www.padippakam.com

# முதலாளிகளை மண்டியிட வைத்த மதுரை நெசவாளர்கள்!

மதுரை செல்லூர் பகுதியின் நெசவாளர்களின் கூலி, போனஸ் உயர்வு போராட்டமானது 27.9.99 லிருந்து 2.11.99 வரை மொத்தம் 36 நாட்கள் நடைபெற்றது. 50% கூலி உயர்வு, 25% போனஸ் உயர்வு, செல்லூர் முழுவதும் சதுர இன்ச் அடிப்படையில் ஒரே கூலி உட்பட 17 கோரிக்கைகள் வைக்கப்பட்டன. இது ஒன்பது சங்கங்களின் (சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி, ஐ.என்.டி.யு.சி, ஏ.ஐ.சி.சி.டி.யு., தி.மு.க., அ.தி.மு.க, ம.தி.மு.க, ஜனதாதளம், காங்கிரஸ்) கூட்டுத் தலைமையில் தொடங்கப் பட்டது. இதில் 10% கூலி உயர்வு, 3% போனஸ் உயர்வு கோரிக்கைகள் மட்டும் வென்றெடுக்கப்பட்டு, நான்கு கோரிக்கைகள் இன்னும் ஒரு மாதத்திற்குள் முடித்துக் கொடுக்கப்படும் என்ற உத்திரவாதத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. தொழிலாளர்கள் தமது உடனடி அத்தியாவசிய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டு, இதர கோரிக்கைகளை நோக்கி அடுத்த கட்ட போராட்டத்திற்கு தயார்படுத்திக் கொள்ள சிறிய வெற்றியுடன் போராட்டத்தை முடித்துக் கொள்ள சம்மதித்தனர்.

செல்லூர் நெசவாளர் போராட்டத்தை பொறுத்தவரை, கடந்த காலத்தில் இதே திரிபுவாத, முதலாளிய சங்கங்களின் தலைமையின் கீழ்தான் தொழிலாளர்கள் அணி திரண்டு போராடி வந்துள்ளனர். இந்த தலைமைகள் முதலாளிகளுடன் சமரசம் செய்து கொண்டு துரோகமிழைப்பது, சட்டவாத பாதையில் போராட்டத்தை கொண்டு சென்று தொழிலாளர்களை மழுங்கடிப்பது, தொழிலாளர்களை வெறும் பார்வையாளர்களாக மட்டுமே வைத்திருப்பது, வாரக்கணக்கில் போராட்டத்தை ஜவ்வாக இழுத்து போராட்ட உணர்வை சிதைப்பது, போர்க்குணமான வடிவங்களைப் புறக்கணிப்பது என்ற தொழிலாளர் விரோத செயல்உத்திகளைப் பயன்படுத்தி வருகின்றனர். கடந்த காலத்தில் தலைமைகள் துரோகமிழைக்கும் போது முற்போக்கு இளைஞர் அணியும் பிற சனநாயக அமைப்புகளும் இணைந்து போராட்டங்களுக்கு போர்க்குணமிக்க தலைமை தந்து அடக்குமுறைகளையும் மீறி கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளனர். மு.இ.அ இத்தலைமைகளின் தொழிலாளர் விரோத செயல் உத்திகளை அம்பலப்படுத்தி வந்துள்ளது. 1990 ல் 3% போனஸ் பெற்று தந்தது. 1997ல் (சென்ற முறை) துரோகம் செய்த போது மு.இ.அ. தொழிலாளர்களைத் திரட்டி போராடி செல்லூர் வரலாற்றில் முதல் முறையாக கூலி, போனஸ் உயர்வு என இரண்டையும் பெற்றுத் தந்தது. இவ்வாறு, மு.இ.அ. தொழிற் சங்கங்களின் தலைமையை நிர்ப்பந்தம் செய்ய வைத்து, போர்க்குணமான போராட்டங்கள் மூலம் தொழிலாளர் கோரிக்கைகளை நிறைவேற்றி வந்துள்ளது.

சென்ற முறை தொழிலாளர்கள் தாம் வெறும் பார்வையாளராக வைக்கப்படுவதை எதிர்த்து பொங்கி எழுந்ததைக் கண்டு அஞ்சிய தலைமைகள், இம்முறை 27.9.99 அன்று ஷிப்ட் கூட்டம் நடத்தி தொழிலாளர்களின் கருத்தை சனநாயக (!) பூர்வமாக அறிந்து போராட்டம் எடுப்பதாக காட்டிக் கொண்டன. தொழிற்சங்க சுல்தான்கள் "தொழிலாளர் கருத்தை அறிகிறோம்!" என்றுஇறங்கி வருவதே தொழிலாளர்களின் நிர்ப்பந்தத்திற்கு கிடைத்த வெற்றி ஆகும். இருப்பினும், 25 நாட்களுக்கு வேலை நிறுத்தத்தை அறிவிக்காமலே ஊர்வலம், மனுகொடுத்தல், தர்ணா, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என சடங்குத்தனமான காந்திவழி போராட்டங்களை மட்டும் நடத்தி தமது நாள் கடத்தும் தந்திரத்தை நடைமுறைப்படுத்தினர். தொழிலாளர்களோ போர்க்குணமிக்க போராட்டத்தையும், வேலை நிறுத்தத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்து, வெறுப்புற்று கோபத்தின் உச்ச கட்டத்திற்குச் சென்றனர். இது 21-10-99 அன்று நடந்த உண்ணாவிரதத்தில் எரிமலையாக வெடித்தது. "உண்ணாவிரதம், தர்ணா என்று இழுத்தடிக்காதே ! நாங்கள் மறியலுக்குத் தயார் ! நீங்கள் தயாரா?" என தங்களது போராட்ட முஷ்டியை தலைமையின் முகத்திற்கெதிரே உயர்த்தினர். பதறிப்போன தலைவர்கள், "தூண்டுதலுக்கு இரையாகாதீர்கள். நாம் வெற்றியை நோக்கியே செல்கிறோம்." என்று சமாதானம் கூறினர். தொழிலாளர்களின் மனநிலையை கண்டு அஞ்சி மறுநாளே வேலை நிறுத்தத்தை அறிவித்தனர். ஆனால், மீண்டும் அடுத்த கட்ட போராட்டத்தை தீவிரப்படுத்தும்படி குரல் எழுந்த பின்னரே, 28ந்தேதி கோரிப்பாளையத்தில் மறியல் என அறிவித்தனர்.

மறியலையும் கூட வழக்கமான போலீஸ்



படிப்பகம்

www.padippakam.com

வேனில் ஏறி சுற்றி வரும் சடங்காக மாற்ற முயற்சித்தது கூட்டுத்தலைமை. ஊர்வலம் கிளம்பியவுடனே காவல்துறை கைது செய்கிறோம் என மறித்தது. ஆனால், பெண் தொழிலாளர்கள் தடையை உடைத்து வெள்ளமென முன்னேறினர். பதறிப் போன தலைமை தடுக்க முயற்சித்தது. ஆனால் தொழிலாளர்கள் மறியல் இடத்தை நோக்கி விண்ணதிர, முழக்கமிட்டபடியே முன்னேறினர். மீண்டும் காவல்துறை மறித்தது! தொழிலாளி வர்க்கமோ உடைத்து முன்னேறியது!! தலைவர்களால் இனியும் கட்டுப்படுத்த முடியாது என உணர்ந்த காவல்துறை தடியடி நடத்தியது. குறிப்பாக பெண் தொழிலாளர்களை அடித்துக் காயப்படுத்தியது. பெண்கள் உட்பட 50 பேர் கைதானர்கள், 6 பேர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கோபம் கொண்ட தொழிலாளர்கள் முதலாளிகளின் வீடுகளில் கல்லெறிந்து சேதப்படுத்தினர்.

தொழிலாளர்கள் மீது அடக்குமுறை செலுத்தி போராட்டத்தை ஒடுக்க நினைத்த அரசின் சதித் திட்டம் தோல்வியடைந்தது. தடியடி தொழிலாளர்களை மேலும் ஆவேசம் அடைய வைத்தது. 1-11-99 அன்று முதலாளிகளின் வீட்டுக்கு முன்பு நடந்த மறியல் போராட்டத்திற்கு பெண்கள் உட்பட தொழிலாளர்கள் அலை அலையாக திரண்டனர். 150க்கும் மேற்பட்டோர் கைதாயினர். தொழிலாளர்களின் உறுதியையும் ஆவேசத்தையும் கண்டஞ்சிய முதலாளிகள் அன்றிரவே ஒப்பந்தத்திற்கு வந்தனர். மறுநாள் தொழிலாளர்களின் கருத்துக் கேட்ட பின்பு, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

## போராட்டத்தின் படிப்பினைகள்:

இம்முறை தலைமைகள் தொழிலாளர்களின் கருத்தறிய இறங்கி வந்ததென்பது, தொழிலாளர்களின் சனநாயக உரிமைக்கான போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். ஷிப்ட் கூட்டங்களில் தொழிலாளரின் குரல் ஒலித்ததால்தான் அனைத்து தீர்மானகரமான போராட்டங்களும் நடைபெற்றுள்ளன. இது தொழிலாளர் தமது விழிப்புணர்வின் மூலம் தலைமைகளின் துரோகத்திட்டங்களை முறியடித்ததைக் காட்டுகின்றது. தொழிலாளர் தாமே துரோகத்தலைமைகளை எதிர்த்துப் போராடி நிர்பந்திப்பதென்பது மிக முக்கியமானதொரு வளர்ச்சியாகும். மேலும், போராட்டத்தை சடங்குத்தனமாக மாற்றும் தலைமையின் திட்டத்தை முறியடித்து, இறுதி கட்ட போராட்டத்தை துரிதப்படுத்தியதென தொழிலாளரின் விழிப்புணர்வை காட்டும் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

அடுத்ததாக, போராட்டத்தில் தொழிலாளர்கள் முழுமையாக ஈடுபட்டனர். போராட்டம் அறிவிக்கப்பட்டவுடனே தாயம், பரமபதம், சீட்டு விளையாட்டு எனவும், சமையல், பெயிண்டிங் என வேறு வேலைகளுக்குப் போவது எனவும் இருந்த தொழிலாளர்கள் இம்முறை போராட்டகளத்தில் குதித்தனர். அதிலும், பெண் தொழிலாளர்களின் பங்கு பெருமளவு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இருப்பினும், இப்போராட்டத்திலும் கூட தேவையற்ற இழுத்தடிப்பு, சரக்குகளை ஏற்றிச் செல்ல அனுமதிப்பது, அடக்குமுறையை எதிர்த்து போராட மறுப்பது என தனது சமரசவாத, இழுத்தடிக்கும் துரோக திட்டங்களை தலைமைகள் நிறைவேற்றியுள்ளன. இவர்களின் இத்தகைய செயல் உத்திகளை முன்னரே புரிந்து கொண்டால், இத்தகைய இழுத்தடிப்பு வேலைகளை முறியடிக்க முடியும். எல்லாவற்றையும் விட, புரட்சிகர அரசியலின் கீழான, சமூக மாற்றத்திற்காகப் போராடும், போர்க்குணம் வாய்ந்த புரட்சிகர தொழிலாளர் அமைப்பில் தொழிலாளர்கள் இணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இத்தகைய புரட்சிகர அமைப்பின் மூலம் தொழிலாளர்களே தமது எதிர்கால வாழ்வை மட்டுமல்ல, உடனடிக் கோரிக்கைகளையும் கூட விரைந்து தீர்க்க முடியும். செல்லூர் நெசவாளர்கள் இத்தகைய புரட்சிகர தொழிலாளர் சங்கத்தைக் கட்டி அமைப்பார்கள் என்பது நிச்சயம்.

சீன புரட்சியின்



50 வது ஆண்டு

1931, செப்டம்பர் 18ல் ஜப்பான் நேரடியாக சீனாவை ஆக்கிரமித்தது. சியாங்கே - ஷேக் எவ்வித எதிர்ப்பும் காட்டாததோடு, சீ.க.க யை கொடூரமாக ஒடுக்க கடும் தாக்குதல்களை ஏவினான். நாடு முழுக்க சியாங் எதிர்ப்பு, ஜப்பானிய எதிர்ப்பு உணர்வு வளர்ந்தது. ஜப்பானிய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி அமைக்க சீ.க.க அறைகூவல் விடுத்தது. இருப்பினும், கட்சியில் நிலவிய இடது வழியின் காரணமாக பெரும் பின்னடைவு ஏற்பட்டது. சியாங்கே - ஷேக்கின் முதலிரண்டு சுற்றி வளைத்தல்களை செம்படை முறியடித்தது.



படிப்பகம்

www.padippakam.com

# எம்.சி.சி - மக்கள் யுத்தம் மோதல்கள்

## "ஏறக்குறைய ஒரு வருடகாலம் நாங்கள் எங்களை கட்டுப்படுத்தியிருந்தோம் ... ஆனால், எம்.சி.சி அதை எமது கட்சியின் பலவீனமாக எடுத்துக்கொண்டது"

**இ.க.க (மா-லெ) (மக்கள் யுத்தம் ) பிஹார் மாநில குழுவின் செயலருடன் பேட்டி**

*[ பீப்பிள்ஸ் மார்ச் இதழுக்கு தோழர். சரவன் அளித்த சிறப்பு பேட்டியின் தமிழாக்கம் ]*

பிஹார் தொடர்ந்து வேதனையில் உழல்கிறது. ரன்வீர் சேனா மற்றும் பிற தனியார் படைகளின் கொலைவெறித் தாக்குதல்களினால் மட்டும் அல்ல, இ.க.க (மா-லெ) (மக்கள் யுத்தம்), எம்.சி.சி ஆகிய இரு கட்சிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் தாக்குதல் மற்றும் எதிர்தாக்குதல்களால் கூட பிஹாரில் ரத்தம் சொரிகிறது. 1999 ஜூன் – ஜூலை மாதத்தின் ஐந்து வார காலத்தில் மட்டுமே எம். சி. சிக்கும் மக்கள் யுத்தத்திற்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் குறைந்தபட்சம் 20 பேர் இறந்தனர். இதில் 14 பேர் மக்கள் யுத்தத்தைச் சேர்ந்தவர்கள், 6 பேர் எம்.சி.சி யினர். இ.க.க (மா-லெ) (மயு) வின் மைய குழு உறுப்பினரும், பிஹார் மாநில குழு செயலருமான தோழர்.சரவன் 1999 ஆகஸ்டு முதல் வாரத்தில் நடந்த பத்திரிக்கையாளர் கூட்டத்தில் இதுபற்றி கூறினார். தங்களது தரப்பிலிருந்து ஒரு வருடகாலம் எதிர்தாக்குதல் நடத்துவதை கட்டுப்படுத்தியிருந்ததற்கு பின்னர், தனது கட்சி எதிர் தாக்குதல் தொடுக்க இறுதியாக முடிவு செய்த காரணத்தினால் எம்.சி.சி. தரப்பிலும் சேதங்கள் ஏற்படத் துவங்கியுள்ளன என்று அப்போது அவர் தெரிவித்தார். முன்னாள் பார்ட்டி யூனிட்டியாக இருந்து தற்போது மக்கள் யுத்த கட்சியாக செயல்படும் தோழர்கள் ஜகனாபாத், பலாமு ஆகிய பகுதிகளை தங்களது முக்கிய பகுதிகளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். இப்பகுதிகளில் இருந்து மக்கள் யுத்த கட்சியின் ஆயுதக்குழுக்கள், மக்கள் திரள் அமைப்புகளின் செயல்வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களைக் கூட துடைத்தெறிய எம்.சி.சி தனது கொலைபாதக பாதையை தொடர்ந்து வருகிறது. மக்கள் யுத்த கட்சியால் கடைபிடிக்கப்பட்ட கட்டுப்பாட்டை ஒரு பலவீனமாக எம் . சி. சி. எடுத்துக் கொண்டது என்பது உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானதாகும் என்று அவர் விளக்கமாகக் கூறினார்.

முந்தைய பார்ட்டி யூனிட்டியும், மக்கள் யுத்தமும் இணைந்து இ.க.க. (மா-லெ) (மயு) என்ற ஒரே அமைப்பாகி, ஒரு மைய குழு (தற்காலிக) வை உருவாக்கியது முதல் ஏறக்குறைய ஒருவருடகாலமாக எம்.சி.சி தலைமை ஒரு அராஜகமான, பிடிவாதமான நிலையை மேற்கொண்டுள்ளது. இந்த இணைவை முழுவதும் எதிர்மறையாகவே எதிர்கொண்டது. பிஹார் விசயங்களைக் குறித்து பேச்சுவார்த்தைக்கு வர மறுத்தது. மக்கள் யுத்த கட்சி பாரம்பரியமாகவே பலம்பெற்றிருந்த பகுதிகளில் பீதியூட்டுகின்ற, கொடுமையான ஒரு இயக்கத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலமாக சூழ்நிலையை மேலும் மோசமாக்கியது. வீடுகளை அழிப்பது, உடமைகளை சூறையாடுவது, அடித்து நொறுக்குவது, மயுவின் ஆதரவாளர்களை கொலை செய்வது போன்றவற்றை குறிப்பாக, மயுவின் அமைப்பாளர்கள் மற்றும் ஆயுதக்குழுக்களை ஒழிக்க தனது கவனத்தைக் குவித்து வருகிறது. பீப்பிள்ஸ் மார்ச் இதழுக்கு தோழர். சரவன் அளித்த சிறப்பு பேட்டியின் போது இது குறித்த விவரங்களை விரிவாகக் கூறினார்.

இப்பேட்டியின் போது எம்.சி.சி. குறித்து இதுவரையிலும் தெரிந்திராத பல விசயங்களை பீப்பிள்ஸ் மார்ச் அறிந்து கொண்டது. மக்கள் யுத்தம் வேலைசெய்கின்ற பலாமு, ஜகனாபாத் மற்றும் பிற பகுதிகளில் உள்ள மோசமான, மக்கள் விரோத சக்திகளை எம். சி. சி. சார்ந்திருப்பது; மயுவோடு தொடர்புடையவர் என சந்தேகிக்கும் எவரையும் ஒழிப்பது அல்லது அதன் கொடுமையான பீதியூட்டும் இயக்கம்; எம். சி. சி.யின் ஆயுதக் குழுக்களின் கொடூரம் மற்றும் பயங்கரத்தன்மை; அதன் கொலைகள் மற்றும் புதிய ஒன்றுபட்ட இ.க.க (மா-லெ) (மயு) விற்கு எதிரான அதன் பொய் பிரச்சாரங்கள் மற்றும் அவதூறுகள்; மக்கள் யுத்த கட்சியோடு அமர்ந்து பிஹார் சிக்கல்கள் குறித்து விவாதித்து தீர்வு காண அது பிடிவாதமாக மறுப்பது போன்ற பல்வேறு உண்மைகளை அறியவந்தது. நமது நிருபர் நிஷாந்திற்கு தோழர். சரவன் அளித்த பேட்டியை கீழே வெளியிடுகிறோம்.

**கேள்வி : 1998 அக்டோபரில் எமது இதழுக்கு அளித்த ஒரு பேட்டியின் போது, அப்போதைய பார்ட்டி யூனிட்டி செயலர் தோழர். பிரசாத் "பார்ட்டி யூனிட்டியும் மக்கள் யுத்தமும் இணைவதால், எம்.சி.சி. யுடனான மோதல்களுக்கான அடிப்படைகள் குறைந்துவிட்டன" என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். ஆனால் கடந்த ஒருவருடகால சம்பவங்கள் அதற்கு எதிர்மறையாகவே நிகழ்கின்றனவே. இந்த சூழ்நிலையை கணிப்பதில் நீங்கள் எங்கே தவறிழைத்துள்ளீர்கள்?**



படிப்பகம்

www.padippakam.com

**பதில் :** பாட்டியூனிட்டியும், மக்கள் யுத்தமும் இணைந்து இ.க.க (மா–லெ)(மயு) வின் புதிய மைய குழு (த) தோன்றியிருப்பதைத் தொடர்ந்து இந்த மோதல்கள் நின்றுவிடும் என்று மிகவும் அக்கறையுடன் எதிர் பார்த்தது உண்மைதான். எங்களது நம்பிக்கை இருவிசயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. முதலாவதாக, முன்னாள் மயுவிற்கும் எம்.சி.சி. க்கும் இடையே உறவுகள் நன்றாகவும் தோழமையாகவும் இருந்தன. அவர்களுக்கு இடையிலான இணைவு பேச்சுகள் 1995 மே மாதத்தில் தோல்வியடைந்து இருந்தாலும், அவை பரஸ்பர முக்கியத்துவமுடைய விசயங்களில் பேச்சு வார்த்தைகளை வழக்கமாக நடத்திக் கொண்டுவந்ததும், அவ்வப்போது கூட்டு நடவடிக்கைகளைக் கூட நடத்தி வந்ததும் தான். இரண்டாவதாக, தனது தரப்பில் இருந்து எதிர்தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்திவிட புதிய மையகுழு முடிவு எடுத்தது. ''ஆத்திரமூட்டும் செயல்களில் எம்.சி.சி ஊழியர்கள் ஈடுபட்டாலும் கூட ஊழியர்கள் ஆத்திரம் கொள்ளக்கூடாது.'' என தனது ஊழியர்களை கேட்டுக் கொண்டதைப்பற்றி தோழர். பிரசாத் பேட்டியில் ஏற்கனவே உங்களது இதழில் வெளியிட்டு இருந்தீர்கள். எம்.சி.சி யின் தொடர்ச்சியான கொடூர தாக்குதல்களுக்கு இடையிலும், எமது ஊழியர்கள் வெறும் வார்த்தைகளில் மட்டுமின்றி செயலிலும் எம்.சி.சியை திருப்பித் தாக்குவதிலிருந்து கட்டுப்படுத்தி இருந்தனர். இவ்விரு அம்சங்களும் தாக்குதல்களைத் தொடர்வதிலிருந்து எம்.சி.சியை மனந்திரும்பச் செய்யும் என நாங்கள் கருதியது மாயையானது எனவும் , அவை எம்.சி.சி. யை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்பதும் நிரூபணமாகியுள்ளது.

**கேள்வி : அப்படியெனில், நீங்கள் எங்கே தவறிழைத்தீர்கள்?**

**பதில் :** நாங்கள் எப்போதுமே எம்.சி.சியின் சாதகமான பக்கத்தையே கண்டோம், அதன் பாதகமான தன்மைகளை காணத் தவறினோம். முந்தைய பியூ, மயு ஆகிய இரு கட்சிகளுமே குறிப்பாக மயு தனது ஊழியர்களுக்குக் கூட எம்.சி.சி.யின் பாதகமான தன்மைகளைப் பற்றி எப்போதும் அறிவிக்கவில்லை. வெளிப்படையான அரசியல் விவாதத்தை நடத்துவது குறித்தும் பேசவில்லை. மறுபுறம், மயு மற்றும் பியூவிற்கு எதிராக மட்டுமன்றி புதிய ஒன்றுபட்ட இ.க.க (மா–லெ) (மயு) வின் மைய குழு (த) மீதும் எம்.சி.சி பொய்களையும் அவதூறுகளையும் போதித்து தனது ஊழியர்களை மனரீதியாக தயாரித்திருந்தது.

**கேள்வி : எது போன்றவை . . . ?**

**பதில் :** மயு நாடாளுமன்ற தேர்தல்களில் பங்கெடுக்கப்போகிறது போன்றவற்றை கூறினார். 1996 முதலாகவே இவர்கள் மயு குறித்து இதை கூறி வந்தனர், பியூ குறித்து அதற்கு முன்னரே கூறிவந்தனர். மயு தலைமை நக்சல்பாரியின் 30வது ஆண்டு நினைவு நாளின் போது வெளிப்படையாக திட்டமிட்டுள்ளது என்று ஒரு மிகப்பெரிய பொய்யையும் இது போன்ற பிற அற்ப விசயங்களையும் பரப்பினர். எளிதில் புலப் படத்தக்க இந்த பொய்களை எம்.சி.சி யின் ஊழியர்கள் காணுவார்கள் என்றும், அவர்களது தலைமையின் குறுங்குழு அணுகு முறையை எதிர்த்து ஒரு நாள் போராடுவார்கள் என்று மட்டுமே நாங்கள் நம்ப முடியும். குழுமனப் பான்மையையும், பிறர்மீது வெறுப்பையும் வளர்த்து விடுவதன் மூலம் புதிய ஒன்றுபட்ட மயு மீது தனது தாக்குதல்களை எம்.சி.சி. தொடர இந்த பயம் கூட ஒரு காரணமாக இருக்கலாம். குறைந்தபட்சம் சில காலத்திற்கேனும் தங்களது ஊழியர்களை உண்மையை தெரிந்துகொள்வதிலிருந்து தடுக்க இயலும் என அவர்கள் நம்புகின்றனர்.

**கேள்வி : எதிர்தாக்குதல் நடத்துவது இல்லை என்று உங்கள் தரப்பில் எடுத்த முடிவு மோதல்கள் குறித்த எம்.சி.சி. யின் அணுகு முறையில் ஏதேனும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா?**

**பதில் :** அப்படித்தான் இருக்கும் என நாங்கள் நினைத்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக தலைமையில் அது எந்தவித மறுபரிசீலனைக்கும் இட்டுச் செல்லவில்லை. எத்தனை உயிர்களை பலிகொடுத்தேனும் தங்களது ''பேரரசை'' விரிவுபடுத்த அவர்கள் முடிவுசெய்து விட்டனர். மக்கள் மத்தியில் புரட்சியாளர்களுடைய மதிப்பை அது சேதப்படுத்தினாலும் பரவாயில்லை, புரட்சிகர தலைமை அணிகளிடையே அது குழப்பங்களை, நம்பிக்கையின்மையை விதைத்தாலும் பரவாயில்லை, நிலப்பிரபுத்துவ சக்திகள், ரன்வீர்சேனா, மற்றும் அரசுப் படைகள் புரட்சிகர இயக்கத்தின் மீது தாக்குதல்களை தொடுக்க இது உதவி புரிந்தாலும் பரவாயில்லை, லிபரேசன் குழு போன்ற திரிபுவாத சக்திகளுக்கு மீண்டும் உயிர் குத்தகை கொடுத்தாலும் பரவாயில்லை. எமது தரப்பிலிருந்த சமாதான நடவடிக்கைகளுக்கு எம்.சி.சி சாதகமாக செவிசாய்க்கும் என்ற எங்களது தவறான மதிப்பீட்டில் தான் எமது தவறு காணக்கிடக்கிறது. அதற்கு மாறாக, எம்.சி.சி. அதை எமது கட்சியின் பலவீனமாக எடுத்துக் கொண்டது. முன்னரைக் காட்டிலும் அதிக அளவில், மிகவும் கொடூரமாக தனது தாக்குதல்களை தீவிரப்படுத்த மட்டுமே எம்.சி.சி அதை பயன்படுத்திக் கொண்டது.

**கேள்வி : எம்.சி.சி. யின் கொலைவெறி தாக்குதல்களுக்கு எதிராக எதிர் நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்ற உங்களது கொள்கையின் காரணமாக நீங்கள் கடுமையான இழப்புகளை**




*ஒரு அங்குல செம்பிரதேசத்தைக்கூட விடக்கூடாது,. கெரில்லா மற்றும் நடமாடும் யுத்தங்கள் தேவையில்லை என்ற தவறான ராணுவ மூலஉத்தி, அச்சமயத்தில் சீனகம்யூனிஸ்ட் கட்சியில் ஆதிக்கம் செலுத்தியது. இந்த இடது வழியின் காரணமாக போரில் பல் தவறுகள் நேர்ந்ததால், சியாங்கே - ஷேக் கின் சுற்றி வளைத்தலை முறியடிக்க 1934 ல் வரலாற்றுச் சிறப்புமிக்க நீண்ட பயணம் மேற்கொள்ளப்பட்டது.*


படிப்பகம்

www.padippakam.com

**சந்தித்ததை மனதில் கொண்டு, கடந்த கால அனுபவங்களை நோக்குகையில் அது தவறான ஒன்று என நீங்கள் நினைக்கிறீர்களா?**

**பதில் :** இல்லை, இரு கட்சிகளும் '98 ஆகஸ்டில் இணைந்த உடனேயே எமது மைய குழு மேற்கொண்ட கொள்கை அதாவது,எம்.சி.சியின் செயல்களால் ஆத்திரமடைந்து விடக் கூடாது என்றும், எதிர்தாக்குதல் நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடாது என்றும் எடுத்த முடிவு இத்தனை இழப்புகளை நாங்கள் சந்தித் திருப்பினும் அடிப்படையில் சரியானது என்று நாங்கள் நினைக்கிறோம். இதுபோன்ற ஒரு கொள்கையை மேற்கொண்டதன் மூலம் மட்டுமே, எம்.சி.சி. பற்றி மேலும் அதிக புறவயமான மதிப்பீட்டிற்கு நாங்கள் வர முடிந்தது. ஆனால், எமது தரப்பில் ஒரு குறை பாடு இருந்தது. சென்ற வருடம் ஆகஸ்டு மத்தியில் மையகுழு (த) வின் முதல் கூட்டத்தில் எடுத்த மேற்கண்ட முடிவைப் பற்றி பெருமளவில் மக்களிடையே பிரச்சாரம் செய்ய நாங்கள் தவறியுள்ளோம்.

அதுமட்டுமின்றி, நல்லவை சிலவற்றை சாதிப்பதற்கு ஒருவர் தியாகத்தை அனுபவித்தாக வேண்டும். ஏறக்குறைய ஒருவருடகாலமாக எம்மை கட்டுப்படுத்தி யிருந்ததன் மூலம் பிஹார் சிக்கலை சமா தானபூர்வமாக தீர்ப்பதற்கான ஒரு அடிப் படையை உருவாக்க நாங்கள் முயன்றோம். எம்.சி.சி. இதற்கு சாதகமாக நடந்து கொள்ளவில்லை என்பதற்கு எமது தியாகம் வீணாகிவிட்டது என்று பொருளல்ல. நாங்கள் அனுபவித்த இந்த தியாகம் இந்திய புரட்சிகர இயக்கத்தின் நலனுக்கானது, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலனுக் கானது, எமது வர்க்கத்தின், ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்கானது. இது இந்தி யாவிலும் உலகிலும் உள்ள எல்லா புரட்சிகர சக்திகளையும் உண்மையை பெருமளவில் புரிந்து கொள்ளச் செய்யும் என்று நாங்கள் நினைக்கிறோம். எம்.சி.சியின் ஊழியர்கள் மறுபரிசீலனை செய்யவும் இது உதவும் என நாங்கள் நம்புகிறோம். தனது குறுங்குழு வாத, வறட்டுவாத கொள்கைகளையும், பிடிவாத மனோபாவத்தையும் நடைமுறைப் படுத்த, தற்போது எம்.சி.சி. தலைமை அதன் ஊழியர்களின் பின்தங்கிய தத்துவார்த்த அரசியல் தன்மையையே நம்பியுள்ளது. இந்த மோதல்கள் குறித்த உண்மைகளை அறியா வண்ணம் இருளில் அவர்கள் வைக்கப்பட்டு இருந்தாலும், எம்.சி.சி. தலைமையினால் பரப்பப்படும் பொய்கள், அவதூறுகள் போன்ற புரளிகளின் மூலமாக சிறிது சிறிதாக ஊட்டப்பட்ட நம்மீதான வெறுப்பில் இருந் தாலும் அவர்களிடையே இருக்கும் நேர்மை யானவர்கள் மறுபரிசீலனை செய்து, அவர் களது கட்சித் தலைமையினால் கடைபிடிக் கப்படும் மோசமான ராணுவ ரீதியான இயக்கங்களுக்கு எதிராகக் கிளம்புவர் என நாங்கள் கருதுகிறோம்.

**கேள்வி : கடந்த ஒரு வருடத்தில் உங்கள் தரப்பிலிருந்து எந்தவிதமான தாக்குதல்களும் இல்லையா?**

**பதில் :** இவ்வருடம் ஜூன் வரையிலும், எமது தோழர்கள் தாக்கிய இரு சம்பவங்கள் மட்டுமே நடைபெற்றுள்ளது. அதுவும் எதிர்தாக்குதலாகவே செய்யப்பட்டது. இதில் ஒரு சம்பவம் மைய குழுவின் முடிவு சென்ற டைவதற்கு முன்னரே நடைபெற்றது. உண்மையில், மையகுழு முடிவின் சரியான தன்மை குறித்து எமது கீழ்மட்ட ஊழியர் களிடமிருந்து கேள்விகள் தொடர்ந்து எழுப்பப்பட்டன. இது எம்.சி.சி. யின் பிடிவாத மான அணுகுமுறையைப் பற்றிக் கூறுகிறது. இம்முடிவு செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றது என சிலர் உணர்ந்தனர். இருப் பினும் மைய குழு முடிவின் அரசியல் முக்கியத்துவத்தை அவர்கள் புரிந்து கொண்டதால் மையகுழுவின் முடிவை நடைமுறைப்படுத்தினர்.

**கேள்வி: நீங்கள் எதிர்தாக்குதல் தொடுக்க எப்போது முடிவெடுத்தீர்கள்? அதன் பலன்கள் என்னவாக இருக்கும்?**

**பதில்:** எதிர்தாக்குதல் தொடுப்பது என்ற தற்போதைய முடிவு கூட இரண்டாம் பட்சமானது தான்.இது எமது தற்காப்பை நோக்கமாகக் கொண்டது. இந்த முடிவு எமது மையகுழுவின் சென்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டு 1999 ஜூன் மாதத்தில் பிஹார் மாநில குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. கடந்த ஐந்து வாரங்களில், எம்.சி.சி. யின் அறிவிக்கப்படாத யுத்தத்தை எதிர்ப்பதன் ஒரு பகுதியாக எமது ஆயுதக்குழுக்கள் பதில்தாக்குதல் நடத்தி எம்.சி.சி. யின் 6 செயல்வீரர்களை அழித்தது.

இந்த வரையறைக்குட்பட்ட எதிர்தாக்கு தல் கூட எமது இருத்தலுக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் தான் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை நீங்கள் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இத்தனை வருட காலமாக, எம்.சி.சி. எந்த அமைப்பு களையும் எப்போதுமே கொண்டிருக்காத பகுதிகளிலும், எமது பாரம்பரிய பகுதிகளான பலாமு மற்றும் ஜகனாபாத்தின் உட்பகுதி களில் 90 முதல் 100 உறுப்பினர்களடங்கிய ஆயுதம்தாங்கிய குழுக்களை எம்.சி.சி. அனுப்பிக்கொண்டிருக்கிறது. இந்த ஆயுதக்குழுக்கள் ஹசாரிபாக், கிரிதி, சத்ரா போன்ற எம். சி. சி. வேலைசெய்யும் பகுதிகளிலிருந்து, குறிப்பாக இயக்கம் தேங்கியிருக்கும் பகுதிகளிலிருந்து அணிதிரட்டப்படுகின்றன. எமது பகுதி களிலிருந்து எம்மை வெளியேற்றுவதற்கான இந்த ராணுவரீதியான இயக்கத்தை செயல்படுத்த அவர்கள் எமது வேலைப் பகுதிகளில் உள்ள சில சீரழிந்த, மக்கள் விரோத சக்திகளை சார்ந்திருக்கின்றனர். இவர்களில் சிலர் எமது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், சிலர் நிலப் பிரபுக்களின் தனியார் படையை சேர்ந்தவர் கள். இச்சம்பவங்கள் குறித்த விவரங்களை பிஹார் மாநிலகுழு 1999 ஏப்ரலில் தயாரித்த ஒரு சிறுபிரசுரத்தில் நீங்கள் காணலாம். (ஹிந்தியில் வெளியான சிறு பிரசுரத்தின் பிரதி ஒன்றை அவர் வழங்கினார்.) பூட்டப் பட்ட ஒரு அறையிலிட்டு தாக்கப்பட்டுவரும் ஒரு பூனையைப் போன்றது தான் தற்போதைய எங்களது நிலை. திருப்பித் தாக்குவது அல்லது அழிந்துபோவது என்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. இதுபோன்ற ஒரு சூழ்நிலையில், எமது இருத்தலை பாதுகாக்க நாங்கள் சில எதிர்தாக்குதல் நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்.

அதேவேளையில், கொடூர தாக்குதல் களை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு எம். சி.சி. தலைமைக்கு நாங்கள் வேண்டுகோள் விடுத்து வருகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

தற்போது குறைந்தபட்ச எதிர்தாக்குதல் தொடுப்பது என்பதைத் தவிர புதிய மைய குழுவால் எடுக்கப்பட்ட முந்தைய முடிவில் அடிப்படையான மாற்றம் எதுவும் இல்லை. பரஸ்பர பேச்சுவார்த்தைக்காக நாட்களைக் குறிப்பிட்டு கடிதம் மேல் கடிதம் வரைந்து வந்த போதிலும் (கடந்த ஒருவருடத்தில் மட்டும் சுமார் 1 டஜன் கடிதங்கள்) எம்.சி.சி. தலைமை கடந்த ஒருவருடமாக பேச்சு வார்த்தைகளை வேண்டுமென்றே தவிர்த்து வந்தது. சமாதானபூர்வ பேச்சுவார்த்தை களின் மூலமாக சிக்கல்களை தீர்க்க அது விரும்பவில்லை என்பதுதெளிவாகிறது. காலதாமதப்படுத்தும் செயல்உத்திகளை அது மேற்கொள்கிறது. பேச்சுவார்த்தை களை வெறுக்கவில்லை என அது கூறு கிறது. ஆனால், இது பொதுமக்களை ஏமாற்றுவதற்காகத்தான். அவர்களை பேச்சுவார்த்தை மேஜைக்கு கொண்டுவந்து சிக்கல்களை அரசியல் ரீதியாக தீர்க்க நாங்கள் இன்னமும் முயன்று கொண்டி ருக்கிறோம்.

**கேள்வி : பிரச்சனையை தீர்க்க மூன்றாவது நபர் ஒருவரின் தலையீட்டை நீங்கள் ஆலோசனையாகக் கூறுகிறீர் களா?**

**பதில் :** இரு தரப்பினரிடமும் உள்ள விருப்பமும், நேர்மையும் தான் உண்மையில் பிரச்சனையை தீர்க்கும். எம்.சி.சி யுடன் பேச்சுவார்த்தையில் அமர்ந்து பிரச்சனையை தீர்ப்பதற்கான எங்களது தயார்நிலையை நாங்கள் தெரிவித்துள்ளோம். ஆனால் அவர்கள் ஒரு சமாதானபூர்வ தீர்விற்காக இருக்கவில்லை. ஒரு மூன்றாவது நபரின் முன்னிலையில் பேச்சுவார்த்தைக்கு அமர அது தயாராக இருந்தால் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

எங்களது வெளிப்படையான வேண்டு கோளில் ஒரு உண்மை அறியும் குழு களத்திற்குச் சென்று சம்பவங்களின் பின் னால் உள்ள உண்மைகளை ஆய்வுசெய்ய வேண்டும் என நாங்கள் உண்மையிலேயே ஆலோசனை கூறியிருந்தோம். பொறுப் புணர்வு மிக்க குடிமக்களின் ஒரு அணி யினர் சென்று இச்சம்பவங்களைப் பற்றி விசாரித்தால் உண்மைகளை நிறுவுவது என்பது கடினமானதல்ல. இது உண்மை களை சரிபார்த்தல் என்ற ஒரு விசயம் மட்டுமேயாகும். முதலில் யார் கொலை வெறித் தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டது, உண்மையை கூறுவது யார், பொய்யையும் அவதூறுகளையும் பரப்பிக் கொண்டிருப்பது யார் போன்றவற்றை இது போன்ற ஒரு விசாரணை உலகிற்கு வெளிக் கொணரும். எப்படியிருப்பினும், எம். சி. சி. முதலில் சம்மதித்தாலும், கடைசி நேரத்தில் அதிலிருந்து பின்வாங்கி விடுகிறது. 1997 நவம்பரில் அப்போதைய பார்ட்டி யூனிட்டி மற்றும், எம்.சி.சி. மைய குழுவின் பிரதி நிதிகளுக்கு இடையே நடந்த பரஸ்பர பேச்சுவார்த்தையின் போது ஒரு விசாரணை குழுவை அனுப்ப ஒத்துக்கொண்ட பின்னர், அது இவ்வாறு செய்தது. உதாரணத்திற்கு. அவர்களுடன் தொடர்புடைய சத்யநாராயன் போன்ற சில பிற்போக்கு சக்திகளைப் பற்றி மக்கள் நீதிமன்றங்களை நடத்த மேற் கொண்ட முடிவுகளுக்கும் கூட இதே கதி தான் ஏற்பட்டது. அவர்கள் உண்மைகளை எதிர்கொள்ள பயப்படுகிறார்கள். ஒரு உண்மை அறியும் குழுவை அமைக்க எவ ரேனும் அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்வாரெனில் மிகவும் மகிழ்ச்சியடைவது நாங்கள் தான், மேலும் உண்மைகளை வெளிக்கொணர எம்மால் முடிந்த அளவு ஒத்துழைப்பையும் வழங்குகிறோம்.

## மோதல்களின் வரலாறு பற்றி

**கேள்வி : எம்.சி.சி. க்கும் அப்போதைய பார்ட்டி யூனிட்டிக்கும் இடையிலான மோதல்களின் வரலாற்றை நீங்கள் சுருக்கமாக கூறமுடியுமா, அதாவது பா.யூ மற்றும் மயு இணைவிற்கு முன்னர்?**

**பதில் :** இவ்வருடம் ஏப்ரலில் எமது பிஹார் மாநில குழுவால் தயாரிக்கப்பட்ட இந்த சிறு பிரசுரத்தில் அது பற்றி விரிவாக கூறப் பட்டுள்ளது. அதை சுருக்கமாக தொகுத்துக் கூற நான் முயற்சிக்கிறேன்.

1979–80ல் நாங்கள் பிஹாரில் நுழைந்த போது ஜகனாபாத்தின் சிக்காரியா கிராமத் திலிருந்து எங்கள் வேலைகளைத் துவங்கி னோம். மூலஉத்தி ரீதியான முக்கிய மானதாக இருந்ததால் பலாமுவை கண்ணோட்டப்பகுதியாகவும் தேர்வு செய்தோம். தோழர்கள் அமல்யா சென், கன்னய்யா சட்டர்ஜி, ஷோம் போன்ற அரசியல் ரீதியாக மிகவும் முதிர்ச்சியடைந்த தோழர்களால் தலைமைதாங்கப்பட்ட அப் போதைய எம்.சி.சியுடன் நாங்கள் அப்போது நல்லுறவைக் கொண்டிருந்தோம். தற் போதைய சகாப்தத்தின் தன்மை, இ.க.க (மா–லெ)யின் உருவாக்கம், தரகு அதிகாரவர்க்க முதலாளியத்தின் தன்மை, மக்கள்திரள் அமைப்புகள், மக்கள் திரள் இயக்கம் போன்றவற்றில் சில தத்துவார்த்த அரசியல் வேறுபாடுகளும் இருந்தன. இரு கட்சிகளுக்குமிடையே வழக்கமான சந்திப்புகள் இருந்ததுடன் நாங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டோம். செயல்நுணுக்க விசயங்களில் ஒருவருக் கொருவர் உதவிகளையும் செய்து கொண் டோம். 1987 வரையிலும் இதுபோன்ற உறவுகள் தொடர்ந்தன.

1987ல் தலேல் சாக் – பாஹருவா சம்பவம் பற்றி பார்ட்டி யூனிட்டி வைத்த விமர்சனம் எம். சி. சி தலைமையை கோபமுறச்செய்தது. இச்சம்பவத்தில் பெண்கள் மற்றும்




*நீண்டபயணமானது 12,500 கி.மீ தூரம் பயணித்தது. பல பயங்கரமான தடைகளை உடைத்தெறிந்து, வட ஷென்சியிலுள்ள புரட்சிகர தளத்தை செம்படை சென்றடைந்தது. நீண்ட பயணம் மனிதகுல வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத ஒரு மாபெரும் சாதனையாகும். நீண்டபயணம் என்பது ஒரு கொள்கை அறிக்கை, ஒரு கிளர்ச்சிப்படை, ஒரு புரட்சிகர விதைப்பு இயந்திரம் என மாவோ விரித்துரைத்தார் (தொகுப்பு 1- பக்கம் 161). இந்நீண்டபயணத்தின் போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுன்யீ மாநாடு 1935 ஜனவரியில் நடந்தது. இதில் இடது வழி மறுத்தொதுக்கப்பட்டு, மாவோவின் தலைமை நிறுவப்பட்டது.*


படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகள் உட்பட 52 ராஜபுத்திரர்கள் எம்.சி.சியால் கொல்லப்பட்டனர். குழந்தை களை எரியும் நெருப்பில் வீசுவது போன்ற காட்டுமிராண்டி செயல்கள் புரட்சியாளர் களின் பெயரைக்கெடுக்க பிற்போக்கு ஊடகங்களால் பயன்படுத்தப்பட்டன. இருந்தும், தலேல்சாக் – பாஹரூவா, இந்திய புரட்சி பாதைக்கு ஒரு முன்மாதிரியாக எம்.சி.சி தலைமையால் காட்டப்பட்டது. தாக்குதல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும், ஏதுமறியா மக்கள் கொல்லப்படக் கூடாது, அது புரட்சியாளர் களை தனிமைப்படுத்துவதற்கே இட்டுச் செல்லும் என பார்ட்டி யூனிட்டி தனது தோழமையான விமர்சனத்தை எம். சி. சி தலைமையின் முன்வைத்து ஆலோசனை கூறியது.

இதுபோன்ற சம்பவங்கள் சிலவேளை களில் தவறுதலாக நடந்துவிடலாம். அவ்விசயங்களில், ஒரு புரட்சிகர கட்சி சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும், மாறாக, அச்சம்பவங்களை பின்பற்றத் தக்க ஒரு முன் மாதிரியாக காட்டக்கூடாது. ஒரு வருடத்திற்கு பின்னர், பா.யூனிட்டியின் உள்ளூர் இதழான லால் நிஷானில் கட்டுப்பாடுமிக்க வகையிலமைந்த ஒரு தோழமையான விமர்சனம் வெளியிடப் பட்டது. இருப்பினும், இது எங்களுடனான எம்.சி.சியின் அரசியல் ரீதியான அணுகுமுறையில் ஒரு மாற்றத்தைக் கொணர்ந்தது.எம்.சி.சி , பா.யூ வை திரிபுவாதியாகவும் , அதன் நம்பிக்கைக்கு துரோகம் செய்துவிட்டதாகவும் கருதத் துவங்கியது. யார், யாரெல்லாம் வெளிப் படையாக வெளிவரவில்லையோ அவர்கள் பிற்போக்குவாதிகள் மற்றும் திரிபுவாதி களை விடவும் மிகவும் அபாயகரமானவர் கள் எனவும் பிரச்சாரம் செய்யத் துவங்கியது. எந்தவிதமான விமர்சனங் களையும் தங்களது நலன்களுக்காகக் கூட இருந்தாலும் சரி அதை எப்போதும் எம்.சி.சி தலைமையால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பது இதிலிருந்து எங்களுக்குத் தெளிவாகியது. அதன் தலைமை மிகவும் அதிகாரவர்க்கத்தன்மை கொண்டதும், விமர்சனங்களை அரசியல் ரீதியாக எடுத்துக்கொள்ளாததாகவும் இருந்தது. பா.யூனிட்டியுடனான அதன் அரசியல்ரீதியான அணுகுமுறை மாற்றத் திற்கு உள்ளான உடனேயே, இரு அமைப்பு களுக்கு இடையே எழுந்த ஒவ்வொரு மாறுபாடுகளையும் அது ராணுவ ரீதி யாகவே தீர்வுகாண விரும்பியது. இவ்வாறு தான் தற்போதைய துன்பங்கள் துவங்கின.

**கே: பகுதி பிரிவினை பற்றிய கூட்டு உடன்பாட்டை பா.யூ முதலில் மீறியது, சத்யநாராயன் சிங் என்பவரை 1990ல் கொன்றதன் மூலம் எம்.சி.சி மீதான தாக்குதலை பா.யூ முதலில் நடத்தியது என்ற இரு முக்கிய காரணங்களே மோதல்களுக்கான காரணம் என எம்.சி.சி கூறி வருகிறதே. இந்த குற்றச்சாட்டுகளுக்கு பின்னே ஏதேனும் உண்மையுள்ளதா?**

**ப:** எம்.சி.சி தலைமையால் கூறப்படும் இரு காரணங்களும் வேடிக்கையானவை. அவை முற்றிலும் பொய்யென நாங்கள் கூறவில்லை ஆனால், அவை பகுதியளவே உண்மையானவை. மிகவும் முக்கிய மானது என்னவெனில், எங்களுக்கு எதிரான தாக்குதல்களை நியாயப்படுத்த அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உங்களுக்கு புரியவைப்பதற்காக வரலாற் றிற்குள் சற்று ஆழமாகவே செல்ல வேண்டியுள்ளது.

பா.யூ தரப்பிலிருந்து முதல் மீறுதல் நடவடிக்கை ஏற்பட்டது என்பதை ஒப்பந் தத்தின்படி நாங்கள் ஒத்துக்கொள் கிறோம். நேவி நகர் (அவுரங்கபாத்) – பலாமு பகுதிக்காக முதல் பகுதி பிரி வினை '82ல் நடைபெற்றது. அவுரங்கபாத் –டால்டோன் காஞ் சாலையின் மேற்கு பகுதியுடன் பா.யூ தனது செயல்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும்,எம்.சி.சி கிழக்கு பகுதியுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதாக இருந்தது. பின்னர் மகத் பகுதிக்கான பகுதிபிரிவினை மேற்கொள்ளப்பட்டது. மகத் பகுதியில் ஒத்துக்கொண்ட எல்லைப் பகுதியின் இரு புறங்களிலும் பா.யூ யால் தலைமை தாங்கப்பட்ட ஆயுதம் தாங்கிய விவசாய இயக்கம் மிக வேகமாகப் பரவியது. திகாரி – குர்த்தா எல்லையின் மறுபக்கத்தில் எம்.சி.சி எந்த அமைப்பையும் பெற்றிருக்க வில்லை. அப்பகுதியில் திரிபுவாத "லிபரேசன்" துரிதமாக முன்னேற்ற மடைந்து வந்தது. பின்னர், அப்பகுதியில் ஒரு மறுபிரிவினை செய்ய பா.யூ முன் மொழிந்தது. எம்.சி.சி அதை ஏற்றுக் கொண்டது. புதிய எல்லைகள் வரையப் பட்டன. இரு தரப்பிலிருந்தும் சில மீறல் சம்பவங்கள் நடந்திருப்பினும் 1989 வரை யிலும் இந்த உடன்பாடு நிலுவையில் இருந்து வந்தது.

1981–83 ல் அவுரங்கபாத் – சத்தார்பூர் பகுதியில் பா.யூ யின் முதல் மீறல் சம்பவம் நடைபெற்றது. இப்பகுதியில் உள்ள ரயில் ஓடுபாதையின் கிழக்குப்பகுதியில் பா.யூ சில தொடர்புகளைப் பெற்றது. அப்பகுதி, கூட்டு உடன்பாட்டின் படி, எம்.சி .சியின் பகுதிக்குள் வந்தது. அவ்வேளையில் எம்.சி.சி அங்கு எந்த அமைப்புகளையும் பெற்றிருக்காததால் அத்தொடர்புகளை நாங்கள் அமைப்பாக்கத் துவங்கினோம். அது இரு கட்சிகளுக்குமிடையே எந்தவித பூசலையும் உருவாக்கவில்லை. எப்படி யிருப்பினும் பா.யூ சுயவிமர்சனம் செய்து கொண்டதுடன், இப்போது இரு தரப்பின ராலும் புதிய எல்லைப் பகுதி வரை யறுக்கப்பட்டது. இவ்வாறு, இப்பிரச்சனை 1983 வாக்கிலேயே நட்புரீதியாக தீர்க்கப் பட்டு விட்டது. ஆனால், பத்து வருடங் களுக்குப் பின்னர், இப்போது பா.யூ மீறிச்சென்றது என எம்.சி.சி அதை எழுப்பி வருவது ஏன்? பா.யூ மீதான அவர்களின் தாக்குதல்களை நியாயப் படுத்துவதற்காக அல்லவா? பா.யூ தான் முதலில் மீறியது என கூரைமீது ஏறி கூக்குரலிட்டு, எங்களது பாரம்பரியமான பலமிக்கப்பகுதிகளில் இடைவிடாத திடீர் தாக்குதல்களை எம்.சி.சி நடத்திக் கொண்டு வருகிறது. இரு கட்சிகளுக்கு இடையிலான மோதல் சம்பவங்கள் எல்லாம் பா.யூ யின் பகுதிகளிலேயே நடைபெற்று வருகின்றன என்பதிலிருந்து நீங்கள் இதை உணர்ந்து கொள்ள முடியும். பெரும்பாலான பகுதிகளை பா.யூ யிடமி ருந்து கைப்பற்றி விடுவது என எம்.சி.சி அமைப்பு ரீதியான முடிவை எடுத்தி ருப்பதால், இதை சாதிக்க தனது ஆயுத பலத்தையெல்லாம் அது திரட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

**கே : மோதல்களுக்காக எம்.சி.சி கூறும் இரண்டாவது முக்கிய காரணம் பற்றி?**

**ப :** இது இன்னும் மோசமான அவதூறாகும். முதலாவதாக, எம்.சி.சி மீது தாக்குதலை நாங்கள் தான் முதலில் துவங்கினோம் என்பது உண்மையல்ல. சத்யநாராயன் அழித்தொழிக்கப்படுவதற்கு முன்னர், எம்.சி.சி யால் எமது இரு தோழர்கள் கொலைசெய்யப்பட்டனர். சத்தார்பூர் மாவட்டத்தின் பாத்வாரா பகுதியின் ராம்விலாஸ் பூயாவும், பார்வாஹியின் மஹேந்தர் உரான் என்பவரும் முறையே 1988, 1989ல் கொல்லப்பட்டனர். அவர்கள் முதலில் செய்த இந்த இரு கொலைகளைப் பற்றி மௌனம் சாதித்து விட்டு, 1990ல் சத்யநாராயன் அழித்தொழிக்கப்பட்ட சம்பவத்தை மைய அளவில் ஒரு பிரச்சனையாக ஆக்கியுள்ளனர். ஆனால், 1990ல் சத்யநாராயன் எம்.சி.சியுடன் தொடர்புடையவர் என்பதற்காக கொல்லப்படவில்லை, மாறாக அவன் ஒரு வர்க்க எதிரி என்பதற்காகவே அழித்தொழிக்கப்பட்டான். ஜகனாபாத் மாவட்டத்தில் கர்பி தாலுகாவில் சௌகார் கிராமத்தைச் சேர்ந்த சத்யநாராயன், ஆனந்கார் பண்ணையின் சந்திரமௌலி சர்மா என்ற நிலப்பிரபுவின் மோசமான கையாள், போலீஸ் ஏஜெண்டாக செயல்பட்டவன், பல்வேறு மக்கள் விரோத செயல்பாடுகளில் ஈடுபட்டவன்.

1975–76 லேயே சி.பி.ஐ இப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, ஒரு சிறுமியிடம் தவறாக நடந்து கொண்டான் என்பதற்காக சத்யநாராயனும் அவனது மைத்துனன் ராம்ஷீஷ் என்பவனும் மக்கள் பஞ்சாயத்தில் தண்டிக்கப்பட்டவர்கள். நிலப்பிரபு சந்திரமௌலியின் நிலத்தை எமது கட்சித் தலைமையில் மக்கள் பறிமுதல் செய்த போது, அந்நிலத்தின் ஒரு பகுதியை பல நபர்களுக்கு விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்த ஒரு கருங்காலியாக இருந்தான். இந்நிலப்பிரபுவின் துப்பாக்கியை பறிமுதல் செய்ய எமது ஆயுதக் குழு சென்றபோது, நிலப்பிரபுவிற்கு ஆதரவாக சத்யநாராயன், உரிமம் பெற்ற தனது துப்பாக்கியால் சுடக்கூடச் செய்தான். மற்றுமொரு தருணத்தில், இவனும், இரு லும்பன்களும் சேர்ந்து கொண்டு பா.யூ யின் உள்ளூர் அமைப்பாளர் தோழர். கமலேஷ் என்பவரை பிடித்து, கைகளைக் கட்டி மரத்தில் கட்டிவைத்து, போலீசுக்கு தகவல் கொடுத்தனர். ஆனால் போலீசார் வருவதற்கு முன்னர் மக்கள் அவரை விடுவித்து விட்டனர். பின்னர், சத்யநாராயன் பா.யூ யின் ஆதரவாளர் பட்டியலை போலீசுக்கு கொடுத்தான். பா.யூ யின் அமைப்பாளரான ராமானந்த யாதவ் என்பவாது தந்தையை அடிக்க போலீசை தூண்டியதுடன், கட்சிக்கு வேலை செய்வதிலிருந்து தனது மகனை நிறுத்தா விட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என அச்சுறுத்தினான். தனது வீட்டின் முன் உள்ள புறம்போக்கு (கெயர் மசரூவா) நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, அந்நிலத்தில் ஏழை மக்கள் வீடுகள் கட்டுவதை தடுத்தான். 1983ல், அக்கிராம விவசாயி ஒருவரின் மகனை துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்தினான். முன்னர், சத்யநாராயன் ''லிபரேசன்'' அமைப்பில் சில காலம் இருந்தான். ஆனால், அக்குழுவின் செல்வாக்கு வீழ்ந்து கொண்டிருந்த போது, தனது ரவுடித்தனத்தை தக்கவைக்க எம்.சி.சிக்கு தாவினான். ஏனெனில் எம்.சி.சியின் செல்வாக்கு மிக அதிகமாக இருந்தது.

சத்யநாராயன் அழித்தொழிக்கப்பட வேண்டிய ஒரு நச்சுப்பாம்பு என நாங்கள் எப்போதுமே கூறி வந்தோம், எப்படியிருப்பினும், அவன் ஒரு ''எம்.சி.சி ஆள்'' என்பதால் அத்தருணத்தில் அவனைக் கொன்றதை தவிர்த்திருக்கலாம் என்பதே எங்களது ஒரே சுயவிமர்சனம் ஆகும். சத்யநாராயனை தங்களது ''தியாகி''யாக எம்.சி.சி உரிமைகொண்டாடுவதால், எங்களது பகுதியில் எம்.சி.சி யின் சமூக அடித்தளமாக விளங்குகின்ற இவ்வகைச் சக்திகளைப் பற்றி தீர்ப்பு கூற நாங்கள் மக்களிடமே விட்டுவிடுகிறோம். நல்லது, 1990ல் சத்யநாராயனை கொன்றதன் மூலம் நாங்கள் தவறிழைத்ததாக அவர்கள் கருதினால், கடந்த சில வருடங்களாக எமது தோழர்கள் இருபதுக்கும் மேற்பட்டோரை கொல்வதற்கான ஒரு காரணமாக அது எப்படி இருக்கமுடியும்? சத்யநாராயன் கொல்லப்பட்டதற்கு பின்னர், எம்.சி.சிக்கும் முன்னாள் பா.யூக்கும் இடையே பலமுறை நடந்த பேச்சுவார்த்தைகளில் அது தீர்க்கப்பட்டு விட்டதாக நாங்கள் உண்மையிலேயே கருதினோம். இன்று, பா.யூ வை துடைத்தெறிய அது ஒரு நொண்டிச்சாக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. தனது மரணத்தின் பலவருடங்களுக்கு பின்னர் இப்போது சத்யநாராயனின் ஆவி எம்.சி.சியை பிடித்துக்கொண்டு, பழிவாங்கத் துடிக்கிறது.

**கே : எம்.சி.சிக்கும் பா.யூ க்கும் இடையிலான மோதல்களைத் தவிர்க்க எடுக்கப்பட்ட முந்தைய முயற்சிகள் என்னென்ன?**

**ப :** மைய, மாநில, பிராந்திய அளவில் பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றன. 1995 ஜனவரியில் நடைபெற்ற மைய அளவிலான கூட்டத்தில் ஒரு நடத்தை விதிகள் தயாரிக்கப்பட்டன. இந்த நடத்தை விதிகளை இரு தரப்பினரும் கடைபிடித்து




1936ல் சீ.க.க கோமிங்டாங்கையும் இணைத்த சீனக்குடியரசை நிறுவ அழைப்பு விடுத்தது. 1936 டிசம்பர் 12ல் கோமிங்டாங்கின் இரு ராணுவத்தளபதிகள் சியாங்கே - ஷேக்கை கைதுசெய்து, ஐக்கிய முன்னணியில் இணைய நிர்பந்தித்தனர். ஜப்பானுக்கு எதிராக சியாங்கேஷேக் அரைமனதுடன் போரிட்டான், மாறாக, செம்படை பெரும் வெற்றிகளை ஈட்டியது. 1937ல் 40 ஆயிரமாக இருந்த செம்படை 1945ல் 9 லட்சமாக வளர்ந்தது. செம்படையின் கீழ் இருந்த மக்கள் குடிப்படை 22 லட்சமாகவும், தற்காப்பு படை ஒரு கோடியாகவும் வளர்ந்தது. 3 லட்சம் சதுரகிலோ மீட்டர்களை செம்படை கைப்பற்றி, 2.3 லட்சம் எதிரிப்படைகளை அழித்தது. 1945 செப்டம்பர் 2ல் ஜப்பானியர் சரணடைந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

வந்ததால் சில அரிதான சம்பவங்களைத் தவிர ஒட்டுமொத்த சூழலில் முன்னேற்றம் காணப்பட்டது என ஆகஸ்டு '95 கூட்டம் முடிவு செய்தது. ஆனால், கூட்டம் முடிந்த மூன்று மாதத்திற்குள், ஒரு ஆயுதக்குழு கமாண்டர் உட்பட மூன்று பா.யூ தோழர் களை எம்.சி.சி வெவ்வேறு மூன்று சம்பவங்களில் தாக்கிக் கொன்றது.

பின்னர், '96 ஆகஸ்டில் மற்றொரு மாநில அளவிலான கூட்டமும் '96 டிசம் பரில் மைய குழு அளவிலான கூட்டமும் நடைபெற்றது. இதில் மோதல்களைத் தவிர்க்கும் முடிவுகள் மீண்டும் எடுக்கப் பட்டன. எந்த ஒரு தரப்பின் ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது அச்சுறுத்தல் கள் மற்றும் தாக்குதல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும்; ஒருவர் மற்றவரது பகுதியில் எடுக்கப்படும் போராட்டங்களில் தலையிடக் கூடாது; பிற்போக்காளர்கள், வர்க்க எதிரிகள், லும்பன்கள் என ஒரு தரப்பினரால் துவக்கம் முதலே கூறப்படுபவர் எவரையும் மற்ற தரப்பினர் ஊக்குவிக்கக் கூடாது, ஒரு அமைப்பினரால் வெளியேற்றப்பட்ட வரை மற்றவர் தங்களது அமைப்பில் சேர்த்துக் கொள்ள விரும்பினால் ஒவ் வொருவரும் அது பற்றிக் கலந்தா லோசிப்பது; அப்படிப்பட்ட சக்திகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஏதேனும் நிலுவையிலிருந்தால், அந்த நபரோடு மற்ற கட்சி எந்தவித தொடர்பையும் கொள்ளா மலிருப்பது...... போன்ற நெறி முறைகள் 1996 டிசம்பர் கூட்டத்தில் இரு தரப்பின ராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், மேற்கண்ட நெறி முறை களை வகுத்த இக்கூட்டத்திற்குப் (டிச. '96) பின்னர், நேர்எதிர்மாறாக, எங்க ளுக்கு எதிரான எம்.சி.சியின் தாக்குதல் கள் அதிகரித்தன. '96 ஆகஸ்டு, 96 டிசம்பர் கூட்டங்களில் பகுதி பிரிவினைக் கான ஒரு திட்டத்தை எங்கள் மீது பல வந்தமாக திணிக்க அவர்கள் முயற்சித்த போது, அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளாததே இதற்கு காரணம் ஆகும். பா.யூ யின் வேலைப்பகுதிகளான பலாமு வில் 60%த்தையும், மத்திய பிஹாரில் 40%த்தையும் விட்டுக் கொடுப்பது என்ற எம்.சி.சி யின் முன்மொழிதலை ஏற்றுக் கொண்டிருந்தால் அது பா.யூனிட்டியின் தற்கொலையாக இருந்திருக்கும். பா.யூனிட்டியின் சடலத்தின் மீது தங்களது "பேரரசை" விரிவாக்கம் செய்ய அவர்கள் விரும்பினர். அதன் முன் மொழிவை– உண்மையில் அது ஒரு ஆணையாக இருந்தது– பா.யூ ஏற்றுக் கொள்ளாதது எம்.சி.சியின் பெரியண் ணன் தனத்திற்கு ஆத்திரமாகிவிட்டது. எனவே இப்பகுதியில் இருந்து எமது ஆயுதக்குழுக்களை கொடுமையான பலத்தின் மூலம் வெளியேற்ற முடிவு செய்தது.

'96 டிசம்பரின் நெறிமுறைகள் பொதுமக்கள் கருத்திற்காக மட்டுமே செய்யப்பட்டிருந்தது, ஏனெனில், எம்.சி.சி ஏற்கனவே வரைந்திருந்த தனது மறுபிரிவினைத் திட்டத்திற்கு ஏற்ப பா.யூ ஆயுதக்குழுக்களை பெரும்பாலான செயல்தளங்களிலிருந்து ஒழித்துவிடுவது என எம்.சி.சி அப்போதே உண்மையில் முடிவு செய்திருந்தது. '97ல் கொலை வெறித் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன.

1996 டிசம்பர் 30 அன்று, சத்தார்பூரின் சில்ஹோவில் வைத்து எமது ஆதரவாளர் லல்லு சிங் கொல்லப்பட்டார். 1997, மார்ச் 22ல் எமது ஆயுதக்குழுவொன்று ஒரு தங்குமிடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டி ருந்தபோது, அதன் கமாண்டர் ஹரேந்தர் உட்பட மூன்று தோழர்களை எம்.சி.சி ஆயுதக்குழுக்கள் தாக்கிக் கொன்றன. எல்லா ஆயுதங்களும் கொள்ளை யடிக்கப்பட்டன. இதை அடுத்து உடனே மார்ச் 29 அன்று, கார்வா மாவட்டத்தின் பண்டாரியா பகுதியில் உள்ள பத்வார் கிராமத்திற்கு பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என எமது ஆயுதக்குழுவை அழைத்து, திடீரென அவர்களை சரணடையச் செய்து ஆயுதங்கள் அனைத்தையும் பிடுங்கிச் சென்றனர். நாளும் அதிகரித்து வரும் எம்.சி.சியின் தாக்குதல்களின் காரணமாக, எமது பிஹார் மாநில அமைப்பு குழு '97 ஜூலை கூட்டத்தில் திருப்பித்தாக்க முடிவு செய்தது.

**கே : பா.யூ க்கும் எம்.சி.சிக்கும் இடையே அடுத்து ஏதேனும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றனவா?**

**ப :** நல்லது, நவம்பர் '97ல் மைய அளவில் கடைசி கூட்டம் நடைபெற்றது. அதில் ஒரு மைய புலனாய்வு அணியை அமைத்து, நடந்த சம்பவங்களைப் பற்றிய விசார ணையை '98 துவக்கத்திலிருந்து துவங்கு வது என நாங்கள் முடிவுசெய்தோம். கூட்டம் முடிந்த உடனேயே, எம்.சி.சி ஒரு கடிதம் வரைந்திருந்தது. அதில் ஒத்துக் கொண்ட எல்லா முடிவுகளும் வாபஸ் பெறப்பட்டதாகக் கூறியது. மைய புலனாய்வு அணியை அமைப்பது என்ற முன்மொழிதல் குப்பைத்தொட்டியில் வீசப்பட்டது. முடிவுகளை எடுப்பது, அவைகளை மீறுவது (அ) அவைகளிலி ருந்து பின்வாங்குவது, பின்னர், எதிர் தரப்பினர் முடிவுகளை மீறிவிட்டனர் என பிரச்சார இயக்கத்தை கட்டவிழ்த்து விடுவது, (அ) எந்த உடன்பாடுகளும் செய்யப்படவில்லை என வெறுமனே அறிவித்து விடுவது இது தான் எம்.சி.சி யின் செயல்முறை (உடன்பாடுகள் வாய் மொழியாக இருக்கும் பட்சத்தில் பெரும் பாலும் இவ்வாறே இருந்தது). மக்களை குழப்புவதற்காக "திருடனே, திருடன் ! திருடன்!" என உரக்க கத்துவதை அவர்கள் எங்களுக்கு நினைவுபடுத்தினர்.

தொகுத்துக் கூறுவதெனில், முதலா வதாக, பரஸ்பர பேச்சுவார்த்தைகள் என்பது எம்.சி.சிக்கு தனது மைய திட்டத்திற்கு ஏற்ப அதன் பகுதிகளை மேலும் விரிவாக்குவது என்பதாகவே எப்போதும் இருந்துவந்துள்ளது; பகுதி பிரிவினைக்கான அவர்களது முன்மொழி தல்– இதற்கு பா.யூ யின் பகுதிகளை கைப்பற்றுவது என்பதே உண்மையான பொருளாகும்– ஏற்றுக்கொள்ளப்படா விட்டால், அவர்கள் பேச்சு வார்த்தைகளை முற்றிலுமாக நிறுத்திவிட்டு, பயங்கர மூட்டும் இயக்கத்தை நாடுவார்கள்.

இரண்டாவதாக, முன்னாள் பா.யூ யுடன் பரஸ்பர பேச்சு வார்த்தைகளின் போது பெரியண்ணன் தனத்தையே எம்.சி.சி எப்போதும் கடைபிடித்து



படிப்பகம்

www.padippakam.com

வந்துள்ளது. நிகழ்ச்சி நிரல் மற்றும் தேதிகளைக் கூட தனது இனிய விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியுள்ளது. அவை மைய, மாநில அல்லது பிராந்திய அளவுகளில் எப்படி கருதப்பட வேண்டும் என்பதை அதாவது கூட்டங்களின் அந்தஸ்த்து நிலையை அவர்களே தன்னிச்சையாக கூறுவர். உதாரணத்திற்கு, தனது நலன்களுக்கு அது பொருந்துவதாக இருக்குமானால், மைய குழு உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகளாக இருப்பினும் கூட அதை மாநில அளவிலான கூட்டம் என அழைப்பர். மேலும், முடிவுகள், நெறிமுறைகள், நடத்தை விதிகள் போன்று இரு தரப்பினராலும் ஒத்துக்கொள்ளப்பட்டவைகள் பற்றி எம்.சி.சி எப்போதுமே கவலைப்பட்டதில்லை (அ) மதித்ததில்லை.

**கே : உங்களது பாரம்பரியமான பலமிக்க பகுதிகளில் கூட எம்.சி.சி ஆயுதக்குழுக்கள் நுழைந்து தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என நீங்கள் கூறினீர்கள். சில சமூக அடித்தளம் அங்கு இல்லாமல் அது அவர்களுக்கு எவ்வாறு சாத்தியமாகும்?**

**ப :** இது நான் மேலே கூற இருந்த விசயத்தைப் பற்றிய சரியான கேள்வியாகும். பொதுவாகக் கூறும்போது, தனது பலமான பகுதிகள் உட்பட ஒரு புரட்சிகர கட்சியின் செல்வாக்கின் கீழ் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிராமத்திலும், கட்சியோடு உள்ள தங்களது வஞ்சத்தை தீர்த்துக்கொள்ள தக்க தருணத்தை எதிர்நோக்கி இருக்கும் சில சக்திகள் எப்போதுமே இருந்து வருவதற்கான சாத்தியம் உள்ளது. கட்சியால் தலைமைதாங்கப்பட்ட மக்கள் கைப்பற்றிய நிலங்களின் நிலப்பிரபுக்களாகவோ, சிறு திருட்டுகள், பாலியல் பலாத்காரம், பெண்களை கேலிசெய்தல் அல்லது ரவுடித்தனம் போன்றவற்றிற்காக அபராதம் செலுத்த நிர்பந்திக்கப்பட்ட லும்பன்களாகவோ அல்லது போலீஸ் ஏஜென்டுகளாகவோ இச்சக்திகள் இருக்கலாம். இவர்களைத் தவிர, நிதி கையாடல், பெண்களிடம் தவறான நடத்தை; மக்களுடனான உறவுகளில் அதிகாரத்துவ வழிமுறைகள்; வர்க்க எதிரிகளுடன் நெருக்கமான தொடர்புகளை பராமரித்தல் அல்லது வேறு தீமைகளுக்காக; இப்படி பல்வேறு காரணங்களுக்காக கட்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும் கூட இருப்பார்கள். கட்சியுடனும் புரட்சியுடனும் மனஸ்தாபம் கொண்ட இதுபோன்ற சீரழிந்த மற்றும் மக்கள் விரோத சக்திகள் தங்களுக்கு சாதகமாக இருக்கின்ற எந்த ஒரு கட்சியிலும் எளிமையாக புகுந்துவிடுவர். இந்த சக்திகள் தான் குறிப்பாக எமது பகுதிகளில் எம்.சி.சியின் சமூக அடித்தளமாக அமைந்துள்ளனர்.

இந்த சக்திகளை அடிப்படையாகக் கொண்டு, "பா.யூனிட்டியால் பாதிக்கப்பட்ட மக்கள்" என்ற பெயரில், கோயல் – கெய்மார், மகத் ஆகிய இரு பகுதிகளிலும் பா.யூ க்கு எதிராக எம்.சி.சி பல துண்டு பிரசுரங்களை வெளியிட்டுள்ளது. இந்த சக்திகள் தான், இப்பகுதியில் நிலப்பிரபுக்களின் தனியார் படைகளுக்கு முக்கிய ஆதரவுசக்திகளாக மீண்டும் மீண்டும் சேவைபுரிகின்றனர். எந்த ஒரு மாற்று வழியும் இல்லாமல் மக்கள் அதிகாரத்தின் முன் சரணடைந்திருந்த இச் சக்திகளை எம்.சி.சி தங்களது கட்சியில் அல்லது மக்கள்திரள் அமைப்புகளில் சேர்த்துக் கொண்டதன் மூலம் அல்லது வெறுமனே பாதுகாப்பு கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு புதிய மறுவாழ்வு கொடுத்துள்ளது. கிஷான் சங்க், கிருஷ்ணா சேத்தன்ன பரிஷத், லோரிக் சேனா, சன்லைட் சேனா போன்ற நிலப்பிரபுத்துவ படைகளைச் சேர்ந்தவர்களாக இருந்து, மக்கள் பலத்தின் முன் தங்களது துப்பாக்கி ஓசைகளை நிறுத்திவைத்திருந்த இது போன்ற சக்திகள் தற்போது எம்.சி.சியின் பின்புலத்துடன் மீண்டும் செயலூக்கம் பெற்றுள்ளனர்.

உதாரணத்திற்கு, மல்பேரியா படுகொலைப் புகழ் சேஷாமானி சிங் இன்று எம்.சி.சி யின் கிரீடத்தில் ஒரு ரத்தினமாக உள்ளான். விஷ்ராம்பூரின் ஒபேராவில் சன்லைட் சேனாவின் கொள்ளையன் மியா வினோத் சிங் என்பவனது சகோதரன் விஸ்வநாத்சிங்; கிஷான் சங்கின் தலைவன் ராம் தயாள் யாதவ், விஷ்ராம்பூரின் முக்கா யாதவ் போன்ற அனைவரும் அவர்களது பலமான ஆதரவாளர்களில் அடங்குவர்.

7 அல்லது 8 வருடங்களுக்கு முன்னர் எமது பகுதியில் நுழைந்தது முதலாக எம்.சி.சி இது போன்ற ஒரு சமூக அடித்தளத்தை வைத்துக்கொண்டு எந்த ஒரு நிலப்பிரபு, தனியார் படைகள், கொள்ளையர்கள் அல்லது அரசை எதிர்த்து எந்த போராட்டத்தையும் ஒன்றிரண்டைத்தவிர எடுக்கவில்லை என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. எம்.சி.சி யின் துப்பாக்கிகள் பா.யூ யின் ஊழியர்கள் அல்லது பா.யூ யை ஆதரிக்கும் மக்கள் ஆகியோருக்கு எதிராகவே எப்போதுமே திருப்பப்பட்டிருந்தது. அது நண்பர்களை வர்க்க எதிரிகளாகவும், வர்க்க எதிரிகளை நண்பர்களாகவும் மாற்றியிருந்தது. எம்.சி.சியால் மேற்கொள்ளப்படும் இந்த புதிய "இந்திய புரட்சிக்கான மூலஉத்தி" காலப்போக்கில் எங்கு இட்டுச் செல்லும் ? இந்த லும்பன்கள் மற்றும் நிலப்பிரபுத்துவ சக்திகளை ஆதாரமாகக் கொண்டு எம்.சி.சியால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள




ஜப்பான் எதிர்ப்பு யுத்தத்தில் ஏராளமான ஜப்பான் எதிர்ப்பு தளப்பிரதேசங்கள் உருவாக்கப்பட்டன. செம்படையும் கெரில்லா அலகுகளும் மக்கள் குடிப்படையும் ஒருங்கிணைந்து நடத்திய மக்கள் யுத்தமாக அது இருந்தது. சீ.க.க பலமாக இருந்த பல பகுதிகளில் மக்கள் தொகையில் 8%பேர் மக்கள் குடிப்படையில் இணைந்திருந்தனர். இப்பகுதிகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மக்களின் சுதந்திரம், சனநாயகம், நல்வாழ்வு ஆகியவற்றை உறுதிப்படுத்தியது. இதனால், கட்சியால் அனைத்து மக்களையும் ஜப்பானிய எதிர்ப்புக்கு அணிதிரட்ட முடிந்தது.


படிப்பகம்

www.padippakam.com

கொடுமையான தாக்குதல்களில் நாம் நமது ஊழியர்கள் மற்றும் தலைமையில் சிலரை வேண்டுமானால் இழக்கலாம். ஆனால், அதன் எதிர்காலம் என்ன? அதன் ஆதரவுத் தளமே வர்க்க எதிரிகளினுடையதாக மாறிக்கொண்டிருக்கும் போது, அதன் மேலாண்மைமிக்க சுடும் திறன் அதன் புரட்சிகர தன்மையை உத்திரவாதப்படுத்துமா? இவ்விசயத்தை கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும் என நாங்கள் எம்.சி.சி யை வேண்டுகிறோம்.

**கே: நடைமுறையில் எம்.சி.சியின் வழியின் வர்க்க அணிச்சேர்க்கையில் இந்த மாற்றம் ஏற்படுத்தியுள்ள அரசியல் தாக்கம் என்ன?**

ப: இதைபற்றித்தான் நாங்கள் கவலைகொண்டுள்ளோம். பாங்கியின் டிமா, மநாட்டுவின் சில்டிலியா, அத்தாரியின் குலாபி தோலா (சிலவற்றைக் குறிப்பிடுவதற்காக) போன்ற இடங்களில் ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான தாக்குதல்கள்; தேவகன், சாம்பி, பெல்ஹாரா, ரத்னாக் போன்ற இடங்களில் ஆயுதக் குழுக்களின் மீதான தாக்குதல்கள்; சௌரியின் சத்ருகன் சிங், குர்தாவின் பிஜாரு, பான்ருவாவின் ஜெயனந்தன் யாதவ், விஷ்ராம்பூரின் தேவ்லால் பால், லெஸ்லிகஞ்சின் துக்ஹி உரான்போன்ற மக்கள் திரள் அமைப்புகளின் தலைமைத் தோழர்கள் கொல்லப்பட்டது; ஏற்கனவே 50 ஐ தாண்டிவிட்ட எமது கட்சி ஆதரவாளர்கள் கொல்லப்பட்டது; விஷ்ராம்பூரின் பெல்ஹாரா மற்றும் ரத்னாக், குர்தாவின் குடிலா போன்ற இடங்களில் நடைபெற்றது போன்ற மக்கள் பஞ்சாயத்துகள் மற்றும் பொதுக்கூட்டங்களின் மீதான தாக்குதல்கள்; ஜெகனாபாத்தின் சேவனான், பாங்கியின் ஜெத்தியாரா, காஸ்மார், விஷ்ராம்பூரின் கேசிடாக், சத்தார்பூரின் கலாபஹாத், ஜப்லாவின் பரேலி, பேக்காரி போன்ற இடங்களில் கட்சி அமைப்பாளர்கள், மக்கள் திரள் அமைப்புகளின் தலைவர்களின் வீடுகளை அழிப்பது அல்லது தீ மூட்டி அவர்களது உடைமைகளை கொள்ளையடிப்பது; எமது அமைப்பாளர்கள் மற்றும் செயல்வீரர்களின் குடும்பத்தினர்களை அடித்து நொறுக்குவது போன்ற இன்ன பிறவற்றை செய்வதன் மூலம், கம்யூனிஸ்ட்டுகள் எதை செய்யக் கூடாதோ அதை அவர்கள் செய்து வருகிறார்கள். இதுபோன்ற கொடுமைகளை நிலப்பிரபுக்களின் படைகள் அல்லது அரசின் பாசிச ஆயுதபடைகள் போன்றவற்றிடமிருந்து தான் ஒருவர் எதிர்பார்க்க முடியும்.

இச்சம்பவங்களில் சில உண்மையிலேயே கொடூரமானதாகவும் மத்தியகால காட்டுமிராண்டித்தனத்தை நினைவுப் படுத்துவதாகவும் இருந்தன. உதாரணத்திற்கு. எமது எம்.கே.எஸ்.பி அமைப்பாளர் தேவ்லால் பால் கொல்லப்பட்ட விதம் எந்த ஒரு மனிதனையும் வெட்கித்தலைகுனிய வைக்கும். தேவ்லாலின் தொண்டையின் பல பகுதிகளில் குத்திக்குத்தறப்பட்டிருந்தது, அவரது வயிற்றுப்பகுதி இரண்டாக கிழிக்கப்பட்டிருந்தது, பிறப்புறுப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன, அவரது குடல் முகத்தைச் சுற்றி பின்னப்பட்டிருந்தது, அவரது சடலம் இழுத்துவரப்பட்டு, முக்கிய சாலையில் போடப்பட்டிருந்தது. தன்னை இன்னமும் கம்யூனிஸ்ட் என கூறிக்கொள்ளும் ஒருவர். இதை எவ்வாறு செய்ய இயலும்? (இதைபற்றி கூறிக்கொண்டிருக்கும் போது, தோழர் சரவனின் முகத்தில் வெறுப்பிற்கு பதிலாக வேதனையும், துன்பமும் வெளிப்பட்டது). ஒரு மாதத்திற்கும் பின்னர் அதாவது '98 அக். 25ல் நடந்த மற்றொரு சம்பவத்தில் ரத்னாக்கின் அதே கிராமத்தில் எமது ஆயுதக்குழு உறுப்பினர்கள் ஐவர் கொல்லப்பட்டு அவர்களது முகங்கள் சிதைக்கப்பட்டிருந்தன. '99, மார்ச் 13 அன்று, அவுரங்கபாத்தின் அமரபுரா என்ற தனது கிராமத்தில் மருத்துவ சிகிட்சை பெற்றுக் கொண்டிருந்த தோழர். கபில்தார் பால் என்ற சத்யேந்ரா என்பவர் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன், அவரது வயிறும் இரண்டாக கிழிக்கப்பட்டிருந்தது. இவர் கோயல் – கெய்மர் பகுதியின் தெற்கு மண்டல குழுவின் ஒரு உறுப்பினராவார். எம்.கே.எஸ். பி அமைப்பாளர் தோழர். யுகேஷ்வர் ரானா என்பவர் பலாமுவிலுள்ள காட்கோமா என்ற அவரது கிராமத்திலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு, இரு தினங்களாக சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டுள்ளார். இவரது தலை உடலிலிருந்து துண்டிக்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டிருந்தது.

இந்த கொடூரமான மனிதத்தன்மையற்ற செயல்களை நினைக்கும் போதே எந்த ஒரு நாகரீகமான மனிதப்பிறவியையும் அதிர்ச்சியுறச்செய்யும். ஒரு கம்யூனிஸ்ட் வர்க்க எதிரிகளுக்குக் கூட இதை செய்யக்கூடாது, அதே வேளையில் நேர் மாறாக வர்க்க எதிரிகளால் தான் இவ்வாறு செய்யமுடியும். ஆழமான வெறுப்புணர்வு அல்லது இதயத்தில் கொடூர விருப்புத்தன்மை கொண்ட ஒருவர் தான் இது போன்ற வெறுப்பூட்டும் செயல்களிலிருந்து இன்பம் காணமுடியும். எமது பகுதியில் எம்.சி.சியின் கிரிமினல் மயமாக்கம் மற்றும் லும்பன்மயமாக்கம் மோசமான பரிமாணத்தை எட்டியுள்ளதை இச் செயல்பாடுகள் காட்டுகின்றன.

மீண்டும், எமது பகுதியில் எம்.சி.சியின் மக்கள் விரோதத்தன்மை, நெஞ்சை உருக்கும் மூன்று சம்பவங்களின் மூலம் மிகவும் தெளிவாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. முதலாவதாக, டிமா சம்பவம். இதில் நிலப்பிரபுவின் நிலத்தை ஆக்கிரமித்த குற்றத்திற்காக ஒரு பெண் உட்பட மூன்று நிலமற்ற விவசாயிகள் எம்.சி.சியால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பறிமுதல் செய்த நிலங்களை வாங்குவோர்களின் பக்கம் எம்.சி.சி நின்றது. இரண்டாவதாக, குலாபி தோலா சம்பவம். இதில் ஏழை மாஞ்ஹி சாதியைச் சேர்ந்த மக்களின் மண் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. அடாரி ராஜேந்திர யாதவ் என்ற எம்.எல்.ஏ யின் உறவினர்களான உள்ளூர் சுரண்டலாளர்கள் பக்கம் எம்.சி.சி நின்றது. மூன்றாவதாக, பலாமு மாவட்டத்தில் சில்டிலியாவில் நடந்த தாக்குதல். இக்கிராமம் அடிப்படையில் பெரும்பாலும் தலித் மற்றும் பிற்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளைக் கொண்டிருந்த கிராமமாகும்.

இவ்வுதாரணங்கள், எம்.சி.சியின் மாறிக்கொண்டிருக்கும் வர்க்கத் தன்மை, அதன் வழிமற்றும் திசைவழியில் ஏற்படும் மோசமான திசைவிலகல்கள் மற்றும் வளர்ந்து கொண்டிருக்கும் அதன் சீரழிவு ஆகியவற்றை காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

**கே : உங்களது கட்சியும் அவர்களது ஆதரவாளர்கள் மற்றும் ஊழியர்கள் பலரை கொன்றுள்ளது என எம்.சி.சி கூறுகிறதே......**

ப : 1990ல் சத்யநாராயன் கொல்லப்பட்டது முதல் நாங்கள் கொன்ற பெரும்பாலானோர் வர்க்க எதிரிகளே. பாட்னா மாவட்டத்தின் மிராபூரில் ராம் தயாள் முக்ஹியா என்பவன் கிஷான் சங்கின் தலைவர், பாரியாப்பூர் மற்றும் தீங்க்றீ படுகொலைகளின் முக்கிய குற்றவாளி (எம்.சி.சி யின் செயலூக்கமான இந்த ஆதரவாளரின் மகன் இப்போது அவர்களது ஆயுதக்குழுவில் இணைந்துள்ளான்); இப்டியார் கான் என மற்றொருவன் – 400 ஏக்கர்கள் கொண்ட நிலப்பிரபு, இவனை அழித்தொழித்து எம்.சி.சி க்கு ஒரு "தியாகி" யாக்கினோம்; ஜகனாபாத்தில் மிகமோசமான கொள்ளையனின் நெருங்கிய கூட்டாளியான ஜகனாபாத்தின் மாலிசாக் கிராமத்தில் உள்ள புத்து யாதவ் என்பவன், பலவருடங்களாக இவனது மக்கள் விரோத, கட்சி விரோத செயல்களை பொறுத்துக்கொண்டு, இறுதியாக 1995ல் நாங்கள் அவனைக் கொன்றோம். இவன் போலீசோடு சேர்ந்துகொண்டு எமது ஆயுதக்குழுவின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவன். இவன் தற்போது எம்.சி.சியின் லால்பதாஹ (ஜன – பிப்–'99) இதழில் எம்.சி.சியின் தியாகிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளான். ஜீனந்தன் சர்மா மற்றும் அவனது சகோதரன் பைதியாநாத் சர்மா ஆகிய இருவரும் உள்ளூர் ஒடுக்குமுறையாளர்கள். இவர்கள் எமது ஆயுதக்குழுக்களால் அழித்தொழிக்கப்பட்டனர். அந்நேரத்தில் ஜீனந்தன் எம்.சி.சி யில் சேர்ந்திருந்தான் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. பின்னர், சுசில் குமார், இவன் கிஷான் சங் என்ற தனியார் படையின் ஒரு செயல் வீரன்; மாக்தும்பூரின் புத்தை யாதவ் என்பவன் ஒரு கொள்ளையன். இவனை நாங்கள் அழித்தொழிந்த போது எம்.சி.சி, சி.பி.ஐ ஆகிய இருவருமே தங்களது தியாகியாக உரிமை கொண்டாடினர்!! பின்னர், மோசமான கொள்ளையன் சாது பாஸ்வான் என்பவனின் மகனான பகுதி ரவுடி ஜங்பகதூர் பாஸ்வான் போன்ற பலர் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவருமே மோசமான ரவுடிகளும், பிற்போக்காளர்களுமே ஆவர்.

நாங்கள் எங்களது இலக்குகளை தேர்வுசெய்யும் போது எப்போதுமே தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களாகவே இருந்துள்ளனர், மோசமான வர்க்க எதிரிகள் அல்லது போலீஸ் ஏஜெண்டுகளே பொதுவாக தேர்வுசெய்யப்பட்டனர். சந்தர்ப்பவசமாக, இவர்களில் சிலர் எம்.சி.சி யை சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். எம்.சி.சி யால் உருவாக்கப்பட்டுள்ள பா.யூ எதிர்ப்பு வெறி மற்றும் குருட்டுத்தனமான எதிர்ப்பு போலல்லாது, ஒருவர் எம்.சி.சியுடன் தொடர்புடையவர் என்ற ஒரே காரணத்திற்காக நாங்கள் எவரையும் கொல்லவில்லை என்பதை உறுதியாகக்கூற இயலும். இதை எவரும் சரிபார்க்கலாம். எங்களால் அழித்தொழிக்கப்பட்டவர்கள் பற்றிய முழு பட்டியலும் இதில் உள்ளது. (சுமார் 30 பேர்களைக் கொண்ட ஒரு பட்டியலை அவர் காட்டினார்). எங்களால் இழைக்கப்பட்ட எந்த ஒரு தவறிற்கும் சுயவிமர்சனம் செய்து கொள்ள நாங்கள் நிச்சயமாக தயாராக இருக்கிறோம். இதை பற்றி நாங்கள் எதையும் விட்டிருந்தால், அதை சுட்டிக் காட்டினால் மாற்றிக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மற்றுமொரு வியக்கத்தக்க விசயம் என்னவெனில், எங்களால் கொல்லப்பட்ட எவரையும், அவர்களோடு எந்தவித உறவும் இல்லாமல் இருந்தாலும் தங்களது "தோழர்" அல்லது ஆதரவாளர் என எம்.சி.சி உரிமை கொண்டாடத் துவங்கியுள்ளது. அவர்களது தியாகிகள் பட்டியலில் கொடுக்கப்பட்ட பெயர்களில் உள்ள 3பேர் இன்னமும் உயிருடன் உள்ளனர்!! இது போன்ற பொய்களே எம்.சி.சி யால் பரப்பப்படுகிறது.

**கே : வேலைப்பகுதிகளை பிரிவினை செய்து கொள்வது பற்றி எம்.சி.சியுடன் முன்னாள் பா.யூ ஒப்பந்தத்தில் முன்னர் ஈடுபட்டிருந்ததே. தற்போதைய புதிய மையகுழு(த), புரட்சியாளர்களுக்கிடையே வேலைப்பகுதிகளை பிரிவினை செய்து கொள்ளும் கோட்பாட்டை உறுதி செய்துள்ளதா?**

ப : எம்.சி.சி யால் முன்வைக்கப்பட்ட பகுதி பிரிவினை பற்றிய முன்மொழிதலை முன்னாள் பா.யூ ஏற்றுக்கொண்டிருந்தது என நான் ஏற்கனவே கூறியிருந்தேன். அதிகமும் அனுபவமின்மை காரணமாகத்தான் நாங்கள் அதை செய்தோம். நடைமுறையில் அது செயலாக்கம் பெறவில்லை. அரசியல் ரீதியாகக் கூட இவ்வாறு செய்வது புரட்சியாளர்களுக்கு சரியானதல்ல. ஒவ்வொரு கட்சியும் ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது பிராந்தியத்தில் மட்டுமே புரட்சி செய்யவேண்டும் என்று இதற்கு பொருளாகிறது!

ஆந்திரபிரதேசில் முன்னாள் மயு மற்றும் ஜனசக்தி குழுவிற்கு இடையிலான அனுபவத்தை நாம் எடுத்துக்கொண்டால், ஜனசக்தியின் பகுதியில் மயு நுழைந்தால் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஜனசக்தி மிரட்டிய போது, மறுபுறத்தில் மயு அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய




ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் உச்சத்தில் இருந்த போது, சீ.க.க யில் பாட்டாளிவர்க்கத்திற்கு அந்நியமான போக்குகளை எதிர்த்து சீர்செய் இயக்கம் நடத்தப்பட்டது. படிப்பில் அகநிலைவாதம், கட்சிவேலையில் குறுங்குழுவாதம், கட்சி இலக்கியங்களில் இயந்திரகதியான எழுத்துமுறை ஆகியவற்றிற்கு எதிராக இவ்வியக்கம் நடத்தப்பட்டது. இது கட்சிக்குள் இருந்த வறட்டுதத்துவவாதத்தை ஒழிப்பதிலும் கட்சிக்குள் இணைந்த புதிய குட்டிமுதலாளிய உறுப்பினர்களை மறுவார்ப்பு செய்வதிலும் பெரும் பங்காற்றி வெற்றியடைந்தது. கட்சிக்குள் மாபெரும் ஐக்கியத்தை ஏற்படுத்தியது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்த சிரமங்களை எதிர்கொள்ள உதவியது. இக்கட்டத்தில் கட்சி வேலைமுறை குறித்து தொடர் கட்டுரைகளை படைத்து பாட்டாளி வர்க்கக் கட்சியின் லெனினிய கோட்பாட்டை மாவோ செழுமைப்படுத்தினார்.


படிப்பகம்

www.padippakam.com

முயற்சி செய்தது. பொதுவான சிக்கல் களில் அவர்கள் ஒன்றாக வேலை செய்ய வேண்டும் எனவும், எந்த ஒரு புரட்சிகர குழுவும் ஒரு பகுதியை தனது சொந்த 'ஜாகிர்' போன்ற முந்தைய நிலப்பிரபுத்துவ சமீன்தார்களைப் போல உரிமை கொண் டாடுவது என்பது தவறானது என்றும், எந்த கட்சியின் கொள்கை மற்றும் வழி சரியானது என்பதை முடிவு செய்ய வேண்டியது மக்கள் தான் எனவும் அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்தது.

எம்.சி.சியும் இதே வகையில் தான் நடந்து கொள்கிறது. அவர்களது முன்மொழிதல்களை நாங்கள் ஏற்றுக் கொண்டால், நாங்கள் அவர்களின் கண் களுக்கு 'நல்ல பையன்கள்' இல்லா விட்டால், நாங்கள் பூதங்களைப் போல பார்க்கப்படுகிறோம்.

ஆந்திரா மற்றும் பிஹாரில் உள்ள எமது அனுபவங்களை மையகுழு (த) மீளாய்வு செய்து, எந்த ஒரு புரட்சிகர கட்சியும் வேலை செய்யும் பகுதியை பிரிவினை செய்துகொள்ளக் கோருவது என்பது நாட்டை நிலப்பிரபுத்துவ நில மானிய உரிமை அடிப்படையில் பிரிப்பதற்கு ஒப்பாகும், இது அரசியல் ரீதியாக தவறானது என கருதியது.

இந்தியாவில், சில மாநிலங்களில் பல்வேறு அமைப்புகள் ஒரே பகுதியில் செயல்பட்டு வருகின்றன. ஒரு பகுதியில் வேலைசெய்து கொண்டிருக்கும் பல்வேறு புரட்சிகர அமைப்புகளின் கொள்கை, மக்களின் கோரிக்கைகளில் கூட்டாக இயக்கத்தை தலைமைதாங்க கூட்டு நடவடிக்கை குழுக்கள், முன்னணிகள் போன்றவற்றை அமைப்பதுதான். இந்த நிகழ்வு போக்கு, உண்மையில், பல்வேறு கம்யூனிச புரட்சிகர அமைப்புகள் நெருக்க மாக வந்து தங்களது வேறுபாடுகளை தோழமையுடன் தீர்த்துக்கொள்ள உதவும். இதை எம்.சி.சியின் மையகுழு மற்றும் பிஹார் மாநில குழுவின் முன் வைத் தோம். ஆனால், அவர்கள் அதை ஒரேயடி யாக மறுத்து விட்டனர். பிஹார் சிக்க லுக்கு பகுதிபிரிவினை (நிச்சயமாக மீண்டும், அவர்களது சொந்த வார்த்தைகளில் கூறினால்) தான் ஒரு நிரந்தர தீர்வு என அவர்கள் பிடிவாதமாக வலியுறுத்துகின்றனர்.

**கே : இறுதியாக ஒரு கேள்வி; நீங்கள் யூகித்துக்கூட இருக்கலாம்: பிஹாரின் தற்போதைய துன்பத்தை தீர்க்க என்னென்ன வாய்ப்புகள் உள்ளன?**

**ப :** (எதுவும் செய்ய முடியா நிலையில் அவர் தனது கரங்களை விரிக்கிறார்.) எல்லாம் எம்.சி.சியின் கைகளில் தான் உள்ளது. தற்போதைய பயங்கரமூட்டும் இயக்கத்தை கட்டவிழ்த்து விடுவதில் எம்.சி.சி யின் அணுகுமுறையையும், திட்டங்களையும் நான் உங்களிடம் கூறியுள்ளேன். அவர்கள் மோதல்களை நிறுத்திவிட்டு பேச்சு வார்த்தைகளுக்கு வருவார்களேயானால் பிரச்சனையை தீர்க்க முடியும். ஆனால், மிகவும் இன்னல்தரத்தக்க வளர்ச்சி என்ன வெனில், லும்பன்கள், சீரழிந்த சக்திகள், நிலப்பிரபுத்துவ சக்திகள் போன்றவர்கள் எம்.சி.சியின் தரப்பில் அணிசேர்ந்திருப் பது தான். தேவையான உடனடியான தீர்வு நடவடிக்கைகளை எம்.சி.சி தலைமை எடுக்காவிடில், அவர்களது கரங்களில் சிக்கி, முழுமையான சீரழிவிற்கு செல்லு வதிலிருந்து அதை யாரும் காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

இவையனைத்தும் இருப்பினும், மொத்தத்தில் எம்.சி.சி இன்னமும் புரட்சி கரதன்மையில் இருப்பதாக கருதுகிறோம். ஆனால், அதன் தவறான சக்திகளை கழித்துக்கட்டாவிட்டால், அதன் நடை முறையில், குறிப்பாக, ஜகனாபாத் மற்றும் பலாமுவிலுள்ள எமது பாரம்பரியமான பலமிக்க பகுதிகளில் அதன் வர்க்க சமரச போக்குகளிலிருந்து வெளிவராவிட்டால் அதன் புரட்சிகர தன்மையை இழக்க நேரி டும் எனவும் கருதுகிறோம். அது தனது தேடுதல்வேட்டைகளை உடனடியாக நிறுத்திடவேண்டும். மேலும் எல்.எம்.ஜி மற்றும் எஸ்.எல்.ஆர் போன்ற ஆயுதங்க ளுடன் உருவாக்கப்பட்டுள்ள அதன் சிறப்பு ஆயுதக்குழுக்களை எமது பகுதிக ளிலிருந்து வாபஸ்பெற வேண்டும். அரசின் ஆயுதப்படைகள் கூட எம்.சி.சி செய்துவருவது போல தேடி அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டதில்லை. இது தொடருமேயானால், மோதல்களை தீர்ப்பதற்கானவாய்ப்புகள் இருண்டு போகும் என நான் பயப்படுகிறேன். எங்களது இருத்தலுக்காகவும், எம்.சி.சி யின் பின்புலத்துடன் வர்க்க எதிரிகளி டமிருந்து வருகின்ற தாக்குதல்களில் இருந்து எமது வர்க்கத்தையும் மக்களை யும் தற்காக்கவும், நாங்களும் திருப்பித் தாக்க வேண்டியதிருக்கும்.

இதுவரையிலும் எமது நம்பிக்கையை முழுவதுமாக இழந்துவிடவில்லை. எம்.சி.சி தலைமையிடம் நல்ல உணர் வாற்றல் நிலவி இருக்கும் என நாங்கள் இப்போதும் கருதுகிறோம். எம்.சி.சி வளமான புரட்சிகர பாரம்பரியத்தை கொண்டுள்ளது. எம்.சி.சி வர்க்க சமரச சதுப்புக்குழியில் மீட்கப்படமுடியாத அளவிற்கு மூழ்கிவிடுவதையும் சகபுரட்சி யாளர்களுக்கு எதிரான கொடூர பயங் கரமூட்டும் இயக்கங்களையும், பார்த்துக் கொண்டிருக்காத நேர்மையான, உணர்வு மிக்க ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றே கருதுகிறோம். தனது இடது புரட்சிகர வார்த்தை சாலங்கள் மற்றும் வலது திரிபு வாத நடைமுறையின் மூலமாக, எங்க ளுக்கு எதிரான பொய்கள் மற்றும் அவ தூறுகளுடன் தனது ஊழியர்களையும் மக்களையும் எம்.சி.சி தலைமை நீண்ட காலத்திற்கு முட்டாளாக்க முடியாது என் பதையும் நாங்கள் அறிவோம். இந்த ரத்தக் குளியலை நிறுத்திவிட்டு, பேச்சு வார்த்தை களின் மூலம் பிரச்சனைகளை தீர்ப்பதற் காக அதிகரித்துக் கொண்டிருக்கும் நிர்பந்தத்தை எம்.சி.சி தலைமை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**கே : ஊழியர்களுக்கும் மக்களுக்கும் நீங்கள் விடுக்கும் அறைகூவல் என்ன?**

**ப :** எமது மையகுழுவும், பிஹார் மாநில குழுவும், நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கு எதிராகவும் நிலப்பிரபுக்களின் ரன்வீர் சேனா மற்றும் பிற தனியார் படைகளுக்கு எதிராகவும் வர்க்கப் போராட்டத்தை தீவிரப்படுத்தவும், அரசின் ஆயுதப்படை களை இன்னும் மிகத்திறமையுடன் மோது வதற்காக நமது கெரில்லா படைகளை தயார்ப்படுத்தவும் முடிவு செய்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

அதாவது நடந்து கொண்டிருக்கும் மக்கள் யுத்தத்தை ஆழப்படுத்துவதும் விரிவுபடுத்துவதுமாகும். எமது வேலையின் முக்கிய திசைவழி இதுவேயாகும்.சமீபத்தில் செய்தித்தாள்களிலிருந்து நீங்கள் சில அறிக்கைகளை சேகரித்திருக்கலாம். பிற்போக்குத்தனமான ரன்வீர் சேனாவைச் சேர்ந்த மோசமான சக்திகளை மட்டும் நாங்கள் அழித்தொழிக்கவில்லை, மத்திய துணை ராணுவ படையைச் சேர்ந்த 9 பேர் உட்பட 11 காவல்துறையினரை இரு முக்கிய பதுங்கு தாக்குதல்களில் ஒழித்துள்ளோம். போலீஸ் ஏஜென்டுகள், மோசமான வர்க்க எதிரிகள், ஆளும்வர்க்க கட்சிகளின் தலைவர்கள் போன்றவர்களுக்கு எதிராகவும் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அதே வேளையில், எம்.சி.சி யின் ஆயுதம் தாங்கிய தாக்குதல்களை தடுக்கவும், எம்.சி.சியின் கொலைவெறி கும்பல் எமது பகுதிகளில் உள்ளேறி ஆயுதம் தாங்கிய தாக்குதல்களை நடத்துவதை நிறுத்துவது, தேவைப்படும் போது எதிர்தாக்குதல் தொடுப்பது என நாங்கள் எமது ஊழியர்களுக்கும் மக்களுக்கும் அறைகூவல் விடுத்துள்ளோம். எப்படி இருப்பினும், எம்.சி.சி யை தத்துவார்த்த, அரசியல் தளத்தில் மோதுவது தான் எமது முக்கிய முயற்சியாகும். எமது பகுதிகளில் வேலை செய்ய எம்.சி.சி முடிவுசெய்தால் நாங்கள் அதை மறுக்கப்போவது இல்லை. ஆனால் எம்மை ஒழிப்பது என்ற அதன் ஒரே திட்டத்தை கைவிடவேண்டும், அடிப்படை வர்க்கங்களின் நலன்களுக்காக வேலை செய்ய வேண்டும். அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யவும், வர்க்க எதிரிகளுக்கு எதிராக கூட்டு போராட்டங்களை எடுக்கவும் நாங்கள் மிகவும் சந்தோசமாக இருப்போம். இந்திய புரட்சி மற்றும் உலகப்புரட்சியின் ஒட்டுமொத்த நலன்களுக்காக மிகவும் பரந்த அடிப்படையில் எம்.சி.சி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என நாங்கள் அவர்களை கேட்டுக் கொள்கிறோம். மேலும், நிலப்பிரபுத்துவ சக்திகள், ரன்வீர் சேனா, திரிபுவாதிகள் மற்றும் இந்திய அரசின் அதிகரித்துவரும் தாக்குதல்களையும் நினைத்துப்பார்க்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இந்த வர்க்க எதிரிகளை எதிர்த்து போராட எங்களோடு கூட்டாக வரவேண்டும் என நாங்கள் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

எம்.சி.சி யை தனது கொடூர தாக்குதல்களை நிறுத்திவிட்டு, பிஹார் சிக்கலை தீர்க்க பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும் என நிர்பந்தத்தைக் கொடுக்க வேண்டும் என நாங்கள் புரட்சிகர சக்திகள், புரட்சியின் பால் அக்கறை கொண்டவர்கள், சனநாயகத்தை விரும்பும் குடிமக்கள் ஆகியோருக்கு அறைகூவல் விடுக்கின்றோம்.

# இ.க.க(மாலெ) (மயு) மீதான எம்.சி.சி யின் தாக்குதல்கள்

## சில உதாரணங்கள்

*புதிய –ஒன்றுபட்ட இ.க.க (மா–லெ) (மக்கள் யுத்தம்)த்திற்கு எதிரான எம்.சி.சியின் தாக்குதல் சம்பவங்கள் சிலவற்றைக் கீழே வழங்குகின்றோம். இவை 1999 ஏப்ரலில் இ.க.க (மா–லெ) (மயு) பிஹார் மாநில குழுவால் வெளியிடப்பட்ட சிறுபிரசுரத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இவை 7 மாதகால (மார்ச் இறுதிவரை) சம்பவங்களைக் குறிப்பிடுகின்றன.*

1. 30.8.'98 – மசூரி பசாரில் பட்டப்பகலில் எம் .சி.சியால் பாதுகாக்கப்பட்ட கொலையாளிகளால் கோசட் பகுதியைச் சேர்ந்த தோழர். பவான் சின்ஹா சுட்டுக் கொல்லப்பட்டார்.
2. 25.9.'98 – பலாமு மாவட்டத்தில் விஷ்ராம்பூர் வட்டத்தில் குர்குட்டா கிராமத்தில் மயுவின் ஆயுதக்குழு ஒன்று முகாமிட்டிருப்பதை அறிந்து, பெரும் எண்ணிக்கையில் ஆயுதம் தாங்கிய சக்திகளை எம்.சி.சி அணிதிரட்டி மயுவின் ஆயுதக்குழுவை சுற்றி வளைத்தது. ஆனால் மயுவின் ஆயுதக்குழு தப்பித்து விட்டது.
3. 26.9.'98 – விஷ்ராம்பூர் வட்டத்தில் உள்ள ரத்னக் கிராமத்திலிருந்து எம்.கே.எஸ்.பி வட்டார குழு உறுப்பினர் தோழர். தேவ்லால் பாலை தூக்கிச் சென்று மிகவும் காட்டுமிராண்டித்தனமாகக் கொன்றனர்.
4. 26.9."98 – விஷ்ராம்பூர் வட்டத்தின் போக்காரி கிராமத்தைத் தாக்கி மயுவின் ஆதரவாளரான தோழர். சுரேந்தர் மலாஹ் என்பவரைத் தாக்கி, அவரது உடைமைகளை கொள்ளையிட்டு, அவரிடம் இருந்த கட்சிக்கு சொந்தமான 2 ரைபிள்களையும் பிற பொருட்களையும் எடுத்துச் சென்றனர்.




ஜப்பானியரின் தோல்விக்குப் பின்னர், சீ.க.க விடுதலைப் பிரதேசங்களில் விவசாய சீர்திருத்தத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தியது. நிலப்பிரபுக்களின் நிலங்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. சீ.க.க விவசாய சட்டத்தை வரையறுத்தது, "வர்க்கங்களை ஆய்வு செய்வது எப்படி" போன்ற வெளியீடுகளை கொண்டுவந்தது. இதன் மூலம் விவசாய சிக்கல் குறித்து ஒரு தெளிவான கொள்கையையும் புரிதலையும் ஏற்படுத்தியது. விவசாய சட்டம் வகுக்கப்பட்ட ஓராண்டிற்குள் விடுதலை பிரதேசங்களில் ஒரு கோடிக்கும் மேலான உழவர்களுக்கு நிலம் வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

5. 12.10. '98 சத்தார் பூரிலிருந்து வந்து கொண்டிருந்த பேருந்து ஒன்றை எம்.சி.சி ஆயுதக்குழு மடக்கியது. அதில் பயணம் செய்து கொண்டிருந்த எம்.கே.எஸ். பி யின் வட்டார குழு உறுப்பினர் பரிக்ஹா யாதவ் என்பவரைத் தாக்கினர். அதிர்ஷ்டவசமாக தப்பி ஓடிய இவரைத் துரத்திச் சென்று துப்பாக்கியால் சுட்டனர். பதினைந்து தினங்களுக்குப் பின்னர் இவரது வீடு தீக்கிரையாக்கப்பட்டது.

6. 16.10. '98 – எம்.சி.சியின் ஆயுதக்குழு ஒன்று மயுவின் ஆயுதக்குழுவை பலாமுவின் ஜாப்லா வட்டத்தின் சிக்காரி கிராமத்திலிருந்து கலா பஹாத் வரை பின்தொடர்ந்து, தாக்கியது. திருப்பிச் சுட்டுக் கொண்டே மயு ஆயுதக்குழு தப்பிவிட்டது.

7. 19.10. '98 – விஷ்ராம்பூரின் தற்காலிக ஆயுதக்குழு ஒன்றின் கமாண்டராக இருந்த தோழர். அம்ரேசின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. காசிதாக்கில் உள்ள அவரது சகோதரர்களது வீடுகளும் கொளுத்தப்பட்டு, அவர்களது உடமைகள் அனைத்தும் எடுத்துச் செல்லப்பட்டன.

8. 23.10. '98 – பலாமுவின் ஜாப்லா வட்டத்தின் லப்பாயா கிராமத்தில் உள்ள எம்.கே.எஸ். பி அமைப்பாளர் சோனா சிங் என்பவரின் வீடு தறைமட்டமாக்கப்பட்டு கொளுத்தப்பட்டது.

9. 25.10. '98 – ரத்னக் கிராமத்தில் தோழர். தேவ்லால் பாலின் நினைவாக நடந்த இரங்கல் கூட்டத்தில் தாக்குதல் நடத்தி மயுவின் 5 ஊழியர்களைக் கொன்றனர்.

10. 3.11. '98 – பாட்னா மாவட்டத்தில் மதுரபன் கிராமத்தில் எம்.கே.எஸ்.பி யின் உள்ளூர் அமைப்பாளர் ஜகனந்தன் யாதவ் கொல்லப்பட்டார்.

11. 16.11. '98 – பலாமு மாவட்டத்தில் காத்கோமா கிராமத்திலிருந்து எம்.கே.எஸ்.பி யின் அமைப்பாளர் யுகேஷ்வர் ரானா இழுத்துச் செல்லப்பட்டு, கொடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு இரு தினங்களுக்குப் பின்னர் கொலை செய்யப்பட்டார். இவரது தலை உடலிலிருந்து துண்டிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

12. 25.11. '98 – பாட்னாவின் மசோர்கி வட்டத்திலுள்ள கர்ணா கிராமத்தில் எம்.கே.எஸ்.பி ஆதரவாளர் ராம்கபூர் ஷர்மா கொல்லப்பட்டார்.

13. 4.12. '98 – ஜகனாபாத்தின் சிவானன் கிராமத்தில் உள்ள மயுவின் மாநில அளவிலான தோழர். பவானது இல்லம் தகர்க்கப்பட்டு அவரது உடைமைகள் கொள்ளையிடப்பட்டன. பவானின் மைத்துனரின் இரு கால்களும் ஒடிக்கப்பட்டன.

14. 8.12. '98 – பலாமு மாவட்டத்தில் பாங்கி வட்டத்தின் கஷ்மார் கிராமத்தில் மயுவின் ஆயுதக்குழு கமாண்டரும் கட்சி அமைப்பாளருமான ஒருவரின் வீடு தீக்கிரையாக்கப்பட்டு, கால்நடைகளும் பிற உடைமைகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

15. 24.12. '98 – அவுரங்கபாத் மாவட்டத்தின் கோஹ் வட்டாரத்திலுள்ள தவாஹி கிராமத்தில் உள்ள ஹலின் மயான் என்ற மயு ஆதரவாளர் கடுமையாகத் தாக்கப்பட்டார். இவரது இரு கைகளும், கால்களும் இரும்பு மண்வெட்டி கொண்டு அடித்து ஒடிக்கப்பட்டன.

16. டிசம்பர் '98 – நவாதா மாவட்டத்தின் பாவே கிராமத்திலுள்ள ஏழை ரிக்ஷா தொழிலாளி லோகா சவுத்ரி என்பவர், மயுவிற்காக வேலை செய்கிறார் என்ற சந்தேகத்தின் பேரில் எம்.சி.சி ஆயுதக் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

17. 28.12. '98 – பண்டாரியா கிராமத்திலுள்ள மயு ஆயுதக்குழு கமாண்டர் தோழர். குதி சிங் என்பவரின் வீடு தகர்க்கப்பட்டு உடைமைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

18. 5.1. '99 – ஜகனாபாத் மாவட்டத்திலுள்ள குர்தா என்னும் இடத்தில் உள்ள தோழர். பப்பு மற்றும் அவரது சகோதரரின் இல்லம் வெடிவைத்து தகர்க்கப்பட்டதுடன், எல்லா உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

19. 11.1. '99 – ஜகனாபாத்திலுள்ள குர்தா பகுதியில் உள்ள எம்.கே.எஸ்.பி யின் மண்டலசெயலர் தோழர். பிராஜூ என்ற பப்பு, குடிலாவில் கொல்லப்பட்டார்.

20. 17.1. '99 – பலாமு மாவட்டத்தில் மனாட்டு வட்டத்தின் சிடில்லியா கிராமத்திலிருந்து மயுவின் ஆதரவாளர்கள் 12 பேருக்கும் அதிகமானோர் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டனர். சிலரின் வீடுகளிலிருந்து பொருட்களும் எடுத்துச் செல்லப்பட்டன. கிராமத்திலிருந்த பெண்களும் தாக்கப்பட்டதுடன் ஒரு சிறுமியின் கையும் ஒடிக்கப்பட்டது. மக்களின் 5 ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

21. 31.1. '99 – விஷ்ராம்பூரிலுள்ள கர்கட்டா கிராமத்தின் உள்ளூர் தலைவர் மான்தேவ் சிறைபிடிக்கப்பட்டு,அவரது கைகளை கட்டி நாள்முழுவதும் வைத்திருந்தனர். மக்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக பின்னர் அவிழ்த்து விட்டனர். இக்கிராமத்திலிருந்து ஒரு ஒற்றைக்குழல் துப்பாக்கியை பிடுங்கிச் சென்றதுடன், மயுவோடு தொடர்புகளை வைத்துக் கொள்ளக் கூடாது என கிராமத்தினர் மிரட்டப்பட்டனர்.

22. 19.2. '99 – ஜாப்லாவிலுள்ள பருலி கிராமத்தில் எம்.கே.எஸ்.பி யின் அமைப்பாளர் உமேஷ் சிங் என்பவரின் வீடு சிதைக்கப்பட்டு உடைமைகள் சூறையாடப்பட்டன.

23. 13.3. '99 – கோயல் – கெய்மார் பகுதியின் தென் மண்டல குழு உறுப்பினர் தோழர். சத்யேந்திரா, அவுரங்கபாத்தில் உள்ள அமராபூர் என்ற அவரது கிராமத்தில் கடுமையான நோயின் காரணமாக ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது கொல்லப்பட்டார்.

24. 20.3. '99 – விஷ்ராம்பூரில் உள்ள பெல்ஹாரா கிராமத்தில் மக்களிடையே கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும் போது மயுவின் ஆயுதக் குழு ஒன்று தாக்கப்பட்டது. தோழர்கள். ராம் சீஸ் மற்றும் இருவர் தியாகிகளாயினர். ஒருவர் படுகாயமுற்றார். எம்.சி.சி யின் ஆயுதக்குழு 6 ஆயுதங்களை பறித்துச் சென்றது. அவாதேஷ், சுதிர்சிங் தோழர். ராம்சீஸ் என்றழைக்கப்பட்ட இவர் கோயல் கெய்மார் வட மண்டல குழுவின் ஒரு உறுப்பினராவார்.



படிப்பகம்

www.padippakam.com

# தோழர். லலிதாவின் படுகொலை
## கோழை அரசாங்கத்தின் ரகசிய யுத்தமே!

தெலுங்கானா கலா சமதியின் பிரபலமான பாடகரும் ஒரு தலைவருமான தோழர். பெல்லி லலிதாவின் படுகொலை, உலக வங்கியின் கைப் பாவையான சந்திரபாபு நாயுடு அரசாங்கத்தின் கோழைத்தனமான கொடூரமான ரகசிய யுத்தத்தின் ஒரு பகுதியேயாகும். 1999 மே 26 அன்று தோழர். லலிதா கடத்தப்பட்டார். பின்னர் அவரது உடல் 17 துண்டுகளாக வெட்டப்பட்டு பல்வேறு கிணறுகளில் வீசப்பட்டிருந்தது. சம்பவம் நடந்த முதல் நாளில் இருந்தே காவல்துறையின் உயர் அதிகாரிகளும், தெலுகு தேச மந்திரிகளும் மக்களின் கவனத்தை திசை திருப்ப ஒன்றன் பின் ஒன்றாக பல கதைகளை கட்டிவிட்டனர். முதலில் கிணறுகளில் கண்டெடுக்கப்பட்ட உடல் உறுப்புகள் லலிதாவினுடையது அல்ல என மறுத்தனர். பின்னர், மக்கள் யுத்த கட்சியின் ஆயுதப்போராட்டப் பகுதிக்கு அவர் சென்றிருக்கலாம் என புளுகினர். பின்னர், அவர் வீட்டிலிருந்து வெறுப்படைந்து ஓடிவிட்டதாகவும், மாவட்ட மக்கள் யுத்த கட்சித் தலைவர் வஞ்சித்து விட்டதால் இவ்வாறு செய்தார் என கேவலமான வகையில் கதை சோடித்து பரப்பினர். நலகொண்டா மாவட்ட குழுவின் ஒரு தலைவர் தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி மோசம் செய்து விட்டதாகவும், பின்னர் தனக்கு 'எய்ட்ஸ்' இருப்பதாக அவர் குற்றம் சாட்டிவிட்டு தன்னை ஏமாற்றி விட்டாக கூறுகின்ற ஒரு கடிதத்தை தோழர். லலிதா எழுதியது போலவே ஜோடித்தனர். இறந்து போன ஒரு பெண்ணின் மீது எத்தகையதொரு அவதூறைப் பரப்பி விட்டுள்ளனர் இந்த ஆணாதிக்க வெறிபிடித்த போலீஸ் அதிகாரிகளும், உள்துறை அமைச்சரும். ஒரு பெண் தகாத உறவு வைத்திருந்தவள் என குற்றம் சாட்டுவதன் மூலம் கொலையாளிகளை நியாயப்படுத்தி தப்பிக்க வைப்பதில் இந்த ஆணாதிக்க வெறியர்கள் ஈடுபடுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. தோழர். லலிதாவை கொலைசெய்துவிட்டு, அவர் எழுதியதாக ஒரு கடிதத்தையும் வெளியிட்டு கட்சியையும் அவரையும் சிறுமைப்படுத்தும் ஈனச்செயலில் ஈடுபட்ட 'உயர்தொழில் நுட்பப் புகழ்' சந்திரபாபு நாயுடு அரசு, சில தினங்களுக்குள் அப்பட்டமாக அம்பலப்பட்டது.

ஒரு தினப்பத்திரிக்கையின் நிருபர் போலீஸ் வெளியிட்ட லலிதாவின் கடிதத்தில் காணப்பட்டது அவரது கையெழுத்து அல்ல என மறுத்து அவரது உண்மையான கையெழுத்தை வெளியிட்டு போலீசின் ஏமாற்று மோசடியை அம்பலப்படுத்தினார். இறுதியாக, வேறு வழியின்றி லலிதா கொலை செய்யப்பட்டதை போலீசார் ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. கொலைக் குற்றவாளிகளான நைமுதீனின் இரு சகோதரர்களை கைது செய்தது. அதுவும், 'உள்துறை அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்', 'விசாரணை கமிசன் போடவேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டங்கள் தீவிரமடைந்த போது தான், போலீசார் கைது என்ற நாடகத்தை நடத்தினர். மக்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தில் தான் இந்த கைது நடந்தது. ஏற்கனவே எட்டண்ணா, பால்ராஜ் ஆகியோரைக் கொலை செய்த இந்த கயவர்கள் வெகுவிரைவிலேயே வெளியே வந்து விட்டனர். இது போன்ற கொலையாளிகளுக்கு சிறப்பு பாதுகாப்பு கொடுத்து அவர்களை பராமரிப்பது என்பது ஆந்திர மாநில அரசாங்கத்திற்கு மிகவும் கைவந்த கலைதான்.

ஏற்கனவே, ஆயுதக்குழுக்களுக்குள் ஊடுருவல்காரர்களை அனுப்பி சில கட்சித் தலைவர்களையும்,

---




உள்நாட்டு யுத்தத்தை தவிர்க்க கோமிங்டாங் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. 1945ல் 40 நாள் பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. இருப்பினும், விரைவிலேயே சியாங்கேஷேக் அமெரிக்காவின் முழு ஆதரவுடன் மீண்டும் தாக்குதலை துவங்கினான். செம்படையின் எதிர்தாக்குதலில் 11லட்சம் கோமிங்டாங் படையினர் செயலிழந்தனர். செம்படையின் பலம் 20 லட்சமாக உயர்ந்தது.


படிப்பகம்

www.padippakam.com

செயல்வீரர்களையும் சந்திரபாபு நாயுடு அரசாங்கம் கொன்றது. இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் பாடகர் தோழர். கத்தார் கூலிப்படையினரால் கொலை முயற்சிக்கு ஆளானது போல, பல மக்கள் திரள் அமைப்புகளின் தலைவர்கள் தாக்கப்பட்டுள் ளனர். இன்று, காவல்துறையினர் சிறைகளில் இருந்து கூட வாடகை கொலையாளிகளை உருவாக்கி, மக்கள் யுத்த கட்சியின் மீது தாக்குதலைத் தொடுக்க முயல் கின்றனர்.

இவர்களுடன் போடப்படும் ஒப்பந்தம் மிகவும் எளியது. சிறையிலடைக்கப்பட்ட புரட்சியாளர்களி டையே இருக்கும் மிகவும் பலவீனமான நபரை தேர்வு செய்து, போலீஸ் சொல்வதைப் போல செயல் பட்டால் அவருக்கு விடுதலை என பேரம் பேசுகின்றனர். தோழர். லலிதாவின் கொலையில் ஈடு பட்டது இப்படிப்பட்ட ஒரு நபர்தான். ஆறு வருடங்களுக்கு முன்னர் ஒரு போலீஸ் அதிகாரி அழித் தொழிக்கப்பட்டதில் ஈடுபட்டு சிறையில் இருக்கும் நைமுதீன் என்பவர் தான் லலிதாவைக் கொலை செய்ய போலீசாரால் தேர்வு செய்யப் பட்ட நபர். வெளியே இருக்கும் தனது இரு சகோதரர்கள் மூல மாக நலகொண்டா மாவட்டத் தின் மக்கள் யுத்த் கட்சித் தலை வர்களை கொலை செய்ய ஏற் பாடுகளைச் செய்தால் நைமு தீனுக்கு விடுதலை என விலை பேசப்பட்டது. நைமுதீனின் சகோதரர்கள் ஏற்கனவே, ஒரு வருடத்திற்கு முன்னர், மக்கள் யுத்த கட்சியின் முன்னாள் ஆயுதக்குழு உறுப்பினர் ஹீசைன் பீபி என்பரின் கணவர் எட்டண்ணாவையும், பால்ராஜ் என்ற வேறொருவரை யும் கொலை செய்தவர்கள். இவ்விருவர்களின் உடல்கள் கூட கண்டந்துண்டமாக வெட்டப்பட்டு வீசப்பட்டிருந்தது. மக்கள் யுத்த கட்சியின் ஆதரவாளர் கள், மக்கள் தலைவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களிடையே பீதியை உருவாக்கத்தான் இக்கய வர் கூட்டம் இக்கொடிய வழிமுறையை பின்பற்று கின்றனர். ஒரு வருடத்திற்குள் இக் கும்பலால் கொலை செய்யப்பட்ட மூன்றாவது நபர் தோழர்.லலிதா.



Com. Belli Lalitha

காவல்துறையினரின் கைதுகளும், போலி மோதல் கொலைகளும் மக்களிடையே பெரும் எதிர்ப்பை உருவாக்கி விடுவதால், தலைவர்களையும், செயல்வீரர்களையும் கொலை செய்ய இது போன்ற சதிகளை மேற்கொள்ளும் திட்டத்தை ஆந்திர அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இதுபோன்ற கொலைக் கும்பல் களினால் தாக்கப்படுவது தலைவர்களிடையேயும், மக்களிடையேயும் பீதியை உருவாக்கும் என கருதி ஆட்சியாளர்கள் இந்த பேடித்தனத்தை கையாளுகின்ற னர். இதன்மூலம் அறிவுஜீவிகளையும், சனநாயக சக்திகளையும் இயக்கத்தை விட்டு விலகிச் செல்ல வைத்துவிடலாம் என கருதுகின்றனர்.

இதற்காக கருப்பு புலிகள், பச்சை புலிகள், கிராந்தி சேனா போன்ற ஆயுதம் தாங்கிய தனியார் குண்டர் படைகளை ஆந்திர அரசாங்கம் பராமரித்து வருகிறது. புரட்சியாளர்களுடன் தொடர்புடையவர் களுக்கு எதிராக பத்திரிக்கை செய்திகளை வெளி யிடுவது, இயக்கத்தின் செயல் வீரர்களின் வீடுகள் மற்றும் உடமைகளை நாசம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். காவல்துறையினர் இவர்களை வழிநடத்துகின்றனர். இந்த கும்பல் எவரையும் கொல்ல வும், கொள்ளையிடவும் உரிமை பெற்ற, அனுமதி பெற்றவர்க ளாக நடமாடுகின்றனர். மக்கள் யுத்த கட்சியின் முக்கிய ஊழியர் களை அழிக்கும் போது பணப் பரிசுகளையும் பாராட்டுகளை யும் பாதுகாப்பையும் பெறுகின் றனர்.

தோழர். லலிதாவின் கொலை மக்களிடையே பீதியை உருவாக்கவில்லை. தெலுங்கு தேச அரசாங்கத்தின் ஏகாதிபத் திய கொள்கைகளை எதிர்த்து போராடும் மக்கள் திரளினரை அச்சுறுத்தி விடவில்லை. மாறாக சிதறிக்கிடந்த சக்திகளை ஒன்று திரட்டி, ஒரு மாபெரும் சக்தியாக உருதிரட்டியுள்ளது. இவரது கொலையை எதிர்த்து போன்கீரில் ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியில் திரண்டனர். பெல்லி லலிதா போன்றவர்களின் கொடூரக் கொலைகள் எதிர்ப்பின் அலைகளை தட்டியெழுப்பி ஒரு புயலாய் மாறும். உலக வங்கியின் கைப்பாவையாக செயல்படும் நாயுடுவின் தெலுங்கு தேச அரசாங்கமும், பாசிச வெறியர்களும், கொலைகளில் இன்பம் காணும் கொடூரர்களும் மக்களது எதிர்ப்பின் பெரும் புயலில் உருத்தெரியாமல் துடைத்தெறியப்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

. . . 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

பேர்களாகி விடுவார்கள்''. என்றார்.

மாபெரும் பண்பாட்டு புரட்சியின் போது மாவோ எழுப்பிய பல்வேறு முழக்கங்கள் இந்த இலக்கைத்தான் பிரதிபலித்தன. ''புரட்சியை இறுகப்பற்றிக்கொள், உற்பத்தியை ஊக்குவி'' என்ற அழைப்பு புரட்சிக்கும் உற்பத்திக்கும் இடையிலான உறவுமுறையையும், உணர்விற்கும் பொருளுக்கும், மேல்கட்டுமானத்திற்கும் பொருளியல் அடித்தளத்திற்கும் இடையிலான உறவுகளையும் இயங்கியல் பூர்வமாக கையாண்டது. ''அரசியலை அதிகாரத்தில் வைப்போம்'', ''வர்க்கப் போராட்டத்தை ஒருபோதும் மறக்காமலிருப்போம்'' என்ற முழக்கங்களின் மூலம், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிக்கும் இடையே சரியான சமநிலையை பராமரிக்க வேண்டும் என மாவோ விரும்பினார். ''தன்னை எதிர்த்து போராடுவோம், திரிபுவாதத்தை மறுப்போம்'' என்ற அவரது அறைகூவல் போராட்டம், விமர்சனம், மாற்றம் ஆகியவற்றிற்கான ஒரு மக்கள் இயக்கத்துடன் ஒன்றிணைந்ததாக இருப்பதுடன், முதலாளிய கண்ணோட்டத்தை அதன் வேர்களிலிருந்தே ஒழிப்பதற்காக மேலும் ஆழமாகச் செல்வதற்கான முயற்சியாகும்.

சோசலிச கட்டுமானத்தின் விதிகளை புரிந்து கொள்வதற்கும், அவசியமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வடிவங்களை உருவாக்குவதிலும் மாவோவின் மாபெரும் பங்களிப்புகள் மகத்தானவை. இத்துறையில் மாவோவின் இப்பங்களிப்புகளை புரிந்து கொள்ளாமல் எதிர்காலத்தில் சோசலிசத்தைக் கட்டியமைப்பது பற்றி எந்த ஒரு கம்யூனிஸ்ட்டும் நினைத்துப் பார்க்க முடியாது.

இறுதியாக, சீனாவிற்குள் மட்டுமன்றி, சர்வதேச அரங்குகளிலும் திரிபுவாதத்தை எதிர்த்து போராடியது மாவோ தான். மாபெரும் தோழர். லெனினது மண்ணிலிருந்து, குருச்சேவ் தனது திரிபுவாத மோசடியை தூவத்துவங்கி சர்வதேச கம்யூனிச இயக்கத்தை பெரும் குழப்பத்தில் ஆழ்த்திய போது மாபெரும் சித்தாந்தப் போராட்டத்தை தலைமையேற்று நடத்தியது மாவோவும், சீன கம்யூனிஸ்ட் கட்சியும்தான். இது இரண்டாவது அகிலத்தை எதிர்த்து லெனின் நடத்திய போராட்டத்தின் புகழ்மிக்க பாரம்பரியமாகும். இந்த 'மாபெரும் விவாதத்தின்' மூலம் மாவோ துரோகிகளிடமிருந்து மார்க்சிய லெனினியத்தை பாதுகாத்தது மட்டுமன்றி, 'நவீன - திரிபுவாதத்திலிருந்து' தெளிவாக துண்டித்துக் கொண்டு உண்மையான மார்க்சிய - லெனினிய கட்சிகளை நிறுவ உலகெங்கும் உள்ள சர்வதேச கம்யூனிச சக்திகளையும் அவர் அணிதிரட்டினார். பலவண்ணத் திரிபுவாதிகளை எதிர்கொள்ள இதை ஒரு விலைமதிப்பற்ற ஆயுதமாகக் கொடுத்தது என்பது மார்க்சியத்திற்கு பங்களிப்பு செய்த ஒரு நினைவுச் சின்னமாகும்.

டெங் திரிபுவாதிகளின் பின்னடைவுகளையும் மீறி, சீன புரட்சி அடிப்படையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது தான். ஏனெனில், அதன் நிகழ்வுப்போக்கில், அது மார்க்சிய - லெனினியத்தை புதிய, உயர்ந்த கட்டத்திற்கு அதாவது மாசே துங் சிந்தனை அல்லது மாவோயிசம் என்ற கட்டத்திற்கு வளர்த்தெடுத்துள்ளது. தத்துவம், அரசியல் பொருளியல், விஞ்ஞான சோசலிசம், பாட்டாளிவர்க்க செயல் உத்திகள், கட்சி அமைப்பு, ராணுவ விஞ்ஞானம் போன்ற ஒவ்வொரு தளத்திலும் மாவோ மார்க்சிய விஞ்ஞானத்தை வளர்த்தெடுத்தார். ஒரு புதிய கம்யூனிச மனிதனை உருவாக்கும் ஹெர்குலிய முயற்சியிலும் அவர் மார்க்சியத்தை வளர்த்தெடுத்தார்.

இன்று, இந்தியாவில் தங்களை மாவோயிஸ்டுகள் என அழைத்துக் கொள்ளுபவர்கள் ஏராளம் பேர். ஆனால் அவர்கள் தங்களது அன்றாட நடைமுறையில் இக்கோட்பாடுகளை பிரயோகிப்பதில்லை. மாவோவின் பெயரை திரும்பத்திரும்ப கூறுவதால் புரட்சிக்கு எந்த பயனும் இல்லை. நாட்டின் குறிப்பான சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடைமுறையில் அவற்றை பிரயோகிப்பதில் தான் விசயம் அடங்கியுள்ளது. உண்மையான நடைமுறையில் இதை மறுப்பவர்கள் மக்கள் யுத்தத்தை தொடுப்பதற்கு அவசியமான குறைந்த பட்ச கடமைகளையும் மறுக்கின்றனர். சிலர் நாடாளுமன்ற சகதியில் சிக்கி விடுகின்றனர், வேறு சிலரோ மாவோயிச மேற்கோள்களை வறட்டுத்தனமாக, இயந்திரகதியாக உச்சரிப்பதன் மூலம் 'செங்கொடியை எதிர்க்க செங்கொடியையே வீசுகிறார்கள்'.உண்மையான மார்க்சியத்தை போலியான மார்க்சியத்திலிருந்து எப்படி வேறுபடுத்துவது என்பதை குறிப்பாக மாபெரும் பாட்டாளிவர்க்க பண்பாட்டு புரட்சியின் மூலமாக மாவோ நமக்கு போதித்தார்.

மாபெரும் சீன புரட்சியின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் இந்த 50 வது ஆண்டில், இப்புரட்சியின் புகழ்மிக்க சாதனைகளைப்பற்றி நாம் பரவலாக பிரச்சாரம் செய்வோம்! நமது நாடு முழுவதும் மாவோயிசத்தை பரந்த அளவில் பிரச்சாரம் செய்யும் பணிகளை நாம் மேற்கொள்வோம்! நமது அன்றாட நடைமுறையில் மாவோயிசத்தை பிரயோகிப்பது எப்படி என்பதைக் கற்றுணர்வோம்.




தளப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விவசாய சீர்திருத்தங்களும், கட்சிக்குள் மீண்டும் ஒரு முறை நடத்தப்பட்ட சீர்செய் இயக்கமும் செம்படையின் போர் ஆற்றலை வளர்த்தது. 1948 செப்டம்பரிலிருந்து மக்கள் விடுதலை படை மூன்று பெரும் தாக்குதல்களைத் தொடுத்தது. 1949, ஜனவரி 31ல் பீகிங் நகரம் கைப்பற்றப்பட்டது. சியாங்கே - ஷேக் மீண்டும் சமாதான நாடகமாடினான். ஆனால், சீ.க.க முன்வைத்த நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் சனநாயக குடியரசுக்கான நிபந்தனைகளை ஏற்க மறுத்தான். 1949 ஏப்ரல் 21ல் நான்கிங் நகரை ம.வி.படை கைப்பற்றி சீனாவில் 20 ஆண்டு நிலவிய கோமிங்டாங்கின் பிற்போக்கு ஆட்சி ஒழிக்கப்பட்டது. 1949 அக்டோபர் 1ல் சீன மக்கள் குடியரசின் தோற்றத்தை மாவோ உலகிற்கு அறிவித்தார்.


படிப்பகம்

www.padippakam.com

# அளப்பரிய வீரமிகு படைப்பாற்றல் மிக்க புரட்சிகர அறிவுஜீவி : தோழர். பாஸ்கர்.



1999 ஏப்ரல் 16 மாலை 7 மணியளவில் இ.க.க(மா–லெ) (மயு) வின் விசாகப்பட்டிணம் மாநகர குழுவின் செயலர் தோழர். மது (அக்கீலா பாஸ்கர்ராவ்) விசாகா விமான நிலையம் அருகே சிறப்பு உளவு பிரிவு போலீசாரால் (SIB), சாலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். மோதலில் ஒருவர் கொல்லப்பட்டதாக வழக்கம் போல் போலீஸ் கதைகட்டியது.

கிழக்கு டிவிசன் பகுதியில் இ.க.க (மா–லெ) (மயு) தலைமையில் நடைபெறும் ஆயுதம் தாங்கிய விவசாய இயக்கத்தை ஒடுக்குவதற்கு எதிரிக்கு விசாகப்பட்டிணம் ஒரு மையம் போல இருக்கிறது. ஹைதராபாத் நகரை தனக்கு பாதுகாப்பான பகுதியாக மாற்ற ஏற்கனவே எண்ணற்ற தோழர்களை எதிரி கொன்றுள்ளான். சமீபத்தில் மந்திராலயத்தில் வைத்து தோழர்கள். பிரவின், வீராசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டனர். ஹைதராபாத் மாநகருக்கு பின்னர் அதிக முக்கியத்துவம் பெற்று வரும் விசாகபட்டிணம் பல மந்திரிகள், உயர் அதிகாரிகள் போன்றோர் வந்து போகும் இடமாக மாறியுள்ளது. வட ஆந்திராவின் கடற்கரை ஏஜென்சி பகுதி எதிரிக்கு சாதகமான பகுதியாக இல்லாததால் அவர்களும் விசாகா மாநகரை தங்களது பாதுகாப்பான இடமாகக் கருதுகின்றனர். எனவே கிழக்கு பகுதியின் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்குவதில் சிறப்பு கவனத்தை மேற்கொள்கின்றனர்.

தோழர். மது, தீபக், ஜெய்பால் என விசாகாவின் ஒடுக்கப்பட்ட மக்களிடையே பிரபலமான தோழர். பாஸ்கர் பிரகாசம் மாவட்டத்தின் சிராளா நகரில் ஒரு நடுத்தரவர்க்க தலித் குடும்பத்தில் பிறந்தார். தீண்டாமையையும், சாதிபாகுபாடுகளையும் சிறு வயதிலேயே அனுபவித்த தோழர் புரட்சிகர மாணவர் இயக்கத்தில் சேர்ந்தார். உழைக்கும் மக்களின் விடுதலைக்கு இதுவே சரியான ஒரே பாதை என்பதை உணர்ந்து ஆந்திரபிரதேசின் கடற்கரைப் பகுதியில் மாணவர் இயக்கத்தை கட்டியமைப்பதில் பெரும்பங்காற்றினார். நாகர் ஜூனா பல்கலைக்கழகத்தில் ' பல்கலைக்கழக பாஸ்கர்' என மாணவர்களால் நேசிக்கப்பட்ட இவர் அனைவரிடமும் சகஜமாக பழகி அரசியல் போதித்தார். ஆளும் வர்க்க ஆதரவு குண்டர்களாக இருந்த மாணவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்து புரட்சிகர மாணவர் இயக்கத்தை பலப்படுத்தினார்.

1990 ல் முழுநேர புரட்சியாளரான இவர் விசாகாநகரில் மாணவர் அமைப்பாளர் பொறுப்பை எடுத்துக் கொண்டார். வாரங்கலில் நடைபெற்ற ரைத்து கூலி சங்க மாநாட்டிற்கு தேவையான தொண்டர் படையினரை தலைமைதாங்கி வெற்றிகரமாக நடத்தி முடிந்தார். எதிரியின் தொடர்ச்சியான, கடுமையான பின் தொடர்தலுக்கு ஆளானதால் வெளிப்படையாக செயல்பட வாய்ப்பின்றி, 1991ல் தலைமறைவானார். 1992ல் விசாகா மாநகர குழுவின் உறுப்பினரானார். ஆந்திரா பல்கலைக்கழகத்தில் மாணவிகளை இயக்கமாக்க கடுமையாக முயன்றார். விடுதி பிரச்சனை, மாணவர்களின் குண்டர்தனம், பாடம் சொல்லித் தருவதில் உள்ள சிக்கல்கள் போன்றவற்றிற்கு எதிராக பலமான மாணவிகள் இயக்கத்தைக் கட்டி வழி நடத்தினார். தலித் கிறிஸ்தவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என தலித் மாணவர்களையும், பிற பிரிவு மக்களையும் இதற்காதரவாகத் திரட்டினார்.

1996ல் நடைபெற்ற விசாகா மாநகர கட்சி மாநாட்டில் விசாகா மாநகர குழு செயலராக பொறுப்பேற்ற தோழர் தொழிலாளர்கள், பெண்கள், மற்றும் குடியுரிமை அமைப்புகளை பலப்படுத்த பெரும் முயற்சி எடுத்தார். புரட்சிகர வாழ்வில் 15 வருட அனுபவம் மிக்க தோழரான இவர் சென்ற வருடம் தனது வாழ்க்கைத் துணைவி தோழர். சாவித்திரி தியாகியான போது கூட கலங்காது நின்று தனது பணிகளை மேலும் உணர்வுடன் முன்னெடுத்தார். இந்த வீர மகனின் இறப்பிற்கு போராளி தனது செவ்வஞ்சலியை செலுத் துகிறது. அளப்பரிய வீரமிகு படைப்பாற்றல் மிக்க இந்த அறிவு ஜீவித் தோழரின் இழப்பு புரட்சிகர இயக்கத்திற்கு பேரிழப்பாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# வெள்ளை பயங்கரத்தின் இடையே
# ஜூலை 28 – தியாகிகள் தினம்

ஒவ்வொரு வருடமும் இ.க.க (மா-லெ) யின் நிறுவனத் தலைவர் தோழர். சாரு மஜும்தாரின் நினைவு நாளை - ஜூலை 28 ஐ தியாகிகள் தினமாக இ.க.க. (மா-லெ) (மக்கள் யுத்தம்) கடைபிடித்து வருகிறது. 1972 - ல் இதே தினத்தில் தான் தோழர். சாரு பாசிச இந்திரா அரசாங்கத்தால் கொல்லப் பட்டார். தோழர். சாரு தியாகியாகி 27 வருடங் களுக்கு பின்னரும் அவர் புரட்சிகர இளைஞர்களுக் கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உத்வேகமூட்டும் தலைவராக விளங்கி வருகிறார். இவரால் காட்டப் பட்ட இந்திய புரட்சிக்கான பாதை இன்னமும் இந்திய சனநாய புரட்சியின் பொதுப் பாதையாக நீடித்து வருகிறது.

தோழர். சாருவின் மரணத்திற்கு பின்னர், புரட்சிகர இயக்கத்தில் ஏற்பட்ட பின்னடைவிற்குப் பின்னர், நக்சல்பாரி பாரம்பரியத்தைக் கொண்ட கட்சிகள் என தங்களை பிரகடனப்படுத்திக் கொள்ளும் பல கட்சிகள் நாடாளுமன்ற கட்சிகளாக சீரழிந்தன அல்லது மக்கள் யுத்த பாதையை கைவிட்டன. இதற்கு மாறாக விவசாயிகளின் பகுதி போராட்டங்களுடன் தங்களை குறுக்கிக் கொண்டதுடன், அரசியல் அதிகா ரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தில் ஒரு திட்டத்துடன் அல்லது கண்ணோட்டத்துடன் மக்களின் நிலப்பிரபுத் துவ எதிர்ப்பு போராட்டங்களை கைவிட்டு விட்டன. இதற்கு நேர்மாறாக, இ.க.க. (மா-லெ)(மயு), இ.க.க. (மா-லெ) (பா-யூ) ஆகிய இரு கட்சிகளைக் கொண்ட ஒன்றுபட்ட இ.க.க. (மா-லெ) (மயு) தோழர். சாருவால் காட்டப்பட்ட பொதுப்பாதையையும் நீண்ட மக்கள் யுத்தத்தையும் நடத்தி வருகின்றது. இந்த நிகழ்வுப் போக்கில் கடந்த 20 வருடங்களில் 3000 தோழர்களை இழந்துள்ளது.

இவ்வருடமும், ஜூலை 28 முதல் மயு பெருமளவிலான பிரச்சார இயக்கத்தை மேற் கொண்டது. தியாகிகளை நினைவு கூரும் சுவ ரொட்டிகள், து.பிரசுரங்கள், தீவட்டி ஊர்வலங்கள், ஆயிரக்கணக்கான கிராமக் கூட்டங்கள் போன்றவற்றை நாடெங்கும் நடத்தியது. வட, தென் தெலுங்கானா, கிழக்கு பகுதி, ராயலசீமா மற்றும் ஆந்திராவின் பிறபகுதிகள், பிஹார், தண்டகாரண்யா, மேற்கு பெங்கால், தமிழ்நாடு, கர்நாடகா, மஹாராஷ்டிரா மற்றும் பிற பகுதிகளில் இந்நிகழ்ச்சிகள் பரவலாக நடைபெற்றன. செங்கற்கள், கற்கள், மண், மூங்கில் என கிட்டுகின்ற ஒவ்வொரு பொருட்களையும் கொண்டு தியாகிகள் நினைவு தூண்கள் எழுப்பப்பட்டன.

'தியாகிகள் வாரம்' கடைபிடிப்பது என்பது புரட்சிகர மக்களுக்கு ஒரு சவாலாகவே இருந்து வருகிறது. ஜூலை - 28 முதல் ஆகஸ்டு 3 வரையிலான ஒரு வார காலத்தில் ஆயிரக்கணக்கான போலீஸ் மற்றும் துணை ராணுவப் படையினர் தியாகிகள் தின நிகழ்ச்சிகளை தடுப்பதற்காகவே பெருமளவில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆந்திராவில் துண்டு பிரசுரம் வினியோகிப்பது, சுவரொட்டி ஒட்டுவது என்பதே துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாக்கி விடும் அளவிற்கு வெள்ளை பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இத்தருணத்தில் புரட்சிகர மக்கள் காட்டிய ஆர்வமும், அவர்களின் துணிச்சல் மிகு செயல்பாடுகளும் வியக்கத்தக்க அளவில் இருந்தது. காவல் துறையினரின் ரோந்துகளுக்கு இடையேயும், எதிரிகளின் முதுகிற்கு பின்னால் பெருமளவில் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. காவல்நிலைய சுவர் களிலேயே போஸ்டர்களை புரட்சிகர மக்கள் பதித்து எதிரிகளை நடுங்க வைத்தனர். போலீஸ் முகாமிட்டுள்ள கிராமப்புறங்களில் அவர்களது கண்ணில் மண்ணைத் தூவி முழக்கத்தோரணங்களும், சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. போலீஸ் முகாம்




**1949-52 :** இக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட விவசாய சீர்திருத்தமானது நிலப்பிரபுத்துவத்தை ஒழித்தது. ஏகாதிபத்திய, தரகு அதிகாரவர்க்க மூலதனம் கைப்பற்றப்பட்டது. தேசிய நலனுக்கு சாதகமாக இருந்த தனியார் உற்பத்தியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், 42,000 கி.மீ நீளமுள்ள அணைக்கரைகள் பழுது பாக்கப்பட்டன. ஹுவாய் நதி திட்டம், சிங் கியாங் வெள்ள தடுப்பு திட்டம் உட்பட 17,000 லட்சம் கன அடி நிலவேலை மேற்கொள்ளப்பட்டது. இது 10 பனாமா கால்வாய்களை வெட்டுவதற்கு சமமாகும். பின் தங்கிய பகுதிகளுக்கு உதவ பெரும் அளவு இருப்புப் பாதைகள் போடப்பட்டன. சிதைந்து கிடந்த சீனப் பொருளியல் மூன்றே ஆண்டுகளுக்குள் சீரமைக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

களுக்கு அருகிலேயே போலீசுக்கு ஒரு துளி தடையமும் எட்டாமல் தியாகிகள் தின கூட்டங்கள் நடைபெற்றன. தீ வட்டி ஊர்வலங்களும், தியாகிகள் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுத் தூண்களும் கட்சி மற்றும் ஆயுதம் தாங்கிய கெரில்லாக்களுக்கு மக்களிடையே இருக்கும் பெருமளவிலான ஆதரவை வெளிச்சமிட்டுக் காட்டின.

இ.க.க. (மா-லெ) (மக்கள் யுத்தம்) த்தின் பல்வேறு மாநில குழுக்களின் இதழ்கள் இதுபற்றிய செய்திகள் பலவற்றை வெளியிட்டுள்ளன. வடதெலுங்கானா சிறப்பு சோனல் கமிட்டியின் பிரஜா விமுக்தி, ஆந்திரமாநில குழுவின் கிராந்தி, தண்டகாரண்யா சிறப்பு சோனல் கமிட்டியின் பிரபாத் போன்ற இதழ்கள் தங்களது பகுதிகளின் கூட்டச் செய்திகளை வெளியிட்டிருந்தன. '98 ஜூலை 28 லிருந்து ஒரு வருடத்தில் வட தெலுங்கானாவில் 110 தோழர்களும், தென் தெலுங்கானா மற்றும் கிழக்கு பிராந்தியத்தில் 100 தோழர்களும், பிஹாரில் 30 தோழர்களும் (ரன்வீர் சேனாவினால் கொல்லப்பட்ட ஆதரவாளர்களைத் தவிர) தண்டகாரண்யாவில் 30 தோழர்களும் மொத்தம் 270 தோழர்கள் தங்களது இன்னுயிரை ஈந்துள்ளனர்.

இவர்களில் பிஹார் மாநில குழு உறுப்பினர் தோழர். நிர்மல் (சுனில்), சிங்கரேனித்தொடர் குழு செயலர் தோழர். சுரேஷ் (கில்லி ராஜலிங்கம்), நிசாமாபாத் மாவட்ட குழு உறுப்பினர் தோழர். வினோத் (ராஜி ரெட்டி) மேற்கு கரீம்நகர் மாவட்டகுழு உறுப்பினர் தோழர். ராம்சந்தர் (ரமேஷ்), கம்மம் மாவட்ட குழு உறுப்பினர் தோழர். பிரபாகர் (படே நாகேஷ்வர் ராவ்), நலகொண்டா மாவட்ட குழு செயலர் தோழர். பிரபாகர் (கிரன் குமார், மக்கா வெங்கடேஷ்வரலு), சிறிகாகுளம் மாவட்ட குழு செயலர் தோழர். காந்தி ரமேஷ், சிறிகாகுளம் மாவட்ட குழு உறுப்பினர் தோழர். பூமண்ணா, பிஹார் கோயல் கெய்மார் பகுதியின் தெற்கு மண்டல குழு உறுப்பினர் தோழர். சத்யேந்திரா, பிஹார் வடக்கு மண்டல குழு உறுப்பினர் தோழர். ராம்சீஷ் (அவதேஷ்), மற்றும் பல வட்டார குழு தோழர்களும் (ஆயுதக்குழு கமாண்டர்கள் மற்றும் துணை கமாண்டர்கள்), ஆயுதக்குழு உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள், மக்கள் திரள் அமைப்புகளின் தலைவர்கள், விவசாய சங்க தலைவர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் மற்றும் புரட்சிகர தொழிற்சங்கத்தினர் என பல்வேறு தோழர்களும் தங்களது இன்னுயிரை ஈந்துள்ளனர்.

வட தெலுங்கான்வின் 111 தியாகிகளில் 4 பேர் மாவட்டகுழு உறுப்பினர்கள், 1 சாக் செயலர், 5 சாக் உறுப்பினர்கள், 25 ஆயுதக்குழு உறுப்பினர்கள், 31 கட்சி உறுப்பினர்கள் மற்றும் ம.தி. அமைப்புகளின் தலைவர்கள், 45 பேர் இயக்க ஆதரவாளர்கள். மொத்த தியாகிகளில் 16 பேர் பெண்கள்.

தென் தெலுங்கானாவில் மேடக் மாவட்டத்தில் மட்டும் 31 தோழர்கள் தியாகியாகியுள்ளனர். இரு பெரிய தாக்குதல் சம்பவங்கள் இப்பகுதியில் இவ்வருடம் நடைபெற்றன. மார்ச் மாதத்தில் நரசாபூர் ஆயுதக் குழு முழுவதுமாக பலியானது. ஏப்ரல் மாதத்தில் தூபகா ஆயுதக்குழு தனது 6 உறுப்பினர்களை இழந்தது.

கிழக்கு டிவிசனில் கடந்த வருடம் ஆகஸ்டு மாதத்தில் கோப்பர்டங் சம்பவத்தில் 13 தோழர்கள் ஆயிரக்கணக்கான போலீசாருடன் நடந்த சுற்றிவளைத்த தாக்குதலில் வீரமரணம் அடைந்தனர்.

கடந்த ஒரு வருடத்தில் தியாகியான மொத்த தோழர்களில் சுமார் 40 பேர் பெண்கள். தோழர். பத்மாக்கா (கமாண்டர், சிறிகாகுளம்) தோழர். நிர்மலாக்கா (வடக்கு பஸ்தார்) உமாக்கா, கவிதாக்கா, இந்திராக்கா போன்றவர்கள் உட்பட பலர் தியாகியானார்கள்.

கடந்த ஒரு வருடத்தில் வீரமரணம் அடைந்த தியாக மறவர்களுக்கு போராளி தனது சிவப்பு அஞ்சலியை இத்தருணத்தில் செலுத்துகிறது. இந்திய சமூகத்தின் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம், அதிகாரவர்க்க முதலாளியம் போன்றவற்றை இந்திய மண்ணிலிருந்து தூக்கியெறிய தங்களது இன்னுயிரை ஈந்த தோழர்களின் லட்சிய கனவை போராளி தனது நெஞ்சில் சுமக்கிறது. சோசலிசம் மற்றும் கம்யூனிசத்திற்கான போராட்டத்தின் பாதையில் ரத்தம் சிந்திய தோழர்களின் பாதையில் அவர்களின் லட்சிய கனவை நனவாக்க போராடுவோம்! தியாகிகளின் படுகொலைக்கு பழிதீர்ப்போம்!

"சுரண்டும் வர்க்கத்தின் பழைய தத்துவத்தின் பழமைதன்மை எதில் உள்ளது, இது முக்கியமாக சுயநலத்தில்தான் உள்ளது. இதன் பொருள், எல்லாம் தனக்காக, சுய நலனுக்காக என்ற கண்ணோட்டத்திலிருந்து உலகைப் பார்ப்பது என்பதே. சுரண்டும் வர்க்கங்களின் சுயநலமானது முதலாளியம் வளர்வதற்கான வளமான மண்ணாகும்; அது திரிபுவாதத்தை உற்பத்தி செய்யும் முக்கிய காரணியாகும்; சோசலிச மக்கள் உடைமை பொருளியலிலை சிதைக்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு குழிபறிக்கும் வைரசாகும்... நாம் சுயநலத்தை எதிர்த்து போரிட்டு, நமக்கு எதிராகவே ஒரு புரட்சியை நடத்தாவிடில் திரிபுவாதத்தை விமர்சித்து வெறுத்தொதுக்குவதில் சிறப்பாகச் செயல்பட இயலாது. நாம் திரிபுவாதம் எது என்பதை அறிய முடியாத குருடர்களாகி விடலாம் அல்லது திரிபுவாத சதுப்புக்குழிக்குள்ளேயே கூட விழுந்துவிடலாம்".

— மாவோ.



படிப்பகம்

www.padippakam.com



# போலி மோதல்களை எதிர்த்த ஊர்வலம்.

வயது முதிர்ந்த மூதாட்டி தனது மகனை இழந்திருந்தார். புதிதாக பிறந்த ஒரு குழந்தையின் தாய் தனது கணவனை இழந்திருந்தார். நான்கு வயது சிறுவன் ஒருவன் தனது தகப்பனை பறிகொடுத்திருந்தான். ஒரு இளைஞன் தனது சகோதிரியை . . . . இப்படி ஆந்திராவின் மூலை முடுக்குகளில் நூற்றுக் கணக்கானோர் தனது உற்றார் உறவினர்களை இந்திய ஆளும் வர்க்கத்தின் கொலைக்கரங்களுக்கு காவுகொடுத்திருந்தனர். ஆளும் வர்க்கங்களின் காவல் துறையின் நரவேட்டையில் புரட்சிகர கட்சிகளின் எண்ணற்ற ஊழியர்கள் அழித்தொழிக்கப் பட்டனர்.

தனது உற்றார் உறவினர்களை இழந்திருந்த போதிலும் ஆந்திர பிரதேஷ் போலீஸ் ராஜ்யத்தின் தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கு இடையிலும் இவ்வீரத் தியாகிகளின் குடும்பத்தினர்கள் புரட்சிகர இயக்கத்துடன் இணைந்து நின்று தியாகிகளின் லட்சியத்தை நிறைவேற்ற தீர்மானித்தனர். ஆந்திர மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் ஆகஸ்டு 28ல் ஹைதராபாத் நகரில் நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தில் பங்கேற்றனர். கடந்த 30 வருடங்களாக புரட்சிகர இயக்கத்தில் போலீசாரின் போலி மோதல் படுகொலைகளுக்கு எதிராக அணிதிரண்டனர். பெற்றோர்கள், வாழ்க்கை துணைகள், குழந்தைகள் மற்றும் நண்பர்கள் என தியாகிகளின் உற்றார் உறவினர்கள் திரண்டிருந்தனர்.

ஆகஸ்டு 28ல் துல்ஜாபவனில் திரண்டிருந்த பத்திரிக்கையாளர்களிடையே தியாகிகளின் குடும்பத்தினர்கள் நெஞ்சை உருக்கும் நிஜங்களை விவரித்தனர். போலிமோதல்களில் கொல்லப்பட்டவர்களுடானான தங்களது உறவு முறைகளை பகிர்ந்து கொண்டனர். காலை 11 மணி முதல் மாலை 4 வரையிலும் இந்த நிகழ்ச்சி தொடர்ந்தது.

ரமாகாந் என பிரபலமாக அழைக்கப்பட்ட சாமி ரெட்டி என்ற தோழரின் தாய் தனது மகன் 1996 ஜுன் 23 அன்று கொடூரமாக கொல்லப்பட்டதைக் கூறினார். அவரது மனைவி சுனந்தா தனது கணவரின் 16 வருடகால புரட்சிகர வாழ்வைப் பற்றியும், 12 வருடங்களுக்கு முன்னர் தனது இல்லத்தில் கணவரை சந்தித்தது பற்றியும் கண்கலங்கக் கூறினார். “தனது ஐந்தாவது வயதில் தந்தையை இழந்த பின் தாய் எப்படி குடும்பத்தைக் காப்பாற்றினாளோ, அதே போல தனது இரு குழந்தைகளையும் காப்பாற்றிட வேண்டும்” என தோழர் ரமாகாந் மனைவியிடம் கூறியதை சுனந்தா நினைவு கூர்ந்தார்.

தோழர். கிஷன் ராவின் மனைவி கருணா, சாமையா என்ற துரோகியின் மூலமாக தோழர்கள். பூபதி, ஜெயபிரகாஷ் ஆகியோருடன் கொல்லப்பட்ட தோழர். கிஷன் பற்றியும், சாமைய்யா, மனைவி ஷோபா மற்றும் தேவேந்தர் ஆகிய துரோகிகளைக் கொண்டு தனது கணவனை ஆந்திர மாநில காவல்துறை கோழைத்தனமாக கொலை செய்ததைக் கூறினார்.

“தனது கணவர் வீட்டிற்கு வரும் போது குழந்தைகளை அவரிடம் அண்டவிடாமல் வேறெங்கோ அனுப்பி விடுவேன்” என்றார். அது எதற்கு என கேட்ட போது, “குழந்தைகளை அவரை சந்திக்கச் செய்தால் அவரது கவனம் தனது வேலைகளிலிருந்து திரும்பிவிடக்கூடும் அது அவருக்கு கடினமாகி விடும்” என காரணம் கூறியது அவரது ஆழ்ந்த உணர்வுகளையும் அர்ப்பணிப்பையும் காட்டியது.

தோழர். ஷேக் இமாமின் தாய் தனது மகனின்




1953ல் கிராமங்களின் பரஸ்பர உதவிக் குழுக்கள் கூட்டுறவுகளாகக்கப்பட்டன. உணவு தானிய விற்பனை, வாங்குதல் அரசாங்கத்தின் ஏகபோகமாக்கப்பட்டது. சீன விவசாயிகளில் 92%தினர் கூட்டுறவுகளில் இணைந்தனர். கைத்தொழில்களும் கூட கூட்டுறவுகளின் கீழ் கொணரப்பட்டன. 1956-வாக்கில் முதலாளிய தொழிலிலும் வணிகத்திலும் சோசலிச மாற்றம் விரைவாக நடந்தது. 1956ல் உற்பத்தி சக்திகளின் சோசலிச மாற்றம் முற்றுப் பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

கொலையை மூடி மறைக்க போலீசார் அவரது சடலத்தை ரயில்வே தண்டவாளத்தில் வீசியதைப் பற்றிக் கூறினார்.

இவைகள் துன்பக் கதைகளின் ஒரு பகுதியே . . . இது போன்றவை ஏராளம்! ஏராளம்! கடுமையான அடக்குமுறைக்கு இடையிலும் தியாகிகளின் உற்றார் உறவினர்கள் காட்டிய வீரமும், உறுதியும் பத்திரிக்கையாளர்களைக் கூட வியப்பில் ஆழ்த்தியது.

போலி மோதல்களுக்கு எதிரான ஒன்றுபட்ட போராட்ட குழுவினால் (USCAFE)ஏற்பாடு செய்யப்பட்ட இப் பேரணி அரசாங்கத்திற்கும், செப்டம்பர் தேர்தலில் நிற்கும் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் சில கேள்விகளையும் கோரிக்கைகளையும் முன் வைத்தது.

அரசியல் கட்சிகளுக்கு இந்த குழு கேட்டுக் கொண்டவை;

1) போலி மோதல்கள் குறித்த தங்களது நிலைபாட்டை கூறவேண்டும்.

2) போலி மோதல்களில் நக்சல்பாரிகள் கொல்லப்படுவதை கண்டனம் செய்ய வேண்டும்.

3) எல்லா போலி மோதல்கள் குறித்தும் நீதி விசாரணை செய்து குற்றவாளிகள் தண்டிக்கப் படவேண்டும்.

4) எல்லா போலி மோதல் வழக்குகளையும் கொலை குற்றத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்....

போலி மோதல் கொலைகளை நிறுத்தாவிட்டால் எந்த கட்சிக்கும் தேர்தலில் நிற்கும் உரிமை இல்லையென்றும், அதிகாரத்தில் இருக்க அருகதை இல்லையென்றும் இக்குழு தெரிவித்தது.

பர்க் லிங்கம்பள்ளி பூங்காவிலிருந்து இந்திரா பூங்காவரை நடைபெற்ற இவ்வூர்வலத்தில் தியாகிகளின் உற்றார் உறவினர்களுடன், அறிவுஜீவிகள், குடியுரிமை அமைப்புச் செயல்வீரர்கள், பண்பாட்டுச் செயல்வீரர்கள் என எண்ணற்றோர் கலந்து கொண்டனர். இந்திரா பூங்காவில் மாலை பொதுக் கூட்டம் நடைபெற்றது. போலி மோதல் கொலைகள் எதிர்ப்பு போராட்ட குழுவின் ஒருங்கிணைப்பாளரும் ஆ.பி.கு.உ. அமைப்பின் தலைவருமான ரத்னமாலா கூட்டத்தை நடத்தினார். ஆ.பி.கு.உ. அமைப்பின் செயற்குழு உறுப்பினர் எம்.டி.கான் தலைமை தாங்கினார்.

புதிய சனநாயகம், பிரஜா பிரதிகடனா, சமாஜ் வாதி கட்சி, ஜனதா தள் (எஸ்) போன்ற கட்சி பிரதிநிதிகளும் பேசினர். போலி மோதல்களை கண்டித்தனர்.

அகில இந்திய புரட்சிகர பண்பாட்டு அமைப்பின் செயலர் தோழர். கத்தார்; ஆ.பி.கு.உ. அமைப்பு செயலர் பேராசிரியர் சேசையா; தெலுங்கானா ஜன சபா ஒருங்கிணைப்பாளர் பூமையா; உத்யோக கிராந்தியின் ஜெயராமடு, விரசத்தின் செயற்குழு உறுப்பினர் வரவரராவ் போன்றோர்களும் பேசினர். தங்களிடம் வாக்கு சேகரிக்க வரும் அரசியல் கட்சி தலைவர்களிடம் போலி மோதல்களை கண்டனம் செய்யக் கோர வேண்டும் என பேச்சாளர்கள் வலியுறுத்தினர்.

பிரஜா கலா மண்டலி மற்றும் பிற கலைக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தியாகி தோழர்களின் நினைவுகூரும் ஹோலி ஹோலிரங்கா ஹோலி என்ற பிரபலமான பாடலை தோழர். கத்தார் பாடினார் . . . .


## வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

இதுவரை இருமாத இதழாக வந்து கொண்டிருந்த “People’s March” என்ற ஆங்கில இதழ் ஜனவரி 2000 முதல் மாத இதழாக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

| தனி இதழ் கட்டணம் | | ஆண்டு சந்தா | |
|---|---|---|---|
| இந்தியா, தெற்காசியா | ரூ. 10 | இந்தியா, தெற்காசியா | ரூ. 120 |
| பிற மூன்றாம் உலக நாடுகள் | $ 2.00 | பிற மூன்றாம் உலக நாடுகள் | $ 20.00 |
| இதர நாடுகள் | $ 3.00 | இதர நாடுகள் | $ 36.00 |

தொடர்புக்கு :

SUBRATA DAS
27, Shankar Ghosh Lane,
Calcutta - 700 006, West Bengal,
E-Mail : peoplemarch@hotmail.com

படியுங்கள் “People’s March” (பீபிள்ஸ் மார்ச்)




படிப்பகம்

www.padippakam.com

## போர்க்கள செய்திகள் . . .

# மக்களின் எதிரிகளுக்கு எந்த இடமும் பாதுகாப்பானதல்ல!

## ஹைதராபாத்தில் உயர்மட்ட போலீஸ் அதிகாரி அழித்தொழிப்பு

மக்களுக்கு, குறிப்பாக வடதெலுங்கானா மக்களுக்கும் இ.க.க.(மா-லெ) (மக்கள் யுத்தம்) த்திற்கும், ஒட்டுமொத்த புரட்சிகர இயக்கத்திற்கும் ஏராளமான ரத்தக் கடன் பெற்றவன் துணை ஐ.ஜி. உமேஷ் சந்திரா. ஆந்திர பிரதேச புரட்சிகர மக்களின் விருப்பத்திற்கும் கோரிக்கைக்கும் ஏற்ப இ.க.க (மா.லெ) (மயு) வின் சிறப்பு கெரில்லா குழு ஒன்று இவ்வருடம் செப்.4 அன்று நீண்டநாளாக தீர்க்கப்படாமல் இருந்த ரத்தக் கடனை தீர்த்துவிட்டது.

ஆந்திராவின் தலைநகர் ஹைதராபாத் மாநகரின் மையத்தில் பட்டப்பகலில் இந்த கெரில்லா நடவடிக்கை நடைபெற்றது. அன்று காலை 11 மணியளவில் போக்குவரத்து நெரிசல்மிக்க சந்திப்பு ஒன்றில் பச்சைவிளக்கு சமிச்சைக்காக தனது மெய்காவலனுடன் வேனில் இருந்து கொண்டிருந்த துணை ஐ.ஜியின் மீது கெரில்லாக்கள் தாக்குதலைத் தொடங்கினர், காயமடைந்த காவல்துறை அதிகாரி தப்பிஓட முயன்றபோது, நெரிசல்மிக்க சாலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டான். அவனது மெய்காப்பாளனும் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டான். பின்னர், கெரில்லாக்கள் பாதுகாப்புடன் பின்வாங்கி விட்டனர். பீதியில் உறைந்து போன ஆ.பி. அரசாங்கம், மாநிலம் முழுவதும் உசார் படுத்தியது. மாநகரின் எல்லைகளை மூடியது. நகரைவிட்டு வெளியேறிய வாகனங்களை சோதனையிட்டது. பல குடியிருப்பு பகுதிகளில் சல்லடையிட்டு தேடியது. ஆனால், கெரில்லாக்கள் பற்றி எந்த ஒரு தடையத்தையும் பெறவில்லை கடந்த இரு வருடங்களாக கடுமையான இழப்புகளை ஹைதராபாத்தில் கட்சி சந்தித்த போதும், எந்த ஒரு தடையமுமின்றி கெரில்லாக்கள் தப்பிச் சென்றது இ.க.க (மா-லெ) (மயு) ஹைதராபாத் மாநகரில் பெற்றுள்ள ஆதரவைக் காட்டுகிறது.

1993-94ல் வாரங்கல் மாவட்டத்தில் உமேஷ் சந்திரா காவல்துறை துணை கண்காணிப்பாளராக (ASP) இருந்த போது வட தெலுங்கானாவில் தனது ரத்த சரித்திரத்தை எழுதத்துவங்கினான். இதே மாவட்டத்தில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான துணை கண்காணிப்பாளராக வேலை செய்த போது மேலும் தொடர்ந்தான். இக்கால்கட்டத்தில், புரட்சிகர இயக்கத்தின் பல்வேறு கட்சி ஊழியர்கள் மற்றும் செயல்வீரர்கள் வாரங்கல் மாவட்டத்தில் கொல்லப்பட்டனர். பின்னர் சிலகாலம் கடப்பாவில் எஸ்.பி யாக வேலை செய்து விட்டு மீண்டும் 1997ல் வடதெலுங்கானாவின் கரீம்நகர் மாவட்டத்திற்கு எஸ்.பிஆனான். 1998 ஏப்ரலில் இவனது இடமாற்றத்தை ரத்து செய்யக்கோரி, காவல் துறையில் உள்ள இவனது கையாட்களை வைத்து கரீம்நகர் நகரத்தில் கொள்ளை, கலவரம் மற்றும் வன்முறை சம்பவங்களில் ஈடுபடச் செய்தான். மக்களின் பலத்த எதிர்ப்பிற்கு பின்னர், அக் காவலர் கலவரத்தை இவன் கட்டுப்படுத்தவில்லை (?) என தற்காலிக நீக்கம் செய்யப்பட்டான். சந்திரபாபு நாயுடுவின் நெருங்கிய உறவினரான இவனுக்கு 1998 நவம்பரில் துணை ஐ.ஜி பதவி உயர்வு கொடுத்து வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

எப்போதெல்லாம் இவன் வேலையில் அமர்த்தப் பட்டானோ, அப்போது அவன் பெரு நிலப்பிரபுக்கள் மற்றும் தரகுமுதலாளிகளுக்கு மிகவும் விசுவாசமான நாயைப் போல வேலை செய்தான். மக்கள் யுத்தத்தின் கெரில்லா குழுக்களை அழித்தொழிக்க அடக்குமுறை இயக்கங்களை தலைமை தாங்கினான். பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளின் செயல்வீரர்கள், கட்சி ஊழியர்களுக்கு உணவு வழங்கிய ஆதரவாளர்கள் உட்பட, ம.யுவின் தலைமையையும் கண் ணவைத்திருந்தான்.



1949ல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், சீன சமுதாயத்தில் முதன்மை முரண்பாடானது பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலானதாக மாறியது. இக்கட்டத்தின் வர்க்கப் போராட்டம் இரண்டு அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. முதலாவது, பழைய சமூகத்தின் மிச்ச சொச்சங்களை எதிர்த்தது. இரண்டாவது, கட்சிக்குள்ளும் இயக்கத்துக்குள்ளுமிருந்த முதலாளிய கண்ணோட்டங்களை எதிர்த்த போராட்டமாகும்.


படிப்பகம்

www.padippakam.com

கடப்பாவின் எஸ்.பியாக இருக்கும் போது தான் குட்டாபள்ளி "மோதல்" நடைபெற்றது. இதில் ஆந்திர மாநில குழு உறுப்பினர் தோழர். ரெட்டப்பா, ராயல சீமா ரீஜினல் கமிட்டி தோழர். வெங்கடசாமி மற்றும் இரு தோழர்கள் 1996 ஏப்ரல் 14ல் கொல்லப் பட்டனர். பல்வேறு பகுதியிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட இவர்களை குட்டாபள்ளியில் வைத்து 'மோதல்' என்ற பெயரில் கொலை செய்தான்.

மேலும், கரீம்நகரில் எஸ்.பி யாக இருக்கும் போதுதான் ஜோடல நாகராஜ் என்ற முன்னாள் ம.யு ஆயுதக்குழு உறுப்பினரை கட்சிக்குள் அனுப்பி உயர் மட்ட தலைவர்களை கொலை செய்யும் கேவலமான சதிச்செயலை மேற்கொண்டான். இவனது இச்சதியின் போது வட தெலுங்கானா சிறப்பு மண்டல கமிட்டியின் தோழர். மல்காபுரம் பாஸ்கர் (ரமேஷ்,விஜய்) கொல் லப்பட்டார். ஏற்கனவே போலீசில் சரணடைந்த நாகராஜ் சுயவிமர்சனமும், மன்னிப்பும் கேட்டுக் கொண்டு ஆயுதக் குழுவில் இணைந்து பணியாற்றி னான். ஆளும் வர்க்கச் சதியில் சிக்கிய இந்த நாய், காவல் பணிப் பொறுப்பை ஏற்றிருந்த வேளையில் சதியை நிறைவேற்ற தூங்கிக் கொண்டிருந்த தோழர். பாஸ்கரை சுட்டுக் கொன்றுவிட்டு தனது எஜமான் உமேஷ் சந்திராவைச் சந்திக்க இருட்டில் ஓடி மறைந்து விட்டது. இந்த துரோகிக்கு போலீஸ் தலைமை அலுவலகத்தில் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. போலீஸ் காவல், துப்பாக்கி உரிமம், பெரும் பணப் பரிசு போன்றவை வழங்கப்பட்டது. இந்த கேவலமான சதிக்கு காரணகர்த்தாவாக விளங்கியது உமேஷ் சந்திராதான். உமேஷ் தனது பதவிக் காலத்தில் 20க்கும் மேற்பட்ட மயு ஊழியர்களையும் ஆதரவாளர்களையும் "மோதல்களில்" கொன்றான்.

ஆந்திராவில், 1960 களின் இறுதியில் சிறிகா குளத்தில் இயக்கத்தை முழுமையாக ஒழிந்தது போல தற்போதும் ஒழித்துவிட்டோம் என அறிக்கைகளை விட்டுக் கொண்டிருந்த போலீஸ் ஜெனரல் டோரா, முதல்வர் சந்திரபாபு, உள்துறை அமைச்சர் மாதவ ரெட்டி போன்றவர்களுக்கு செப்.4 சம்பவம் பெரும் கலக்கத்தைக் கொடுத்தது. பட்டப்பகலில், மாநில தலைநகரில் நடைபெற்ற கெரில்லா தாக்குதல் மரணபயத்தை ஏற்படுத்தியது. ஆந்திராவிலும், வட தெலுங்கானாவிலும் மக்கள் தலைவர்களின் ரத்தத்தில் கைநனைத்து விட்டு ஹைதராபாத்தில் போலீஸ் காவலில் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்த மோச மான அதிகாரிகள், அரசியல்வாதிகள், காவல்துறை அதிகாரிகள் போன்றோரை இச்சம்பவம் குலை நடுங் கச்செய்தது. எக்ஸ், ஒய், இசட் பிரிவு என மெய்காப் பாளர்களை வைத்துக்கொண்டு பாதுகாப்பாக இருக் கலாம் எனக் கருதும் வெறுக்கத்தக்க மக்கள் விரோதி களுக்கு இந்த மண்ணில் எங்கும் "பாதுகாப்பான" இடம் இருக்கப் போவதில்லை என இச் சம்பவம் நிரூபித்தது. எத்தனையோ இடர்கள் இருந்தாலும் எதிரிகளின் ரத்தக்கடனை மக்கள் கெரில்லாக்கள் தீர்ப்பார்கள் எனவும் இச்சம்பவம் பறைசாற்றியது.

# சித்தன்ன கௌடாவின் அழித்தொழிப்பு -

## கர்நாடகத்தின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டத்தில் ஒரு முன்னேற்றம்!

1999 ஜூன் 19 அன்று மாலை மிகவும் வெறுக்கத்தக்க கொடுமையான ஒடுக்குமுறையாளனான சித்தன்ன கௌடா, அவனது ஓர்ச்சாப் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டான். மக்கள் யுத்த கட்சியின் கெரில்லா குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. இது பகுதி நிலப்பிரபுக்களுக்கும் காவல் துறையினருக்கும் கோடை காலத்திலும் பெரும் குளிரைக் கொடுத்தது.

கர்நாடகத்தின் ரெய்ச்சூர் மற்றும் அதையொட்டிய கிராமப்புறங்களில் மக்கள் மீது எல்லையற்ற கொடுமைகள் புரிந்து வந்த சித்தன்ன கௌடா, சமீபகாலமாக, சில வருடங்களாக கர்நாடக ரயத்து கூலி சங்கத்தின் செயல் பாடுகளில் தலையிடுவதிலி ருந்து விலகியே இருந்தான். இவன் மட்டுமன்றி, இவனது தலைமையின் கீழ் இருந்த பல நிலப்பிரபுக்க ளும் இவ்வாறு ஒதுங்கியே இருந்தனர். ஆனால், போலீசின் வற்புறுத்தல் மற்றும் தலையீட்டின் காரணமாக இவர்கள் தங்களது வாலை மீண்டும் ஆட்டத்துவங்கினர். போராடும் மக்களின் மீது காவல் துறையினரும், நிர்வாகத்துறை அதிகாரிகளும் வெட்க மின்றி ஒடுக்குமுறைகளை தொடர்ந்தனர். விவசாயி களின் மேம்பட்ட வாழ்விற்கான போராட்டத்தை கீழ்படுத்த களமிறங்கினர். விவசாய இளைஞர்கள் மீது பொய் வழக்குகளை புனைந்தனர். மக்கள் ஒற்றுமை யின் நினைவுச்சின்னங்களாக நின்று கொண்டிருந்த கொடிக்கம்பங்களை வீழ்த்தி கொடிகளை கிழித்தெறிந் தனர். சட்டவிரோத கைதுகளை நடத்தி காவல் நிலை யங்களில் வைத்து மக்களை அடித்து துவைத்தனர். ரைஷ்வானா பேகம் என்ற துணிச்சல் மிகு இளைஞி சென்றவருடம் ஜூன் மாதத்தில் அமைப்பில் சேர்ந்த போது, அவர் கடத்தப்பட்டதாக வழக்கு புனைந்து 7 பேர்களை கைது செய்து, ஒரு வருடத்திற்கு மேல் இதுவரையிலும் ஜாமின் வழங்கவில்லை. எல்லா



படிப்பகம்

www.padippakam.com

மேல் முறையீடுகளும் மறுக்கப்பட்டன. இதனால், மற்ற அமைப்பாளர்கள் அனைவரும் தலைமறைவாக பணியாற்ற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

நிலப்பிரபுக்களிடமிருந்து பெரும் தொகையை லஞ்சமாக பெற்றுக் கொண்டு காவல் துறையினர் கிராமங்களில் வெறியாட்டம் போட்டனர். 20-30 பேர்களாக வந்து வீடுகளிலிருந்த உடைமைகளை சூறையாடினர். பெண்களிடம் தவறாக நடந்தனர். கிராமங்கள் தோறும் பயங்கர நிலையை தோற்றுவித்தனர். "நக்சலியம் என்பது ஒரு சமூக பொருளியல் பிரச்சனை" என பத்திரிக்கைகளில் முழங்கிவிட்டு, அதை தீர்ப்பதற்கு எதையும் செய்யாமல் இருந்தனர்.

சித்தன்ன கௌடா நிலப்பிரபுக்களின் தலைவனாக இம்முறை மீண்டும் செயல்பட்டான். சில கூலிப் படையினருடன் கிராமங்களை வலம் வந்தான். கே. ஆர்.சி.எஸ் உறுப்பினர்களை அடித்து, உதைத்ததுடன் கொலை மிரட்டலும் செய்தான். தலித் மக்களை அவர்களின் சாதிப் பெயர்களைச் சொல்லி அழைப்பதில் பெரும் இன்பம் கண்டு வந்தான்.

ஆந்திராவின் கர்நூல் பகுதியிலிருந்து அழைத்து வரப்பட்ட குண்டர்களைக் கொண்டு புரட்சியாளர்களை ஒழித்துக்கட்ட எண்ணினான். இதற்கு பிற நிலப்பிரபுக்களும், சப்-இன்ஸ்பெக்டர் காசியும் முழு ஆதரவு வழங்கினர். இந்த கொலைக்கும்பலின் கைகளில் தான் தோழர். புத்தண்ணா இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் கொல்லப்பட்டார். மக்கள் யுத்த கட்சியின் தீவிர ஆதரவாளரான புத்தண்ணா, தண்ணீர் குடத்துடன் கௌடாவின் கிணற்றின் சுவர் மீது ஏறிச்சென்றது தான் அவர் செய்த குற்றம். ஆனால் காவல்துறையோ, அவர் நீரில் மூழ்கி தற்கொலை செய்ததாகக் கூறியது.

"நக்சலைட்டுகள் சமூக அமைதியைக் கெடுத்து விட்டார்கள்" என கூக்குரலிட்டு வந்த நிர்வாகத்துறையினர், வன்முறைச் செயல்கள் நடந்து கொண்டிருந்த போது என்ன செய்து கொண்டிருந்தனர்?

அப்பன்னடோடியின் நிலப்பிரபு நரசிம்மலு வன்முறைச் செயல்களை செய்து கொண்டிருந்த போது இவர்கள் என்ன செய்தனர். பல விவசாயிகளின் நிலங்களை அபகரித்து கிராமமக்களை அடித்து துன்புறுத்தி, தண்டம் போட்டு, தண்டனை கொடுப்பவன், பெண்களை பாலியல் கொடுமைகள் புரிபவன். இவனது மகன்களும், உறவினர்களும் கிராமங்களை ஆட்டிப்படைத்து வந்தனர். சில காலமாக வாலைச் சுருட்டி வைத்திருந்த இவன் தற்போது போலீஸ் துணையுடன் மீண்டும் துளிர்விட்டுள்ளான். கே.ஆர். சி.எஸ் செயல் வீரர்களை பழிதீர்க்க துடித்துக் கொண்டு, காவல்துறையினர்களுக்கு பெரும் விருந்து படைத்து வருகிறான். காசி போன்ற போலீஸ் அதிகாரிகள் குடித்து கும்மாளமடிக்கின்றனர்.

இவர்களின் கொட்டம் போதும் ! இனியும் பொறுக்க முடியாது என விவசாயிகள் பொறுமினர். அப்போது, மயு ஆயுதக்குழு இவன் மீது தாக்குதல் நடத்தியதில் உயிர்பிழைத்துக் கொண்டான்.

நரசிம்மலு விவசாயிகளிடமிருந்து கைப்பற்றிய நிலங்களை மக்களுக்கு மீட்டுத்தருவதாக அப்போது கூறிய துணை கமிசனரும், டி.எஸ்.பியும் இப்போது நரசிம்மலுவுடன் கரம் கோர்த்துக் கொண்டு விவசாயிகளை ஒடுக்கி, நிலத்தை மீண்டும் கைப்பற்றி கண்மூடித்தனமான வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

இதுபோல அத்கூர் கிராமத்தின் ஹரி ஷாகுகார் என்ற நிலப்பிரபுவும் போலீசுடன் சேர்ந்து தலித் மக்களின் மீது தாக்குதல் தொடுத்து ஒரு தலித் குடும்பத்தின் நிலத்தை மீண்டும் அபகரித்துள்ளான். இது போன்ற பிற்போக்காளர்களின் வன்முறைச் செயல்களை பட்டியல் போடலாம். பட்டம்மா, ஷேஷா ரெட்டி, டோடா பாசையா . . . என எல்லா நிலப்பிரபுக்கள், காட்டிக் கொடுப்பவர்கள், காவல் துறையினர், அதிகாரவர்க்கத்தினர் என பிற்போக்காளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கின்றனர். பல ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களைக் கொண்டு, டி.எஸ்.பி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட சிறப்பு பணிப்படையினர் மக்கள் யுத்த கட்சியின் அமைப்பாளர்களை வேட்டையாடிக் கொல்ல அலைகின்றனர். நவீன தானியங்கி துப்பாக்கிகளும், எல்.எம்.ஜி துப்பாக்கியும் கூட இந்த பின்தங்கிய கிராமப்புறங்களில் வலம் வருகின்றன.




ஊழல், வீணாக்குதல், அதிகாரவர்க்கப் போக்கு ஆகியவற்றை எதிர்த்து 'சன்பான்' இயக்கம், அரசு ஊழியர்களின் லஞ்சம், வரி ஏய்ப்பு, அரசு சொத்துக்களை திருடுதல், அரசு ஒப்பந்தங்களில் மோசடி, பொருளியல் தகவல்களை திருடுதல் ஆகியவற்றை எதிர்த்து 'ஊபான்' இயக்கமும் நடத்தப்பட்டன. இவை அரசாங்க உறுப்புக்களை தூய்மைப்படுத்தவும், கட்டுப்பாடு, ஆக்கத்திறனை அதிகரிக்கவும், மக்களுடனான நல்லுறவை ஏற்படுத்தவும் உதவின. முதலாளிய வணிகர்களின் சட்ட விரோத செயல்பாடுகளை ஒழித்து, அவற்றை அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன.

www.padippakam.com

ரெய்ச்சூர் மாவட்டத்தில் விவசாயிகளின் வாழ்க்கை தாங்கமுடியா துயரங்களுக்குள்ளாகியது. இத் தருணத்தில் தான் சித்தன்ன கெளடா அழித்தொழிக்கப் பட்டான்.

இது இப்பகுதி மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை தோற்றுவித்துள்ளது. நம்பமுடியா மகிழ்வில் ஒவ்வொரு கிராமத்தின் ஏழைமக்களும் இவனது மரணத்தை விருந்துண்டுக் களித்தனர்.

ஜுலை மாதத்தின் இறுதி வாரத்தில் மக்கள் யுத்த கட்சி தியாகிகள் தின நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகளை செய்திருந்தது. கட்சியின் தலைமறைவு அமைப்பாளர்கள் நடத்திய இக்கூட்டங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். "கிராமங்களில் உள்ள அனைவரும் எங்களோடு கரம் குலுக்க ஆவலாய் இருந்தனர். ஒவ்வொருவராய் கரம் குலுக்கி முடித்த போது எங்கள் கரங்களில் ஏற்பட்ட இதமான வலிக்கு சிறிது ஒத்தடம் கொடுக்க வேண்டியிருந்தது" என ஒரு அமைப்பாளர் கூறினார்.

சித்தன்ன கெளடா ரெய்ச்சூருக்கு தேவையற்ற ஒன்றாகி விட்டான் ! ரெய்ச்சூர், இவன் இல்லாமல் நன்றாக இருப்பதாக உணர்கிறது!!

## *1999, செப்டம்பர் மாதத்தில் மக்கள் யுத்த கெரில்லாக்களின் தாக்குதல்கள்*

*இந்தியாவில் முன்னேறிக் கொண்டிருக்கும் மக்கள் யுத்தம் 1999 செப்டம்பரில், குறிப்பாக ஆந்திரா மற்றும் பிஹாரில் மேலும் பல வெற்றிகளைக் கண்டுள்ளது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி மக்கள் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளில் இந்திய ஆளும் வர்க்கங்கள் மேலும் அதிக அளவில் படைகளை குவித்து அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருந்த போதிலும், 1999, செப்டம்பர் மாதத்தில் மட்டுமே மக்கள் யுத்த கட்சியின் கெரில்லாக்கள் பல தாக்குதல்களை பிற்போக்காளர்களுக்கும், அரசின் ஆயுதப் படைகளுக்கும் எதிராக நடத்தியுள்ளனர். அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கு காண்போம்.*

● கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் ஜெட்டாங்கி என்ற கிராமத்திற்கு அருகே, மோட்டார் பைக்கில் வந்து கொண்டிருந்த காவலர்கள் மீது கெரில்லாக்கள் செப்டம்பர் முதல் தேதியன்று தாக்குதல் தொடுத்தனர். இதில் உதவி ஆய்வாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு காவலர்கள் பலத்த காயமடைந்தனர்.

● செப்டம்பர் 4 அன்று மிகவும் மோசமான வெறுக்கத்தக்க மக்கள் விரோதியான உமேஷ்சந்திரா என்ற போலீஸ் ஐ.ஜி ஹைதராபாத் நகரில், பட்டப்பகலில் மக்கள் யுத்த கட்சியின் சிறப்பு கெரில்லா குழுவினரால் அழித்தொழிக்கப்பட்டான். இவனது மெய்காப்பாளர்கள் இருவரும் அழித்தொழிக்கபட்டனர். (விரிவான செய்தி–பக்கம் 49)

● செப்டம்பர் 5 அன்று, வாரங்கல் மாவட்டத்தில் பார்கல் நகரில், நெருக்கமான சந்தை ஒன்றில் வைத்து ஒரு சிறப்பு காவல்படை போலீஸ் சுட்டுக்கொல்லப்பட்டான். இவரிடம் இருந்த எ.கே. 47 ரக துப்பாக்கியை கெரில்லாக்கள் கைப்பற்றிச் சென்றனர்.

● செப்டம்பர் – 13. மேடக் மாவட்டத்தில், நிசாமாபாத் மாவட்ட எல்லையில் அமைந்துள்ள பாப்பனா பேட் காவல் நிலையத்தின் மீது மக்கள் யுத்த கெரில்லாக்கள் அதிரடித்தாக்குதல் நடத்தினர். ஒரு தலைமைக் காவலர் உட்பட ஐந்து போலீசார் கொல்லப்பட்டனர். காவல் நிலையத்தின் மேல்தளத்தில் இருந்த காவலர்கள் சரணடைய மறுத்த போது, காவல்நிலைய கட்டிடம் வெடிவைத்து தகர்க்கப்பட்டது. அதேவேளையில், உதவி ஆய்வாளரின் இல்லத்திலும் கெரில்லாக்கள் அதிரடி தாக்குதல் நடத்தி அவரது கைத்துப்பாக்கியை பறிமுதல் செய்தனர். மூன்று எல்.எல்.ஆர் துப்பாக்கி உட்பட 13 துப்பாக்கிகளை காவல் நிலையத்திலிருந்து கெரில்லாக்கள் கைப்பற்றினர். சற்று நேரத்திற்குள் எதிரிப்படைகள் குவிக்கப்பட்ட போதிலும், கெரில்லாக்கள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டே எந்த சேதங்களும் இன்றி பின்வாங்கி விட்டனர்.

● செப்டம்பர் – 15, ஆந்திர மாநிலத்தில் இரண்டாவது கட்ட தேர்தலுக்கும் மூன்று தினங்களுக்கு முன்னர் தெலுகு தேச கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் புருசோத்தம் ராவ் தனது 3 குண்டர்களுடன் சுட்டுக் கொல்லப்பட்டான். அடிலாபாத் மாவட்டத்தில் சிர்பூர் சட்டமன்ற தொகுதியின் இன்னாள் சட்டமன்ற உறுப்பினரான புருசோத்தம் ராவ் தனது கட்சி அலுவலகத்தில் கட்சி செயல் வீரர்களுடன் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த போது தெலுகு தேச கட்சித் தொண்டர்களைப்போல உடையணிந்து கொண்டு சென்ற மக்கள் யுத்த கெரில்லாக்களால் கொல்லப்பட்டான். இவனது மெய்காப்பாளர்களிடமிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

● செப்டம்பர் –20, கரீம்நகர் மாவட்டத்தில் மஹாமுத்தாராம் மண்டலின் வனப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்திக் கொண்டிருந்த காவல் துறையினரின் ஒரு அணி மீது பதுங்கு தாக்குதல் நடத்தப்பட்டது. உதவி ஆய்வாளர் ஒருவர் உட்பட 4 காவலர்கள் ஒழிக்கப்பட்டனர்.

22 காவலர்களைக் கொண்ட சிறப்பு காவல் படையினர் அணி ஒன்று துப்பாபடு என்ற கிராமத்தின் அருகே உள்ள பாலம் ஒன்றை கடந்து செல்ல முயன்ற போது மக்கள் யுத்த கெரில்லாக்கள் இந்த பதுங்குதாக்குதலை நடத்தினர். டிராக்டர் ஒன்றில் பயணம் செய்து வந்த காவலர்கள் பாலத்தை கடப்பதற்காக மூன்று அணிகளாக பிரிந்து கொண்டு, முதல் அணியினர் பாலத்தை கடந்து சென்றுவிட்டனர். உதவி ஆய்வாளர் தலைமையிலான அணியினர் இரண்டாவதாக பாலத்தைக் கடந்து செல்லும் போது கெரில்லாக்களின் கண்ணி வெடியில் சிக்கினர். பின்னர் போலீசுக்கும் கெரில்லாக்களுக்கும் இடையே ஒரு மணிநேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. ஆனால், கெரில்லாக்கள் எந்த சேதமுமின்றி பாதுகாப்பாக பின்வாங்கி விட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

மற்றுமொரு சம்பவத்தில், ரயில்வே பாதுகாப்பு படையினரிடம் இருந்து 4 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. அடிலாபாத் மாவட்டத்தில் பவோத் பகுதியில் இவர்கள் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது கெரில்லாக்கள் ரயிலை நிறுத்தி ஆயுதங் களை கைப்பற்றிச் சென்று விட்டனர்.

செப்டம்பர் மாதத்தில் மட்டுமே நடைபெற்ற இந்த தாக்குதல்கள் ஆந்திர மாநில காவல்துறை அதிகாரிகள், பல்வேறு ஆளும் வர்க்க கட்சித் தலைவர்கள் மற்றும் பிற பிற்போக்காளர்கள் மத்தியில் பெரும் பீதியை உருவாக்கியுள்ளது. கண்ணிவெடிகளில் இருந்து தப்பிப்பதற்காக இஸ்ரேலில் செய்யப்பட்ட 'கண்ணி வெடி-பாதுகாப்பு' வாகனங்களை பெரும் செலவில் இறக்குமதி செய்ய காவல்துறையினர் பெரும் முயற்சி செய்து வருகின்றனர்.

ஆனால்; இந்த கண்ணி வெடி – பாதுகாப்பு வாகனங்களும், அதிநவீன ஆயுதங்களும் இவர்களை மக்களின் தீர்ப்பிலிருந்து பாதுகாக்குமா?

# மக்கள் விரோதிகள் முதலாளிய சட்டங்களிலிருந்து தப்பலாம்! மக்களின் தீர்ப்பிலிருந்து தப்பமுடியாது.!

கோஷ்டி மோதல்களின் களமான ராயலசீமா பகுதியின் கர்னூல் மாவட்டத்தில் அத்மகூர் பகுதியின் மிக மோசமான தெலுகு தேச கட்சித் தலைவன் புத்தா வெங்கல் ரெட்டி என்பவன். சமூகரீதியாக மிகவும் ஒடுக்கப்பட்ட ஏழை தலித் மக்களையும், பிற பிற்படுத்தப்பட்ட சாதியைச் சார்ந்த நிலமற்ற கூலி ஏழை விவசாயிகளின் ரத்தம் படிந்த கரங்களுக்குச் சொந்தமான இவன் எண்ணற்ற ஏழை மக்களை கொன்று குவித்தவன். "அரண்மனைச்சதி" யின் மூலம் மாமனார் என்.டி.ராமராவின் ஆட்சியைப் பிடித்த 'உயர் தொழில் நுட்ப' சந்திரபாபு நாயுடுவின் தெலுகு தேச கட்சியில் இவன், ஒரு தலைவனாக மாறியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

1970களில் ஒரு சாராய வியாபாரியாக இருந்த வெங்கல்ரெட்டி வெல்பனூர் கிராம பஞ்சாயத்து தலைவராக தனது அரசியல் வாழ்வைத் துவங்கி இறுதியில் மந்திரியாக மாறியவன். பஞ்சாயத்து தலைவராக இருக்கும் போது அத்மகூர் பஞ்சாயத்து தலைவர் ஹீசைன் சாப் என்பவரைக் கொலை செய்ததுடன், இச் சம்பவத்திற்கு சாட்சியாக இருந்த ஒருவ்ரை பேருந்து நிலையத்தில் வைத்து கொன்றான். தனது காருக்கு வழிவிடாத ஒரு லாறி ஓட்டுனரை கொலை செய்தான் என்பது இவனது நிலப்பிரபுத்துவ அராஜகத்திற்கு ஒரு உதாரணமாகும். அத்மகூர் எம்.எல்.ஏயாக இருக்கும் போதும், பின்னர் மாநில மந்திரியாகிய போதும் இவனது கொடுமைகள் தொடர்ந்து அதிகரித்து வந்தன. சாராய ஒப்பந்தங்கள், சாலைகள் மற்றும் பிற ஒப்பந்தங்களை எடுப்பதற்கு தடையாக நிற்கும் எவரையும் கொன்றொழிப்பது, அல்லது ஒப்பந்தங்களை வேறுயாரேனும் எடுத்தால் இவனுக்கு அதில் பங்கு கொடுக்காவிட்டால் அவர்களை கொல்லுவது என இவனது கொலைவெறி தொடர்ந்தது. வெங்கல் ரெட்டியின் கொலைக் கும்பலுக்கு பயந்து கிராமங்களைவிட்டு ஓடியவர்களது நிலங்களை இவன் தனது குண்டர் படையினர்களுக்கு வழங்கி அவர்களைப் பராமரித்து வந்தான். இவனது மகன் சீத்தாராமரெட்டியும், இவனும் பெண்களிடம் தவறாக நடப்பதில் மிகவும் மோசமானவர்கள்.

அதுமட்டுமன்றி முற்போக்கு இளைஞர் அணி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிராக பொய் வழக்குகளை புனைந்து வந்தவன். பிற புரட்சிகர ம.தி.அமைப்புகளின் செயல்பாடுகளுக்கும் பெரும் தடையாக விளங்கியவன். சென்ற வருடம் ஜூலை 17ல் இவனது கொலை வெறி கும்பல் அத்மகூர் மண்டலின் வெம்பன்டா கிராமத்தில் தலித் மக்கள் (மாதிகா) குடியிருப்பு பகுதியில் புகுந்து வீடுகளுக்கு தீ மூட்டி 5 பேர்களை கொன்றனர். மேலும் இச்சம்பவத்தில் 4 பிற்பட்ட சாதியினரும் இவர்களால் கொல்லப்பட்டனர். இவர்களது உடலை எரியும் நெருப்பில் வீசிய இக்கும்பலுக்கு எதிராகவும், இதன்

தொடர்ச்சி ... 58 ஆம் பக்கம்




இக்கட்டத்தில் அறிவு ஜீவிகளின் தத்துவார்த்த கண்ணோட்டத்தை மறுவார்ப்பு செய்ய, மக்கள் திரள் சார்ந்த விமர்சன - சுயவிமர்சன இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் அறிவு ஜீவிகளில் பலர் சோசலிச சமுதாயத்தின் ஆதரவாளர்களாக்கப்பட்டனர். கட்சிக்குள்ளும் பண்பாட்டுத் தளத்திலும் முதலாளிய சனநாயக அமைப்பை கட்டிக்காக்க முயன்ற தவறான போக்கிற்கெதிராகவும் கடும் போராட்டம் நடத்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# பிஹாரிலிருந்து மேற்கு வங்கத்திற்கு பரவும் மக்கள் யுத்தத்தின் மீதான எம்.சி.சி யின் யுத்தம்

சமீபத்தில் இ.க.க (மா-லெ) (மக்கள் யுத்தம்) த்தின் மேற்கு வங்க மாநில குழு உறுப்பினர் மீது எம்.சி.சி ஒரு கொடூரத் தாக்குதலை நடத்தியுள்ளது. மேற்கு வங்கத்தின் மிட்னாபூர் மாவட்டத்தில் உள்ள பெல்பகாரி வட்டத்தில் பன்ஸ்பகாரி பகுதியில் தோழர். மலாய் கோஷ் என்பவர் மீது தான் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. பெரும்பாலும் பெல்பகாரி பகுதிக்கு வெளியேயிருந்து பெங்கால் - பிஹார் எல்லைப் பகுதியின் பல்வேறு இடங்களிலிருந்து திரட்டப் பட்டிருந்த எம்.சி.சி ஊழியர்கள் இதை மேற்கொண்டனர். அவரது கைகளை பின்புறமாகக் கட்டி, மூங்கில், தடி போன்றவைகளைக் கொண்டு கடுமையாக தாக்கினார்கள். இதில் அவரது தலை எலும்பு உடைந்தது. தாக்குதலின் போர்து மோசமான வசைபாடுதலும் வெளிப்பட்டது. ஒவ்வொருவரின் பகுதியில் மற்றவர் நுழைந்து வேலைசெய்யக் கூடாது என இரு கட்சிகளின் மைய குழுக்களும் எடுத்த முடிவை அவர் மீறியதால் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர்களின் தலைவர் ஒருவர் கூறினர். இதைகேட்டு, சம்பவ இடத்தில் கூடியிருந்த உள்ளூர் விவசாயிகள், பிப்ளவி கிரிஷாக் மஸ்தூர் சமதி (புரட்சிகர விவசாய தொழிலாளர்கள் அமைப்பு BKMS) யினர் குழப்பமடைந்தனர். தோழர். மலாயை எம்.சி.சியினர் பேசக்கூட அனுமதிக்கவில்லை.

இச்சம்பவத்திற்கு முன்னர், இப்பகுதியில் நீண்ட நாளாகவே மக்கள் யுத்தத்திற்கு எதிரான அவதூறு பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டது. மக்கள் யுத்தத்தால் அமைப்பாக்கப்பட்டிருந்த கிராமப்புற மக்கள் எம்.சி.சியால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டனர். அப்பகுதியிலிருந்து மக்கள் யுத்தத்தை துடைத்தெறியும் நோக்கத்தில் பயங்கரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. சமீபத்தில் '99 மேமாத 'முக்தி காமி' என்ற பெங்காலி இதழில், தோழர். மலாய் தாக்கப்பட்டதை நியாயப்படுத்தி எம்.சி.சி தலைமை ஒரு கட்டுரை வெளியிட்டிருந்ததுடன், மக்கள் யுத்தத்திற்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மீண்டும் கூறியிருந்தது. மக்கள் யுத்தத்திற்கு எதிரான அவதூறுகளை பெங்காலி இதழில் வெளியிடுவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக இரு கட்சிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை தீர்க்க மைய மற்றும் மாநில அளவில் பரஸ்பர பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்று இ.க. க (மா-லெ) (மயு) பெங்கால் மாநில குழு பிப்ரவரி '98ல் எம்.சி.சியின் மாநில குழுவிற்கு வெளிப்படையான கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்ததற்கு எம்.சி.சி யின் பதில் இத்தகைய வழியில் தான் இருந்தது. மக்கள் யுத்தத்தின் மீது இது போன்ற பகைமைத் தாக்குதல்களை எம்.சி.சி தொடுத்துவருவது ஏன்? ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்தின் கோரப்பிடியிலிருந்து நமது நாட்டை விடுவிக்க அளப்பரிய தியாகங்களைச் செய்து வரும் ஒரு புரட்சிகர கட்சிக்கு கேடுவிளைவிக்கும் கட்டுக்கதைகளை கட்டிவிடும் மோசமான தந்திரத்தை அது மேற்கொள்ளுவது ஏன்? பெங்காலிலும் பிஹாரில் இருப்பது போன்ற மோதல்களை பரப்புவதன் மூலம், மேற்கு பெங்காலில் கம்யூனிச புரட்சியாளர்களிடையே உள்ள ஒற்றுமையை அவர்கள் உணர்வுபூர்வமாகவே சேதப்படுத்துவது ஏன்? பெல்பகாரி சம்பவத்திற்கு பின்னால் உள்ள உண்மை விவரங்கள் என்ன? இவ்விவரங்களைப் பற்றிய உண்மையை அறிய பாரபட்சமற்ற, புறநிலையான விசாரணையை செய்தால் எம்.சி.சி யின் உண்மையான தோற்றத்தையும் மயு விற்கு எதிரான அவர்களின் ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளையும் அது முழுமையாக அம்பலப்படுத்தும்.

## உண்மையான விசயம்

பெல்பகாரியில் மக்கள் யுத்தத்தின் செயல்பாடுகளை ஆரம்பத்திலிருந்தே தடுக்க எம்.சி.சி முயன்றுகொண்டிருக்கிறது என்பது தான் உண்மையாகும். 1996 லேயே ஒரு மயு செயல்வீரர் எம்.சி.சி செயல்வீரர்களால் தாக்கப்பட்டு, வெட்டப்பட்டார். இச்சம்பவத்தை அப்போதைய மயுவின் மைய குழு பிரதிநிதிகள் எம்.சி.சி யின் மைய குழுவுடன் தொடர்ந்து நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது அதன் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அப்போது எம்.சி.சி தலைவர்கள், அச்சம்பவம் தங்களது கவனத்திற்கு வராமலேயே நடந்துவிட்டதாகவும், அதற்காக வருந்துவதாகவும், இனி இது போன்ற சம்பவங்கள் நடைபெறாது எனவும் உறுதியளித்தனர். அப்படி இருந்த போதும், பெல்பகாரி பகுதியில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய கிராமத்திற்கு செல்வோம் இயக்கத்தின் குழுவொன்று எம்.சி.சி ஊழியர்களால் அச்சுறுத்தப்பட்டது. பிஹாரில் உள்ள



படிப்பகம்

www.padippakam.com

பகுதிகளில் நடைபெறும் வேலைகளோடு பெங்காலில் உள்ள வேலைகளை இணைப்பதற்காக மயுவிற்கு இப் பகுதியில் வேலைசெய்வது அவசியமானது என பெல்ப காரி பகுதியில் வேலை செய்வதற்கான தனது முடிவை அப்போதைய மயுவின் மையகுழு எம்.சி.சியின் மைய குழுவிடம் தெரிவித்திருந்தது. 1997 ஆகஸ்டில் நடை பெற்ற பரஸ்பர பேச்சுவார்த்தையின் போது, கம்யூனிச புரட்சிகர சக்திகளிடையே பகுதி பிரிவினைகள் என்ப தற்கு அவசியம் இல்லை என அப்போதைய மயு தலைமை எம்.சி.சியிடம் விளக்கியது. எந்த ஒரு புரட்சி கர கட்சியும் எந்த பகுதியிலும் வேலை செய்யலாம், இன்றைய கட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட புரட்சிகர கட்சிகள் சில பகுதியில் வேலை செய்வது என்பது இருக்கத்தான் செய்யும், அப்பகுதிகளில் வர்க்கப் போராட்டத்தில் மக்களை அணிதிரட்ட அவை கூட் டாக வேலை செய்வதன் மூலம் புரட்சியை முன் கொண்டு செல்ல வேண்டும் எனவும் விளக்கியது. மேலும், இது போன்ற கூட்டு வேலைகள் இரு கட்சி களின் ஊழியர்களிடையே நல்ல புரிதலை ஏற்படுத்த உதவுவது மட்டுமன்றி, புரட்சியாளர்களுக்கு இடையே உறுதியான ஒற்றுமை ஏற்படுவதற்கான அடிப்படை களையும் அமைத்துத் தரும் எனவும் விளக்கப்பட்டது.

இக்கண்ணோட்டத்திலிருந்து தான் '98 டிசம்பரில் பெல்பகாரியில் தோழர். மலாய்க்கும், எம்.சி.சியின் பகுதி அமைப்பாளர் தோழர். சுகந்தாவிற்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இரு கட்சிகளுக்குமிடையே இருந்த விவாதங்களைப் பற்றி சுகந்தாவிற்கு தெரியப்படுத்தி, அப்பகுதியில் கூட்டு வேலைகளையும், மக்கள் போராட்டங்களையும் வளர்த்தெடுக்க முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அம்முடிவுஎப்போதுமே நடைமுறைப்படுத்தப்பட வில்லை. மாறாக, மயுவிற்கு எதிரான பிரச்சார இயக்கம் தீவிரமடைந்தது. மயுவோடு தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால் மக்கள் அச்சுறுத்தப் பட்டனர். பெரும்பாலும், எம்.சி.சி தலைமை சுகந் தாவை மயுவிற்கு எதிராக தூண்டிவிட்டு இருக்கலாம். பீடி இலை சேகரிக்க வழங்கப்படும் கூலியை உயர்த்து வதற்காக கடந்த பிப்ரவரி இறுதி முதல் மயு செயல் வீரர்கள் பிரச்சார இயக்கங்களை மேற்கொண்டனர். 2000 இலைகள் கொண்ட கட்டு ஒன்றிற்கு ரூ 25 கூலி பெறுவது என்ற கோரிக்கை அடிப்படையில் மக்களை அணிதிரட்ட முடிவு செய்யப்பட்டது. பன்ஸ்பகாரி, புலாப்ஹித்தா, சிமுல்பால் ஆகிய மூன்று பஞ்சாயத்து கள் முழுவதும் சுவர் எழுத்துக்களும், குழு கூட்டங் களும் ஏற்பாடு செய்யப்பட்டன. இதற்கு மக்கள் பெரும் உற்சாகம் காட்டினர். பின்னர், கிராம கமிட்டி களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. 40 கிராம கமிட்டிகளை உருவாக்கிய பின்னர் மூன்று பகுதி களிலும் தனித்தனியாக விவசாயிகள் மாநாடுகளை பி.கே.எம்.எஸ் ஏற்பாடு செய்தது. மார்ச் 27ல் பன்ஸ் பகாரி மற்றும் சிமுல்பால் பகுதிகளில் ஒரேவேளையில் மாநாடுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன. பன்ஸ் பகாரி கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே எம்.சி.சி, தோழர். மலாயை தாக்கிய போது அது தடை பட்டது. ஆனால், சிமுல்பால் மற்றும் புலாப்ஹித்தா வில் வட்டார அளவிலான கமிட்டிகள் உருவாக்கப் பட்டன. பீடி இலை இயக்கத்தை உடனடியாக தீவிரப் படுத்த முடிவு எடுக்கப்பட்டது. புலாப்ஹித்தா மாநாட் டிற்குப் பின்னர் ஏப்ரல் 3 அன்று 150 பேர்களைக் கொண்ட ஒரு போர் குணமிக்க பேரணி ஏற்பாடு செய் யப்பட்டது. இது பகுதி முழுவதிலும் ஒரு போராட்டச் சுழலை உருவாக்கியது.

ஆனால் மார்ச் 27ல் மலாய் தாக்கப்பட்ட பின்னர், பெரும்பாலும் வெளியாட்களைக் கொண்ட ஒரு ஆயுதக்குழுவை எம்.சி.சி உருவாக்கி, அப்பகுதி முழு வதும் கிராமமம் கிராமமாகச் சென்று மக்கள் யுத்தத் துடன் செல்ல வேண்டாம், அப்படிச் சென்றால் அவர் கள் கொல்லப்பட்டு விடுவார்கள் என மக்களை அச் சுறுத்தி வந்தனர். தங்களது ஆணைக்கு கட்டுப்பட வில்லை என்ற காரணத்திற்காக ஏற்கனவே ஒரு ஏழைப் பழங்குடிப் பெண்ணை எம்.சி.சி. யினர் துப்பாக்கி கட் டையால் தாக்கி கொன்றிருந்ததால், மக்கள் குழப்ப மும் பீதியும் அடைந்தனர்.

புலாப்ஹித்தா பகுதியில் உள்ள புக்கூரியா கிராமத் தில் பத்தாண்டுகளுக்கு முன் நடந்த இச்சம்பவம் பின்தங்கிய அப்பகுதியின் பழங்குடிமக்களை கோபமுறச்செய்தது. அவர்கள் எம்.சி.சி க்கு எதிராக




கட்சியின் தலைமையிலிருந்த லியூஷாசி, புதிய சனநாயக கட்டமே நீண்ட காலம் தொடர வேண்டும்; தனியார் உடமையும் பல வர்க்கங்களின் கூட்டும் பல ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என்றார். சமூகமயமாக்கத்துக்கு மாற்றாக தொழில்மயமாதலையும் இயந்திரமயமாதலையும் முன்வைத்தார். இதை கூட்டுறவுமயமாக்கலுக்கு முன் இயந்திரமயமாக்கல் என்றழைத்தனர். கோமின்டாங்கை வென்றதுதான் புதிய சனநாயகப் புரட்சியின் இறுதி வெற்றி, சோசலிசப் புரட்சியின் தொடக்கம் என்று மாவோ கூறினார். முதலிலிருந்தே கூட்டுறவுமயமாக்கலைக் கொண்டு சென்றால், பிறகு இயந்திரமயமாக்கம் எளிதாய் நடக்கும் என்று கூறினார். இதை இயந்திரமயமாக்கலுக்கு முன் கூட்டுறவுமயமாக்கல் என்றழைத்தனர். மையகுழுவிற்குள்ளேயே பாட்டாளிய, முதலாளிய வழிகளுக்கிடையிலான போராட்டம் நடந்தது.


படிப்பகம்

www.padippakam.com

திரண்டு, எம்.சி.சி யை அப்பகுதியிலிருந்து அப்போது விரட்டிவிட்டனர். இச்சம்பவத்திற்குப் பின்னர், சிமுல் பால் பகுதியில் உள்ள கஷ்னிஜோகி கிராமத்திற்கு எம்.சி.சி ஊழியர்கள் சென்றபோது உள்ளூர் கிராம மக்களால் போலீசில் பிடித்துக்கொடுக்கப்பட்டனர். அப்போதிலிருந்தே எம்.சி.சி யோடு பகைமை உறவைக் கொண்டிருந்த உள்ளூர் கிராமத்தாரிடமிருந்து இவை அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியும். அது முதலாக எம்.சி.சி தங்களது செயல்பாடுகளை இப்பகுதியில் நிறுத்திவிட்டது. சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் மயு நுழைந்த பின்னர், மயு இப்பகுதியில் ஒரு அடித்தளத்தை நிறுவுவதை தடுக்கும் நோக்கத்தில் எம்.சி.சி அவர்களது சக்திகளை மீண்டும் ஒன்றுசேர்க்கத் துவங்கியது.

தோழர். மலாய் தாக்கப்பட்ட பின்னர், எம்.சி.சி செயல்வீரர்கள் 14 அல்லது 15 உறுப்பினர்களைக் கொண்ட ஆயுதக்குழுக்களை அமைத்துக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று மக்களை அச்சுறுத்தத் துவங்கினர். எனவே, பீடி இலை இயக்கத்தைத் தொடர முடியவில்லை. பொதுவாக நடப்பது போல, காண்டிராக்டர்களின் கூலிப்படையினர் அல்லது காவல்துறையினரால் மக்கள் மிரட்டப்படவில்லை, மாறாக பி.கே.எம்.எஸ் அமைப்பைத் திரட்டவும், பீடி இலைக்கு கட்டு ஒன்றிற்கு ரூ25 தாக உயர்த்தக் கோரியும் நடைபெற்ற இயக்கத்தை மற்றொரு 'மாவோயிச' அமைப்பே தடுத்தது. இவ்வியக்கத்தைக் கெடுத்த பின்னர், கட்டு ஒன்றிற்கு ரூ 20 என எம்.சி.சி இறுதி செய்தனர். சீசன் சமயத்தில் சில இடங்களில் ஏற்கனவே இது வழங்கப்பட்டுவந்தது. எப்படியிருப்பினும், எம்.சி.சி மக்களை அணிதிரட்டவோ அல்லது வேலைநிறுத்த போராட்டத்தை நடத்தவோ முயற்சி செய்யவில்லை. பெரும்பாலான இடங்களில் இந்த 20 ரூபாய் கூட கொடுக்கப்படவில்லை. இருப்பினும், பீடி இலை சேகரிக்கும் உள்ளூர் ஏழை பழங்குடி மக்களிடமிருந்து எம்.சி.சி லெவி வசூலிக்கத் துவங்கியது. புக்கூரியா கிராமத்தில் எம்.சி.சி உள்ளூர் பீடி இலை சேகரிப்பவர்களை கூட்டம் நடத்த அழைப்பு விடுத்தது. தாராபடா ஹால்தார் என்ற ஒருவரைத் தவிர வேறு எவரும் இக்கூட்டத்திற்கு வரவில்லை. ஹால்தார் இப்பகுதியின் முக்கிய பீடி இலை காண்டிராக்டர் ஆவர். இவர் இப்பகுதியின் பீடி இலை இயக்கத்தின் உண்மையான இலக்காகவும் இருந்தார். பகுதி மக்களால் வெறுக்கப்படும் வர்க்க எதிரியும் ஆவார். உள்ளூர் பீடி இலை சேகரிப்பவர்களிடமிருந்து எம்.சி.சி சார்பாக லெவி வசூலிக்கும் பொறுப்பை தாராபடா ஹால்தார் எடுத்துக்கொண்டார். எம்.சி.சி யால் இறுதி செய்யப்பட்ட லெவித் தொகையை கழித்துவிட்டு, பீடி இலை சேகரிப்பவர்களுக்கு சம்பளப்பணத்தை இவர் பட்டுவடா செய்தார். சுமார் 4 அல்லது 5 லட்சம் ரூபாய் இவ்வருடம் லெவியாக வசூலிக்கப்பட்டது. இதில் பாதித் தொகையை ஹால்தாரே வழங்கினார். ஹால்தார் இப்பகுதியில் ஒரு எம்.சி.சி ஊழியர் போலவே வேலை செய்தார். பீடி இலை இயக்கம் சீர்குலைக்கப்பட்டது. கட்டு ஒன்றிற்கு 20 ரூபாய் கூட கொடுக்கப்படாததால் பெரும்பாலும் காண்டிராக்டர்கள் பலனடைந்தனர். மயுவை இப்பகுதியிலிருந்து வெளியேற்றும் நோக்கத்தில் ஹால்தாருக்கும் எம்.சி.சிக்கும் இடையே ஒரு மோசமான கூட்டு உருவாக்கப்பட்டது. இப்பகுதிக்கு வரும் எவரும் இது பற்றிய உண்மைகளை விரைவில் தெரிந்து கொள்ள முடியும். அறிவு ஜீவிகளைக் கொண்ட ஒரு குழு இப்பகுதியை பார்வையிட்டு உண்மையை அறிவது சிறப்பானதாகும்.

## எம்.சி.சி அச்சம்கொள்ள காரணம் என்ன?

பெல்பகாரி பகுதியில் மயு நுழைந்தவுடனேயே எம்.சி.சி அச்சம் கொண்டு விட்டது. ஏராளமான அவதூறு பிரச்சாரங்களுக்கு பின்னரும் அரசியல் ரீதியாக மயுவை எதிர்கொள்ள முடியாததால் பீதியடைந்து செய்யப்பட்ட ஒரு எதிர்நடவடிக்கையே மயுவின் மாநில குழு உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவம். புரட்சிகர கட்சிகளின் வளர்ந்து வரும் செல்வாக்கை தடுக்க ஆளும் வர்க்கங்களும் அவர்களின் ஏஜெண்டுகளும் கடைபிடிக்கும் முறையையே இவர்களும் கடை பிடித்துள்ளனர். இவர்கள் மக்களையும் மக்கள் தலைவர்களையும் அச்சுறுத்தி, கேவலப்படுத்தி, தாக்கி, இப்பகுதி முழுவதிலும் பயங்கரத்தை உருவாக்கினர்.

குறிப்பாக, மேற்கு பெங்காலில் மயு வேலை செய்யத் துவங்கிய உடனேயே மயுவிற்கு எதிரான பிரச்சாரத்தை எம்.சி.சி துவங்கிவிட்டது. துவக்கத்தில் அவர்கள் மயுவிற்கு எதிராக திரைமறைவாக பிரச்சாரம் செய்தனர். மயு தேர்தல்களில் பங்கேற்க போகிறது, அதன் தலைமை சட்டரீதியாகப் போகிறது, இது போன்ற ஆதாரமற்ற பிரச்சாரங்களின் மூலம் மயுவை அவதூறு செய்ய முயற்சித்தனர். ஆனால், இந்த சந்தேகங்கள் குறித்து அவர்கள் பேச்சுவார்த்தைகளில் எப்போதுமே வெளிப்படுத்தவில்லை அல்லது மயுவுடனான தங்களது அரசியல் மாறுபாடுகளைக் குறித்து ஒரு கட்டுரை கூட எழுதவில்லை. தங்களது ஊழியர்களின் சிந்தனையை மயுவிற்கு எதிராக திருப்பிவிட தந்திரமாகவே பிரச்சாரம் செய்தனர். இப்போது, அதே ஊழியர்களைத்தான் மயு மீது நேரடியான தாக்குதல்களை நடத்தத் தூண்டிவிட்டுள்ளனர். '60 களின் பிற்பகுதியில் இ.க.க(மா-லெ) உருவாகிய உடனேயே சி.பி.ஐ (எம்) தனது ஊழியர்களை அதற்கு எதிராகத் தூண்டிவிட்டதை ஒருவர் நினைவுகூர முடியும். தோழர். சாரு மஜூம்தார்



படிப்பகம்

போன்ற தலைவர்களை சி.ஐ.ஏ ஏஜெண்டுகள் என முத்திரை குத்தினர். இ.க.க (மா-லெ) ஊழியர்கள் மீது நேரடியான தாக்குதல்களை மேற்கொண்டனர். துரதிர்ஷ்டவசமாக, எம்.சி.சி தலைவர்களும் அதே வழியை பின்பற்றுவதாகத் தெரிகிறது.

மிகவும் ஆரம்பத்திலேயே, 'தக்ஷின் தேஷ்' என்ற ஒரு இதழைக் கொண்ட ஒரு சிறிய பெங்கால் குழுவாக எம்.சி.சி இருந்தபோது அவர்கள் நக்சல்பாரி, நக்சல் பாரியின் தலைமை மற்றும் இ.க.க (மா-லெ)மீதான அணுகுமுறையில் பகைமையுணர்வே கொண்டிருந்த னர். சோன்னார்பூர் விவசாய போராட்டத்தை நக்சல் பாரிக்கு மாற்றாக நிறுவிட அவர்கள் முயன்றனர். இ.க.க (மா-லெ) தலைமையை சந்தர்ப்பவாதிகள் என அவதூறு செய்ய முயன்றனர். இவ்வாறு செய்ததனால், பெங்காலின் புரட்சிகர அணிகளிடமிருந்து அவர்கள் தான் தனிமைப்பட்டதுடன், அவதூறுக்கும் ஆளாயினர். இன்று அவர்கள் திடீரென்று நக்சல்பாரியையும் தோழர். சாரு மஜும்தாரையும், எந்த வித சுயவிமர்சனமும் இன்றி உயர்த்திப்பிடிக்கத் துவங்கியுள்ளனர். ஆனால், மறுபுறத்தில் இ.க.க(மா-லெ) யின் புகழ்மிக்க பாரம்பரியத்தையும், சாதனைகளையும் மறுக்க முயல்கின்றனர். அதன் தொடர்ச்சியான அதாவது இ.க.க (மா-லெ) (மயு) வின் அரசியல் மற்றும் அமைப்புத் துறை முன்னேற்றங்களையும் மறுக்கின்றனர். பிஹாரிலும் மேற்கு பெங்காலிலும் மயு வேலை செய்ய முடிவு செய்த போது அவர்கள் கலக்கமடைந்தனர். மக்கள் யுத்தமும், பார்ட்டி யூனிட்டியும் இணைந்தது அவர்களின் பீதியை மேலும் அதிகரிக்கச் செய்தது. அதன் பின்னர், ஒருபுறம் பிஹாரில் மயு மீது கடுமையான தாக்குதல்களை துவங்கினர். ஏராளமான எண்ணிக்கையில் (60 முதல் 70 வரை) உறுப்பினர்களைக் கொண்ட ஆயுதக் குழுக்களை அமைத்து, மயுவின் செல்வாக்கின் கீழ் இருக்கும் மக்களையும், தலைவர்களையும், ஆதரவாளர்களையும் கொல்லுவது, தாக்குவது, அடிப்பது என கிராமம் கிராமமாக பீதியூட்டும் செயல்களில் இறங்கினர். வீடுகளை வெடிவைத்து தகர்த்தனர். இந்திய அரசால் கூட சாதிக்க முடியாத; மயுவை துடைத்தெறியும் நோக்கத்தில் இவைகள் செய்யப் பட்டன. அதே வேளையில் மயுவிற்கு எதிரான அவதூறு பிரச்சாரங்களையும் அதிக அளவில் கொண்டு சென்றனர்.

## எம்.சி.சியின் சீரழிவு.

கம்யூனிச புரட்சிகர சக்திகளிடையே பகுதிகளை பிரித்துக்கொள்ளுகின்ற எம்.சி.சியின் வழிமுறை அதன் சீரழிவைத் தெளிவுபடுத்துகிறது. முதலில் அவர்கள் மக்கள் யுத்தம் தென்னிந்தியாவில் தனது வேலைகளைச் செய்யவேண்டும், வட இந்தியாவை அவர்களுக்கு விட்டுவிடவேண்டும் என்று முன்மொழிந்தனர். மக்கள் யுத்த தலைமை இந்த முன்மொழிவை மறுத்த பின்னர், தங்களது நிரந்தர கோட்டைகளாக விளங்கும் பிஹார் மற்றும் மேற்கு பெங்காலில் மயு வேலை செய்யக் கூடாது என எம்.சி.சி தலைமை கோரியது. இந்த தவறான கோட்பாடுகளை மறுத்துவிட்டு பிஹார் மற்றும் மேற்கு பெங்காலில் மயு தனது வேலைகளைத் துவங்கிய போதே, மயு வுடனான எம்.சி.சியின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படத் துவங்கியது. பின்னர், எம்.சி.சிக்கும் மயுவிற்கும் இடையே இணைவு பேச்சுவார்த்தை தோல்வியடைந்த பின்னர், அவர்கள் மயுவிற்கு எதிராக அவதூறு பிரச்சாரங்களைத் துவங்கினர். முதலில் ரகசியமாகவும் பின்னர் வெளிப்படையாகவும் செய்தனர். பின்னர் பிஹாரில் அவர்களது தாக்குதல்களை தீவிரப் படுத்தியதுடன் இறுதியாக அதை மேற்கு பெங்காலுக்கும் பரப்பினர்.

இந்த அணுகுமுறையின் காரணமாகத் தான் மேற்கு பெங்காலின் மாநில குழு உறுப்பினரை தாக்கும் அளவிற்குச் சென்றுள்ளனர். பெல்பகாரியில் எம்.சி.சி 80 களிலிருந்து வேலை செய்து வந்தாலும் இ.க.க (மா-லெ) வின் செல்வாக்கை அதனால் சிறுமைப்படுத்த இயலவில்லை. 1969-70 ல் இ.க.க (மா-லெ) பெங்கால் பிஹார்-ஒரிசா எல்லைப்புற மண்டல கமிட்டியின் தலைமையின் கீழ் இப்பகுதி முழுவதும் காட்டுத் தீயெனப் பரவிய அந்த மாபெரும் புரட்சிகர விவசாய இயக்கத்தின் நினைவுகளும், அதன் மகத்தான தியாகங்களும் இப்பகுதி மக்களின் மனதில் இன்னமும் புத்தம் பொலிவுடன் காணப்படுகிறது. தங்களது சொந்த ரத்தத்தை சிந்தி புரட்சிகர அரசியல் விதையை இப் பகுதியில் விதைத்தது இக்கட்சிதான் என, இப்பகுதி




கம்யூன்களை அமைத்து விவசாயத்தில் சோசலிசமயமாக்கலை துரிதப்படுத்துவது, மென்ரக மற்றும் கனரக தொழில்களுக்கிடையே சம நிலையைப் பேண 'இரண்டு கால்களில் நடப்பது' திட்டம், கல்வியில் புரட்சிகர மாறுதல்கள் ஆகியவற்றின் மூலம் சோசலிச கட்டுமானத்தை துரிதப்படுத்த மாவோ 'மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சலுக்கு' அறைகூவல் விடுத்தார். ஏராளமான கம்யூன்கள் உருவாக்கப்பட்டன. லியுசா-ஷி கும்பல் இதை தீவிரமாக எதிர்த்தது.

www.padippakam.com

யின் பெரும்பாலான மக்கள் இ.க.க(மா–லெ) வை பின்பற்றுபவர்களாகவே இருக்கின்றனர். எனவே, மக்கள் யுத்தம் இங்கு பணியாற்றத் துவங்கிய உடனேயே இக்கட்சியின் பதாகையின் கீழ் மக்கள் மீண்டும் அணிதிரளத் துவங்கியுள்ளனர்.

எம்.சி.சி தலைமையின் பீதியுற்ற எதிர்ப்பிற்கான காரணங்கள் இவையே. பீடி இலை சீசன் போது பெல்பகாரி பகுதிக்கு அக்கம் பக்கத்திலிருந்து திரட்டிய ஒரு ஆயுதக்குழுவை அனுப்பி காண்டிராக்டர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாயை நிதி வசூல் செய்வது ஒன்றுதான் இப்பகுதியில் எம்.சி.சி இது வரையிலும் மேற்கொண்ட வேலை. தற்போது, இந்த வசூல் நின்றுவிடலாம் என கவலையடைகின்றனர். இப்பகுதியில் மயு வேலை செய்யத் துவங்கி விட்டால் பின்னர் காண்டிராக்டர்கள் அவர்களுக்கு ஏன் தொடர்ந்து நிதி செலுத்த வேண்டும்? ஹால்தார் போன்ற காண்டிராக்டர்களே தங்களது அதிகாரத்தை தக்கவைக்க எம்.சி.சியை ஆதரிப்பார்கள். தங்களது லெவி வசூலிக்கும் அறிவிக்கப்படாத, 'ஜமீன்தாரி' உரிமையை தக்கவைக்க மயு மீதும், போராடும் இப்பகுதி மக்களின் மீதும் தாக்குதல் தொடுப்பது என்பது எம்.சி.சிக்கு முற்றிலும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். சி.பி.ஐ (எம்) மும் இது போலவே புரட்சியாளர்கள் மீது தாக்குதல் தொடுப்பதையும், மக்களை பீதியூட்டுவதையும் நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் மேற்கொண்டு வந்தனர். சி.பி.ஐ (எம்)ன் கிழிந்து போன காலணிகளுக்குள் எம்.சி.சியும் தங்களது கால்களை நுழைத்துக் கொள்ளப் போகிறார்களா?

---

53 ஆம் பக்கத் தொடர்ச்சி . . .

தலைவன் வெங்கல் ரெட்டிக்கு எதிராகவும் எந்த காவல்துறை நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் துர்வேசி என்ற பகுதியில் 9 பேர் இவர்களால் கொல்லப்பட்டனர். 1995ல் நடைபெற்ற கெடர்நாத் கொலையில் வெங்கல் ரெட்டியின் மகன் முக்கிய குற்றவாளி.

வெம்பன்டாவில் வெங்கல் ரெட்டியால் கொல்லப்பட்ட 9 பேர்களும் மக்கள் யுத்த கட்சியின் ஆதரவாளர்கள். இச்சம்பவம் நடந்த போது நல்ல மலா வனக்கோட்டத்தின் இ.க.க(மா–லெ) (மயு) செயலர் படுகொலை செய்யப்பட்ட தனது ஆதரவாளர்களின் படுகொலைக்கு வெங்கல்ரெட்டி பழிவாங்கப்படுவான் என வெளிப்படையாக அறிவித்தார். அதுமுதலாக இவன் அரசாங்க கமாண்டோ படையுடன், தனது சொந்த ஆயுதம் தாங்கிய குண்டர் படையையும் பாதுகாப்புக்காக வைத்துக்கொண்டே நடமாடி வந்தான்.

1999 ஆகஸ்டு 11 அன்று இரவு 8.30 மணியளவில், வெங்கல் ரெட்டி தனது கோஷ்டித் தலைவர்களுடன் கே.சி.கெனால் பகுதியில் உள்ள தனது அலுவலகத்தில் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தான். இவ்வலுவலகம் அத்மகூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இக்கூட்டம் நடந்து கொண்டிருந்த போதுதான் இ.க.க(மா–லெ) (மயு) வின் சிறப்பு கெரில்லா குழு இந்த துணிச்சலான தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதல் நடந்த போது துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தின் மேல் மாடியில் குற்றவியல் பிரிவுக் (கிரைம் பிரா்ஞ்ச்) கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

சிறப்பு கெரில்லா குழுவின் தாக்குதல் மிகவும் திட்டமிட்ட வகையில் அமைந்திருந்தது. காவல்துறையினரைப் போல உடையணிந்த கெரில்லாக்கள் ஜீப்பில் அலுவலகத்தின் முன் வந்திறங்கினர். கமாண்டரும், துணை கமாண்டரும் சர்கிள் இன்ஸ்பெக்டர், சப்–இன்ஸ்பெக்டர் போல உடையணிந்திருந்தனர். மற்ற மூன்று கெரில்லாக்கள் போலீஸ்காரர்களை போல உடையணிந்து கொண்டனர். கமாண்டரும், துணை கமாண்டரும் அலுவலக வாசலையடைந்த போது, வாசலில் நின்று கொண்டிருந்த வெங்கல் ரெட்டியின் மெய்க்காப்பாளர்கள் வணக்கம் செலுத்தி வழிவிட்டனர். உள்ளே நுழைந்த கெரில்லாக்கள் வெங்கல் ரெட்டியையும், அவனது இரு மெய்க்காப்பாளர்களையும் சுட்டுக் கொன்றனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டதுமே பிற மெய்க்காப்பாளர்கள் ஓடிவிட்டனர். ஒரு சில நிமிடங்களில் மொத்த தாக்குதல் நடவடிக்கையையும் முடித்துக் கொண்டு கெரில்லாக்கள் பாதுகாப்பாக பின்வாங்கிச் சென்று விட்டனர்.

அத்மகூர் நகரில், டி.எஸ்.பி அலுவலகத்தின் எதிரிலேயே நடைபெற்ற இச்சம்பவம் ஆளும் தெலுகு தேச கட்சியின் அரசியல் வாதிகளை குலை நடுங்கச் செய்துள்ளது. தெலுகு தேசத்தின் கடந்த 5 வருட பாசிச ஆட்சியில் 800 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். பெரும்பாலானோர் மக்கள் யுத்த கட்சியின், அதன் மக்கள் திரள் அமைப்புகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களாவர். தனது தியாகிகளின் படுகொலைகளுக்கு பழிதீர்ப்போம் என மக்கள் யுத்த கட்சி அறிவித்தது முதலாக பெரும்பாலான மக்கள் விரோதிகளும், ஆளும் வர்க்க பிரதிநிதிகளும், பிரபல அரசியல்வாதிகளும் தலைநகருக்கு ஓடிவிட்டனர். தெலுங்கானாவின் கிராமப்புறங்களுக்கு கீழ்மட்ட அரசியல் தலைவர்கள் கூட நுழைவது இல்லை.

நிலைமை இவ்வாறு இருக்கையில், வெங்கல் ரெட்டியின் மீது நடந்த தாக்குதல் ஆந்திராவின் புரட்சிகர மக்களிடையே பெரும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்துள்ளது. இச்சம்பவத்தை கேள்விப்பட்ட வெம்பட்னா மக்கள் இனிப்பு வழங்கி மகிழ்ச்சி கொண்டாடினர்.

மக்களுக்கு கொடுமை செய்து பெரும் குற்றங்களை இழைத்த மக்கள் விரோதிகள் முதலாளிய சட்டத்திலிருந்து வேண்டுமானால் தப்பிவிடலாம். ஆனால் மக்கள் தீர்ப்பிலிருந்து ஒரு போதும் தப்பமுடியாது!



படிப்பகம்

www.padippakam.com

# பாகிஸ்தானின் ராணுவ ஆட்சி

பாகிஸ்தானில் அக்டோபர் 12 அன்று ரத்தம் சிந்தாத ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு அரங்கேறியது. இது, 1947க்குப் பின்னர் பாகிஸ்தானில் ஏற்பட்ட நான்காவது ராணுவ ஆட்சியாகும்.

பாகிஸ்தானின் ராணுவ தளபதி ஜெனரல் பெர்வேஷ் முஷ்ராப்பை பதவி நீக்கம் செய்த உடனேயே நவாஸ் ஷெரீப்பின் 32 மாதகால அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. விமானத்திலிருந்தே பதவி நீக்கம் செய்யப்பட்டதை அறிந்த முஷ்ராப் கராச்சியில் தடையை மீறி இறங்கினார். பாகிஸ்தான் ராணுவம் நவாஸ் ஷெரீப்பின் முக்கிய அதிகாரிகள், அமைச்சர்களை வீட்டுச் சிறையிலிட்டு, ஆட்சியைப் பிடித்தது. பாகிஸ்தானில் மீண்டுமொரு ராணுவ ஆட்சி தோன்றி விட்டது.

பாகிஸ்தான் மக்களின் முன்னால் இரு மாற்றுகளே இருந்தன. தொழில் குபேரனும் பிரதமருமாகிய நவாஸ் ஷெரீப்பின் எதேச்சதிகார ஆட்சி அல்லது ஜெனரல் முஷ்ராப் தலைமையிலான சர்வாதிகார ஆட்சி! இவற்றிற்கு இடையே மிகச் சிறிய வேறுபாடுகளே உள்ளன. மேற்கத்திய செய்தி ஊடகங்கள் கூறுவது போல இது சனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையிலான போராட்டம் அல்ல. மாறாக சர்வாதிகாரத்துக்கும் எதேச்சதிகாரத்துக்கும் இடையிலான மோதலாகும். தங்களது ஆதாயத்திற்காக ஆளும் வர்க்கங்களின் பிரிவினர்களுக்கிடையிலான சண்டையாகும்.

நவாஸ் ஷெரீப் தனது இரண்டரை ஆண்டு ஆட்சிக் காலத்தில், தனது கரத்தில் எல்லா அதிகாரங்களையும் குவித்துக் கொண்டதுடன், பல அதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்தார். தனது ஆட்சிக்கு எதிரான எந்த ஒரு எதிர்ப்பையும் அனுமதிக்காமல் கொடூர தாக்குதல்களை தொடுத்தார். தனக்கு எதிராக எழுதிய பல செய்தியாளர்களை கைது செய்தார். ஊழல் மற்றும் முறைகேடுகள் மூலம் ஏராளமான செல்வத்தை குவித்துள்ளார். இவர் கைது செய்யப்படும் வேளையில் கூட 450 ஏக்கர் அரண்மனை வீட்டை வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இதே வேளையில், ராணுவ தளபதிகளோ, எந்த சனநாயக வேடமும் அணியாத பச்சை சர்வாதிகாரிகளாவர்.

கார்கில் பிரச்சனையிலிருந்து நவாஸ் ஷெரீபுக்கு சிக்கல்கள் ஆரம்பித்தன. ஆக்கிரமிப்பு தன்மை வாய்ந்த இந்திய ராணுவம் மற்றும் ஏகாதிபத்தியங்களின் ஆதரவின்மை ஆகியவற்றால் மூலைக்குத் தள்ளப்பட்ட நவாஸ் ஷெரீப், அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில் கேவலமான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். பாகிஸ்தானில் அனைத்து தரப்பினரின் ஒட்டு மொத்த எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டார். இராணுவத் திலும் கடும் அதிருப்தி தோன்றியிருந்தது. இது கண்டஞ்சிய நவாஸ் ஷெரீப், தனது சகோதரர் மற்றும் ஐ.எஸ்.ஐ. தலைவர் லெப். ஜெனரல் ஜியாவுதீன் ஆகியோரை அமெரிக்காவிற்கு அனுப்பி, அவர்களின் கட்டளைப்படி செயல்பட்ட தன்னை காப்பாற்றுமாறு கெஞ்சினார்.

அமெரிக்க நிர்வாகம் உடனடியாக நவாஸ் ஷெரீபை ஆதரித்து, "அரசியல் சட்டத்தை மீறிய எந்த வழிமுறையையும் ஆதரிக்க மாட்டோம்" என அறிவித்தது. அமெரிக்க உதவி என்ற மந்திரக் கோலை நம்பி, நவாஸ் ஷெரீப் தனது ராணுவ தளபதியை ஈவிரக்கமற்று பதவி நீக்கினார். அவருக்கு பதில் தனது எடுபிடியான ஜியாவுதீனை பதவியில் அமர்த்த முயற்சித்தார். ஆனால், பெரும்பான்மை ராணுவத்தினரால் ஆதரிக்கப்பட்ட முஷ்ராப், ஷெரீப் ஆட்சியைக் கவிழ்த்தார். தனது பொருளியல் திவாலாகிபோன பாகிஸ்தான், ஐ.எம்.எப். கடன்களை எதிர்பார்த்திருப்பதால் புதிய அரசும் ஏகாதிபத்தியங்களின் காலில் விழுவதைத் தவிர வேறு வழியில்லை. பெரும் ஊழல் பெருச்சாளிகளாகவும், அமெரிக்க அடிவருடிகளாகவும் உள்ள அனைத்து தரப்பு அரசியல்வாதிகளின் மீது மக்களுக்குள்ள வெறுப்பை பயன்படுத்திக் கொண்டு, எதிர்ப்பு ஏதுமின்றி ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்த்தப்பட்டது.

இப்போது ஏகாதிபத்தியவாதிகள் தளபதிகளை தமது வழிக்குக் கொண்டு வர, மிரட்டுவதும் தாஜா செய்வதுமான வழிமுறையைக் கையாள்கிறார்கள். அமெரிக்கா தளபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது. இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியாவை கொடூரமாக ஆண்ட பிரிட்டனோ, தனது காலனிய தொடர்ச்சியான காமன்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்.




**1959-61**மழை தொடர்ந்து பொய்த்ததால் ஏற்பட்ட பஞ்சங்களால் தோன்றிய இழப்பையும், சோவியத் திரிபுவாதிகள் தமது உதவிகளை திடீரென திரும்பப் பெற்றதையும் பயன்படுத்திக் கொண்டு, லியூஷா-சிக் கும்பல் முதலாளிய திட்டங்களை கொண்டு வந்தது. கம்யூன்களைக் கலை த்தல், தனியார் பயிர் செய்ய நிலம் தருதல், கம்யூன்களில் லாபத்தை அடிப்படையாக்குதல், 'சுதந்திர' சந்தையை வளர்ப்பது போன்ற முதலாளிய முறைகள் கொண்டு வரப்பட்டன. தொழிற்சாலைகளிலும் லாபமே அடிப்படையாக்கப்பட்டதுடன், தொழிலாளர்களின் அதிகாரம் பிடுங்கப்பட்டு அதிகாரிகள், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வழங்கப்பட்டது. 'சிவப்பு' தன்மையை விட 'திறமை' முதன்மையாக்கப்பட்டது.

www.padippakam.com

**. . . பின் அட்டைத் தொடர்ச்சி**

இப்பத்தாண்டுகளில் எக்காலகட்டத்திலும் கண்டிராத வேகத்தில் கடந்து சென்றது. இந்த சரணாகதியை துரிதப்படுத்திட சுதேசி பேசும் ஆர்.எஸ். எஸ் கும்பல் ‘மதமாற்றம்’ என்ற கூக்குரலை எழுப்பியதன் மூலம் பிரச்சனையை திசை திருப்பியது. இந்த சரணாகதி கொள்கைகளால் தன்னிடமிருந்து விலகிச் சென்ற மக்களை ஏமாற்றுவதற்காக, நாட்டில் உள்ள மேற்கத்திய செல்வாக்கிற்கு ஊடகமாக கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர் என அவர்கள் பலிகடாவாக்கப்பட்டனர். இ.காங்கிரசும், எல்லா பிராந்திய கட்சிகளும் பி.ஜே.பியின் பொருளியல் கொள்கைகளை முழுவதுமாக ஆதரித்தனர். ஆந்திராவில் உள்ள தெலுங்கு தேசம் போன்ற பலர், ஐ.எம்.எப் / உலகவங்கியின் கட்டளைக்கு ஏற்ப தங்களது கொள்கைகளை நடைமுறைப்படுத்தி தங்களையே விற்றுவிட்டிருந்தனர். “ ‘இடது’ எதிர்கட்சிகள்” தொடர்ந்து எழுப்பும் ஆரவார குரல்கள் அவர்கள் ஆளுகின்ற மாநிலங்களில் அவர்களது நடைமுறையுடனோ அல்லது ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அங்கமாக அவர்கள் இருந்த போது செயல்பட்டவைகளுடனோ எவ்வகையிலும் பொருந்துவதாக அமையவில்லை. நமது நாட்டை முழுமையாக விற்பதை மாற்றவேண்டுமெனில் அது மக்களால், மக்களால் மட்டுமே இயலும், மக்கள் போராட்டங்களில் கிளர்ந்து எழவேண்டும்.

பட்ஜெட்டில் துவங்கி ‘99 மார்ச் மாதத்தில் மட்டுமே, பி.ஜே.பி என்னும் கையுறைக்குள் சாதூரியமாக மறைந்து கொண்ட ஏகாதிபத்திய அன்னியக்கரங்கள் பொருளியல் துறையில் எந்த ஒரு பகுதியையும் விட்டுவைக்க வில்லை. வர்த்தகம், முதலீடுகள். நிதி சேவைகள், தொலைத்தொடர்பு, காப்புரிமை, காப்பீட்டுத்துறை, ஏற்றுமதி இறக்குமதி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, தொலைக்காட்சி ஒளிபரப்பு, வீட்டு வசதி, இரண்டாம்பட்ச (வணிக) சந்தைகள், பெட்ரோலிய மறு ஒழுங்கமைப்பு, பொதுத்துறை நிறுவனங்களைக் கூட நாடுகடந்த நிறுவனங்கள் கையகப்படுத்த ஊக்குவிப்பது . . . போன்ற இந்த எல்லா துறைகளிலும் அரக்கத்தனமான கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வந்தன. இவை இந்திய பொருளியலை அன்னிய மூலதனம் மேலும் மேலாதிக்கம் செய்யவே அனுமதிக்கும்.

இதுமட்டுமின்றி, காபந்து அரசாங்கம் கூட எந்த வித சட்ட உரிமையுமின்றி இந்த கேடுபயக்கும் விற்பனை படலத்தை தொடர்ந்து மேற்கொண்டது. இது தேர்தல் செலவிற்காக பி.ஜே.பிக்கு கோடிக்கணக்கான டாலர்களை பெற்றுக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த ஏகாதிபத்திய சுறாக்கள் ஒட்டுமொத்த நாட்டையும் கபளீகரம் செய்வது வரையிலும் திருப்தியடையப் போவதில்லை. மேலும் மேலும் அதிக நலன்களைக் கோரிக் கொண்டுதான் இருக்கும் என்பது திண்ணம். ஏகாதிபத்திய கட்டளைகளுக்கு அடிபணிந்து ‘பொருளியல் சீர்திருத்தங்களை’ துவங்கியுள்ள இந்திய ஆட்சியாளர்கள் சர்வதேச நிதி மூலதனத்தின் வலையில் மேலும் ஆழமாக சிக்கிக் கொண்டதுடன், அதன் கோரப்பசியை தொடர்ந்து தெவிட்டச் செய்ய வேண்டும்.

சமீபத்திய மாதங்களில் என்ன நிகழ்ந்தது என்பதை நாம் இப்போது காண்போம்.

### பட்ஜெட் மூலமான விற்பனை.

சென்ற போராளி இதழில் பட்ஜெட் பற்றிய கட்டுரையில் பி.ஜே.பி அரசாங்கம் ஐ.எம்.எப் கட்டளைகளுக்கு எவ்வாறு அடிபணிந்து . . . . . உணவு மற்றும் உர மானியங்களை வெட்டியது, சரக்கு கட்டண உயர்வு, பற்றாக்குறையை குறைப்பதற்கான நடவடிக்கை, நாடுகடந்த நிறுவனங்களுக்கும் பயன்தரத்தக்க விதத்திலான தொழில்களுக்கு பெருமளவிலான சலுகைகள் வழங்கியது போன்றவற்றை நாம் கண்டோம். அக்கட்டுரையில் கூறப்பட்டிருந்தவைகளுடன் சேர்த்து, சில நடவடிக்கைகளை குறிப்பாக, அன்னிய மூலதனத்தை அரவணைக்கும் நோக்கத்தில் உள்நாட்டு தொழில்களைக்கூட பலிகடாவாக்கும் விதத்தில் அமைந்த சிலவற்றைப் பற்றி நாம் இங்கு காண்போம். இதற்கு சில உதாரணங்களை பட்ஜெட்டிலிருந்து எடுத்துக் கொள்வோம்;

- கார்கில், மன்சாட்டோ போன்ற அமெரிக்க விவசாயத்துறை நிறுவனங்கள் இந்திய விவசாயத்திற்குள் வெறித்தனமாக ஊருடுவி, பெரும் வளர்ச்சிபெற்று வந்தன. இதை ஊக்குவிக்க, அரசாங்கம் இந்த பட்ஜெட்டில் விவசாய வளர்ச்சிக்கான, குறிப்பாக பணப்பயிர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பெரும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பணப்பயிர்களை பதப்படுத்தத் தேவையான உட்கட்டுமான வளர்ச்சிகளுடன், பதப்படுத்தும் நிலையங்களை அமைக்கவும் வரிவிடுமுறை வசதிகளை நீட்டித்தது.

- தற்போதைய புதிய காப்புரிமை ஆட்சியில், காப்புரிமைகள் மீது ஏகாதிபத்தியங்கள் உத்திரவாதத்தை பெற்றன. நாடுகடந்த நிறுவனங்களின் ஆராய்சி மற்றும் வளர்ச்சிக் கழகங்களுக்கு மருந்துப் பொருட்கள் துறையில் 2000 ஆண்டு முதல் 2005 ஆண்டுவரையிலும் சோதனைச்சாலை ஆராய்சிக்கு 125% வரிக் குறைப்பு வழங்கியதன் மூலம் காப்புரிமைகள் மீதான உத்திரவாதத்தை இந்திய அரசு ஊக்கப் படுத்தியது.

- எல்லா அன்னிய புதுத்திட்டங்களையும் 30 தினங்களுக்குள்



படிப்பகம்

www.padippakam.com

முடித்துவிட வேண்டும் என்ற அறிவுறுத்தல் அன்னிய முதலீட்டு மேம்பாட்டுக் கழகத்திற்கு (FIB) வழங்கப்பட்டுள்ளது.

● உள்நாட்டு தொழில்களை பெரும் எண்ணிக்கையில் நாடுகடந்த நிறுவனங்கள் கையகப்படுத்தியுள்ளதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். தற்போது, இந்நிகழ்வுப் போக்கை மேலும் துரிதப்படுத்த, வரி சலுகைகள் மற்றும் பிற பெரும் தொழில் இணைவுகளை எளிமையாக்கும் வசதி வாய்ப்புகளை வழங்கும் மிகவும் கேடுமிக்க ஒரு கொள்கையை இந்த பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதை அறிவித்து முடியும் முன்னரே மார்ச் மத்தியில் இந்தியாவின் முனைப்பான நிதிநிறுவனமான இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டு கழகம் (ICICI), நாடு கடந்த நிறுவனங்கள் இரண்டு உள்நாட்டு நிறுவனங்களை கையகப்படுத்த ஒரு பகுதி நிதியை வழங்கியது. குஜராத் டோரன்ட் எனர்ஜி கார்ப்பரேசன் என்ற நிறுவனத்தின் பெரும்பான்மை கட்டுப்பாட்டை பிரிட்டிஷ் மின் நிறுவனமான பவர்ஜென் கையகப் படுத்த மொத்த கையகப்படுத்துதல் தொகையான ரூ.1100 கோடியில் ரூ.210 கோடியை ஐ.சி.ஐ.சி.ஐ. கடனாக வழங்க சம்மதித்தது. மேலும், டிஸ்கோவின் சிமென்ட் தொழிற்சாலையின் ரூ 500 கோடியில் ஒரு பகுதி கையகப்படுத்துதல் தொகையான ரூ 200 கோடியை பிரான்சின் முக்கிய சிமெண்ட் நிறுவனமான லாபார்ஜ்க்கு கடனாக வழங்கியது.

மேலும் மோசமானது என்னவெனில், மார்ச் இறுதியில், இரு முக்கிய பொதுத்துறை நிறுவனங்களை நாடுகடந்த நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கு முழுமையாக விட்டுவிட்டது. இந்திய பெட்ரோலியம் மற்றும் ரசாயண பொருள் நிறுவனத்தின் (IPCL) 25 % மூலதனப் பங்கை, தனியார்மயப்படுத்தலின் தந்திரோபாய விற்பனை என, ஐரோப்பிய முதலீட்டு வங்கியாளரான வார்பர்க் டிலான் ரீட் என்பவருக்கு கொடுத்தது. இத்தோடு, இந்தோ பங்களா பெட்ரோலியம் லிமிட்டட்(IBP) என்ற பொதுத்துறை நிறுவனத்தை அமெரிக்காவின் முக்கிய எண்ணைத்தொழில் நிறுவனமான கால்டெக்ஸ்க்கு முழுவதுமாக கையகப்படுத்த அரசாங்கம் அனுமதித்தது. தற்போது கால்டெக்ஸ் இந்தோ பங்களா பெட்ரோலியம் லிமிட்டட்டின் 49 % மூலதனத்தை கையகப்படுத்திக் கொண்டது.

● அன்னியநேரடி முதலீடுகள் தானியங்கி முறையில் அனுமதியைப் பெறுகின்ற தொழில்களின் பட்டியலில் அதன் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

● ரூ 10,000 கோடி மதிப்பில் பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்க திட்டமிட்டுள்ளது. இதில் பெரும்பகுதி அன்னிய மூலதனத்தால் கைப்பற்றப்பட்டு விடும்.

● பொதுத்துறை நிறுவனங்களை ஏகாதிபத்திய சங்கிலியில் மேலும் பிணைக்க, 1999-2000 த்தில் பொதுத்துறை நிறுவனங்களின் வெளிக்கடன் 25% அதிகரிக்கும் அதாவது. 5,446 கோடி என இந்த பட்ஜெட் அறிவித்துள்ளது.

● ரசாயணம், மருந்துப் பொருட்கள் மற்றும் உரம் போன்ற துறைகளில் அன்னிய நேரடி முதலீடுகளை ஊக்குவிக்க 74% மூலதனப் பங்கை தானியங்கி வழியிலேயே அனுமதிப்பது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

● ஐ.சி க்கள், நுண்ணிய உதிரிப் பாகங்கள், பதப்படுத்தல் கருவிகள், சிடி ராம்கள், தொலைபேசி கருவிகள், கண்ணாடி இழைகள் போன்ற பொருட்களுக்கும், தகவல் தொடர்பு தொழில்நுட்ப துறைக்கும் இறக்குமதி தீர்வைகளில் பெரும் குறைப்புகளை வழங்கியுள்ளது.

தற்போது நாம் பட்ஜெட்டுக்கு பிந்தைய, கொள்கை மாற்றங்களைக் காண்போம்.

## புதிய காப்புரிமை ஆட்சிமுறை

அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு வெளிப்படையாக அடிபணிந்து உலக வர்த்தக அமைப்பின்(WTO) வரையறைகளுக்கு ஏற்ப 1970ன் இந்திய காப்புரிமை சட்டம் (IPA) திருத்தப்பட்டது. இந்த சரணாகதியின் நிகழ்வுப்போக்கு நீண்ட நெடு நாளாகவும் எல்லா முக்கிய கட்சிகளின் ஈடுபாட்டுடனும் நடைபெற்றது. இந்த விற்பனை நாட்டின் மீது பேரழிவுமிக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக




லியூஷா-சியின் முதலாளியக் கொள்கைகளின் விளைவாக பண்பாட்டுத் துறையிலும் முதலாளியக் கருத்துக்கள் பலமாக வெளிப்பட்டன. 1962-ல் மாவோ இதற்கெதிராக தாக்குதல் தொடுத்தார். "சோசலிச காலகட்டம் முழுவதும் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது", "வர்க்கப் போராட்டத்தை என்றும் மறவாதீர்" என எடுத்துரைத்தார். 1963 மே-20ல் முதலாளிய போக்குகளுக்கெதிரான சோசலிச கல்வி இயக்கத்தை அறிவித்தார். ஊழியர்கள் 'சிவப்பு' தன்மையுடனும் 'திறமையாகவும்' இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. "அரசியலை ஆணையில் வைத்து, தத்துவத்தை தலைமையில் இருத்தவும்" மாவோ அறைகூவல் விடுத்தார். லியூஷாசிக் கும்பல் கல்வி இயக்கத்தையும் சீர்குலைக்க கடும் முயற்சி செய்தது.


படிப்பகம்

www.padippakam.com

இதை நிறைவேற்ற அனைத்து கட்சிகளின் ஒருமித்த முயற்சி அவசியமாக இருந்தது. பாசுமதி; வேம்பு உட்பட 22 மருத்துவ தாவரங்கள், 90 உயிரியல் நுட்ப தாவரங்கள் போன்றவற்றை அமெரிக்க நிறுவனங்கள் காப்புரிமை செய்து கொண்டதைக் கண்டபின்னர் நாட்டை அரசாங்கம் விற்பனை செய்வதற்கு எதிரான மக்களின் கோபம் மேலும் அதிகரித்துள்ளது.

1995லேயே காப்புரிமைச் சட்டத் திருந்த மசோதாவை இ.காங்கிரஸ் அறிமுகப்படுத்தியது முதலாகவே இச்சரணாகதியின் நிகழ்வுப் போக்கு துவங்கிவிட்டது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இச்சட்ட திருத்தம் தோற்றுவிட்டது. பி.ஜே.பி இதற்கு எதிராக அன்று வாக்களித்தது. 1997 செப்டம்பரில் ஒரு காப்புரிமைச்சட்ட திருத்த மசோதாவை அவசரமாகக் கொண்டுவரும் முயற்சியில் தேவ கவுடா அரசாங்கம் 'அறிவு உடைமை உரிமை வல்லுனர் குழு' ஒன்றை பிரதமர் அலுவலகத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் அமைத்தது. பி.ஜே.பியின் அப்போதைய எதிர்பிற்கும், ஐக்கிய முன்னணியின் நம்பிக்கையற்ற முயற்சிகளுக்கும் காரணம் உலக வர்த்தக அமைப்பின் வரையறைகளுக்கு மக்களிடமிருந்து மட்டுமன்றி, தொழிலதிபர்களின் ஒரு பிரிவினரிடமிருந்தும் இருந்த ஆரவரமிக்க எதிர்பேயாகும்.

இறுதியில், பி.ஜே.பி கூட்டணி அரசாங்கம் தங்களது முந்தைய எதிர்ப்பையும் கருத்தில் கொள்ளாமல், இந்த மசோதாவை நிறைவேற்றியது. இதன் விளைவாக, இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் காப்புரிமை செய்யத்தக்க கண்டுபிடிப்புகளாக இருக்க வேண்டும் என்று இல்லாமல், உற்பத்திப் பொருட்களுக்கு இந்தியா தனிச்சந்தையுரிமை வழங்க வேண்டியதாயிற்று. நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, ஒரு அஞ்சல்பெட்டி வசதியை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியது. 1995 முதல் புதிய மருந்து மற்றும் விவசாய ரசாயன உற்பத்திப் பொருட்களுக்கான காப்புரிமை விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ள இந்த அஞ்சல் பெட்டி வசதி அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஐந்து வருடங்களுக்கு இந்த உற்பத்தி பொருட்களை வினியோகிக்க தனிச் சந்தையுரிமையை (Exclusive marketing Rights) அனுமதிக்கவும் வேண்டும். இந்த சலுகை 2005 வரையிலும் செயலாக்கத்திலிருக்கும். அப்போது தான் அரசாங்கம் உற்பத்திப்பொருள் காப்புரிமையை வழங்கத் துவங்க முடியும். குறைந்தபட்சமாக, இந்த ஒப்பந்தப்படி செயலாற்றுகின்ற ஒரு நாட்டில் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருளுக்கு ஏற்கனவே காப்புரிமை வழங்கப்பட்டிருந்தால் போதும் என்ற வெற்று நிபந்தனை யின் பேரில் அந்நிறுவனங்களுக்கு தனிச்சந்தையுரிமை வழங்கப்படும். தனிச்சந்தையுரிமை வழிவகைகளை அனுமதிப்பதற்கு காப்புரிமை விண்ணப்பங்களின் மீது இந்திய காப்புரிமை சட்டம் 1970 ன்கீழ் காப்புரிமை வழங்கத் தேவையான அடிப்படைகள் குறித்த நடவடிக்கைகளை பரிசீலிப்பதற்கான அவசியமும் கூட இல்லை என்றாகிவிட்டது. உண்மையில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு முடிவுறுவதாக தோன்றுகிறது, தனிச் சந்தையுரிமை வழங்கப்பெற்ற உற்பத்திப்பொருள் ஏகபோகம் பெறுவதுடன், வரம்பற்ற விலைகளை சுமத்தவும் முடியும். அதுமட்டுமன்றி, தேசிய உற்பத்தி முறைகளுக்குள் உள்நாட்டு தயாரிப்பு என்ற வழியின் மூலமாக அறிமுகப்படுத்தும் அவர்களது கண்டுபிடிப்புகளை காப்புரிமையாளர்கள் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்ற நெறிமுறைகளைக் கூட வர்த்தகம் சார்ந்த அறிவு உடைமை உரிமைகள் (டிரிப்ஸ் TRIPS) ஒழித்துக்கட்டுகின்றன. இது சொந்த உபயோகத்திற்கோ அல்லது விற்பனைக்கோ அன்னியப்பொருட்களை இறக்குமதி செய்வதை காப்புரிமை செயல்முறை சார்ந்த ஒன்றாக சமப்படுத்திக் காண்கிறது. தேசிய அரசாங்கங்கள் சந்தைப்போட்டியை அறிமுகம் செய்ய உரிமம் வழங்கும் செயல்முறைகளை பயன்படுத்தும் உரிமையை இது மறுக்கிறது. மேலும் கொடுமை என்னவெனில், சச்சரவுகள் எழும் போது தீர்வுகளை தீர்மானிக்கும் சட்ட வரையளவுகளை டிரிப்ஸ் ஒப்பந்தம் தெளிவாக வரையறுக்கவில்லை. இதன் பொருள் என்னவெனில் காப்புரிமை பற்றி பிறநாடுகளில் அவர்களது சட்டங்களுக்கு ஏற்ப போராட வேண்டும் என்பதாகும். இது அரசாங்கங்களுக்கு ஏற்கனவே இருந்து வரும் குறைந்தபட்ச ஆளுமையைக் கூட ஒழிக்கும் நோக்கம் கொண்டவை. ஏனெனில், வேறொரு நாட்டின் நீதிமன்றத்தில் முறையீடு செய்கின்ற எந்த ஒரு அரசாங்கமும், அந்த சிக்கலுக்குரிய காப்புரிமையின் மீது அந்நாட்டு அரசாங்கத்தின் ஆளுமையை நடைமுறையில் ஏற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும். இந்திய காப்புரிமை முறையில் செய்யப்பட்ட மாற்றங்கள் அமெரிக்காவின் மருந்துப்பொருள் தொழில்துறைகளுக்கு வருடத்திற்கு 500 மில்லியன் டாலர் (ரூ. 2,000 கோடி) ஆதாயத்தைக் கொடுக்கிறது என அமெரிக்காவின் சமீபத்திய வருடாந்திர வர்த்தக அறிக்கை வெளிப்படையாக கூறியுள்ளது. விவசாய ரசாயனப்பொருள் துறையிலும் இது போன்ற ஆதாயம் இருக்கும்.

இந்தியா தற்போது பின்பற்ற வேண்டிய உலக வர்த்தக அமைப்பின் நிபந்தனைகள் இவையே. சுதேசி பேசும் தேசியவாதிகளுக்கு இது அதிகம்தான். ஆனால், பி.ஜே.பியின் இந்த இறுதியான காப்புரிமை மசோதாவில் அவர்கள் டிரிப்ஸ் ஒப்பந்தத்தால் அனுமதிக்கப்பட்ட சில தற்காப்புகளைக் கூட அறிமுகப்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தவில்லை என்பது பி.ஜே.பி யின் மிகவும் துரோகத்தனமான கிரிமினல் செயலாகும். இதில் பி.ஜே.பி தனது சட்ட கமிசன் அறிக்கை கூறிய சில மாற்றங்களைக் கூட புதிய மசோதாவில் இணைக் காமல், அறிக்கைக்கு எதிராகவே சென்றது.

இந்த சட்ட கமிசன், 5 மாற்றங் களை ஆலோசனையாக முன்வைத்து தனது அறிக்கையை '99 பிப்ரவரி 28ல் சமர்பித்தது. இவற்றை பி.ஜே.பி புறக்கணித்தது மட்டுமன்றி அறிக் கையை நாடாளுமன்றத்தில் கூட வைக்கவில்லை. இவ் ஐந்து விசயங் களில் இரண்டு நாட்டின் குறைந்த பட்ச இறையாண்மையைக் கூட மீறிச் செல்வதாகும். டிரிப்ஸ் ஒப்பந் தப்படி கூட இதில் மாற்றம் செய் திருக்கலாம். உதாரணத்திற்கு, டிரிப்ஸ்சின் விதி 27ன் படி உறுப்பினர் நாடுகள் சில விதிவிலக்குகளை பெற வழிவகை வழங்கியுள்ளது, ஆனால் அவை பி.ஜே.பியின் புதிய மசோ தாவில் இணைக்கப்படவில்லை. இது பற்றி இக் கமிசன் கூறுகையில், "கூறப்பட்ட கைவிடல் நமது நாட் டின் நலன்களின் மீதான கடும் தாக்கு தலாகும்" என்றது. சில துறைகளில் காப்புரிமை பெறுவதை தவிர்க்கும் வாய்ப்புகள் டிரிப்ஸ் ஒப்பந்தத்தில் இருப்பினும் கூட இந்த மசோதா அதை ஒரு சாதகமாக எடுத்துக் கொள்ளவில்லை என இக்கமிசன் மேலும் தெரிவித்தது. இது தான் பி.ஜே.பியின் துரோகத்தனம்.

**காப்பீட்டு ஒழுங்கமைப்பு மற்றும் வளர்ச்சி ஆணையம்.**

காப்பீட்டுத் துறையை திறந்து விடுவது என்பது பலம்பொருந்திய அன்னிய நிதிநிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலில் முதல் விசயமாக இருந்து வந்துள்ளது. மிகவும் லாபகரமான இந்த துறை ஏகாதி பத்தியவாதிகளுக்கு இந்திய மக்க ளின் பெரும் சேமிப்புகளை வாரி வழங்குகிறது. அன்னிய மூலதனத் திற்கு இத்துறையை திறந்துவிடுவது என்பது மக்களின் சேமிப்புகளை ஏகாதிபத்தியவாதிகள் கடத்திச் செல்ல அனுமதிப்பதாகும். பி.ஜே.பி தனது தேர்தல் அறிக்கையில் இத் துறையை அன்னிய மூலதனத்திற்கு திறந்துவிடுவதை எதிர்த்திருந்தது. ஏற்கனவே, இ.காங்கிரஸ், ஐக்கிய முன்னணி ஆகியன முயற்சித்தன, ஆனால், கடும் எதிர்ப்பைக் கண்டு பின்வாங்கின. இறுதியாக, பி.ஜே.பி இ. காங்கிரசின் முழு ஆதரவுடன் இதை நிறைவேற்றியது.

எல்.ஐ.சி (ஆயுள் காப்பீட்டு கழகம்) யின் மொத்த முதலீடு செய்யத்தக்க நிதி ஏறத்தாழ இந்தியா வின் மொத்த தேசிய உற்பத்தியில் 8%. இதிலிருந்து இப்பேரத்தில் எவ்வளவு தொகை கைமாறி இருக் கும் என்ற உண்மையை புரிந்து கொள்ள முடியும். 'ஆயுள்' மட்டு மன்றி 'பொது', சுகாதார, மோட்டார் வாகனம் இன்னபிற போன்ற பிற காப்பீடுகளும் உள்ளன. இந்தியா வில் உள்ள மொத்த சேமிப்பில் (1996 97ல் இது ரூ. 3, 33,800 கோடி) ஆயுள் காப்பீட்டு கழகத்தின் பங்கு 1980 81ல் இருந்த 10% லிருந்து 1994 95ல் 14% மாக உயர்ந்தது. எல்.ஐ.சியின் முதலீடுசெய்யத்தக்க நிதி 1956-57ல் இருந்த ரூ410 கோடியிலிருந்து (100 மில்லியன் டாலர்) 1997-98ல் ரூ 1,05,833 கோடியாக (25 பில்லியன் டாலர்) அதிகரித்துள்ளது. முதலீடு களிலி ருந்து பெறும் லாபம் 4.5% லிருந்து 12.3% மாக அதிகரித்துள்ளது. இந்த மிகப்பெரிய செல்வத்தையும், பெரும் வருவாயையும் கைப்பற்றிக் கொள்ளத்தான் ஏகாதிபத்தியவாதி கள் பேராவலில் உள்ளனர். இந்தியா வில் காப்பீட்டுத்துறையை திறந்து விட்டதால் அமெரிக்க தொழில்கள் வருடத்திற்கு 25 மில்லியன் டாலர் களை (ரூ 100 கோடி) காப்பீட்டுக் கட்டண வருவாயாக பெறும் என சமீபத்திய அமெரிக்க வர்த்தக அறிக்கைகள் வெளிப்படையாக கூறுகின்றன.

காப்பீட்டுத்துறையை திறந்துவிடுவது என்பது பேரழிவு மிக்க உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தமான நிதித்துறை சேவை களில் உலகவர்த்தகத்தை தாராளமய மாக்கல் என்பதன் ஒரு பகுதியே யாகும். இக் கொடிய ஒப்பந்தத்தில் 1997 டிசம்பரில் காபந்து குஜரால் அரசாங்கம் கையொப்பமிட்டது. இது 1999 மார்ச் முதல் நடைமுறைக்கு வருகிறது. உலக அளவில் வங்கி மற்றும் நிதித்துறை சேவைச் சந்தை வருடத்திற்கு 22 டிரில்லியன் டாலர் மதிப்புடையதாக நம்பப்படுகிறது. எனவே இந்த ஒப்பந்தத்தை கையொப்பமிடச் செய்வதில் அமெரிக்கா உலக அளவில் கை முறுக்கும் செயல்பாடுகளில் இறங்கு கிறது. இருப்பினும், இது 70 நாடு களால் மட்டுமே கையொப்பமிடப் பட்டுள்ளது. இதிலும் கூட ஐக்கிய




1966ல் தோழர். மாவோவால் மாபெரும் பண்பாட்டுப் புரட்சி கட்டவிழ்த்து விடப்பட்டது. சோசலிச அடிக்கட்டுமான வளர்ச்சிக்குத் தடையாக, பண்பாட்டுத் தளத்திலுள்ள முதலாளிய கண்ணோட்டங்களை ஒழித்துக் கட்டவும், முதலாளிய மீட்சியை தடுக்கவும், தலைமையிலுள்ள முதலாளியப் பாதையாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை தடுக்கவும் கோடிக்கணக்கான மக்கள் செயலூக்கத்துடன் பங்கேற்ற மாபெரும் பாட்டாளிவர்க்க பண்பாட்டுப் புரட்சி தொடங்கப்பட்டது. "சுய நலத்தை எதிர்போம், திரிபுவாதத்தை விமர்சித்து வெறுத்தொதுக்குவோம்" என்ற முழக்கத்தின் அடிப்படையில் முதலாளிய கண்ணோட்டத்துக்கு எதிராக தாக்குதல் தொடுக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

முன்னணி அரசாங்கம் (சி.பி.ஐ மற்றும் சி.பி.ஐ (எம்) மை தனது வாலாகக் கொண்டு) அமெரிக்கா விடம் முழுமையாக அடிமைப்பட்டு இந்த ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டது மட்டுமின்றி, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, பிரேசில் போன்ற நாடுகளையும் விஞ்சிச்சென்று நிதித்துறை சேவை களில் தாராளமயம் செய்யும் பரஸ்பர ஒப்பந்தங்களிலும் ஈடுபட்டது.

ஆரம்பத்தில், சென்ற பட்ஜெட் டில் காப்பீட்டுத் துறை இந்திய தனியார்துறைக்கு திறந்து விடப் படும் (அன்னிய பங்கேற்பு பற்றி கூறவில்லை) என பி.ஜே.பி அரசாங் கம் அறிவித்தது. இருப்பினும், கணக்கில்கொள்ளப்படும் அன்னிய நிறுவனங்களைப் பற்றி எதுவும் கூறவில்லை. பின்னர் 1998 டிசம்பரில் 40 % அன்னிய மூலதனத்தை அனு மதித்து ஒரு மசோதாவை அது அறி முகப்படுத்தியது. இது ஒரு பெரும் சூழ்ச்சி ஏற்பாடாகும். 'சுதேசி' கோஷ்டியினர் சிறிது கூக்குரல் எழுப்பிட, அதன்பேரில் அன்னிய மூலதன பங்கை 26 % மாக குறைக் கலாம் என்னும் மோசடியாகும். உண்மையில் அன்னிய முதலீட் டாளர்கள் 26 % தான் கோரியிருந் தனர். 26 % மூலதனத்தை கைப்பற்று வது இயக்குனர் அவையில் எந்த ஒரு தீர்மானத்தையும் தடுத்து நிறுத்த போதுமான பலத்தைக் கொடுக்கும். இதன் மூலம் ஒரு 'இந்திய' நிறுவனத்தின் பங்காளியாக காப் பீட்டுத் துறையை வழிநடத்தும் திறனை அது பெற்று விடும். மார்ச் 16ல் அமைச்சரவைக் கூட்டத்தில் 26% ஏற்றுக்கொண்டபின், மார்ச் இறுதி யில் மேலும் அதிக அன்னிய மூலதனபங்கை அனுமதிக்கும் ஒரு புதிய பிரிவை திருட்டுத்தனமாக புகுத்தியது. இதுபோன்ற தொழில் களில் உள்ள ஆசிய வளர்ச்சி வங்கி, சர்வதேச நிதி கழகம் போன்ற பல் முனை நிதி நிறுவனங்களின் முதலீ டுகளை, அன்னிய மூலதனப்பங்கு கூட்டிணைவு பற்றி கணக்கெடுக்கும் போது சட்டப்படி சேர்த்துக்கொள்ள வேண்டாம் என்ற அறிவிப்பை தற் போது வெளியிட்டுள்ளது.

இவையே பி.ஜே.பியின் தவ றானவழிமுறைகள். இரட்டை முகம் கொண்ட பூதத்தின் செயல்பாடுகள். மக்களுக்கு சுதேசி, ஏகாதிபத்திய வாதிகளுக்கு விதேசி.

## புதிய ஏற்றுமதி இறக்குமதி கொள்கை.

1999 மார்ச் 31ல் வர்த்தக அமைச்சரவையால் அறிமுகப்படுத் தப்பட்ட மாற்றியமைக்கப்பட்ட 1997 முதல் 2002 வரையிலான ஏற்றுமதி இறக்குமதி கொள்கையானது பி.ஜே.பி அரசாங்கம் நாட்டின் நலன்களையெல்லாம் விற்றுவிடத் தயாராக இருப்பதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். இறக்குமதிகளை பெருமளவில் திறந்து விட்டிருப்ப தானது உலக வர்த்தக அமைப்பின் கோரிக்கைகளையும் மிஞ்சிவிட்டது. ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப் படும் இடர்உதவி சென்ற ஆண்டி லேயே அதிகமாக இருந்ததை மேலும் அதிகரித்தது குறிப்பிடத்தக்க தாகும். உணவு, உரம் மற்றும் சமூக நல மானியங்களை அரசாங்கம் ஈவிரக்கமின்றி வெட்டிக் குறைக்கும் வேளையில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மானியங்களை (மொத்தத்தொகை மறைக்கப்பட் டுள்ளதுடன், பொதுப்பார்வைக்கு சமர்பிக்கவில்லை) சட்டப்படி வழங்கியுள்ளது. நாம் முதலில் இறக்குமதி பற்றி கண்போம்.

ஒவ்வொரு நாடும் அதன் உள் நாட்டு உற்பத்தியை பாதுகாக்க சில சரக்குகள் மீது இறக்குமதி கட்டுப் பாடுகளை கொண்டுள்ளது. பின் தங்கிய நாடுகளுக்கு இது குறிப்பாக அவசியம். ஏனெனில், சமனற்ற வர்த்தக நிபந்தனைகள் நிலவி வருவதும், நாடு கடந்த நிறுவனங்களின் வெறித்தனமான சந்தைச் செயல்பாடுகளும், தங்களது காலாவதியான தொழில் நுட்பம் மற்றும் சரக்குகளை மூன்றாம் உலக நாடுகளில் குவிப்பதினாலும் இது அவசியம். 2003 ஆம் வருடத்திற்குள் எல்லா நாடுகளிலும் இதுபோன்ற அளவுரீதியான கட்டுப்பாடுகளை நீக்கிவிட வேண்டும் என உலக வர்த்தக அமைப்பு கோரியுள்ளது. சுதேசி கூக்குரலிடும் பி.ஜே.பி சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னரே இதற்கு அடிபணிந்து விட்டது. தற் போதைய, ஏற்றுமதி இறக்குமதி கொள்கையில் அரசாங்கம் 75% பொருட்களுக்கான கட்டுப்பாடு களை பட்டியலில் இருந்து நீக்கி விட்டது. இனி பட்டியலில் இருப் பது வெறுமனே 667 வகையினங்கள் தான். பட்டியலில் இருந்து நீக்கப் பட்ட, வகையினங்களின் பட்டி யலில் காய்கறிகள் முதல் பழங்கள், புண்ணாக்குகள், மிளகாய் தூள் வரையிலும் அடங்குகிறது. பாதுகாக் கப்பட்டுள்ள வகையினங்களின் பட்டியலில் இப்போது எஞ்சி யிருப்பது பெரும்பாலும் மண்ணு லகம் சார்ந்த பொருட்கள் தான். இதுவும் கூட பெரும்பாலும் வருகின்ற வருடத்தில் நீக்கப்பட்டு விடும். இறக்குமதியின் இந்த தாராளமயமாக்கல் நிகழ்வுப் போக்கு இ. காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முன்னணியால் துவங்கி வைக்கப்பட்டது. ஆனால் பி.ஜே.பி அதிகாரத்தின் போது பெரும் பாய்ச்சலை மேற்கொண்டது. தற் போதைய கொள்கைப்படி பாதுகாக் கப்பட்ட பொருட்களின் பட்டியலில் இருந்து 1,308 பொருட்கள் நீக்கப் பட்டுவிட்டன. இதில் 894 சுதந்திர இறக்குமதிக்கும் (அதாவது வெளிப் படையான பொது உரிமம் மூலம் OGL), 414 சிறப்பு வகையின் அடிப் படையிலும் (சிறப்பு இறக்குமதி உரிமம் SIL)இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளுக்கு 'குவிப்பு



படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்பு' தீர்வைகளை (Anti - Dumping Duties)அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் தொடர்ந்து போட்டுக் கொண்டிருக்கும் போது இது போன்ற அடிமைத்தனம் அருவருக்கத் தக்கதாகும். இந்த ஏற்றுமதி இறக்குமதி கொள்கையை அறிவித்த அதே தினத்தில், ஐரோப்பிய ஒன்றியம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய துருபிடிக்கா இரும்பு கம்பிச்சுருள்களின் மீது 'குவிப்பு எதிர்ப்பு' தீர்வைகளை அதிகபட்சமாக 56% விதித்தது. ஆனால், உலக வர்த்தக அமைப்பு ஏப்ரல் முதல் வாரத்தில் அளவுரீதியான கட்டுப்பாடுகள் குறித்த விசயத்தில் இந்தியாவிற்கு எதிராக மீண்டும் குற்றம் சாட்டியது.

ஆனால், இத்துடன் முடிந்துவிடவில்லை, மேலும் அதிக கொடுமைகள் தொடர்கின்றன. இந்திய அரசாங்கம் சியாச்சின் பனிப்பகுதியில், புல்முளைக்காத ஒரு சிறு பகுதிக்காக நாளொன்றிற்கு கோடிக்கில் செலவு செய்து போராடுகிறது. அதேவேளையில், ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களது ஏஜென்டுகளுக்கும் உண்மையிலேயே முக்கிய தொழில் துறைகளை கைமாற்றிக் கொடுத்து வருகிறது. நாட்டில் உள்ள எல்லா ஏற்றுமதி சார் மண்டலங்களை (EPZs)சுதந்திர வர்த்தக மண்டலங்களாக (FTZs) 1999 ஜீலை 1 முதல் மாற்றம் செய்வதாக இந்த புதிய ஏற்றுமதி இறக்குமதி கொள்கை கூறுகிறது. இது ஐக்கிய அரபு எமிரட்சில் உள்ள சுங்க ஒழுங்கு முறை தளர்த்தப்பட்ட ஏற்றுமதி மண்டலங்களின் மாதிரியைப் போல அமைகிறது. மேலும் "ஏற்றுமதி மண்டலங்களை நாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு பகுதிபோல கருதுகின்ற ஒரு முக்கிய அம்சத்தை இந்த ஏற்றுமதி இறக்குமதி கொள்கை கொண்டுள்ளது" என பைனான்சியல் எக்ஸ்பிரஸ் (ஏப். 1, '99) இதழ் கூறுகிறது. வழக்கத்திலுள்ள தொழிலாளர் சட்டங்கள் இந்த சுதந்திர வர்த்தக மண்டலங்களுக்கு பொருந்தாது எனவும், இந்த மண்டலங்களில் உள்ள தொழில் அலகுகள் 10 வருடத்திற்கு மாநகராட்சி வரியைக் கூட செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது எனவும் ஹெக்டே மேலும் அறிவித்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், அரசு செலவீனத்தில் அமைக்கப்பட்ட உட்கட்டுமான வசதிகளை பயன்படுத்தி, (அதாவது வரி செலுத்துவோரின் பணம்) நாட்டிற்கு எந்த வருவாயையும் கொடுக்காமலோ அல்லது சிறிதளவோ கொடுத்து நமது மலிவான உழைப்பை சுரண்ட, இந்தியாவிற்குள் அமைக்கப்படும் சட்டரீதியான அன்னிய பிரதேசம் என்பதேயாகும்.

ஏற்றுமதி பக்கம் நாம் நோக்கினால், ஏற்றுமதி ஊக்குவிப்பு என்ற பெயரில் பெருமளவு மானியங்களும், கொடைகளும் வழங்கப்பட்டு வருவதை நாம் காணலாம். ஏற்கனவே, பெரும்பாலான ஏற்றுமதிக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான ஏற்றுமதிக்கு உள்நாட்டு பொருள்வரி (தீர்வை) இல்லை. பல வகையினங்களுக்கு, விலைமதிப்பில் 10 % முதல் 20 % வரை பண மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. குத்து மதிப்பாக கணக்கிட்டாலும். இது 1998-99 ன் மொத்த ஏற்றுமதியான ரூ 1,40,000 கோடிகளில் ரூ 20, 000 முதல் ரூ. 25,000 கோடி வரையிலும் வழங்கப்படுகின்ற மிகப்பெரிய மானியமாகும். தற்போதைய ஏற்றுமதி இறக்குமதி கொள்கை மூலதனப்பொருள் ஏற்றுமதியை ஊக்குவிப்பது என தீர்வை விலக்கு திட்டங்களை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. ஏற்றுமதிக்கு முந்தைய கடன் தகுதியை 5 % லிருந்து 10 % மாக இருமடங்கு அதிகரித்தது. சேவைத்துறை ஏற்றுமதிகளுக்கு ஏராளமான ஊக்கத்தொகை பட்டியலை வழங்கியுள்ளது. ஏற்றுமதி சார்ந்த உள்கட்டுமான வசதிகளை பலப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு ரூ 500 கோடி மானியத்தொகை வழங்கப்படவுள்ளது. வெளி நாடுகளில் இந்திய பொருட்களை ஊக்குவிக்க ரூ500 கோடி செலவிடப்படுகிறது. இது சென்ற ஆண்டின் ரூ120 கோடியை விட நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. ரசியாவிற்கான ஏற்றுமதியை ஊக்குவிக்க மதிப்பூட்டு விதிமுறையை 100 % லிருந்து 33 %மாக குறைத்தது. 'நட்சத்திர தொழிலதிபர்கள்'(Star enterpruners) க்கு ஏற்றுமதி சேவையகங்கள்(Service Export Houses) அமைக்கப்பட்டு, சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தங்களது உற்பத்தியில் 50% த்தை ஏற்றுமதி செய்பவர்கள் பல்வேறு வசதிகளையும், மானியங்களையும் கூடுதலாக பெற்றிட தகுதிபெறுவதற்கான பச்சை அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. ஏற்றுமதியை ஊக்குவிக்க மாதிரிப்




பண்பாட்டுப் புரட்சியின் விளைவாக, சோசலிசமயமாக்கலும் அரசின் மீதான புரட்சிகர மக்களின் கட்டுப்பாடும் அதிகரித்தன. கம்யூன்கள், தொழிற்சாலைகள் எங்கும் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கு தீர்மானகரமானது. கல்வியில் புரட்சிகர மாறுதல் ஏற்பட்டது. கட்சியில் மேலிருந்து கீழ்வரை முதலாளியப் பாதையாளர்கள், திரிபுவாதத்தின் செல்வாக்கு தகர்க்கப்பட்டது. லியூஷா-சி, டென்சியோ - பியாங் போன்ற முதலாளிய பாதையாளர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். கட்சியின் தலைமைக் குழுக்களில் ஏராளமான உழைக்கும் மக்கள் இணைக்கப்பட்டனர். சோசலிச சமுதாயத்தில் முதலாளிய மீட்சிக்கெதிரான ஒரு புதிய வர்க்கப் போராட்ட வடிவம் மாவோவால் உருவாக்கப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

பொருட்களை(Samples) அனுப்புவதற்காக அனுமதிக்கப்பட்ட எல்லைகளைஅதிகப்படுத்தியுள்ளது ('விற்பனைக்கு அல்ல' என்ற பெயரில் மாதிரிப் பொருட்களை சந்தைக்கு விடுவதன் மூலம் சுங்கவரியை மேலும் தவிர்ப்பதற்கு வழிவகுக்கும் செயல்முறையை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கியுள்ளது). வேளாண்மை, தோட்டக்கலை சம்பந்தப்பட்ட ஏற்றுமதி சார்ந்த தொழிலகங்கள் (EOUs) விவசாயிகளின் நிலங்களில் கருவிகளை நிறுவவும், இடுபொருட்களை போடவும் அனுமதித்துள்ளது, ஏற்றுமதி சார்ந்த தொழிலகங்கள் அல்லாத பகுதிகளிலும் கூட இது அனுமதிக்கப்படுகிறது. இப்படி எண்ணற்ற சலுகைகள் இதுபோல வழங்கப்படுகின்றன. இந்த எல்லா கொடைகள், மானியங்கள், ஊக்கத் தொகைகள், சுங்கக் குறைப்புகள், கடன் வசதிகள், சுதந்திர வர்த்தக மண்டலங்கள் போன்று ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் மொத்தத்தொகையை கணக்கிட்டால் அது ரூ 5,000 கோடிக்கும் குறைவாக இருக்காது. உணவு மற்றும் சமூகநல மானியங்களை வெட்டிக் குறைக்க கடுமையாக முயற்சிக்கும் ஒரு அரசாங்கம் ஏற்றுமதியாளர்களுக்கு இந்த புதிய ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின் மூலம் கூடுதலான இப்பரிசுகளை வாரிவழங்கியுள்ளது.

## பொதுமயமான விற்பனை

அரசாங்க துரோகத்தின் அளவு இத்துடன் முடிந்துவிடவில்லை. வஞ்சகத்தனமானதுரோகத்தின் கதை தொடர்ந்து கொண்டே செல்கிறது.. அதுவும், ஜஸ்வந் சிங் தால்பாட் எட்டாவது சுற்று பேச்சுவார்த்தையின் ஒரே மாதத்திற்குள்.....!!

தெலைபேசித் துறையில் மேலாதிக்கம் பெற்றுள்ள அன்னிய வல்லுனர்களின் லாபத்தை அதிகரிக்கச்செய்ய அரசாங்கம் தொடர்ச்சியான மாற்றங்களை அறிமுகப்படுத்தியது. ட்ராய் (இந்திய தொலைபேசி ஒழுங்கமைப்பு ஆணையம் TRAI) மூலமாக தொலைபேசி கட்டணங்களையும், வாடகையையும் அதிகரிக்கச்செய்தது. வெளியூர் தொலை பேசி (STD) மீது இருந்த அரசு ஏகபோகம் புதிய தொலைத் தொடர்பு கொள்கையால் நீக்கப்பட்டது. உரிம கட்டண செயல்பாடுகளில் தொலைபேசி தொழில்முனைவர்களுக்கு சாதகமாக மாற்றங்களைச் செய்ய ஒரு புதிய தொலைபேசி கொள்கையை அறிவித்துள்ளது.

கிராமப்புறங்களில் அமைந்துள்ள, முத்திரையிட்ட பொருட்களை உற்பத்திசெய்கின்ற சிறு தொழிலகங்கள் அம்முத்திரைப் பொருட்களை சொந்தமாகக் கொண்டு விற்பனை செய்கின்ற நிறுவனங்களுடன் கூட்டுகளை வைத்துக் கொள்ளலாம் என அனுமதிக்க நிதி அமைச்சரவை முடிவுசெய்ததானது, நாடுகடந்த நிறுவனங்கள் செல்வக் குவியலை அள்ளிச்செல்ல அரிய வாய்ப்பாகும் என பிசினஸ் ஸ்டேன்டர்டு(29.3.99) இதழ் கூறியுள்ளது. ரூ 50 லட்சம் வரையிலான உற்பத்திக்கு தீர்வை வரியிலிருந்து முழுவிலக்கு, ரூ 50 லட்சத்திற்கு அதிகமானால் தீர்வை வரி 50% மட்டுமே செலுத்தவேண்டும் என்ற இந்த திட்டம் 1999 ஜூன் 1 முதல் அமலுக்கு வரும்.

சர்வதேச ஊகவணிகர்களின் கருணைக்கு நாட்டை திறந்து விடுவதற்காக, இந்திய பங்கு மாற்றகங்களின் இரண்டாம்பட்ச வர்த்தகத்தின் (அதாவது, 'எதிர்கால', 'தேர்வுரிமை', 'பண்டமாற்று' போன்றவைகளிலான ஊகவணிகம்) மீதிருந்த கட்டுப்பாடுகளை அரசாங்கம் விரைவாக நீக்கிவிடுகிறது. இதை தொடர்ந்து எட்டு சமையல் எண்ணை வித்துக்களின் வர்த்தகத்தில் 'எதிர்கால' வர்த்தகத்தை அனுமதித்தது டன், சரக்கு வர்த்தகத்தில்' தேர்வுரிமை' அனுமதிக்க அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. இந்த நிகழ்வுப் போக்கை துரிதப்படுத்த 1952ன் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் திட்டமிடுகிறது. கல்கத்தா பங்கு மாற்றகம் ஏற்கனவே இரண்டாம்பட்ச வர்த்தகங்களுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. . . . பிற பங்கு மாற்றகங்கள் அதை பின் தொடரவிருக்கின்றன.

ருப்பர்ட் முர்டாக், ஸ்டார் டிவி போன்ற அன்னிய தொலைக்காட்சி அலைவரிசைகளின் நிர்பந்தப்படி நீண்டகாலமாக நிறைவேற்றப் படாமலிருந்த இரு 'சீர்திருத்தங்களை' இந்த அரசாங்கம் அறிவித்துள்ளது.முதலாவதாக, நேரடி இல்லத் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான (DTH) உரிமையை விரைவில் அறிவிக்க திட்டமிடுகிறது. இரண்டாவதாக, இந்திய தொலைகாட்சி நிறுவனங்களுக்கு (இந்தியர் நிர்வகிக்கும் அன்னிய தொலைகாட்சி நிறுவனங்கள் உட்பட) தொலைத்தொடர்புக் கட்டுப்பாடுகளை மேலும் தாராளமயமாக்க அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்துள்ளது. 1999 ஆகஸ்டு 1 முதல் அவை வி.எஸ்.என்.எல் (விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிட்டட்)மூலமாக தொலைத் தொடர்பு செய்து வருவதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து நேரடியாக தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படும்.

அடுத்து, பலமிக்க சர்வதேச பெட்ரோலிய தொழிலின் கட்டளைகளுக்கு அடிபணிந்து அரசாங்கம் இந்திய பெட்ரோலியத் துறையை மறு ஒழுங்கமைப்பு செய்வதற்கான தனது விருப்பத்தை அறிவித்துள்ளது. எதிர் வருகின்ற 3 ஆண்டு காலத்தில், கட்டம் கட்டமாக மூன்று பெட்ரோலிய மற்றும் எரிவாயு ஒழுங்கமைப்பு ஆணையகங்களை அமைத்து, ஒட்டுமொத்த இந்நிகழ்வுப் போக்கை கண்காணிக்கும். மறு



படிப்பகம்

www.padippakam.com

ஒழுங்கமைப்பு மட்டுமன்றி, பெட்ரோல் சுத்திகரிப்பு தொழிலை மறு கட்டமைப்பு செய்து, இத்துறையை நாடுகடந்த நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கு (மறைமுக) விட்டு விடுவதற்கான ஒரு விரிவான திட்டத்தை பெட்ரோலிய அமைச்சரவை ஏற்கனவே முன் வைத்துள்ளது. இந்தோ பங்களா பெட்ரோலியம் (IBP) ஏற்கனவே கால்டெக்ஸ் நிறுவத்தின் கையில் உள்ளது. கால்டெக்ஸ் தற்போது, இந்தோ பங்களா பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம் மற்றும் ரசாயன நிறுவனத்திற்கு (BPCL) இடையே 'தந்திரோபாய பங்காளி முறையை' (Strategic Partnership) கொண்டு வர திட்டமிடுவதுடன், பின்னர் கொச்சி சுத்திகரிப்பாலை, மெட்ராஸ் சுத்திரிகரிப்பாலை போன்ற எண்ணற்ற சிறு சுத்திகரிப்பு அலகுகளை பாரத் பெட்ரோலியம் மற்றும் ரசயான நிறுவனத்துடன் இணைத்து விடலாம் என திட்டமிட்டுள்ளது. எண்ணைத் தொழில்துறையினரால் இவை எதிர்க்கப்பட்டு வந்தாலும், பெட்ரோலிய அமைச்சரவை இவற்றை அமல்செய்ய கடுமையாக முயற்சிக்கிறது.

மற்றுமொரு துரோகத்தில், இந்த அரசாங்கம், அமெரிக்க என்ரான் நிறுவனம் தனது பெரிய எரிவாயுப் பொருட்களை அன்னிய கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளது. இந்திய கப்பல் கழகத்தின் கப்பல்களில் கொண்டுவர அனுமதிக்கவில்லை. இந்திய தேசிய கடலோடிகள் சங்கம் (NUSI) இதை எதிர்த்துள்ளதுடன், துறைமுகங்களில் சரக்குகள் ஏற்றி இறக்குவதை நிறுத்தி விடுவதாகவும் எச்சரித்துள்ளது.

மாருதி உத்யோக் நிறுவனத்தின் 50ரூ மூலதனபங்கை ஜப்பானுக்கு (சுசுகி) மிகக்குறைந்த விலையில் விற்றுவிட இந்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வீடுகட்டுமானத் துறையை 100 % அன்னிய மூலதனத்திற்கு திறந்து விட நகர்புற மற்றும் வீடுகட்டுமானத் துறை அமைச்சரவை அறிவித்துள்ளது.

இறுதியாக, அன்னிய நேரடி முதலீட்டு நெறிமுறைகளை தளர்த்துகின்ற ஒரு திட்டத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது. இது உள்நாட்டு தொழில்துறைக்கு பலத்த அடியாகும். இது இந்தியாவில் உள்ள தங்களது பங்காளிகளிடமிருந்து பிரிந்து சென்று அதே உற்பத்தி பொருளை தயாரிக்கும் புதிய தொழிலகத்தை துவங்க தடையில்லா சான்றிதழை (NOC) பெற விரும்புவது அன்னிய நிறுவனங்களின் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட ஒன்றாக மாற்ற இத்திட்டம் வழி வகுக்கிறது. முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்களின் படி, இந்திய நிறுவனங்களுடன் தொழில் நுட்ப பங்காளிகளாக இருக்கும் அன்னியர்கள், அந்த உடன்பாடு பரஸ்பர பரிமாற்றமற்ற அடிப்படையில் அமைந்து இருந்தால் தடையில்லா சான்றிதழை பெறுவதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும். மின்சக்தி, தொலைபேசி, சாலை அமைப்பு போன்ற உட்கட்டுமான துறையில் செயல்படுகின்ற அன்னிய நிறுவனங்கள் தங்களது இந்திய பங்காளிகளிடமிருந்து தடையில்லா சான்றிதழை பெற விரும்பினால் அதற்கான கட்டுப்பாடுகளும் கூட தளர்த்தப் படும். வேறு வார்த்தைகளில் கூறினால், நாடுகடந்த நிறுவனங்கள் முதலில் இந்திய கூட்டாளிகளுடன் சேர்ந்துவிட்டு, பின்னர் அவர்களை வெளியேற்றிவிடும் வசதிவாய்ப்புகளை சுதேசி அரசாங்கம் வழங்கி உள்ளது!!

இந்த எல்லாவித விற்பனையின் காரணமாக, பம்பாய் கழகம், தொழில் மற்றும் நிதி கழகங்கள் (சி.ஐ.ஐ, அசோசம், எப்.ஐ.சி.சி.ஐ) முன்னர் எழுப்பிய கூக்குரல்கள் எல்லாம் அடங்கி விட்டன. 'மாடு மேய்ப்போன் பண்பாடு', 'பாது காப்புவாதம்' என .பா.ஜ.க பற்றி இப்போது இவர்களின் எந்த பேச்சும் இல்லை. தங்களது தரகு தன்மையின் காரணமாக அவர்கள் அன்னிய மூலதனத்துடன் எதுவரை முடியுமோ அதுவரை தொடர்ந்து, கூடிக்குலாவுவர், பின்னர் உள் நாட்டில் அவர்களின் மேலாளர்களாக இருப்பதில் திருப்தியடைந்து விடுவர். அன்னிய மூலதனத்தின் ஒரு தங்கக் கைகுலுக்கலும், ஒரு மேலாளர் பதவியும் போதும், நமது நாட்டை கொள்ளையிட இவர்களின் முழு ஒத்துழைப்பையும், உதவிகளையும் பெற! தற்போது, இறக்குமதி வரிகளை குறைத்தபோது இவர்கள் ஒரு வார்த்தை கூட பேச வில்லை. சர்க்கரை மீதான இறக்குமதி தீர்வையை அரசாங்கம் 5% மாக குறைத்து (இது ஐரோப்பிய




1976-ல் தோழர்கள் மாசே-துங், சூஎன்-லாய், சூடே, சாங் செங், டிங்-பி-வு போன்ற மாபெரும் புரட்சியாளர்கள் மறைந்தனர். மாவோவுக்குப் பின் தலைமைப் பொறுப்பேற்ற குவா-குவா-பெங் முதலாளியப் பாதையாளருக்கு எதிரானவனாகத் தன்னை காட்டிக் கொண்டான். 1977ல் இராணுவத் தளபதிகள் சிலரின் உதவியுடன் பண்பாட்டுப் புரட்சிக்கு தலைமை தாங்கிய நால்வரையும் கைது செய்தான். கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முதலாளியப் பாதையாளர்கள் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். புரட்சிகர சக்திகள் வேட்டையாடப்பட்டனர். விவசாயம், தொழிற்துறையில் மீண்டும் முதலாளிய முறைகள் திணிக்கப்பட்டன. 1981ல் நடந்த மையகுழுவின் பிளீனத்தில் பண்பாட்டுப் புரட்சியும், 1959க்குப் பிறகு மாவோவின் பங்கும் பாதகமானவை என்று அறிவிக்கப்பட்டன. சீனாவில் முதலாளிய மீட்சி நிறைவு பெற்றது.


படிப்பகம்

www.padippakam.com

ஒன்றியத்தில் 300 % , மெக்சிக்கோ வில் 173 % , தாய்லாந்தில் 104% , பாகிஸ்தானில் 45% ), லட்சக் கணக்கான கரும்பு விவசாயிகளின் வாழ்க்கை இறக்குமதிப் பெருக் கினால் அச்சுறுத்தலுக்குள்ளான போது இவர்கள் எல்லோரும் அமைதியாக இருந்தனர்.

### காபந்து அரசாங்கத்தின் தொடர் விற்பனை.

இந்திய பொருளாதாரத்தில் ஏகாதிபத்தியவாதிகளின் பிடியை மேலும் இறுக்குவதற்காக பல் நோக்கு நிறுவனங்களில் இரு மூத்த அதிகாரிகளை நியமிக்க பிஜேபி அரசாங்கம் அவசரமாக முடிவெடுத்தது. இது இந்திய அதிகார வர்க்கத்தின் உயர்மட்டங்களுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையே நிலவும் நெருக்கமான பிணைப்பை காட்டுகிறது. மத்திய நிதி செயலர் விஜய் கெல்கர் ஐ. எம்.எப் ன் இயக்குனரவைக்கு புதிய நிர்வாக இயக்குனராவார். மேலும் அதிகாரம்மிக்க முன்னாள் உள்துறைசெயலர் பி.பி.சிங் உலக வங்கியின் இந்தியா மற்றும் சில அண்டை நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இயக்குனரவையின் அடுத்த நிர்வாக இயக்குனர். ஐ.எம். எப் பின் உயர்மட்ட எட்டு நிர்வாக இயக்குனர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்து உயர்மட்ட அதிகாரிகளையும், மூத்த அமைச்சர்களையும் சந்தித்து விவாதித்த பின்னர் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த பி.பி.சிங் தான் இ.க.க (மா லெ)(மக்கள் யுத்தம்) க்கு எதிராக நான்கு மாநிலங்களின் காவல்துறை மற்றும் உள்துறை அதிகாரிகளை ஒன்றுதிரட்டி, ஒருங்கிணைப்பதில் மிதமிஞ்சிய அக்கறை செலுத்தியவன். பிஹாரில் ரன்வீர் சேனாவின் படுகொலைகளுக்கு பின்னர், கலக எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக மேலும் ரூ 500 கோடியை ஒதுக்கியவன் இவன் தான். கொடிய கொலைபாதகனும் ஏகாதிபத்திய எடிபிடியுமான இவன் தான் அமெரிக்க மேலாதிக்கம் கொண்ட உலக வங்கியின் நேரடி ஏஜென்டாக செயல்பட்டு, இந்தியாவில் ஏகாதிபத்திய பொருளியல் கொள்கைகளை கண்காணிக்க போகிறான்.

இந்தியாவின் கொள்கை விவகாரங்களில் நீண்ட காலத்திற்கு தலையிடுகின்ற இந்த முக்கிய முடிவுகள் மட்டுமல்லாது, பி. ஜே.பி தலைமையிலான காபந்து அரசாங்கம் எண்ணற்ற முடிவுகளை மேற்கொண்டு விற்பனைக் கொள்கையைத் தொடர்ந்தது.

பல்முனை நூலிழை ஒப்பந்தம் (MFA) என்ற ஏகாதிபத்திய பரிந்துரை திட்டத்திற்கு ஏற்ப ஒரு நெசவுக் கொள்கை நகலை முன்வைத்துள்ளது. தேசிய துணி கழகத்தின் (NTC) 119 மில்களில் நஷ்டத்தில் இயங்கும் 70 ஆலைகளை மூடி (ஐ.எம்.எப் கட்டளை படி) லட்சக் கணக்கான தொழிலாளர்களை வெளியேற்றும் ஒரு திட்டத்தையும் முன்வைத்துள்ளது.

1 மில்லியன் டன் கோதுமையையும், 25,000 டன் சர்க்கரையையும் ஏற்றுமதி செய்ய முடிவு செய்துள்ளது. இது ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் 30,000 டன் சர்க்கரையோடு இன்னும் அதிகமாகும். ஆனால், அரசாங்கம் சர்க்கரையை இறக்குமதி செய்ய தொடர்ந்து அனுமதிப்பது என்பது வியக்கத்தக்கதாகும். இந்திய மக்கள் மேலும் அதிக கோதுமையையும், சர்க்கரையையும் இன்னும் பிறவற்றையும் நுகர்ந்து கொள்ள விலையை குறையச் செய்ய அனுமதிப்பதற்கு மாறாக, இந்த ஏற்றுமதிகளின் மூலம் வணிகர்களுக்காக விலையை உயர்ந்த அளவிலேயே அரசாங்கம் பராமரிக்கிறது.

மின் துறையில், நீண்டகாலமாக நிலவில் இருக்கும் உலக வங்கியின் கோரிக்கையை நிறைவேற்ற திருத்தப்பட்ட நெறிமுறைகளைத் திணிக்க நிதி அமைச்சர் முயன்று வருகிறார். மாநில மின் வாரியங்களுக்கு மின்சாரத்தை விற்பதை ஒழுங்குபடுத்துவது இதில் அடங்கு கிறது. இதன் மூலம் மாநிலங்கள் மின்கட்டணங்களை மேலும் உயர்த்திட கட்டாயப்படுத்துகின்றன. மேலும் மின் வினியோகத்தை தனியார்மயமாக்குவதையும் துரிதப்படுத்துகிறது.

இறுதியாக, இந்திய தொழிற்சாலைகளை நாடுகடந்த நிறுவனங்கள் பெருமளவில் கையகப் படுத்த பச்சைக்கொடி காட்டிவிட்டது. இந்தியாவின் நான்கு முக்கிய விமான நிலையங்களை பெரும் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு விடுவதன் மூலம் நாடுகடந்த நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் விட்டுவிடுவது; டொயோட்டா, கிர்லாஸ்கருடன் கொண்டுள்ள கூட்டுத்தொழிலில் டொயோட்டா தனது மூலதனத்தை 74 % லிருந்து 78 % மாக உயர்த்துவதை அனுமதித்தது; என்ரான் நிறுவனம் எண்ணை அகழ்வு மற்றும் பெட்ரோலிய பொருட்களுக்கான உட்கட்டமைப்புகளை நிறுவுவது போன்ற துறைகளிலும் தனது செயல்பாடுகளை விரிவாக்க அனுமதித்தது; மோட்டார் வாகன உதிரிப்பாக உற்பத்தியில் அமெரிக்க ஈடோன் கார்பரேசன் தனது உபதொழிற்சாலையை அமைத்துக் கொள்ள அனுமதித்தது; போன்றவை இத் துறையில் உள்ள எண்ணற்ற சிறு தொழிலகங்களை ஒழித்து விடுவதாகும். இது போன்ற எண்ணற்ற அனுமதிகளை பா.ஜ.க காபந்து அரசாங்கம் வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் ஆதரவு ஊடுருவல் என பெரும் கூக்குரலிட்டு, எல்லா



படிப்பகம்

www.padippakam.com

நாடாளுமன்ற எதிர்கட்சிகளை யெல்லாம் தந்திரமாக ஒன்றுபடச் செய்துவிட்டு, சந்தடியின்றி நமது நாட்டை பிஜேபி விற்றுவருகிறது. எவ்வளவு ஆக்கிரமிப்புத்தன்மை கொண்டிருப்பினும் பாகிஸ்தான் இந்தியாவை ஒரு போதும் தனது காலனியாக மாற்றிவிடமுடியாது. அதே வேளையில், ஏகாதிபத்திய வாதிகள் நமது நாட்டின் வாழ்வின் மீதான தங்களது நவகாலனிய பிடியை அதிகரித்துக் கொண்டே வருகின்றனர். அப்படியெனில், யார் உண்மையான, மிகவும் அபாயகரமான எதிரி?

## இந்த துரோகிகளை எதிர்ப்பது யார்?

இது போன்ற கொள்கைகளை தொடர அனுமதித்தால் நாடு ஒட்டுமொத்தமாக அழிவது மட்டுமன்றி, மக்கள் கடுமையாக வறுமையாக்கப்படுவதன்றி, எல்லா வேலைவாய்ப்புகளும் வறண்டு போவதன்றி, எல்லா உள்நாட்டு தொழிற்சாலைகளும் (நாடு கடந்த நிறுவனங்களின் துணை அலகுகள் தவிர) நசுக்கப்படுவதுடன், விவசாய தொழில்களில் இவர்களின் மேலாதிக்கத்தாலும் சந்தை அராஜகத்தாலும் விவசாயிகள் மேலும் வறுமையில் தள்ளப்படுவது மட்டுமன்றி இருக்கும் குறைந்தபட்ச இறையாண்மை கூட காணாமல் போய்விடும். ஏகாதிபத்தியவாதிகள் தங்களது உள்நாட்டு கூட்டாளிகளின் உதவி மற்றும் உடந்தையுடன் இந்நாட்டு மக்களின் மீது தங்களது ஹிட்லரின் முள் பொருத்திய காலணிகளுடன் நடந்து செல்வர்.

அவர்களை தடுத்து நிறுத்த வேண்டுமெனில், அதற்கான நிகழ்வுப் போக்கை இப்போதே துவங்கவேண்டும். விடுதலையை விரும்புகின்ற அனைவரும், சனநாயக சக்திகளும் பிற பிரிவினர்களும் ஒரு பலம் பொருந்திய புயலாக ஒன்றுபட்டு இந்த கொள்கைகளை எதிர்த்து முழு மூச்சுடன் போராடவேண்டும். நாடாளுமன்ற கட்சிகள் மீது கொண்டுள்ள மாயைகளை இவர்கள் விட்டுவிட வேண்டும். உண்மையில் நாடாளுமன்ற கட்சிகள் ஏகாதிபத்தியவாதிகளின் முக்கிய கூட்டாளிகளாவர். ஒருபோதும் எந்த எதிர்ப்பையும் காட்டமாட்டார்கள். இந்த துரோகிகளுக்கு பலமான அடியைக் கொடுக்க ஒரு பலமானசக்தியாக தங்களை அணிதிரட்டிக் கொள்ள வேண்டும். இ.காங்கிரஸ் மற்றும் பிற எதிர்கட்சிகள் அனைத்தும் பி.ஜே.பி.யின் இந்த கொள்கைகள் அனைத்தையும் ஆதரித்துள்ளனர். திரிபுவாதிகள் போன்ற சிலர் மட்டுமே அவசியமான சரியான ஓசைகளை எழுப்புகின்றனர். இவர்கள் அனைவரும் ஒரே கூடிக்குலாவும் கொள்கைகளால் கறைபட்டவர்கள். நாட்டிற்கு எதிரான குற்றங்களுக்காக இந்த ஐந்தாம் படையினர் தண்டிக்கப்படவேண்டியவர்கள், இவர்களின் செல்வங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டியவை. பொது இடங்களில் வைத்து சவுக்கால் அடிக்கப்பட வேண்டியவர்கள். நாடு கடந்த நிறுவனங்கள் மற்றும் அதன் 'இந்திய' கூட்டாளிகளுக்கு எதிரான மக்களின் பெரும்திரளான எழுச்சி மட்டுமே இக்கொள்கைகளை திருப்பிப்பெறச் செய்வதுடன், நமது நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் உண்மையான விடுதலையை பெறும். இந்த அட்டைகளிடமிருந்து விடுபட்ட பின்னர் தான் இந்திய பொருளியல் வளர்ந்து, பூத்துக் குலுங்கும்.

*"முதலாளிகள், எங்கெல்லாம் மேலான்மை பெற்றிருந்தனரோ அங்கு எல்லாவித நிலப்பிரபுத்துவ, ஆணாதிக்க, பழைய உறவுகளுக்கு முடிவு கட்டினர். இது மனிதனை, 'இயற்கையான உயர்ந்தோர்களுடன்' பிணைத்துக் கொண்டிருந்த வஞ்சக நிலப்பிரபுத்துவ தளைகளிலிருந்து ஈவிரக்கமின்றி துண்டித்து எடுத்தது. மேலும், வெளிப்படையான சுயநலம் மற்றும் உணர்ச்சியற்ற 'பணப்பட்டுவாடா' ஆகிய வற்றைத் தவிர மனிதனுக்கு மனிதன் வேறு எந்த பிணைப்புகளும் இல்லாத தாக்கியது. மத உணர்ச்சியின் சொர்க்க பரவசத்தையும், விட்டுக் கொடுக்கும் உணர்ச்சிக்களிப்பையும், பிலிஸ்டைன் உணர்ச்சிவயப்படுதலையும், தற்புகழ்ச்சி வாய்ந்த கணக்கீடுகள் என்ற குளிர்ந்த நீரில் மூழ்கடித்தது. தனிப்பட்ட மதிப்பை பரிவர்த்தனை மதிப்பாக இது மாற்றியமைத்தது, மேலும் பறிமுதல் செய்யப்பட முடியாத உரிமைபெற்ற சுதந்திரங்களின் இடத்தில் சுதந்திர வர்த்தகம் என்னும் ஒரே மனசாட்சியற்ற சுதந்திரத்தை வைத்தது. ஒரு வார்த்தையில் சொல்வதெனில், சுரண்டலுக்காக, மத மற்றும் அரசியல் மாயைகளால் திரையிடப்பட்டிருந்ததை, வெளிப்படையான, வெட்கக்கேடற்ற, நேரடியான, கொடுமையான சுரண்டலால் அது ஈடுகட்டியது."* **– கம்யூனிஸ்ட் அறிக்கை.**




டெங்-சியோ-பியாங்கின் தலைமையில் முதலாளிய வளர்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. 'சந்தை சோசலிசம் (?)' என்ற பெயரில் தனியுடமை வெளிப்படையாகவே அனுமதிக்கப்பட்டது. சமீப வருடங்களிலோ உலகமயமாதல் என்ற பெயரில் ஏகாதிபத்திய சுரண்டலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வறுமை, வேலையின்மை, விபச்சாரம் போன்ற சமூகக் கேடுகள் இல்லாதிருந்த சீனத்தில், இன்று திரிபுவாதிகளின் முதலாளிய ஆட்சியால் ஏற்றத்தாழ்வுகள் தலைவிரித்தாடுகின்றன. வேலையின்மை, வறுமை, விபச்சாரம் ஆகியவை மீண்டும் வந்து சேர்ந்துள்ளன. பெரும் பணக்காரர்களும், ஏகாதிபத்தியங்களும், அதிகாரவர்க்கமும் சீன மக்களின் ரத்தத்தை உறிஞ்சுகின்றன. மறுபுறம் தொழிலாளர், விவசாயிகளின் போராட்டங்களும் வெடித்துக் கிளம்புகின்றன. தோழர். மாவோவின் சீனம் திரிபுவாதிகளைத் தூக்கியெறிந்து விட்டு மீண்டும் புரட்சியை நோக்கி நிச்சயமாக முன்னேறும்.


படிப்பகம்

www.padippakam.com

# நெல்லை படுகொலை

# கருணாநிதியின் கபடவேடம்

எதற்கெடுத்தாலும், தடியடி, துப்பாக்கிச்சூடு என சமீபகாலமாக வெறிபிடித்தலையும் தமிழக காவல்துறையின் காட்டுமிராண்டித்தனம் நெல்லையில் தலைவிரித்தாடியது. மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊர்வலத்தின் மீது ரத்த வெறித் தாக்குதல் நடத்தி 17 பேர்களை பலி கொண்டது. பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் நெல்லை நகரெங்கும் தாக்கப்பட்டனர். ஈரத் துணியுடன் நிற்கும் நபர்களை தேடி மோப்ப நாய்களைப் போல ஓடி அலைந்து கண்ணில் கண்டவர்களை தாக்கி தனது வெறியைத் தீர்த்துக் கொண்டது காவல்துறை.

சாலையின் சந்திப்புகளில் சுற்றிலும் அடைக்கப்பட்ட இடங்களிலும், மேம்பாலங்களிலும், தப்பி ஓட முடியாதபடி எல்லா புறங்களிலும் சூழ்ந்து நின்று கொண்டு போராடும் மக்களைத் தாக்கி இன்பம் காணுவது தமிழக காவல்துறைக்கு புதியதல்ல. அன்றைய ஈழத்தமிழர்களுக்கான மாணவர்களின் ஆதரவுப் பேரணியை சென்னை அண்ணா மேம்பாலத்தில் வைத்து சுற்றி வளைத்து தாக்கி எண்ணற்ற மாணவர்களின் மண்டையை உடைத்து நிம்மதியடைந்தது முதல் இன்றைய மாஞ்சோலைத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டது வரை தமிழக காவல்துறைக்கு இது தொடர்கதையாக உள்ளது. வஞ்சகத்தனமாக, சில பகுதிகளில் வைத்து போராடும் மக்களை இவ்வாறு தாக்கிக் கொல்வதை ஆட்சியாளர்கள் எப்போதுமே மூடிமறைப்பது போல கபடவேடதாரி கருணாநிதி இச்சம்பவத்திலும் 'அழுகிப்போன நுரையீரலுக்காக' (காவல்துறையை ஒருமுறை இவ்வாறு கருணாநிதி கூறினார்) வக்காலத்து வாங்கினார்.

நெல்லையில், புதிய தமிழகம், த.மா.கா மற்றும் போலி கம்யூனிஸ்ட்டுகள் இணைந்து மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுக்கச் சென்ற போது தான் இக் கொடிய சம்பவம் நடைபெற்றது.

1999, ஜுலை 23 அன்று நடக்கவிருந்த ஊர்வலதிற்காக தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அதிரடிப்படை, துரிதநடவடிக்கை படை, தமிழ்நா சிறப்பு ஆயுதப்படை, மாவட்ட சேமப்படை, உ வுப்பிரிவு, சட்ட ஒழுங்குப் பிரிவு, என எல்லா கா கிச்சட்டை ரவுடிகளையும் தமிழக அரசு நெல்லை யில் குவித்திருந்தது. பல வண்ணப்பட்டைகளை சட்டைகளில் தாங்கிய உயர் அதிகாரிகளு நெல்லையில் புடை சூழ்ந்திருந்தனர்.

நெல்லை தாமிரபரணியின் குறுக்கே கட்ட பட்டுள்ள பாலத்தின் மீது ஊர்வலம் வந்து, அருகி உள்ள ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மனுவை கொடுக்கச் செல்லும் போது, திட்டமிட்டப காவல் துறையினர் கல்வீச்சில் ஈடுபட்டனர். கலை தோடிய கூட்டத்தை நாலாப்புறமும் நின்று தாக் யுள்ளனர். பச்சைக் குழந்தையைக் கூட ஆற்றி வீசியெறிந்து ரத்த தாண்டவம் ஆடியுள்ளன கண்ணீர்புகை, தடியடி, கல்வீச்சு,துப்பாக்கிச் சூ என வெறியாட்டமிட்டுள்ளனர். தொழிலாளர்களை அடித்து, இழுத்து, ஆற்றில் வீசி, மூழ்கடித்து கொன்றுள்ளனர். கரையேற முயன்றவர்களி மண்டையை உடைத்து மீண்டும் நீரில் மூழ்கிட செய்தனர். இதை படம் பிடித்த பத்திரிக்ன யாளர்களையும் விடவில்லை.

ஆனால், கபடவேடதாரி கருணாநிதியே ஊர்வலத்தினர் மாவட்ட ஆட்சித்தலை அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்து, காவலர்கள கல்வீசித்தாக்கியதாகவும், காவல்துறையினர் பே ணியை கலைக்க முயன்றபோது ஆற்றில் விழுந் சிலர் இறந்துவிட்டதாகவும் கூறினார்.சில வ முறையாளர்கள் தூண்டிவிட்டதாகவும், இத்தகை சாதி, மத, தொழிலாளர் வன்முறை கிளர்ச்சிகளை எப்போதும் எங்கும் ஆதரிக்க கூடாது எனவு செந்தமிழில் நீண்ட வசனம் பேசினார். கண்துடை பிற்காக விசாரணை கமிசனையும் அமைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

காவல்துறையின் காட்டுமிராண்டித் தனத்தை மூடிமறைக்க தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது. பிரேத பரிசோத்னையின் போது உயர்மட்ட காவல்துறை அதிகாரிகள் கூடவே இருந்துள்ளனர். இறந்து போனவர்களின் உறவினர்களை மிரட்டி சடலங்களை பெற்றுச் செல்ல வேண்டும் எனவும், காவல்துறைக்கு எதிராக எந்த சாட்சியும் கூறக்கூடாது எனவும் மிரட்டியுள்ளனர். மறு பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என தொழிலாளர்களும், ஓட்டுக்கட்சித் தலைவர்களும் வலியுறுத்தியது புறக்கணிக்கப்பட்டது. இதை கண்டித்து சென்னையில் நடக்கவிருந்த போராட்டத்திற்கு அனுமதி மறுத்ததுடன், அரசே சவஅடக்கம் செய்துவிடும் என பகிரங்க எச்சரிக்கை விடுத்ததுடன் சிலரது சவ அடக்கத்தையும் செய்தது.

போராடும் மக்களை கொன்று, சவ அடக்கத்தையும் செய்வதில் கருணாநிதி கில்லாடி தானே? உதய குமாரையே தனது மகன் அல்ல என்று கூறிடும் அவரது தந்தையின் கடிதத்தை உருவாக்கிய கருணாநிதிக்கு இதெல்லாம் கைவந்த கலை. தியாகி தோழர். அப்புவை கொன்று எரித்துவிட்டு, இன்னமும் போலீசார் தேடிவருவதாக கதைவிட்டுக் கொண்டிருக்கும் கருணாநிதிக்கு இதற்கெல்லாம் சொல்லியா கொடுக்க வேண்டும்?

அதுமட்டுமன்றி, நெல்லை படுகொலையை கண்டனம் செய்பவர்களை வன்முறைக்கு துணை போபவர்கள் என கூறினார். தலித் மக்களின் பிரச்சனையாக அதை சித்தரிக்க கடும் முயற்சி செய்ததுடன், சம்பவத்திற்கு காரணமான காவல்துறை மற்றும் பொது நிர்வாகத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தால் சாதி கலவரம் வந்து விடும் என கூறியதன் மூலம் ஆதிக்க சாதிவெறியர்களின் நலன்களுக்கு அப்பட்டமாக துணைநின்றார்.

தமிழகமெங்கும் மட்டுமன்றி பிற நாடுகளில் உள்ள தமிழ்பேசும் மக்களிடமும் ஆபாச பத்திரிக்கைகளை நடமாடவிட்டுக் கொண்டிருக்கும் இந்த 'இலக்கிய' சேவகனும், ஏகாதிபத்திய பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் கேவலமான 'சன்' தொலைக்காட்சியை நச்சு போல பரவ விட்டுக்கொண்டிருக்கும் மருமகனுக்கு மாமாவாக இருந்து கொண்டு, நெல்லை படுகொலையைப் பற்றிய வீடியோ படச்சுருள் காட்சியை சட்டவிரோதமாக தடை செய்துள்ளதுடன், அதை திரையிட்டவர்களை கைதும் செய்துள்ளார். மேற்கத்திய இழிந்த பண்பாட்டை இல்லங்களுக்கு நேரடி வினியோகம் செய்ய அனுமதிக்கும் இந்த கும்பல் உழைக்கும் மக்களின் பிரச்சனைகளை உலகிற்கு காட்டும் முயற்சிகளை முளையிலேயே முடக்கி விடுகின்றனர். இது இவர்களது வர்க்க பாசம். பெரும் தரகுமுதலாளிகளின் சுரண்டலுக்காக உழைக்கும் மக்களை பலிகடாவாக்கும் வெறித்தனம்.

சமீபகாலமாக, தமிழக மக்களின் எந்த ஒரு போராட்டமும் தடியடி, துப்பாக்கிச் சூட்டில் தான் முடிவடைகிறது. மக்களைக் கண்டு அஞ்சி, கிலிபிடித்து, இருண்டதெல்லாம் பேய் என எண்ணி காவல்துறையினர் காட்டுதர்பார் நடத்தி சடலங்களின் மீது சட்ட ஒழுங்கை பாதுகாத்து வருகிறார்கள். இனி வரும் நாட்கள் கூட இவர்களுக்கு நிம்மதியாக இருக்கப் போவதில்லை.

அநியாய டீசல் மற்றும் பஸ் கட்டண உயர்வு, அதையொட்டிய விலையேற்றங்கள் மட்டுமன்றி மக்களின் மீது திணிக்கப்படும் புதிய வரிகள், மானிய வெட்டுகள், மக்கள் நலத்திட்ட புறக்கணிப்புகள் போன்ற மக்கள் விரோத கொள்கைகள் அனைத்தும் இவர்களின் கைகளில் இருபுறமும் பற்றி எரிகின்ற கொள்ளியாகத் தான் இருக்கும். மக்கள் போராட்டங்கள் என்னும் பெரும் நெருப்பை, 'சென்ற ஆட்சியில் நடந்தது', 'பிற மாநிலங்களோடு ஒப்பிட்டால்', 'தமிழக அரசு வேடிக்கை பார்க்காது' போன்ற செந்தமிழ் வசனங்களால் திசைதிருப்பி, ஒடுக்கிவிடலாம் என மனப்பால் குடிப்பார்களேயானால், அது கானல் நீராகத் தான் இருக்கும்.




*சீனப் புரட்சியின் மகத்தான தலைவர் மாவோ, மார்க்சிய - லெனினியத்தை மேலும் செழுமைப்படுத்தினார். மாவோ சிந்தனைகளே இன்றைய கட்டத்தின் மார்க்சிய - லெனினியமாக உள்ளது. தத்துவார்த்த தளத்தில் லெனினின் எதிர்மறைகளின் ஒற்றுமைக் கோட்பாட்டையும் (முரண்பாடு பற்றி), அறிவின் தத்துவத்தையும் (நடைமுறை பற்றி) வளர்த்தெடுத்தார், கட்சி நிர்மாணத்தில், கட்சிக்குள் தோன்றும் தவறான போக்குகளைக் கண்டறியும் சரியான முறைகளை வகுத்துத் தந்தார். பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்திற்கு மறுவார்ப்பு செய்யப்பட வேண்டியதற்கு அழுத்தம் தந்தார். புதிய சனநாயம், சோசலிசம் என்ற இரு கட்ட புரட்சி பற்றிய கோட்பாட்டை வளர்த்தெடுத்தார். 'நீண்டகால மக்கள் யுத்தம்' என்ற பாட்டாளி வர்க்கத்தின் ராணுவ மூலஉத்தியை உருவாக்கினார். மக்கள் திரள் வழி என்ற மந்திராயுதத்தை அனைத்து இடங்களிலும் உயர்த்திப் பிடித்தார்.*

படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திரத்தை விரும்பும் அனைத்து குடிமக்களுக்கும் ஓர் அறைகூவல்!

## நாட்டை விற்கும் பிஜேபியின் துரோகத்தையும் "எதிர்கட்சிகளின்" கூட்டையும் தடுப்போம்!

மத்திய நிதியமைச்சர் யஸ்வந்த் சின்கா, பட்ஜெட்டை வெளியிடும்போது நான் சர்வதேச பார்வையாளர்களுக்காகவும் உரையாற்றுகிறேன் என்றுகூறும் அளவிற்கு அன்னிய நலன்களுக்கு சேவைசெய்யும் இழிநிலையை பி.ஜே. பி எட்டியுள்ளது. ஜஸ்வந்த் சிங்கிற்கும் ஸ்ட்ரோப் தால்பாட்டிற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் வெளிப்பட்டது போல, போலி சுதந்திரத்தின் இந்த 51 ஆண்டுகளில் என்றுமே காணப்படாத அளவில், அமெரிக்க அரசாங்கத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இதுபோன்ற உயர்மட்ட ரகசிய பேரங்கள் நடைபெற்றன. ரகசியம் என்ற போர்வையில் நாட்டு மக்களுக்கு தெரியாமல் ஒருவருடத்தில் மட்டும் எட்டு சந்திப்புகள் நடந்தன. இந்தியாவின் அணுவெடிப்பு என்ற சாக்கில் நடைபெற்ற இப்பேச்சுக்களின் விளைவுகளை பி.ஜே.பியின் முழு சரணாகதியில் காணலாம். அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அது தயாராக இருப்பது மட்டுமின்றி, மிகவும் குறிப்பாக, பொருளியல் தளத்தில் முழுமையாக சரணாகதி அடைந்திருப்பதைக் காணலாம்.

சோனியாவின் அன்னிய குடியுரிமை பற்றிய சிக்கலிலும், கார்கில் சிக்கலிலும் பி.ஜே.பி எழுப்பிய எல்லா தேசியவாத நாடகங்களுக்கு இடையிலும், பி.ஜே.பி ஏகாதிபத்தியவாதிகளின் மிகவும் விசுவாசமான சேவகர்களாக நிரூபித்துள்ளது. சோனியாவோ அல்லது வாஜ்பாயோ அல்லது எந்த ஒரு நாடாளுமன்ற கட்சித் தலைவரோ; அனைவரும் நமது நாட்டின், மக்களின் நலன்களுக்கு துரோகமிழைக்கும் அன்னிய மூலதனத்தின் நம்பகமான ஏஜென்டுகளே என்பதும் நிரூபணமானதே.

1999 மார்ச் மாதத்தில் மட்டும் பொருளியல் துறையில் மேற்கொண்ட சரணாகதியின் வியக்கத்தக்க அளவுகளுக்கும், இந்தியாவிற்கு அமெரிக்க மேல்மட்ட பிரதிநிதிகள் மேற்கொண்ட பயணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஜஸ்வந் சிங்கிற்கும் அவரது எஜமான் தால்பாட்டிற்கும் இடையே '99 பிப்ரவரி இறுதியில் நடைபெற்ற எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் ஒரு கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. "புதிய பரந்த அளவிலான உறவுமுறை" ஒரு மூலஉத்திரீதியான பங்காளித்துவத்தை நோக்கிச் செல்லுகிறது என அவ்வறிக்கை ஆர்வமுடன் புகழ்ந்தது. அதே நேரத்தில், அமெரிக்க ராணுவ துணைத் தளபதிகளின் துணைக் கமாண்டர் ஜெனரல் ரால்ஸ்டன் இந்தியாவில் உயர்மட்ட ராணுவ அதிகாரிகளுடன் ரகசிய பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்தான். மேலும் மார்ச் இறுதியில் அமெரிக்க சட்ட மன்றத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளின் குழு மேல் மட்ட பா.ஜ.க அமைச்சர்களுடனும் நாடாளுமன்றத் தலைவர்கள் மற்றும் இந்திய தொழில் சம்மேளனம் போன்ற தொழில் குழுமங்களின் தலைவர்களுடனும் விரிவான விவாதங்களை நடத்தியது. (விசயங்களை இதுவரையிலும் வெளிப்படுத்தவில்லை).

கேடுபயக்கும் இத்தகைய ராஜதந்திர நடவடிக்கைகளுக்கு இடையே, '99 மார்ச் மாதத்தில் மட்டும் பொருளியலில் மேற்கொள்ளப்பட்ட ஏகாதிபத்திய ஆதரவு கொள்கைகளில் செய்த மாற்றங்களின் அளவுகள், தாராளமயத்தின்

தொடர்ச்சி . . . 60 ஆம் பக்கம்

படிப்பகம்